வைத்திய அட்டவணை

308

****

சேவி கண்டர்,

சேலம் ஜில்லா,

வைத்திய அட்டவணை.

****

typed on 30-8-62

141 pages (typed)
Compared with the manuscript
and completed on 28-12-62

7.11.62.

308

308

1. வைத்திய நூல் கை முறை விபரம். ..
2. பிரம முனி மந்திரம் ..
3. பின்னிவேப்பு கை முறை ..

308

வும். அதன் பிறகு நந்தியா வட்டத்து இலைகளை சாறு கொடுத்து ஒரு மாக் கொடுத்து

308

7.11.62.

கை முறை விபரம்:

308

7.11.62.

கை முறை விபரம்.

முத்தெருக்கின் செவியதனை முலைப் பால் விட்டரைத்து குகை பிடித்துப் புத்த மண்ணரைத்துக் குகைக்கு மேல் கவசங் கட்டி பூநாக மரைத்துக் குகைக்கு மேல் வைத்து களஞ்சி ரசம் விட்டு மணத்தவளை நெய் விட்டு உருக்கக் குளிகையாம். தம்பனம்; மோகனம், உச்சாடனம் மாறும்.

(வேறு)

செவ்வகத்திப் பூச் சாறு,செவ்வரளிப் பூச்சார் படி.வ, கை பத்திற் பூச்சார் படி.வ, ஆக மூன்று சாறும் வெள்ளைப் பாஷாணத்துக்கு சுருக்கு இருக்கக் கட்டும். கட்டினத்துக்கு கால் படி பூச்சாருயம் சுருக்கு கொடுக்கவும். அதின் பிறகு வரிக்கத்தாளைச் சாறு படி.வ, சுருக்கு கொடுக்கவும். செந்தூரமாம். செந்தூரத்தில் கழங்கம், பேரண்ட செம்பில் ஒரு களஞ்சி உருகு முகத்தில் ஒரு மாச் செந்தூரம் கொடுக்க தய்யாரமாம்.

308

வெள்ளைப் பாஷாணம் செந்தூரிக்க வகை.

திருகு கள்ளிப் பாலில் குத்தம், சூரிசு,பொடி செய்து போட்த் தன்னீராம். அந்த தன்னீர் சுருக்கு கொடுக்க. செந்தூரமாம். யிந்துப்பு ஒரு களஞ்சி,வெடியுப்பு ஒரு களஞ்சி,நவச்சாரம் ஒரு களஞ்சி, ஆசிதழ் தாமரை யிறப்பவல் யெலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து கீழுமேலும் ஒரு களஞ்சி சுறு சுக்குள் எலுமிச்சங் காயளவு கவசம் பொதிந்து சித்தியோக நட்சத்திரத்தில் சூரிய புடம் வைக்கவும் சுண்ணமாம். அந்தச் சுண்ணத்தடனே கோரோசனை ஒரு விராகனிடை ரேகிச்சுக் கொள்ளவும். இந்த குகி யெந்தெந்த தமைக்குமாகும். பெருஞ் செருப்படிக் குறு போட்டு சாறு வரப் பண்ணி சுருக்கு கொடுக்கச் செந்தூரமாம். அந்தச் செந்தூரத்தில் ஒரு களஞ்சிக்கு ஒரு மாக் கொடுக்கவும். கொட்டிலாம் சல்லி கொண்டு வந்து பூனைக் காலி விரையை குப்பை மேனிச் சாறு விட்டரைத்த அந்த சாத்திலே கலக்கி ஆறு தரம் துவைக்கவும். மறுபடி நீர் மேல் நெருப்பு விரையை எலுமிச்சஞ் சாறு விட்டு அரைத்து பழச் சாத்தில் கலக்கி முன் சல்லியை சிவக்கக் காய்ச்சி ஆறு தரந் துவைக்கவும் செம்பாம். அந்த செம்பு உருகிற முகத்தில் ஒரு களஞ்சி சாதிலிக்க மெழுகு ஒரு மாக் கொடுக்கவும். பகுக்கம். பொன்னரிதாரம் களஞ்சி கொண்டு வந்த நீர் முள்ளிச் சார் கொண்டு வந்து படி.க, சுறுக்கு கொடுக்கவும் கட்டும். பற்படாகங் கொண்டு வந்து சுறுக்கு கொடுத்து சாறு வரப் பண்ணி கட்டின தாளகத்துக்கு சுருக்கு செந்தூரமாம். வெள்ளிக்கு ஒரு களஞ்சி ஒரு மாக் கொடுக்கவும். உரு. தலைக் கோழி யிடுகிற முட்டையைப் பொத்து ஒரு காசிடை வெள்ளைக் கருவை வெளியிலே விட்டு அதுக்குள்ளே ஒரு களஞ்சி ரசம் விட்டு எருமைச் சாணகங் கொண்டு பொதிந்து காய வைத்து திருகு கள்ளி விலாவிலே குடைந்து அதுக்குள்ளே வைத்து பத்து நாள் சென்றெடுத்துப் பார்த்தால் நீர் வத்திச் செந்தூரமாம். வெள்ளி ஒரு களஞ்சி ஒரு மாக் கொடுக்கவும். மண்போட சாறு வரும். விழுதியிலையை யிடித்து யிந்தக் குறுவில் ஒருமாக் கூடப் போட்டு விரவி வைக்கச் சாறு வரும். அந்தச் சாறு தொட்டாங் குச்சி பால் விட்டு இரண்டு காசிடை சூதம் விட்டு சூரிய தறணத்தில் ஒரு நாழிகை வைக்கக் கட்டும். அதில்ப் பிரமியிலையில் குறு போட்டு சாறு வாங்கி சுறுக்குக் கொடுக்கச் செந்தூரமாம். வெள்ளி ஒரு களஞ்சிக்கு ஒரு மாக் கொடுக்க ஆறரையாம். நத்திரியிலைச் சாறு வாங்கி கட்டின அப்பிரகத்து இரண்டு நாளிகை சுருக்கு கொடுக்க மெழுகாம். அந்த மெழுகு ஒரு மா ஒரு களஞ்சி வெள்ளிக்கு கொடுக்கவும். இந்த சாறு சாதிலிங்கத்துக்கு சுருக்கு கொடுக்க.மெழுகாம். அந்த செம்பு களஞ்சிக்கு ஒரு மாக் கொடுக்கவும். வயது.எ, முசுட்டையிலைச் சாறு ஒரு காசிடை சவ்வீரத்துக்கு கொடுக்க மெழுகாம். அந்த மெழுகு வெள்ளி களஞ்சிக்கு ஒரு மாக் கொடுக்கவும்.

வெள்ளியத்தை உருக்கி யிலுப்பையிலையைக் காடி விட்டு யிடித்துச் சாறு வாங்கி அதிலே இரண்டு தரம் சாய்க்கவும். எருமைச் சாணகந் தண்ணியிலொரு தரம் சாய்க்கவும். அதின் பிறகு நந்தியா வட்டத்து யிலைக்கு குறு கொடுத்து ஒரு மாக் கொடுத்து

சாறு யெடுத்து சுறுக்கு கொடுக்கவும். வெள்ளியாம்.

<u>நாகக் கட்டு.</u>

நாகம் ஒரு களஞ்சிக்கு குப்பை மேனியிலையும் உப்பும் அரைத்து பொதிந்து அதின் மேல் செவ்வா மணக்கு வேர்ப் பட்டையும் குத்து ஊசியும் அரைத்து கவசம் பண்ணி காட்டெருவில் கோழிப்புடமிடவும். நாகங் கட்டும். இது செந்தூரம்.

உப்புக் கட்ட கருவேல வேர் வடக்கே போர வேர் பருவேராகக் கொண்டு வந்து இலையைச் சீவி வரிக் கத்தாளைப் பாலும் ஆதளைப் பாலும் விட்டரைத்து அடையாக இரண்டு தட்டி அச்சாக பெரு மணியாய் யெடுத்து ஒரு அடையிலே பொதிந்து கத்தாளைப் பாலும், ஆதளைப் பாலும் அந்த மணியிலே குத்தி மத்தளியிலை மணிக் கொறுக்கிள்ளி வைத்து அது மேலே பிறம்பாக யிருக்கிற அடையைப் பொதிந்து சற்று நேரம் வெய்யிலே வைத்து யெடுத்துச் சீலை மண் செய்து கோழிப்புடம் போடக் கட்டும்.

<u>கட்டு மணிக்கு :-</u> வெத்திலைச் சாறு, துளசிச் சாறு கொடுக்கச் செந்தூரமாம்.

சாதிலிங்கம் ஒரு களஞ்சி உருக்கு உறுக் தொட்டியிலே .உ, நெல்லிக்காய்க் கெந்தகம் .சய, அரைத்து *யீங் இதுக்கு சவ்வீரம் பலம்.ரு இந்த யிரண்டு மொன்றாய் அரைத்து பீங்கானில் வைத்து பத்து நாளிகை வெய்யிலே வைக்கசெய்நீராம். உருகும். இந்தச் செய் நீரில் சாதிலிங்கம் அரைத்து உருகு முகத்தில் இரண்டு மூன்று தரம் தைத்து விட்டவும். உறுக்குத் தொட்டியில் கெந்தகமும் எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து சாதிலிங்கத்தைப் பொதிக்கவும். இதுக்கு மேல் சுண்ணாம்பு கவசம் பொறியவும். இந்த இரண்டு கவசமும் பொதிந்துஒரு படி உமியில் புடம் போடவும். உலை முகத்தில் நின்று உருகி மணியாம். இந்த சாதிலிங்கம் ஒரு பணவிடையும் தங்கம் ஒரு மஞ்சாடியும் வெள்ளி பத்துப் படியும் செம்பு படியும் சேர்க்கவும். உஉ, நீ செம்புக்கு செப்பு நெறிஞ்சியில் ஆறு தரம் புடம் போட்டால் களிம்பத்துப் போம். மனோசிலை இரண்டு களஞ்சி நவச்சாரம் மூன்று களஞ்சி, சுத்தம் நாற்பத்தஞ்சு; அமுர்த நீர் விட்டரைத்து வைத்துக் கொண்டு நன்றாய் ஆறி வச்சு, வெள்ளி யெட்டு முன் செம்புறன்டும் கூட்டி உருகிய முகத்தில் முன் அரைத்திருக்கிற மருநதைக் கொடுக்கவும்.

சங்குப் பொடியும் துத்தியிலையும் வகைக்கு ஒரு எலுமிச்சங் காயளவு சமனாக அரைத்து குருசு மேல் பொதிந்து இரண்டு நாளிகை வெய்யிலிலே வைத்து ஒரு படி மணல் நிலத்திலெ புடம் போட்டு அந்தக் குகை மணலில் புதைத்து காடைப் புடம் உரைக்கப் போடவும். குருசு நீரும். அந்த நீர் பேய்க் கெழான் சாறு செவப்பாயிருக்கிற கருத்த காளானை தண்ணீர் அரைக்கால் படி தண்ணீரில் போட்டுக் கலக்கி ரசம் ஒரு களஞ்சி இரண்டு களஞ்சி வேண்டினது சட்டியிலே யிட்டு அடுப்பேத்தி சுருக்கு கொடுக்கக் கட்டும்.

(வேறு)

சுத்த நாகம் உருகிற போது அவினி குன்றிப் பிரமாணம் சிறுகச் சிறுகப் போட்டுக் கிண்டில் சிதறி உதரும். அதுக்கு மேல் நாகமும் ரசமும் சரி கூட்டி அதை உருக்க குருவையாம். அத்திப் பால் படி.வ, சிறுபை பால், கசாந்த நெல்லிக்காய், கெந்தகம் ஒரு பங்கு அரிதாரம் ஒரு பங்கு வைத்து அத்திப் பால் ஆழாக்கு-முன்னைப் போட்டுக் கலந்து வெய்யிலிலே இருக்கப் பால் கட்டியாம். அதிலே சாதிலிங்கம் இரண்டு பங்கு உள்ளே பொதிந்து பால் விறுகியிருக்கிறதை திரட்டிக் கறிப் போட்டு இரண்டு நாழிகை ஒரு நாழிகை லதை சுகரி கினதின் பேரில் சாதிலிங்கம் கட்டும். இது தாம்பரம் ரக, வெள்ளி எரு, கொடுக்கவும்.

(வேறு)

கெந்தகம் களஞ்சு .க, அரிதாரம் களஞ்சி.க, நவச்சாரம் களஞ்சி.க, மூன்று வகையும் உமி நீர் விட்டு அரைத்து உருண்டைப் பண்ணி வெய்யிலிலுலர்த்தி யிந்தப்பு இரண்டு களஞ்சி உமிநீர் விட்டு அரைத்து கவசமாகப் பொதிந்து வெய்யிலில் வைத்து நாலு நாளிகை உலர்ந்த பின்பு இடுக்ககயில் பிடித்து இரண்டு நாளிகை வாட்டி அதின் பிறகு மேலுப்புக் கவசந் தள்ளிப் போட்டு தானி வெள்ளியில் யரு கொடுக்க.

<u>போகர் சூஸ்திரம்.</u>

ஒன்னவே வேதாந்த சூஸ்திரந் தாசேகசிறேன் ஆதி உமையாள் பாதம் போற்றி

பண்ணை வைப்பு முதல் வாத ஞானம் பார்ங்கான பிரணயங் குளிகை சித்தி
ஒன்றுன கருவித்தையாக்ச் சொல்லி மூட்டுரேனதி வாத தோர்க்குங் கன்னி
கன்றுன அச்சரந்தான் .கை முறையாய்ச் சொல்லி விட்டேன் காணுவிரே.

2. காணப்பா முந்தியதோர் வமுலே மார்க்கம் கழுசலா வேப்பிலையுங் கலந்து ஆட்டு பூணப்பா அயக் காந்தமாறு திங்கள் புகலுகிறேன் கொண்ட பின்பு பிலத்துக் கொண்டு ஊணப்பா கற்பமெல்லாம் பின்னைக் கொள்ளு உத்தமனே தீச் செயது பின்னைக் கொள்ளு

உத்தமனே* ஊனப்பா கொண்டாக் காவிடப் பாலாகும் அப்பனே பெண் தனக்கு வலப்பாலாகும்.

3. ஆமப்பா பிரணய தருவைக் கேளும் அப்பனே வங்சிங் றண்டுங் கூட்டி
தேமப்பா யேஊஞ் பரத்தினிலையில் தாக்கில் திரிகோண வரை தனிலே மூன்றெழுத்து மூனி
ஊமப்பர் யேத்தினிக்கும் யேரு ல்ச்சம் உத்தமனே நகாரமத் மகார மாடும்
வர்மப்பா வாத மெல்லா முனக்குள்ளாச்சு வாகான குரு பதத்தை வணங்கிக் காரே.

4. காத்திருந்து குளிகை செய்து முழுங்கி விட்டேன் கருத்தறிய மூடருக்கு உரைத்திடாதே
பார்த்திருந்தேன் பறங்கியுட மூட்டித் தானே பன்னீராயிர மாண்டு யருந்தேனப்பா
வீத்திருந்தே விந்து வைத்தூ ஊடிக் கொண்டு விந்துவுட போகரென்றும் பெரும் பெற்றேன்
மாத்திருந்தே குளிகையைப் போல் தீர்க்கமாச்சு வந்து விட்டேன் பொன்னுலக மாளத் தானே.

சீப்பிரமியம்_இரத்தப்_பிரமியத்துக்கு_மருந்து.

நல்ல சீரகம் நுணுக்கி எருமை மோரிலே போட்டு தேங்காய்க் குரும்பை யிடித்து ரசம் வாங்கி அதிலே விட்டுக் கொடுக்கவும். இரண்டு நாள் கொடுக்கவும்.

வெடியுப்புச்_செய_நீர்:_உதிர_வாயுவுக்கு:

நவச்சாரம் பலம்.க, கெவுரி பலம்.க, சுண்ணம்பு பூரம், வீரம், வெங்காரம் லிங்கம் யிது வெல்லாம் அரைத்து வாழை மட்டை மேலே வைத்து அதின் வாயில் பீங்கான் வைத்தால் நாலு நாளிகை வெய்யிலில் வைக்க செய் நீர் இறங்கும். அந்தச் செய் நீரைப் பீங்கானிலடைக்கவும். இதைத் தாழ்கத்துக்கு கொடுக்க பற்பமாகும். லிங்க பற்பமாகும்.

உதிர_வாயுவுக்கு: பச்சைக் கற்பூரம் கடுகளவு வாழைப் பழத்தில் வைத்துக் கொடுக்க உதிர வாய்வு போகும்.

கண்ணுக்கு_மை: பச்சைக் கற்பூரம் பணவிடை சயிந்தி லவணம் பணவிடை.கரு, சிறு திப்பிலி ஒரு பணவிடை, துருசு ஒரு பணவிடை இந்த நாலு வகையும் புங்கந் தழைச் சாறு விட்டு அரைத்து மூன்று நாள் கொள்ளப் பருப்பளவு கண்ணில் போடவும். சரியாக மீறு கண்ணுக்குத் தெரிய வரும். மயில் துத்தம் சேர்த்து அரைத்துப் போட்டால் முலை அறுக்கும்.

மேத்தலை_வாயுவுக்கு_மருந்து:- புலி தடுக்கு முள்ளுக் கொண்டு வந்து அதை இடித்து இருப்புப் படியிலே பிளிஞ்சு வெய்யிலிலே வைத்து பீறலாட்டந் தொவையும். அதைத் தலைக்கு வைத்து முழுகவும். மேத்தலை வாய்வு தீரும்.

சாரக்_கட்டு:- சாரம் பலம் வெடிப்பு பலம்.ங, வெங்காரம் பலம்.ஙு, இது மூன்றும் அரைத்து சாரத்துக்கு கவசஞ் செய்து கிளிஞ்சி சுத்தி செய்து இடித்து மாவு படி.கா சட்டியில் பாதி போட்டு மருந்தை வைத்து மேல் பாதியும் போட்டு அமுக்கி எரிக்கவும். தீபாக்கினியாக எரிக்கவும் சாம்ம்.

பாஉ்ாணக்_கட்டு:- பாஉ்ாணம் பலம்.க, பெருக்கம் பால் புடி.வ, கோப்பையில் விட்டு அதில் அண்ட வெள்ளைக் கருவு விட்டு வெடியுப்பு வீ.ங, சாரம் வீ.உ, பொடி செய்து போட்டு அண்டக் கருவும் பாலும் சேரும்படியாய் குச்சியால் மத்திச்சு ரு நாழிகை வீட்டிலிருக்க செய நீராம். பாஉ்ாணத்தை சுத்தி செய்து நிதானமாய் சுருக்குக் கொடுக்கக் கட்டும்.

<u>பாஷாண சுத்தி</u>:- தேசி அமுரி படி.க, வெள்ளாட்டு அமுரி படி.க, பள்ளிக் கூடத்து அமுரி படி.க, தொளேந்திரங் கட்டி பத்து நாள் ஊறி யெரிக்கவும். லிங்கம் விராகனிடை.க, வீரம் விராகனிடை.க, ரசம் விராகனிடை.க, புநகு விராகனிடை.க, கற்பூரம் வீ.ச, நெல்லிக்காய், கெந்தகம் வீ.க, கொண்டு வந்து கோழி முட்டை வெள்ளைக் கருவு விட்டு அரைச்சு லிங்கத்துக்கு கவசம் போட்டு கோழி முட்டைக்குள்ளே வைத்துச் சட்டியில் மணலைக் கொட்டி அதுக்குள்ளே வைத்து மூன்று சாமம் எரிக்கக் கட்டும். இந்த அச்சும் வைத்து அரைக்க மெழுகாகும். வெள்ளி மூன்று தாம்பரம் நாலு உருக்கி உருகிற முகத்தில் கொடுக்க மாத்து.

<u>வெடியுப்புச் சுன்னம்</u>:- உப்பு யிடை.க, காரம் யிடை.க, காட்டு முருங்கைப் பட்டைச் சர் விட்டு அரைத்து ரவியில் வைத்துக் காய்ந்த பின் எடுத்து உப்பு யிடைக்கு மூன்றுக் கொன்று நாட்டு வாத நாராயணங் கொழுந்து கூடப் போட்டு அரைத்து உருண்டை உருட்டி பச்சைப் புகையிலை அஞ்சு ஆறு தழை மேலே சுருட்டி மொந்தைக்குள் வைத்து சீலை மண் செய்து சில்லுப் போட்டு நாற்பது யெருவில் புடம் போடச் சுன்னமாகும். அந்தச் சுன்னத்தில் ஒரு விராகனிடை வீரஞ் சேர்த்தார் உடனே செயநீராம்.

<u>வெடியுப்புச் சுன்னம்</u>: வெடியுப்பு இரண்டு சேர் காட்டு முருங்கைப் பூச்சாறு விட்டு வத்தின பிறகு பட்டைச் சாறு விட்டு வத்தின பிறகு உலர்த்தி வாத நாராயணங் கொழுந்து உப்பு மூன்று பங்குக்கு ஒரு பங்கு கொழுந்து போட்டு அரைக்கவும். மொந்தையில் புகையிலை உப்பு மேலே சுத்தி மொந்தைக்குள்ளே வைத்து முழப்புடம் போடவும். சுன்னமாகும்.

<u>மசை நாய் நரி கடிக்கு மருந்து</u>.

குப்பு பாலைத்தனை கொண்டு வந்து அந்தச் சாறு ஒரு படி இது இரண்டுங் கூட்டிக் காய்ச்சிக் கொடுக்க, இப்படி மூன்று நாளைக்குக் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். பத்து நாளைக்குப் பிறகு தலை முழுகவும். சகல கிரந்தி பண்டந் தின்னவும்.

<u>விரேசனம்</u>:- நேர்வாளம், வீ.ய, கடுக்காய்.யய, கொட்டை போக்கி இது இரண்டும எலுமிச்சஞ் சாறு விட்டரைத்து தேத்தாங்காய் மாதிரி உருண்டை செய்து எலுமிச்சம் பழச் சாத்தில் துவரை யளவு உரைத்துக் கொடுக்கவும். தாப சுரத்துக்கு வெந்நீர் இதுக்கு மாத்து. கொத்தமல்லிகை, சுக்கு, கடுக்காய் கஷாயம் வைத்து கொடுக்கவும். குளிர்ந்த தண்ணீர் கை கால்களுக்கு விடவும்.

<u>கண்ட மாலைக்கு மருந்து</u>:- பிரப்பங் கிழங்கு வேர் வெட்டி வந்து அந்தச் செடியைச் சுட்டுப் போட்டு அந்தக் கிழங்கு வெட்டி வந்து பசுவின் பாலில் வாங்கவும். காருட்டுப் பாலில் வாங்கவும். இதில் தீருத வியாதியுந் தீரும்.

<u>விஷ நீரடைப்பான்</u>:- ஏலம் வீ.க, குரோசானி வீ.க, அதிமதுரம் வீ.க, சுக்கு மிளகு வீ.உ, ஓமம் வீ.க, சாதிக்காய் வீ.க, லவுங்கம் வீ.க, தானிக்காய் வீ.க, கடுக்காய் வீ.க, கொட்டைப் பாலை வேர், கண்டங் கத்திரி வேர், பொன்னாங் கண்ணி வேர், கோவை வேர், பசுவின் நெய் படி.க, இதுகளை யெல்லாம் பொடி பண்ணி நெய்யில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும்.

<u>நேத்திர சிகைச்சைக்கு-படலம்பு கைச்சல்</u>:- வசம்பை மேல் புறணியைச் சீவிப் போட்டு முருங்க முலைப் பாலிலாகுதல், குளந்த தண்ணீரிலாகுதல் உரைச்சுக் கண்ணில் போடவும். ரு.நாள் அ.நாள் போடவும். இன்னம் ஒரு வகை:? முழு மஞ்சள் கொண்டு வந்து முனையாகச் சீ யெலுமிச்சம் பழத்தில் குத்தி வைத்து ஒரு நாழிகை இருக்க விட்டு எடுத்து கண்ணிலே தடைத்தால் கண் எரிச்சல் தினவு, புகைச்சல், திமிறம், படலம் இது வெல்லாம் குணம்.

<u>படலத்துக்கு உச்சிதம்</u>:- வேளையிலைக் கசக்கி இரண்டு கண்ணுக்கு இட்டடுப் பிடிக்க கண் எரிச்சல் படலம் ------

<u>சுத்த நாக பற்பம்</u>:- சுத்த நாகம் ஒரு விராகனெடைக் குழப்பி அபினி, விராகனெடை.க, காட்டு வாழைக் கிழங்கு. வீ.க, கண்வேலுக் கிழங்கு வீ.க, இந்த மூன்றும் நறுக்கி பொடி பண்ணி நாகத்தையும் பொடி பண்ணிக் கூடக் கலந்து மூசையில் வைத்து சீலை மண் செய்து வாய்

மூடி மூன்று மண் சேர்த்து ஆற வைத்து கமம புடத்தில் நாழிகை.ஙஐ, மட்டும் சாங்க சீதளமான பிறகு யெடுத்து வைத்துக் கொள்ளவும். வேண்டின ரோகத்துக்கு வாத ரோகம்; பித்த ரோகம் இதுகளுக்கெல்லாம் அநுபான விசேஷத்தில் கொடுக்கவும். வீரம், பூரம், லிங்கம் ஒவ்வொன்றும் ரூபாயிடை (சுக்கு, மிளகு, திப்பிலி இது மூன்றும் யிடை அநுபவிக்கு தேன்) (சம்பந்தமில்லை) *

<u>வெடியுப்புச் செந்தூரம்</u>:- ரசம் வ்.ய, காரீய்யம் வ்.ய, துத்த நாகம் வ்.ய, இது மூன்றும் ஒன்றாக யுருக்கி வில்லையாக வைத்துக் கொண்டு வெடியுப்பு நாலாங் காச்சல் காச்சின உப்பு சேர் மூன்றுக்கு பலம்.யஉ, உப்பு சுத்தி பண்ணுகிற விதம்: புளியம் பழம் கொட்டையில்லாமல் இடிச்சு மூழைப் பண்ணி அதுக்குள்ளே இந்த உப்பை நிரைய வைத்து புளியினாலே வாய் மூடி நெல்லுவைக் கல்லாலே சத்து கருகச் சுட்டு அந்த உப்பை வாங்கிக் கொண்டு அதின் பிறகு இரும்பு என்ணை சட்டியில் புத்து மண் களி மண், செம் மண்ணு, இந்த மூன்று மண்ணையும் அரைத்து அந்த இரும்பு சட்டிக்குள்ளே பூசி அதின் பிறகு அதுக்குள்ளாக இருக்கிறாப் போலே ஒரு அகலச் செப்பு கொண்டு வந்து அந்த இருப்புச் சட்டியில் பூசின மண் ஆறுகிறதுக்கு முன்பே இந்தச் சட்டிக்குள்ளே அழுத்தி வெய்யிலிலே உலர வைத்து அதின் பிறகு சுத்தி பண்ணின உப்பை அந்த அகலிலே போட்டு அடுப்பிலே வைத்துக் கொண்டு ஆவாரை வேரினாலே யெரியிட்டால் தண்ணீர் போலே கரையும். அதின் பிறகு பூவரசிலைப் பழுப்பு இரண்டு கூடை கொண்டு வந்து அந்தக் கரைஞ்ச உப்புத் தண்ணீரிலே இந்தத் தழையை ஒன்றாய் சுருக்கு கொடுத்து இந்தத் தழை மட்டும் ஆன பின்பு இந்த வில்லையை உப்புக்குள்ளே நுழைத்து அடுப்போடே வைத்துக் கொண்டு தீபாக்கினி மூன்று நாள் இந்தப்படிக்கு யெட்டு நாள் பரியாந்தம் வைத்து குளிர ஆற விட்டு எடுக்க வாலசந்திரோதையப் பிரகாசமாயிருக்கும். அதின் பிறகு இந்தச் செந்தூரம் ரோகாதி ரோகங்களுக்கு அரைப் பணவெடை தேனில் அநுபனாம். இதுக்குத் தீரும் வியாதி அஷ்ட திசை குஷ்ட ரோகம், அஷ்ட குன்மம், பஞ்ச காசம், க்ஷயரோகம், சுவாசம், இந்த ரோகங்களெல்லாந் தீரும். இந்தச் செந்தூரத்துக்கு சோதினை தாம்பரத்தை உருக்கி உருக்கின முகத்தில் பத்து விராகனெடை தாம்பரத்துக்கு அரைப் பணவெடை செந்தூரம் கொடுத்தால் பசுமையாம். இந்தச் பசுமை முன் சொன்ன ரோகத்துக் கெல்லாம் பிரயோகம் பண்ணினால் ராம பாணமானது ராக்ஷஸரை எல்லாரையுங் கொன்றாய் போலே சகல ரோகத்தையு மறுக்கும். இது ஒருவருக்கும் உரையாதே. இதுக்குப் பத்தியம் பசுவின் பால், பசுவின் நெய் துவரைப் பருப்பு அரைக்கீரை. பொரி; மிளகு நீர் இந்தப் படி ஒரு மண்டலம் வாங்கிக் கொண்டால் நரை திரை மாறும்; சரீரம் வாலவயதாம். தாது வர்த்தினை யுண்டாகும்.

<u>பாரிச வாயுவுக்கு</u>:- செருங்கொட்டை பலம்.ரு, வெள்ளை வெங்காயம் பலம்.ரு, சித்திர மூலம் பலம்.ரு, நச்சுண்டான் பட்டை பலம்.ரு, பழந் தேங்காய் பலம்.க, நல்ல வெல்லம் பலம்.உ, கூட்டி இடித்து முள்ளிக் காய்ளவு இரண்டு நேரமுங் கொள்ளவும்: புளி, கிரந்தி பண்டந் தவிர்க்கவும்.

<u>அயச் செந்தூரம்</u>:- நப்பி பழுத்து மரத்து யிலையை கொண்டு வந்து பசுவின் கோமியத்திலாகுதல் தண்ணியிலாகுதல் அரைத்து ஒரு சட்டியில் குழம்பாக கரைத்து ஒரு படி குழம்புக்கு ஒரு சேர் லோகம் குழம்பிலே ஊறப் போட்டு ஒரு ராத்திரி மட்டும் இருக்க விட்டு மறு நாளெடுத்து மறு நாள் வெய்யிலிலே வைத்து வரக் கெட்டியான பிறகு அடையாகத் தட்டி உலர வைத்து உலர்ந்த பிறகு ஒரு மடக்கிலே வைத்து மேலே ஒரு மடக்கு மூடிக் கூட்டு காட்டு முட்டையில் புடம் போட செந்தூரமாம். புடம் போட்டால் பற்பம். எந்த குணம் உண்டோ அந்த குணம் உண்டு.

<u>வறப் பீனிசத்துக்கு</u>:- செம்முள்ளியிலையைக் கசக்கி தனிச் சாறாக இரண்டு மூக்கிலேயும் நசியம் பண்ணவும்: இரத்த பீனிசமும், வறப் பீனிசமும் தீரும். நாள்.ங, செய்யவும்.

<u>பீனிசத்துக்கு என்னெய் பண்ணுகிற விதம்</u>:- மணக்கு என்ணை படி.வ, வசம்பு,வ்.ச, வெள்ளை பூண்டு வ்.ச, நீரடிமுத்து வ்.ச, கருஞ்சீரகம் வ்.ச, கொடி வேலி வ்.ச, பேய்த்தும்பையிலையைக் கசக்கி பலம்.ரு, ஆலம் மொட்டும் யெருக்கம் வேரும் இது இரண்டும்

பொடி பண்ணி யென்ணை பதம் வருகிற போது கூடப் போட்டு பதத்திலிறக்கி உச்சந் தலை யிலிட்டு மூன்று நாளிருக்க விட்டு முழுகிப் போடவும். மண்டையிலிருக்கிற புழு விழும்.

சதைப்_பீனிசத்துக்குப்_புகை:- சதைப் பீனிசத்துக்கு மருந்து:- சுக்கு திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ் சீரகம், மயிக்காச்சி, குங்கிலியம், குங்கிலியம், சாம்பிராணி, முருங்கைப் பிசின் இது வெல்லாம் வகை யொன்றுக்கு அரை விராகனெடை கூட்டிக் கொள்ளவும். அரிதாரம் வீரு, மனோசிலை வீ.ரு, கெந்தகம் வீ.ரு, லவுங்கம், சாதிக்காய், சாதிப் பத்திரி, இது வெல்லாம் கல்லில் மேல் வைத்துக் கொண்டு தழுதாழையிலைச் சாறு, மிள கரணையிலைச் சாறு, நொச்சியிலைச் சாறு இந்த மூன்றும் சாறு விட்டு அரைத்துச் சீலைத் துணியில் பிடிப்பிச்சு நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு புளிய நெறிப்பில் போட்டு முகத்தில் பிடிக்கவும். உப்பு, மிளகு புளி, தவிர்க்கவும். சரு நாள் பிடிக்கவும்.

2. துத்தியிலையைக் கசக்கி ரசத்தை ஒரு விராகனெடை கூடக் கலந்து உள்ளுக்கு வாங்கிக் கொண்டால் ரசம் வயத்துக்குள்ளே சின்ன பின்னமாய்ப் போம். தப்பாது மிண்டை விரையுங் கூடப் போட்டு அரைத்துக் குளிகைப் பண்ணிக் கொள்ளவும்.

ரச_பற்பம்:- வேளையிலைக் கசக்கிக் குளிக் கல்லிலே பிழிஞ்சு வேண்டின ரசத்தை விட்டுச் சாறு வத்த மட்டும் அரைத்துக் கெட்டியானால் வில்லையாகப் பண்ணி புடம் மூசையில் வைத்து மேலேயும் மூடிப் புடம் போடப் பற்பமாம். இந்த பற்பம் சூலைக்கு, வாய்வுக்கு வேண்டின ரோகத்துக்குக் கொடுக்கவும்.

ஊசிக்_காந்தக்_கிண்ணம்:- ஊசிக் காந்தம் சேர்.கவ, வாங்கிப் பருபாகல் சாத்தில் தொண்ணூறு நாழி யூறப் போட்டு யெடுத்துச் செகப்புச் சாட்டறணை ஒரு தேங்காய் மாத்திரம் மெழுகு போலே அரைத்துக் காந்தம் தெரியாமல் கவசஞ் செய்து ஒரு சின்னச் சட்டியை அடியில் துவாரம் பண்ணி அந்தச் சட்டியிலே காந்தம் வைத்து மேலோடு மூடிக் குளி வெட்டி அந்தக் குளிக்குள்ளே சின்ன செப்பு வைத்து அது மேலே காந்தச் சட்டியை அது மேலே சுவத்தி வாய்க்குச் சாணி அப்பி பத்திரப் படுத்தி மேலே யெரு முட்டை போட்டு தீப் போடவும். கீழ் சட்டியில் சத்து இறங்கும். காரீய்யம் போலே இருக்கும். அதை யெடுத்துக் கன்னான் கிட்டேக் கொடுத்து கிண்ணம் பண்ணவும். அந்தக் கிண்ணத்தில் மருந்து குடிக்கலாம். அந்தக் கிண்ணத்தில் வென்னீர் விட்டால் உடனே ஆறிப் போகும். ரசம் விட்டால் ரசம் இறுகிப் போகும். இது கை கண்டது.

உருக்கு_பற்பம்:-

உருக்கு பழுக்கக் காய்ச்சி கழுதைக் கோமியத்தில் காய்ச்சித் தவைக்க உளி கரை யிறைரையில் காய்ச்சிப் போட்டு உருக்கு கரைஞ்ச படியிலே இருக்கும். அந்தக் கோமியத்தை யி யிறுத்துப் போட்டுக் கொல்லன் உலையை வைத்து பழுக்கக் காய்ச்சினால் சுத்தியாகும். அந்தக்******** அதை எடுத்துக் கல்லில் வைத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டு பத்து நாழிகை அரைத்துக் காசி போலே வில்லை செய்து காய வைத்து ஓட்டில் வைத்து மண் சீலை செய்து கெசப்புடம் போடச் செந்தூரமாகும். அதை எடுத்த தேனில் பணவிடைக் கொடுக்க. இப்படி அரை மண்டலங் கொடுக்கத் தீரும் வியாதி அளவே கட்டி பெரு வயறு, மகோதரம், காமாலை, மந்தார காசம், மேக வாய்வு, உதக வாய்வு, ஒறண்ட வாய்வு, இடுப்பு வலி, கை கால் பிடிப்பு, குடைச்சல், முடங்கால் வாதம், குதி வாதம், நரித் தலை வாதம், அஷ்ட குன்மம், வருத்த வலி பீலிகை, இரைப்பு இது வெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் இச்சா பத்தியம். செந்தூரம் ஆகாமல் போனால் பின்னையும் இரண்டு புடம் போடவும். எலுமிச்சஞ் சாறு விட்டு அரைத்துப் புடம் போடவும். செந்தூரமாகும்.

ஈத்த_நாக_பற்பம்:-

ஈத்த நாகம் பலம்.க, கொண்டு வந்து பேய்க் குமட்டிச் சாத்தில் ஒரு படி சாத்தில் நாகத்தை உருக்கிச் சாய்த்து அந்தச் சாறெல்லா வலியும் அந்தப் பொடிப் போலே ஆகும். அதை எடுத்து குமரிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து இரும்புச் சட்டியிலே போட்டு அஞ்சு பலம் நாயுருவிக் குச்சி நறுக்கிப் போட்டுக் கொத்தமல்லி அஞ்சு பலம் போட்டு வறுக்க முருக்கம் பூப் போலே செந்தூரமாகும். அதில் பணவிடை

[illegible]

செந்தூரம் எடுத்து சுக்கு, திப்பிலி, மிளகு, அதிமதுரம், சூரணம் பண்ணி தேனில் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி நீரழிவு உ௰, பிரமியம் பதின்மூன்று வயத்து வியாதி, இது வெல்லாந் தீரும். இச்சா பத்தியம். இது கை கண்டது.

அயச் செந்தூரம் :-

அயப்பொடி வீ.ய, கருவங்கம் விராகனிடை.உ, கெந்தகம் விராகனிடை.ய, இந் மூன்று சரக்கும் அரைத்து குகையில் வைத்து உருக்கிச் சாய்க்க மணியாகும். இந்த மணியைக் கல்வத்திலிட்டு அரைத்து ஓட்டிலிட்டுத் தென்னம் பாலை கொண்டு வறுக்கச் செந்தூரமாகும் அரைப் பணவிடை செந்தூரம். கடுக்காய், சுக்கு, மிளகு மூன்றும் சூரணம் பண்ணி பணவிடை வைத்துக் கொடுக்க வீக்கம். சோகை, விசைப் பாண்டம் இதுகள் தீரும். இச்சா பத்தியம். இது கை கண்டது.

ஸ்ரீ வசியம்.

கோழி நாக்கைச் சுட்டு தன் யிந்திரிய மும் இரண்டும் சேர்த்துப் பாக்கிலிடவும். தன்னைத் தொடருவாள். கோழி முட்டை சுட்டுச் சுண்ணாம்பில் கலந்து வேண்டின வருக்கு கொடுக்க. அவள் தன்னைத் தொடருவாள். அமுக்கிரா வேருக்குத் திங்கள் கிழமைக்குக் காப்புக் கட்டிச் செவ்வாய்க் கிழமை நாள் பிடுங்கி குளிசமாடி தன் கையிருக்க உடம்பு விடாது. இதுக்க அறுபானம் ஸ்ரீ போகத்து வேளைக்கு முன்னே சேர்க்க விடாது. வேண்டா போதைக்கு பின்னே சேர்க்க உடம்பு விடும். இது கை கண்டது.

இரத்தம் விழுகிறதுக்கு :- பழம் புளி, எலுமிச்சம் பழச் சாறு, ஈர வெங்காயம், கத்தாழை சோறும் இது வெல்லாம் எருமைத் தயிரில் கொடுக்கவும். மூத்திரத்திலே இரத்தம் விழுகிறது நிற்கும்.

நாயுருவி விரையும், வெள்ளரி விரையும், காவிக் கல்லும், சீரகம், அரைத்து வெண்ணையில் புதைத்துக் கொடுக்க நீரடைப்புக் கல்லடைப்புத் தீரும். மூன்று நாள் ஆறு நேரம் தினம் விடாமல் செய்யவும். தீரும்.

கோழி முட்டையை உடைச்சு வெள்ளைக் கருவை வாங்கி அதில் நல்லெண்ணெய் கலந்து கொடுக்கத் தீரும்.

பிள்ளை யுண்டாக மருந்து :- சங்கங் கொழுந்து தேங்காயளவு ஈர வெங்காயம் இரண்டும் சமனாகக் கூட்டி இடித்து ரசம் வாங்கி இதுக்கு உ.வீ சீரகம் கூட்டி வாங்கவும். இதுக்கு முன்னே பனைவெல்லங் கொஞ்சமாய்க் கொடுத்து பின்னே இந்த மருந்து கொடுக்கவும். இதுக்குத் தீரும். வியாதி அடி வயத்தில் வரளி மேல் கொண்டு வரவும். உதிரக் கட்டு விழுகிறது. வெள்ளைக், கண்ணெரிச்சல், கண் புகைச்சல் எல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் உப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும்.

அப்பக் கோவைக் கிழங்கு விராகனிடை.ந, மிளகு சீக்,வீ.க, வெள்ளைப் பூண்டு எலுமிச்சம் பழச் சாறு ஒரு பிடி சேப்பு நெருஞ்சி ஒரு செடி பலகரை பற்பம் இது மூன்றும் பொடி செய்து போட்டுக கொடுக்க வலசலம் விடும். இது கை கண்டது.

ஸ்ரீகளுக்கு இடு வகை மருந்து :- மூலத்தில் மூலாம் முளை வித்து சித்திரையாம். கோலத்தில் மாம்பு குளிர் பூர்சாலம். அத்த மொடு கலா. அறுசு மொடு யிலையாம், மத்தையார் செய்யு மயக்கு. வித்துக்கு விந்தவாம். வேருக்கு வேர்வையாம். உத்தமல் தோலுக்கு யுதிரமா பொற்றை நரம்புக்கு உமி நீர். சீலைக்கு சிறுநீர். பாவைக்கு செய்யும் பரிச்

வங்க செந்தூரம் :-

வங்க வெடியுப்புச் சட்டியில் போட்டு அதின் பிறகு ஆவாரை வேர் வட்டத் துத்தி வேர் கண்டங் கத்திரி வேர் இது வெல்லாங் கண்டங் கண்டமாக நறுக்கி அதில் போட்டு சிவக்க வறுத்துப் பிறகு எடுத்துக் கொண்டு பொடி செய்து செந்தூரம் பணவிடைக்கு இந்தப் பொடி காசிடை கூட்டி நற்சீரகமும் காசிடை பசு வெண்ணெயில்க் கொள்ளவும். இரண்டு அல்லது மூன்று நாள்க் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி திருகு சன்னி பதினெட்டு

கல்லடைப்பு, சலக் கழிச்சல், நீரடைப்பு, கையெரிப்பு, காலெரிப்பு, சுக்கிலப் பிரமியம் மேகம் இருப்பதந். தீரும். இஞ்சி சாத்தில் அஸ்தி சுரம், வயத்தில் பிள்ளை செத்து விழுந்த கிராணியுந் தீரும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளித் தவிர்க்கவும். இது

மதன_காமியதம்_பனம்:-

ஒன்பது புடம் பண்ணின சடைக் கஞ்சா ஒரு பிடி கடலை ஒரு பிடி மருக்காரை விரை ஒரு பிடி, எள்ளு ஒரு பிடி, நல்ல வெல்லம் ஒரு பலம் இது வெல்லாந் தேங்காய்த் தண்ணீரில் பிசைந்து அந்தத் தேங்காயிலடைத்து ஆப்பு அடித்து சாணி கட்டிச் சுட்டு ஒடு போக்கி உள் ளெல்லாம் அம்மியில் வைத்து சாதிக்காய் வீ.க, சாதிபத்திரி வீ.க, கசகசா வீ.க, குரோசாணி, ஓமம் வீ.க, அபினி வீ.க, மதமத்த விரைவீ.க, சாரை பருப்பு வீ.க, இது வெல்லாம் கூட்டி அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை செய்து நிழலுணர்த்தா யுணர்த்தி அந்தி சாய ஒரு உருண்டை சாப்பிடவம். பாலும் சாதமும் சாப்பிடவும். இதுக்கு மாத்து எலுமிச்சம் பழம் சாப்பிடவும் இது கை கண்டது.

வங்க_பற்பம்:-

வங்கம் பலம்.க, சங்கத் தழை பிழியிலே சரியாகப் போட்டு வறுக்கப் பற்பமாகும்.

சூத்க_வாய்வுக்கு:-

திப்பிலி, மிளகு, சீரகம், சுக்கு, ஓமம், ஆனைத் திப்பிலி, பெருங்காயம், வசம்பு, குரோசாணி ஓமம், வாய் விளங்கம், அக்கிலாக் காரம், கோஷ்டம், சடாமாஞ்சல், சாதிக்காய், சாதிப்பத்திரி, யேலம், கிராம்பு, கசகசா, கார்போக அரிசி, வால் மிளகு, தாளிசை பத்திரி, உப்பு இந்துப்பு அட்டுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, வெங்கா ரம், சவுக்காரம், படிக்காரம், நவச்சாரம் வகைக்கு வீ.ச, சித்திர மூலம் பலம்.ரு, கண்டங் கத்திரி பலம்.ரு, பறங்கிப் பட்டை பலம்.ரு, பூண்டு பலம்.எ, பனை வெல்லம் பலம் .எ, இது வெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி பூண்டு உரிச்சுப் போட்டு அரைத்துக் குளிகை களச்சிக் காய் பிரமாணம் உருண்டை செய்து வைத்துக் கொண்டு சாப்பிடவும். சூதக வாய்வு, கிருமி, அண்டச் சுண்ணம், போட்டு குளிகை செய்யவும்.

வீர_செந்தூ_ரம்:-

வீரத்தைக் காட்டுக் கொட்டைப் பாலில் போட்டு நாலு நாள் வெய்யிலிலே வைத்து யெடுத்து அந்தப் பட்டையைக் கவசஞ் செய்து உரு விரட்டியில் புடம் போடச் செந்தூ ரமாகும்.

லிங்கச்_சுண்ணம்:-

லிங்கத்தைக் கோனைக் சாத்தில் ஆறு நாளூறப் போட்டு சுத்தியாகும் உணர்த்தி மறுபடி தும்பை யிலே அரைத்து கவசஞ் செய்து நாலு நாள் பின்னிட்டு எடுத்து உணர்த்தி தும்பை குப்பை மேனி, வல்லாரை மூன்றுஞ் சமமாக வைத்து அரைத்து லிங்கத்துக்குப் பச்சிலைச் சார் தடவி அதின் மேலே தேன் தடவி அதன் மேல் மூன்று இலை அரைத்ததைக் கவசஞ் செய்து அதின் மேல் சுண்ணம்பு கவசஞ் செய்து சீலை மண் செய்து உணர்த்தி முழுப் புடத்தில் சுண்ணமாகும்.

வீரச்_செந்தூ_ரம்:-

வீரத்தைக் முடக் கொத்தான் சார் விட்டு அரைத்து நாலு சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்துச் சீலை செய்து இரண்டு எருவில் புடம் போடச் செந்தூரமாகும். அரிசியிடை கொடுக்க வாய்க் கட்டாது.

நவச்சார_சுத்தி:-

நவச்சாரம் கமு நீரில் வைக்கச் சுத்தியாம்.

_குருவாக_மருந்து:-

புளியம் பிரண்டைக் கிழங்கு, முள்ளிக் காய்ப் பிரமாணம் பசுவின் பால் விட்டு அரைத்துக் கால் படி பாலில் கொடுக்கவும். குருவுண்டாகும். தப்பாது.

(வேறு)

புளியம் பிரண்டைக் கிழங்கை நல்லெண்ணையில் வேகவைத்து மெழுக பதத்தில்

வடித்துக் கொடுக்கவும் ருது உண்டாகும். தட்டெடை கொடுக்கவும் தப்பாது.

8111.62. புளியம் பிரண்டைக் கிழங்கு ஆட்டுக் கல்லில் போட்டு ஆட்டி மேல்படி தளையை யிடித்துப் பிழிந்து அந்த ரசத்துடன் சேர்த்து மேற்கண்ட ரசத்தில் தாம்பிரத்தைக் காய்த்த காய்த்து ஏழு தடவை வைத்து எடுத்து சுத்தியாகும். சூரிய காந்தி சமூலகங் கொண்டு வந்து அரைத்து எட்டுப் பலம் இரண்டு வில்லை தட்டி தாம்பிரத் தூட்டுச் சாறு நீரில் அலம்பி ஈரத்துடன் மேற்கண்ட ஈர வில்லையில் துட்டை வைத்து மேல் வில்லை மூடி அதன் மேல் ஒரு மூடிச் சீலை செய்து கெசப்புடம் போட்டு எடுத்துப் பார்க்க முத்திரை யுடன் வெள்ளிக் காசு போல் பற்பமாயிருக்கும்.

தாளக பற்பம்:-

தாளகம் பலம் சுத்தி பண்ணி முடக் கொத்தான் சாறு கால் படி சாறு சுருக்குங் கொடுக்கவும்.

பிள்ளை இல்லாதவர்களுக்கு மருந்து:-

பொற்றலைக், கய்யாந்த கரையை அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும். மத தலை முழுகின மூன்று நாள் கொடுக்கவும். மூன்று நாள் புருஷனுடனே சேரவும். மேல் படி மருந்து மூன்று நாள் குளிக்கும் போது மூன்று நாளைக்கு அரைக்கால் படி பச்சரிசி ஆலம் பால் விட்டு நனைய விட்டு அரிசியே மூன்று நாள் மூன்று பிடியாக யிடித்து தின்னவும். புருஷனுக்கு ஒரு பிடி கொடுக்கவும். இப்படி மூன்று நாள் சாப்பிடவும். சாப்பிட்டு மூன்று நாளும் புருஷனுடனே சேரவும். இது கை கண்டது.

புன்னைப் பருப்பு தேங்காய்ப் பாலிலரைத்து அந்தப் பாலில் குழப்பிக் கொடுக் கவும். வயறு பேதியாகும். ரத்தம் அடங்கிப் போகும். பத்தியம் ஒன்றும் ஆகாது. மூன்று நாள் கூட்டிக் கொள்ளவும். இது கை கண்டது.

வாய்வு என்றதெக்கல்லாம் மருந்து:-

மூக்கரைச் சாரணைக் கிழங்கு கொண்டு வந்து மேல் புறணி தள்ளி சீவிப் போட்டு வில்லையாய் நறுக்கி ஒரு பிடி பிரண்டைக் கிழங்கு கொண்டு வந்து மேல் புறணி தள்ளி சீவிப் போட்டு வில்லையாய் நறுக்கி இந்தக் கிழங்கிலே அரைப் படியும் லவணத்தில் கால் படியும் ஆக மூன்று மருந்து ஒன்றாய் ஓட்டில் போட்டு வறுத்து கிழங்கு நீர் சுண்ட வறுத்து சிவந்து வருகிற போது உரலில் போட்டு இடித்து களிப் போலே சேர்ந்து போகும். அதை சுளகில் காயப் போட்டு இடித்து வடிகட்டி வஸ்த்திர காயம் பண்ணி புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு காலமே உதையத்தில் வெரு கடிப் பிரமாணம் சாப்பிட்டு வென்னீர் கொள்ளவும். சகல வாய்வு அத்துப் போகும். பாரிச வாய்வு அண்ட வாய்வு சகலத்துக்கும் சாப்பிடவும்.

வயத்தில் செத்த பிள்ளை விழ:-

பச்சைத் [illegible]வலை சமூலங் கொண்டு வந்து சாறு பிழிந்து வடி கட்டிக் கொடுக் க விழுந்து போகும்.

கால் வலியாமல் நடக்க மருந்து:-

நீர் முள்ளி விரையும் விளாம் பிசினும் நல்லெண்ணெயில் வேக வைத்துக் காலில் தடவி நடக்கத் பதின் காதம் நடக்கிலும் கால் வலியாது. இதுக்கு மாத்து. வறள் சுண்டி விரை வேரரைத்துக் காலில் தடவ நடை மாறும்.

கால், கை முடைச்சலுக்கு மருந்து:-

சுக்கு, வாய் விளங்கம், மிளகு, வேலிப் பருத்திச் சாறு விட்டுக் கொதிக்க வைத்துச் சாப்பிடவும். சதை குப்பை, சுக்கு, வேலிப் பருத்திச் சாறு விட்டு துவலை போடவும். இதுக்குத் தீரும் வியாதி வாய்வு, கீல் வாய்வு, இது முதலானதுந் தீரும். இது கை கண்டது.

தாம்பிர செந்தூரம்:-

தாம்பிர செந்தூரம்:-

தாம்பிரத் தட்டுக்கு நெல்லிக் காய் கெந்தகம் ஒரு பொடியிடை வெள்ளெருக்கம் பால் விட்டு அரைத்து தட்டுக்கு கனசங் செய்து ஓட்டில் வைத்துச் சீலை மண் செய்து கெசபுடம் போடவும். மறுபடி யெடுத்து பொற்றலைக் கய்யாந்த கரைச்சாறு விட்டு அரைத்துப் புடம் போடவும்.

இரும்பு, செம்பு:-

இரும்பைத் தகடு தட்டி புரசங் சாத்தில் மூன்று நாளு வைத்து மாதளையிலை அரைத்துப் பூசி மாட்டு யெருவில் புடம் போட்வும், செம்பாகும்.

வீர மெழுகு:-

வேலிப் பருத்திப் பால் அந்த கட்டிக்கு பிடித்து மூன்று நாள் பிடித்து முருங்கைப் பூவு சாறு இரண்டு சாமம் சுருக்குக் கொடுக்க மெழுகாகும்.

பிரண்டைச் சூரணம் வாய்வுக்கு:-

எருமைத் தயிர் படி.க, சுக்கு சேர்.க, வீட்டுப்பு சேர்.க, சிறுகீரை வேர் சேர்.க, பிரண்டைக் கொழுந்து சேர்.க, இதுகளை மேற்படி எருமைத் தயிர் கட்டியில் சேர்த்து புதுச் சட்டியில் போட்டு வேறு கட்டி மேலோடு மூடி பூமியில் புதைத்து யரு நாளது பின்னை எடுத்து உணர்த்தி யிடித்து வஸ்திர காயம் பண்ணி மூன்றுக் கொன்று நாட்டுச் சர்க்கரை கலந்து திரிகடுகு பிரமாணம் சாப்பிடவும். தீரும் வியாதி வாய்வு, வயிறு பொருமல், வயிற்று வலி, மந்தம், அஜீரணம் இதுகள் தீரும்.

மேகத்துக்கு மருந்து:-

சந்தனம், குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், அப்பிரகம், கல்மதம், கற்பூர சிலாசத்து, நண்டுக் கல், வெள்ளி, சரக்கு வகை மிளகு வெள்ளை மிளகு, லவுங்கப் பத்திரி, தாளிசப் பத்திரி, வெந்தியம், காரீய்யம் பலம் நாலு பழச் சாத்திலுருக்கிச் சாய்க்கவும். நல்லெண்ணை யிலுருக்கி யேழு தரம் உருக்கிச் சாய்க்கவும். கொள்ளுச் சாத்தில் காடியி லுருக்கிச் சாய்க்கவும். சட்டியில் வைத்து ரசம் கால் கூட்டி ஆவாரை பஞ்சாங்க போட்டு வறுக்க நாலு சாமம். வறுக்கச் செந்தூரமாகும். கால் சாமம் சும்மா வறுக்கவும். இந்தச் செந்தூரம் தேனில் பணவிடை தின்ன பிரமி, பெரும்பாடு, கிரிச்சினங்கள், நீரழிவு, கல்லடைப்பு இது வெல்லாந் தீரும்.

தாளக சுத்தி:-

சுண்ணாம்பு கல் கொண்டு வந்து சட்டியிலே போட்டுத் தாளகத்தை நடுவே வைத்து மேலேயும் கல் போட்டுத் தண்ணீரை ஊத்திலே வெந்து போகும். நடுவே தாளகத்தை வைத்து ஒரு சாமம் எரிக்கப் பற்பமாகும்.

ரச செந்தூரம்:-

ரசம் இரண்டு பலம், கெந்தகம் பலம்.க, கெந்தகத்தை உருக்கி ரசத்தை தொந்திச்சு காசி குப்பியில் போட்டு சீலை மண் செய்து தங்க ரேக்குகத் தேவையான வரையில் தொந்தித்து ரசத்துடனே சேர்த்து வாய்ப் பாட்டுக்கு மாக்கல் கொண்டு மூடி அகலச் சட்டிக்குள் நாலு விரக்கடை மணல் கொட்டிச் சீசாவை வைத்துச் சீசா வரையில் மணல் கொட்டி மேல்ச் சட்டி மூடி சீலை ஏழு சீலை செய்து வாலை அடுப்பில் வைத்து முன் காடாக்கினி .அ, சாமம் கமலாக்கினி யெறந்து வரும் போது மேல் சட்டி மாக்கல் எடுத்துப் போட்டு சலாக்கே ஒன்றே சுளாவி மாக்கலலை மூடி எரிக்கவும். சாமத்துக்கு இரண்டு தடவை சலாக்குப் போட்டு வந்தால் எந்த சமயத்தில் வெளுத்தாலும் சிவந்தாலும் எரிப்பை நிறுத்தி விட்டுச் சட்டி ஆறிய பின்னை எடுத்துக் கொண்டு அநுபானக்கு சரக்கு. சுக்கு, பலம்.க, மிளகு பலம்.க, அரிசி திப்பிலி பலம்.க, சாதிக்காய் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, சீரகம் பலம்.க, சீனி சர்க்கரை பலம்.க, நெய் பலம்.ச, தேன் பலம்.உ, இந்தச் சரக்குகளை இளவறுப்பாய் வறுத்து இடித்துவஸ்திர காயம் பண்ணி சக்கரையை பாகு

செய்து மேல்படி தூள்களைச் சேர்த்து களறி நெய் தேன் விட்டுக் கிளறி களச்சிக் காய் பிரமாணம் எடுத்துப் பணவிடை செந்தூரம் போட்டுச் சாப்பிட வாதம். அய, பவுத்திர மூலம், சுவாச காசம், பிரமேகம், நீர்க் கட்டு, நீரடைப்பு, கல்லடைப்பு, கிரந்தி, அரையாப்பு, சூலை, சொறி, மேகத் தடிப்பு, இரணம்; கால் கை முடக்கு, கீல் வாய்வு இதுகள் தீரும். இதுக்குப் பத்தியம் புளி, புகையிலை சம போகம். கிறந்தி பதார்த்தம், கடுகு, நல்லெண்ணை இதுகளை நீக்கிப் பசுவின் பால், பசுவின் நெய் சேர்த்து வரவும்.

வாதமுறை:- கெந்தகம், க்கனம் சூதம் நீர்க்குண்டி; ரசம் மத்திதம் அண்ட முழு சிஉக கி தேவை முற்த்து காரித்தற நாசனம்.

கெந்தகம்; அப்பிரகம், ரசம், வெள்ளை நொச்சிச் சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து மறுபடி குப்பியில் வைத்துச் செந்தூரிக்கவும். நாபிக்குச் சிறுக்ரை- முடிவு சரியாயில்லை.

சவ்வீர பற்பம்:-

கலையத்தில் கோழி முட்டை அச்சு விறுகன்டை கரு, இந்தப் படிக்குப் போட்டுப் போடு மட்டுக்கும் போட்டு கலையத்து வாய்க்கு சீலைமண் செய்து கெசபுடம் போட பற்பமாகும். எடுத்து வைத்துக் கொண்டு கருசலாங் கண்ணிச் சாத்தில் போட்டுக் கொடுக்க. பதிமூன்று வகைச் சன்னியுந் தீரும். பத்தியம் புகை, புளிப்பு ஆகாது. பத்திய முறிக்க சிறுகீரை, சுக்கு கஷாயம் போட்டுக் கொடுக்க முறியும்.

அப்பிரக செந்தூரம்:-

கருத்த அப்பிரகம் கொண்டு வந்து இடித்துக் காடியிலே மூன்று நாளூற வைத்து நாலா நாளெடுத்து மொத்த றெட்டுலே போட்டு நெல்லுப் போட்டு சேர்த்து பிடித்துக் கையிலுலே தேய்க்கத் தூளாய்க் கீழே விழுகும். எடுத்துப் பழச் சாத்திலரைத்து உலர்த்தி வைக்கவும். நாலாங் காச்சல் வெடியுப்பி வீ.உ, கற்பூரம் வீ.க, கல்லுப்பு வீ.க, இந்த மூன்றும் பொடி பண்ணி வில்லைக்குக் கீழு மேலும் போட்டுச் சீலை செய்து புடம் போடவும். அந்த வில்லையை யெடுத்துக் கொண்டு ஆலம் பாலு விட்டு அரைத்து பத்து புடம் போடச் செந்தூரமாம். இதுக்கு அநுபானம் பூமி சர்க்கரை நிலப்பனைக் கிழங்கு, ஓரிலைத் தாமரை இது மூன்று பொடி பண்ணி சமன் சர்க்கரை கலந்து பலம். கத இந்த் செந்தூரம் பசுவின் பாலில் கொள்ளவும். ஏழு நாளைக்கு ஸ்திரீசங்கமம் ஆகாது. இச்சா பத்தியம்.

சறுவாங்க சூலைக் கட்டுக்கு:-

புலி தடிக்கி வேர்ப் பட்டை, மேல்த் தழைப் பட்டையை அரைத்துத் தழையை யிடித்து தண்ணியில்லாமலிடித்து வெள்ளாட்டுப் பாலில் புதுச் சட்டியில் விட்டு இந்த மருந்து போட்டுக் கலக்கி நெல்லுத் தாளுக்குள்ளே வடி கட்டிக் குடிக்கத் தக்கினது கொடுக்க. பத்தியம் அந்த வெள்ளாட்டுப் பாலில் சோறு போட்டு தின்னவும். மத்தியம் மூன்று நாள் மறு பத்தியம். மூன்று நாள் வறுத்த உப்புப் போட்டுக் கொள்ளவும். உப்பு, புளி, புகை கார்த்து, புளியம் மரத்து நிழல் ஏழு நாளைக்கு ஆகாது. கை கண்டது.

காய்ச்சல் காரருக்கு நாவு உலர்ந்து பலா முள்ளுப் போலே இருக்கிறதுக்கு:-

இந்துப்பு, நாயுருவ்ச வேர் அரைத்துத் தேனில் குழப்பி நாக்கில் தடவி இள வென்னீர் கொப்பளிக்கவும். காச்சல்காரருக்கு நாவுலர்ந்து பலா முள்ளுப் போலேயிருந் தால் இது செய்யவும். இது கை கண்டது.

சங்குப் பற்பம்:-

சங்கு எலுமிச்சம் பழ ரசத்திலே ஊற வைத்து மூன்று நாளூற வைத்து எடுத்து எருக் கிலைப் பாலிலே வைத்து ஒடு மூடி சீலை மண் செய்து முழுப் புடம் போடவும், பற்ப மாகும். இது கை கண்டது. இத எடுத்து வேண்டுமானதுக்கெல்லாம் வைத்துக் கொள்ளவும்.

சூத்த நாக பற்பம்:-

சுத்த நாகம் ஒரு செப்பில் வைத்து உருக்கிற போது உத்தாமணிச் சாறு அரைப் படி விட்டு ஓயாமலாத வறுக்கப் பற்பமாகும். இந்தப் பற்பம் யெந்த வியாதிக்கும் அநுபான மறிந்து கொடுக்கவும்.

நவச்சாரச் சுண்ணம்:-

2 நவச்சாரத்தை அமுரியுப்பு யெடுத்து அதுக்குள்ளே வைத்துச் சீலை சுத்தி மண்ணுக்குள்ளே வைத்து மேலே ஒரு பொழுது எரிக்க பற்பமாகும். அதை யெடுத்து வைத்துக் கொண்டு பத்துக் கொன்று கொடுக்கத் தங்கமாகும். வெள்ளி செம்புகளிலே கொடுக்கவும்.

நட்சத்திரத்தின் பெயர்.

1. திருந்தி மூர்த்திகளே வருமாகிய தேவ வீசுரன் மூர்த்தி மெய் தேசிகன்
பெருந்தவத் தரும் வத்தாவி மேரா சுர தன் பெருமை வாழ்த்தி நாளின் பெயர் பேசுவோம்
பொருந்தும் அசுபதி அய்ய மாவாசிமா புரவி காக்கு பரிதேசி கோட்கம்
தெரிந்த சன்னி யவுளி குதிரையும் தொந்த அப்பசி நாளின் பெயர் செப்புமே.

2. செப்புந் தாளிதரா் சடுப்பு பூதம் செய கங்குல் கிளவன் சொரு பரணியே
யப்பா வீமேசர் மெய்யால் அங்கியே அளகிராலமுலாரு மீன் கார்த்திகை யொப்பில்
பண்டிதேருருஊ ஐமீன் வைய்யம் மோதும் பாரு சகடு முரோகணி
முப்பின் மான்றலை தெங்கா ஐந்தான்மும் மூன்று மீன் மிருக சிரமும் உரைப்பதே.

3. உரைகொளா திரை செங்கையாழ் மார்கழி ஒன் கரும்பு புனர் பாலை யாவணம்
புரை கொள் மூங்கில் புனர் பூசம் கார்குளம் பொருதையி தொடிரு குரு பூசமே
நிரை கொள் கௌவை பணியாயில் கொடு நகம் ஞெமலி மாசி வாய்க் கால் வெட்டுவ மகம்
விரையிடச் சுனி தூர்கையும் நாவிதன் மிக்க பூரம் வீமேசர் தாளமேத்துமே.

4. மெத்த பானீர் கடைச் சனி பங்குனி மேவு முத்திரம் அங்கைய மீனு யியின்
உத்தமன் களி ரத்தம் நோய் மீனப்பா தன்.ம் அம்பான செவ்வியோடாட்டையும்
சித்திரை மரக்கால் தீபம் பதுமமே தொந்த சோதிவைய் காசி முற்றில் முரம்
மத்தி சேரும் விசாகம் புல தேள் பனை அநுசர் வீமேசர் நாதன் புற்றதே.

5. உருவல்லாரை ஒனி நாளி கேட்டை கொக்குத்த தேள் கடை ஆனியு மூலமே
செரி பொய் வாவி உடைற்றல் பூராடமே செய்ய கூவ்வ ஞமாடி யூர் மணி
பெருத்த தானம் முடியுத்திருடமே பெற்ற சொறுவக்கை
திரு ஓணமே பானல் காக்கை புள்ளாவனி விட்டமே பனம்பாய்வீமே சுரர்குரா பண்ணுமே

6. பன்னு சுண்டிலும் செக்குமு சதையமே பாரும் ஞாளி கொருங் கால் புரட்டையும்
முன்னு மீது புரட்டாதி சீரரி முரசு வேந்தனுத்திரட்டாதி தாலமே
மன்னு தோனி கடை மீன் மரக்கலம் மருவும் நாவாய் ரேபதியே தினம்
மென்னும் வைகல் பொது தாரகை கலா மெங்கள் வீமே சுரர் பதம் எல்லையே.

7. எல்லையில் வடிவார் வீமநாதர் தாள் யிறைஞ்சி மொற்றை மரிது காரென் கம
மெல்லை கோச்சனம் காவியு மேடமே விடை நற்பாண்டி லெருது மொழுண்டை செவ்
புல்ல மேரிஷம் தாரம் தண்டியாழ் போதும் வீணை கவினுன் மதுனமே
நல்ல கொண்டல் குளிரறி சேக்கை நீர் நண்டு காரலவன் கடகமே.

8. நற்றவார் வீம் நாதரடியினை கொண்டாம் மடங்கலரி புலி
சிற்றில் கோணமாகடு மலைச் சீயமே சிங்கமாறு தேரிவை பெண் செடிகை
உற்ற கன்னி கோல் கட்டள வாணிபன் உய்யதாகக் கல் நிரை செட்டி யொன்லாம்
துற்ற புன்றௌ மனிதுடர் விட்ட நீர் துய்யதுட்டன் றெருக்கால் விருஷ்ச்சிகம்.

9. காலு காலன் வீமேசன் கணகவில் காண்டீபம் கார்முகம் கைச்சிலை கண்டது
கோலமான கலை கேது புல்வாய் சுற கோதில்லாமகரம் குடம் காடி
சாலதாலும் கலசமுஞ் சட்டுவம் சாற்றுகும்பம் தருக்கிய மீன் கயல்
சேலுங் கெண்டையு மீனத்தின் பேரென செய்யும் ருசி பொது ஒரை செப்புமே.

10. செப்ப மெங்கள் வீமே சாகனதிக் கெலாம் திவகரன் பகல் வெய்யோன் திவாகதன்
ஒப்பில் பாநு மருக்கன் மார்த் தாண்ட நல்லுதைய னென்றா ளி ரவி. பரிதி கோள்
ளப்பதவன் சூரியன் ஞாயிறேடருணன் வுர்தி யரி புண்டரீகமன்
முப்பில் வெங்கதிர் செங்கதிர் பார்க்கரன் முதிய ஆதித்தன் யெங்கெங்கு மூர்த்தியே.

11. எங்க ளைய்யர் வீமே சுரகன் பூச்சி யிறைவன் சோமன் மதி பிறையிந்து நீ
திங்கள் வெண்ணிலா அம்புலி மீன் பதி செய்யருள் ரசாலவன் சந்திரன்
பொங்கு சேய் குசன் அங்கார கன் கனல் பூமன் வக்கரன் போதக் குருதியே
அங்கியாரனில் மகனுரமுல ஆன செவ்வாயின் பொன்றரிகவே.

12. அரிமென பாவி மேகர் நூல் நெஞ்சான் ஆய்ந்த மால் புலவன் மேதை தூ தவன்
புரையன் புந்தி அமணன் மதி மகன் போத சாமன் கணக்கன் புதன் பெயர்
இவை வனந்தணன் மந்திரி பொன் குருயெய்த பீதகன சீவன் வியாழமே.

13. வெள்ளி மாமலை மீது ரவிதத்தன் வீம நாதரடியினையே பெறும்
வள்ளல் சேய் மடவன் சுன்முக மகன் மந்தன் காரி கரிய வனீலனும்
தெள் மேயீச் சனியே அரன் புண் பணி சேந்தகைம் அதிரப் பாம்புருவே
கொள்ளுஞ் சிங்கொள் சிகியிவை கேதுவே கோளக் களமே மெனப் பரிசித்ததே.

14. கூறுவேன் வீமநாதர் தாள் சென்னி மேல் கொண்டு சுவாச மிருபத்தோராயிரம்
ஆறு நூறு கிரேதாயுக மென்பதினற் பெருக் கதிரை தாயருதாம் யேறும்
நாற்பதில் துவாபர மிருபதாலே பெருக்கக் கலியுக மீறி சென்றது
மூவாயிரத்தொரு நூறு மேல் பத்து ஒன்பதாய் மேவுமே.

<u>வீமநாதர் துணை.</u>

<u>நவநாயகர் வரும் நாள்:-</u>

மீனபூரவ் பிரேத மறச்சும்
மேஷ மாத முதல் வார மந்திரி
சேனை யாதிபன் சிங்கம் கடகமே
செழித்த பைங்கூழ் சீலை தானி யாதிபன்
ஊனமில்லாத துலையோ சாதிபன்
உற்ற பாசானெங்க மகரமே
யான தானிய பொக்குமி யாழ் சூரிய
குதிரைப் பூனில் மாரி கலக்குமே.

<u>உதிர வாய்வுக்கு:-</u>

எருமைத் தயிரிலே ஊமத்தை சாறு நாலு துளி விட்டுக் கொடுக்க மயக்கமுண்டாகும். சத்தித நேரம் போகுல் நல்லாய்ப் போய் விடும். ரத்தம் வருகிறது நின்று விடும். இது கை கண்டது. ~~நாலு துளி விடவும், எருமைத் தயிரில்~~.

<u>ரசச் செந்தூரம்:-</u>

ரசம், கெந்தகம் சுத்தி பண்ணி கஞ்சா சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். தும்பைச் சாறுவிட்டு ஒரு நாளரைக்கவும். ஊமத்தஞ் சாறு விட்டு ஒரு நாளரைக்கவும். எடுத்துக் காசிக் குப்பியில் போட்டு மேல் வாய்க்கு மாக்கல் கொண்டு மூடி குண்டு மணிப் பசை போட்டு காத்துப் போகாமல் போட்டு குண்டுச் சட்டியிலே நாலு விலல்க் கடை மனல் கொட்டி நடுவே குப்பி வைத்து கழுத்தளவு மணல் கொட்டி சட்டிக்கு மேலோடு கொண்டு மூடிச் சீலை மண் செய்து தீ பாக்கினி ஒரு நாள் கமலாக்கினி ஒரு நாள் காடாக்கினி ஒரு நாள் எரிய விட்டு ஆறிய பின்னெடுத்து செந்தூரம் பணவிடை செந்தூரம் அனுபானங் களிலிட யெந்த வியாதியுந் தீரும்.

<u>கண்ரோவுக்கு மருந்து</u> :- ஏலம் துட்டெடை அரைத்து வஸ்த்திர காயம் பண்ணிக் கலசத்தின் மேலே வைத்து காசி செம்பு கொண்டு நன்றாய் ஒரு சாமம் அரைத்துத் தேய்த்து நயமான பிறகு அந்த மருந்துக்கு சரி பசு வெண்ணை போட்டு மறுபடி ஒரு சாமம் தேய்த்து அந்த மருந்தெல்லாம் செப்பு சிமிளில் வைத்துக் கொண்டு கண்ணுக்கு மை போடவும். இதில் தீரும் வியாதி கண்ரோவு வெண்ரோவு, புழு வெட்டு, சிகைக் கண்ணு, மற்றுமுள்ளதுந் தீரும். இது கை கண்டது.

<u>கண்ணுக்கு மருந்து</u> :- வெள்ளைச் சாறணை வேர் கொண்டு வந்து பசுவின் பாலிலே வேக வைத்து நிழலுணர்த்திக் கொண்டு அந்த வேரைத் தலை வலிக்குச் சாட்டறணைச் சாத்திலுரைத்து க் கண்ணில் போடவும். பூப்பட்ட கண்ணுக்கு வெள்ளாட்டு வப்புரைத்துப் போடவும். நீலிச் சாற்றிலுரைத்துப் படலம் போகும். சாறணைச் சாத்திலுரைத்து யிட மாலைக் கண்ணு போம். மஞ்சள் சாத்திலுரைத்து யிடத் தினவு போம். கையாந்தகரைச் சாத்திலுரைத்து யிடப் புழு வெட்டுப் போம்.

<u>செம்பு சுத்தி</u> :- சீருக்காரம், வெங்காரம் நவச்சாரம், கல்லுப்பு வெடியுப்பு,. மாவிலிங்கந் தழைச் சாத்தில்ரைத்து கவசங் கட்டி முழப்புடத்தில் சுத்தியாம்.

<u>வெள்ளிய பற்பம்</u> :- செப்பு சுத்தி, வெடியுப்பு, துருசு, கருவங்கம் இது மூன்றும் ஒரு நிறையாக சிறு தாமரை ரசத்திலாட்டி கடலை போலே உருட்டி இந்த எடைக்கு வெள்ளியை மேல்படி மணியை ஒன்றைக் கொடுத்து விழுங்கி விடும். அதை எடுத்து ஓட்டில் வைத்து ஊதிப் போடச் சுத்தியாச்சு. 14/12/6

<u>வெள்ளீயம் பற்பம்</u> :-

ஆவாரை யிலையை யிடித்து கீழு மேலும் வைத்து புடம் போட பற்பமாகும். மேகத்துக்கு பசுவின் வெண்ணையில் கொடுக்கவும் வெள்ளீயத்தைநீர் வாங்கத் கத்தாழை மடல் கொண்டு சோறெடுத்து கடுக்காய் பருப்பெடுத்து அந்தத் தூளைச் சேர்த்துக் குள்ளே போட்டுச் சூரிய புடம் வைக்க தண்ணீராகும். இதை இறுத்துக் கொண்டு அந்த நீரிலே ஈயத்தைக் காய்ச்சி ஊத்த நீர் வாங்கும்.

<u>கிரந்தி புண்ணுக்கு மருந்து</u> :- ரசம் ஒரு ரூபாயிடை மனோசிலை ஒரு ரூபாயிடை காரீய்யம் மூன்று ரூபாயிடை உருக்கி ஊத்திலல் உதிர்ந்து போகும். இதை எடுத்து துணியில் திரிதிரி த்து ஜோடு புகை பிடிக்க யெல்லாக் கிரந்தியும் போய் விடும். இது கை கண்டது.

<u>நெஞ்சு நோவுக்கு ஈரக் குலை நோவுக்கு மருந்து</u> :-

தேங்காயுள்ளே சுண்ணாம்பு நிரப்பிக் கண்ணை அடைச்சு வேக வைத்து எடுத்து உடைச்சு இரண்டு பங்காய்ப் பண்ணி ஒரு பங்கை சுக்கு, மிளகு இது மூன்றும் அரைச்சு இருபத்தொரு குளிகை பண்ணி அரைக்கீத்தை யிருபத்தொரு கீத்தாக வகுந்து இருபத்தொரு குளிகையும் இருபத்தொரு கீத்தும் தின்னவும்.

<u>இருபத்தொரு மேகத்துக்கு எண்ணை பண்ண</u> :- சீரகம் பலம்.௧, ஓமம் பலம்.௧, சதகுப்பை பலம்.௧, ஈர வெங்காயம் பலம்.௧, எண்ணை படி.௧வ, சன்ன லவுங்கப் பட்டை, பலம்.௧, கஸ்தூரி மஞ்சள் பலம்.௧, கடுக்காய் பலம்.௧, பூலாங் கிழங்கு பலம்.௧, தழுதாழை, சங்கங் குப்பி, கோவைத் தழை, எலுமிச்சம் பழம், புண்ணைக்கு, புன்கு ஆகாச கெருடன், ரசம் இதுகள் சா அரை. இதுகளை எரித்து பதமாய் வடித்து (Incomplete)

<u>புழு வெட்டுக்கு</u> :- பச்சைப் பூர்சைக் கொம்பை வெட்டி வந்து அடுப்பில் வைத்தால் தயிலம் வரும். அதை வழித்து புழு வெட்டு மேல் தடவினால் புழு செத்துப் போகும். இது கை கண்டது.

<u>கமை கட்டு சிலந்திக்கு</u> :-

செம்பிலியாட்டு மயிர் கொண்டு வந்து வெள்ளாட்டுப் பால் விட்டு அடை போல் தட்டி சிலந்தியின் பேரில் வைத்துக் கட்ட சிலந்தி செத்துப் போகும். இது கை கண்டது.

ஆனி மூலத்துக்கு மருந்து :-

காட்டை கொட்டைப் பருப்பு, நாய் விட்டை, தலை மயிரு போட்டு குழி வெட்டி ஆறிய கல்லு அதின்மேல் வைத்து குழியில் நெருப்பு போட்டு வேலிப் பருத்தி ரசம் சீலையில் பிடித்து திரி பண்ணி குத்தலே சொருகி ஆறிய கல்லுலே உட்கார்ந்து புகை பிடிக் ஆனி மூலம் இத்து விழுந்து போகும். இது கை கண்டது.

குன்மம் வாய்வுக்கு :-

இந்துப்பு பலம்.க, திரு கள்ளி பால் விட்டு அரைத்து முத்தின தேங்காய்க்குள் ளே போட்டு பொத்தலை அடைத்து சுட்டு அரைத்து உக, குளிகை பண்ணித் தின்னவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளியாகாது.

உஷ்ண வாயுவுக்கு கல்பரசம் பாயிசம் :-

வெள்ளுள்ளி ஒலிச்சப் பருப்பு ஒரு பலம் பசுவின் பாலில் நன்றாய் வெந்து களிப் பதமாக இறக்கி ஆற வட்டு அரைப் பலம் சர்க்கரை கலந்து இதைக் காலமாலை அந்திக்கு இரண்டு நேரத்திலே சாப்பிட்டுப் போடவும். இப்படி அன்னைக்கு அன்று வேகித்துச் சாப்பிடவும். மூன்று நாள், அஞ்சு நாள் சாப்பிடவும். புளி விடவும்.

பாண்டு, மகோதரம், புனற் ~~சிரசம்~~ :- நல்கிரதம்

சாறணை வேர் வெட்டி வந்து கரணை ~~சா~~ கர ணையாக நறுக்கி இரண்டு படிக்கு நறுக்கி இரண்டு படி பசுவின் பால் விட்டு சுவறவே வித்து உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி கலசத்தில் வைத்துக் கொண்டு அந்தச் சூரணம் இரண்டு பங்கு சர்க்கரை ஒ பங்கும் கலந்து கொண்டு உள்ளங் கை கொண்டது சாப்பிடவும். உப்பு, புளி விடவும். இது கை கண்டது.

தாளிச வடகம் :-

தாளிச பத்திரி பலம்.க, மிளகு பலம்.க, செவ்வியம் பலம்.க, திப்பிலி மூலம் பலம்.உ, லவுங்கம் வீ.க, ஏலரிசி வீ.ச, சிறுநாகப்பூ வீ.ச, லவுங்கப் பட்டை வீ.ச இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி இதுக்கு அநுபானம் சூரணம் ஒரு பங் வெல்லம் மூன்று பங்கு வெல்லம் கூட்டிக் கொள்ளவும். கொள்ளுச் சாத்தில் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி பீனிசம், குன்மம்; பாண்டு, வத்துக்கு கொள், கட்டு சுறத்து, இஞ்சிச் சாத்தில் சுக சன்னிக்கு கஷாயம் இந்தப் படிக்குக் கொள்ளத் தீரும்.

அப்பிரக செந்தூரம் :-

அப்பிரக செந்தூரம் லட்சணம் நெருப்பில் போட்டால் உப்ப ஒன்னது குதிக்க ஒன்னது. யெரைய யொன்னது. சிகப்பு, வெளுப்பு, மஞ்சள் பொன்னிறம். இதுகளெல்லா ஆகாது. கறுத்த காக்கைப் பொன்னை காடியில் பத்து நாளுற வைத்து எடுத்து உலர்த்தி மடக்கிட்டு மூடி அரையளவு குளி வெட்டி காட்டு முட்டை இரண்டு கூடை கொட்டி நடுவே மடக்கை வைத்துப் புடமிட்டு அத்திப் பட்டைச் சாத்தில் ஒரு தரம் ஆலம் பட்டைச் சாத்தில் ஒரு தரம், ஆவாரம் பட்டைச் சாத்தில்ஒரு தரம், சீந்தித் தண்டுச் சாத்தி லொரு தரம், கடுக்காய்ச் சாத்தில் ஒரு தரம், நெல்லிக்காய்ச் சாத்தில் ஒரு தரம், புவரச்சஞ் சாத்தில் ஒரு தரம் இந்த வகை சாத்திலொவ்வொரு புடம் போடவும். செந்தூரமாகும். இந்தச் செந்தூரத்தைத் தேனில் கொடுக்க விழுகனிடை தேனில் கொடுக்கவும். சர்வமான வியாதி யெல்லாந் தீரும். வியாதிக்கு தக்க அநுபானத்தில் கொடுக்கவும்.

வாய்வு, கை கால் பிடிப்புக்கு :-

வெள்ளறுகு, சிவனர் வேம்பு, பூச்சான் வேரு, சித்திர மூல வேர், திப்பிலி மூலம், எருக்கம் வேர், முள்ளுக் கொழிஞ்சி, திப்பிலி, மூலம் எருக்கம் வேர், முள்ளுக் கொழிஞ்சி மிளகறணை வேர், மஹுபாலா, திரிபலையம் இரண்டு விராகனிடை ஒரு வள்ளம் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும். இதுக்கு புளி மோர் ஆகாது.

அயச் செந்தூரம் :-

கெந்தகம் பலம்.க, அயப் பொடி பலம்.க, பழச் சாத்திலொரு சாமம் அரைத்து வெய்யிலிலே உலர்த்தி மடக்கிலே வைத்து சீலை மண் செய்து முப்பது எருவில் புடம் போடவும். செந்தூரமாகும். அநுபானங்களிலிடச் சகல வியாதியும் போகும்.

சகல வியாதிக்கும் அயச் செந்தூரம் :-

அயப்பொடி பலம்.க, கெந்தகம் பலம்.க, லிங்கம், காரம், சாரம், உப்பு றண்டு கூடன், சீனம் வகைக்கு ஒரு களஞ்சி.க, ஆரியென்ற புனக்களிச்சி.க, காந்தமது பலம்.வ, படி பழச் சாறு விட்டரைத்து இரண்டு நாழிகை விடாமலரைத்து வில்லை செய்து வராக புடம் போடச் செந்தூரமாகும். முருங்கப் பூப் போலே செந்தூரமாகும். பாண்டு ரோகந் தீரும். இது கை கண்ட செந்தூரம்.

வாத முறை :-

கெந்தகம் பலம்.க, விந்து பலம்.க, சுரோணிதம் பலம்.க, அமுரியுப்பு பலம்.க, சீனம் பலம்.க, இந்த அஞ்சும் மெழுகு போலாட்டி அஞ்சு அன்ன முகையில் வைத்து மேலே கவசம் அதிலே செய்து சீலை மண் செய்து குக்குட புடம் போடச் சுண்ணமாகும். நவலோகம் உருக்கிற போது பத்துக்குப் பணவிடை கொடுக்க பத்தரையாகும்.

நீர்க் கட்டுக்கு மருந்து :-

வெங்காரம் விராகன் .ரு. பொரிச்சி மூன்று, பலகரைப் பொடி, பச்சைக் கற்பூரம், பணவிடை.ரு இது மூன்றுங் கூட்டி நேகப் பொடி பண்ணி அஞ்சு எலுமிச்சம் பழச் சாற்றில் போட்டுக் குழப்பிக் கொடுக்கவும். இப்படி இரண்டு நேரமுங் கொடுக்கவும். தீரும் வியாதி நீர்க் கட்டு, கல்லடைப்பு, சதையடைப்பு, மூத்திரப் பாமும், மூத்திரப் பிளிங்கி, கோஉஷ்ணந் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். துவரைப் பருப்பு; மிளகு சாறு, மிளங் கீரை கூட்டவும். உஉஷ்ணம் அதிகமானால் நாழி தேன் சட்டியிலிட்டுக் காய்ச்சி நல்லெண்ணை கூட விட்டுக் கருங்கிலியம் பலம்.உ, மஞ்சள் பலம்.உ, வெவ்வேறே நாலு நாழிகை பொடி செய்து எண்ணை விட்டுக் குழப்பிச் சட்டியிலிட்டு நாலு நாள் வெய்யிலிலே வைத்துக் கிண்டி யெடுத்து வைத்துக் கொண்டு காலம்பற ஒரு கரண்டியும், சாயங்காலம் ஒரு கரண்டியும் கொண்டு வரவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி கூட்டாமலிக்கவும். கத்திரிக்காய், பாகற்காய், பெரும்பூசணிக்காய், ரசப் பூசணிக்காய், பருப்பு கூட்டாமலிருக்கவும். சுக சரீரக்காரருக்கு இருபது இருபது நாள் இந்த அவுஷதங் கொண்டு பத்தியங் கார்க்கவும். மற்ற பலத்த ரோகக்காரருக்கு நாற்பது நாள் அவிஷதங் கொண்டு பத்தியம் கார்க்கவும். பத்து நாளைக்கு ஒருக்கால் எண்ணையிட்டு முழுகவும். பசுவின் பால் கூட்டிக் கொள்ளவும். வறுத்த துவரை மிளகு, புழுங்கலரிசி இது கூட்டவும். இதுக்குத் தீரும் வியாதிகள் கருங் குஷ்டம், செங்குஷ்டம், செவ்வட்டை, கடி சொறி குஷ்டம்தேமல் குஷ்டம், கை கால் பதகிறியா விறிந்த அழுகண்ணிக்கும் நல்ல பிரயோகம்.

மூலத்துக்கு, மூலக் கிராணிக்கு மலக் கிராணிக்கு இந்த வகை மூன்றும் கோழிப் பற்பம் :-

மூலத்துக்கு மூன்றும் மருந்து :- ~~சாதிக்காய்~~ சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, ஓமம், கிராம்பு, அதிவிடையம், கருஞ்சீரகம், இவை ஒவ்வொன்றுக்கு ஒரு விராகனெடை பறங்கிப் பட்டை பலம்.கவ, மிளகு பலம்.வ, இவை யெல்லாம் அரைத்துக் குப்பை மேனியிலை அரைத்து ஒரு விளாங்காயளவு பிரண்டையிலை அரைத்து அவ்வளவு முத்தக் கோழியை அடித்து உரித்து கால், கை தலை உள்பட அறுத்துப் போட்டு அதின் வயித்தைப் பீறி குடல் போக்கி அரைத்த மருந்தை அதன் வயத்தில் துணித்து சறடு கொண்டு தைத்து வேப்பம் பட்டை இடித்துப் இருபது படி தண்ணீரில் பிசைந்து ஒரு நாள் ஊற விட்டு வடித்து அந்தத் தண்ணீரில் கோழியைப் போட்டு வேந்து உரி தண்ணீராக வத்த அவித்துப் பின்பு உலத்திப் பொடி செய்து வைத்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு வெருகடிப் பிரமாணம் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் புளி விடவும். இந்தப் பற்பம் ஒரு மண்டலங் கொள்ள மூலக் கிராணி யெல்லாந் தீரும். இது கை கண்ட பிரயோகம்.

சாத்திர வேதி செந்தூரம்:-

சாத்திர வேதி கல் காடி வார்த்து அரைத்துப் புடமிடவும். சீந்தித் தண்டு சாறு வார்த்து அரைத்து புடமிடவும். தண்ணி மிட்டான் சாறு வார்த்து அரைத்து புடமிடவும். அத்திப் பட்டை, நாவல் பட்டை, ஆலம் பட்டை, மருதம் பட்டை, பிச்சிப் பட்டை, இந்தச் சாத்தில், ஒவ்வொரு தரம் புடம் போடவும். இந்த செந்தூரம் அநுபானமறிந்து கொடுக்க சர்வமான பிரமியம், ரத்த பித்தம், தாபசுரம் தீரும்.

காந்த செந்தூரம்:-

ஊசிக் காந்தம் பலம். ய, காடி வார்த்து அரைத்து புடமிடவும். சீந்தி தண்டு சாறு அத்திப் பட்டை சாறு, ஆலம் பட்டைச் சாறு இந்த வகைச் சாத்தில் ஒவ்வொரு புடமிடவும். இந்த செந்தூரம் விராகனெடை அநுபானத்தில் கொடுக்கவும். பிரமியம், பாண்டு, காமாலை சர்வமான வியாதி யெல்லாந் தீரும்.

கெந்தக சுத்தி:-

கெந்தகத்தைப் பொடி செய்து கரண்டியிலே போட்டு நெய் விட்டுக் ~~கா~~ காய்ச்சி ஒரு படி பாலிலே ஊத்தவும். கெந்தகத்தைஎடுத்து வென்னீரில் அலம்பச் சுத்தியாம்.

அரிதார சுத்தி:-

நீர்ப் பூசனிக்காய் சாறு, எலுமிச்சம் பழச் சாறு படி. வ, இது மூன்றுங் கூட்டி ஒரு கரண்டியைக் காய வைத்து அந்தச் சாத்திலே சிறு கடலை போலே யுடைத்து மெல்லிய புடவையில் இரட்டை மடிப்பில் முடிந்து ~~மனிதர் சலம் இரண்டு படி மூத்திரத்தில் சட்டியில் வார்த்து~~ அதில் போட்டு அடுப்பில் வைத்து சிறுக நாலு நாழிகை எரிய விட்டு எடுக்கச் சுத்தியாம்.

மனோசிலை சுத்தி:-

~~மனோசிலை சுத்தி~~ மனோசிலை கடலை போலே உடைத்து மெல்லிய புடவையில் இரட்டை மடிப்பில் முடிந்து மனிதர் சலம் இரண்டு படி மூத்திரத்தில் சட்டியில் வார்த்து அதில் போட்டு அடுப்பில் வைத்து சிறுக நாலு நாழிகை எரிய விட்டு எடுக்கச் சுத்தியாம்

துரிசு சுத்தி:-

துரிசியை இரண்டு படி காடியில் சீலையில் முடிந்து போட்டு வேக வைக்கச் சுத்தியாம். கெவுரி பாஷாணம் சுத்தி:- சுண்ணாம்பு தண்ணீரில் மெல்லிய புடவையில் முடிந்து போட்டு வேகவைக்க ஒரு சட்டியில் ஒரு சேர் தேன் விட்டு அதில் போட்டு வேக வைத்து எடுத்து தண்ணி யிலலம்பச் சுத்தியாம். கெவுரி பாஷாணம், எலிப் பாஷாணம் இதுக்கு அவ்வாறே செய்யவும் சுத்தியாம்.

மசூரிகைக்கு:-

அளிஞ்சி வேரை சுண்டைக்காய் மாதிரி அரைத்து இள வென்னீரில் குடிக்க நிற்கும். இது கை கண்டது.

வாதத்துக்கு எண்ணெய் மருந்து:-

நல்லெண்ணை நாளி தை வேளைச் சாறு, நாளி ஒன்றித்து வற்றக் காய்ச்சி ஒரு கரண்டி எண்ணை கொள்ள இதுக்குத் தீரும் வியாதி நடுக்கு வாதம், திமிர் வாதம், முடக் வாதம், மறன வாதம், தலைவாதம், வலிப்பு வாதம் இவை யெல்லாந் தீரும். புளி தவிர்க்கவும்.

சுரத்துக்கு கலிக்கம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, லவுங்கம், வாய் விளங்கம், கொத்தமல்லி, பெருங்காயம் இது எட்டும் ஒரு சமனாய் நிறுத்து, எலுமிச்சம் பழச் சாத்தில் ஒரு

சாமம் அரைத்து கம்பி போலே உருண்டை உருட்டி நிழலுணத்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச் சாத்திலாகுதல், புளிச்சக் காடியிலாகுதல், உரைத்துக் கண்ணிலிட குளிர் வெதுப்பு விடா வெதுப்பு இவை எல்லாந் தீரும்

கிளிஞ்சிச் சுண்ணம்:-

கிளிஞ்சி வேணுமானது கொண்டு வந்து இது சுத்தி உவர் மண்ணு கொண்டு வந்து தண்ணியிலே போட்டுக் கரைத்துத் தெளிவை இறுத்து அந்தத் தண்ணீரில் கல்ச் சுண்ணம்பு வேக வைத்துக் கரைத்துக் கொண்டு அதில் முன் கிளிஞ்சியைப் போட்டு ஒரு ருத்திரி முப்பது நாழிகை ஊறப் போட்டு காலம்பற எடுத்து அடுப்பில் வைத்து ஒரு சாமம் எரித்து அந்தக் கிளிஞ்சியைக் கருப்பெல்லாம் போக்கி வெள்ளையான பிறகு எடுத்து ஒன்றரை முழக குழி வெட்டி அதில் காட்டெரு முட்டை பேர்டு இந்த கிளிஞ்சியை நடுவே வைத்து எரு முட்டைப் போட்டுத் தீப் போடச் சுண்ணமாகும். அதை எடுத்துக் கொண்டு வெடியுப்பு அந்தப் பிரகாரம் அந்தச் சுண்ணத்தில் வைத்து எரிக்கவும். சீனக் கார முன் போலே யெரிக்கச் சுண்ணமாகும். கோழி முட்டை யோடு கொண்டு வந்த உவர் மண்ணு தண்ணிலூறப் போட்டு சவ்வு எடுத்துப் போட்டு அதைத் தேனிலே ஊறப் போட்டு ஒரு ஓட்டில் போட்டு கெசப்புடம் போடச் சுண்ணமாகும். பச்சைத் தாரிசு முன் கிளிஞ்சி சுண்ணத்தில் வைத்து ஒரு சாமம் யெரிக்க சுண்ணமாகும். இந்த அஞ்சு சுண்ணமும் வகைக்கு பலம் ஒன்று எடுத்து இரும்பைக் குகையில் வைத்துத் தருத்திக் கொண்டு உருக்கிச் சாய்க்க அதை யெடுத்து அந்த யிடைக்கு நவச்சாரம் போட்டு அரைச்சுச் செய நீரு வைத்து அந்தச் செய்நீரில் பச்சைத் தாரிசியை அரைத்து வில்லை பிடித்து கெசபுடம் போடச் சுண்ணமாகும். சவ்வீரத்துக்குப் பசிக் காடைப் புடம் போடச் சுண்ணமாகும். இப்படிச் சாதிலிங்கம் போடவும். வெள்ளைப் பாஷாணம் அப்படியே போடவும்

சிலாசத்து பற்பம்:-

சுண்ணம்புக் கல்லு எலுமிச்சம் பழச் சாறு விட்டு வேக வைத்து அந்தச் சுண்ணம்பை எடுத்து குகை பண்ணி அதுக்குள்ளே வைத்து கெசபுடம் போடப் பற்பமாகும். கல்லெரிப்புக்கு:- வாழைக் கிழங்குச் சாறு, மிளகு பலம்.வ, பொடி பண்ணிப் போட்டு வெங்காரம் பொரிக்குப் போட்டு கொடுக்க கல்லு விழும்.

நீரழிவுக்கு:-

காட்டு வாழைக் கிழங்கு, மேல் தோல் வாங்கிப் போட்டு அரைத்து யேலம் சீரகம் வகைக்கு களஞ்சி அரை கூட்டி அரைத்து எருமை வெண்ணை சரி கூட்டிக் கொடுக்கவும். பத்தியம் பச்சரிசிச் சோறு எருமை நெய் மோர் கூட்டவும். பலகரை சுட்டு சாம்பல் எலுமிச்சம் பழச் சாறு உழகுக் கூட்டிக் கொடுக்கவும். துன்மாங்கிழங்கு கரைந்து கல்லு விழும். எரிப்பெடுத்து ரத்தம் விழுந்தால் சீய் விழுந்தால் கம்பரிசி மாவு, விளாங்காயளவு ஈர வெங்காயச் சாறு பனை வெல்லம் கூட்டிக் காடியில் கொடுக்கவும்.

தாளிச பத்திரி குளிகை:-

தாளிச பத்திரி விழுகன் .ங, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கோஷ்டம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர் வகைக்கு பலம்.ங, பறங்கிப் பட்டை பலம்.ச, மிளகு பலம்.உ, திப்பிலி பலம்.உ, தேசாவரம் பலம்.உ, சித்திர மூலம் பலம்.உ, சீரகம் பலம்.க, கருஞ்சீரகம் பலம்.க, செவ்வியம் பலம்.க, சிறுநாகப்பூ பலம்.க, கூட்டி சூரணம் பண்ணி மூன்று பங்கு சர்க்கரை கூட்டி பசுவின் பாலில் பிசைந்து புட்டுப் போலே வேக வைத்து எடுத்து ஆறுகிறத்துக்கு முன்னே தேத்தாங் கொட்டைப் பிரமாணம் உருண்டை பண்ணி நேரம் ஒன்று சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி பித்தம், பித்தத்தில் பிறந்த கண்ணெரிச்சல், கை காலெரிசசல், வயிறெரிச்சல், உம்ம் பெரிச்சல், அக்கினி மந்தம், ஆருட்டம், தலை நோவு, குலை நோவு, பீளை யிருமல் யித்தனையுந் தீரும். இரண்டு நேரமும் ஒரு மண்டலங் கொள்ளவும்.

கண் முலைக்கு :-

கலத்தில் சிறு புறத்தில் எலுமிச்சம் பழச் சாறு பிளிந்து செம்பிலுரைத்து பின்பு மாதளஞ் சாறு பிளிஞ்சு புளியிலைச் சாறு பிளிஞ்சி முருங்கையிலைச் சாறு பிளிஞ்சி பொன்னாங் கண்ணிச் சாறு பிளிஞ்சி நேர்மை பட உரைத்து துத்தம் துரிசு விராகனெடை.௧, விட்டரைத்து பின்பு பச்சைக் கற்பூரம், தேன் வார்த்து அரைத்து மாறுபடாத பசுவின் வெண்ணை முள்ளிக் காயளவு கூட்டி மத்திச்சு சிமிழில் வைத்துக் கொண்டு கண்ணிலிடவும். இது கை கண்டது.

(வேறு) நந்தியாவட்ட வேர், பசுவின் வெண்ணையிலிடவும். பண்ணிக் குழம்பு கோழி நெஞ் செலும்பு அளிஞ்சி யோடு முலைப்பாலிலுரைத்து யிடவும். ஆனைக் கொம்பு வெள்ளைச் சாறணைச் சாத்திலுரைத்து யிடவும்.

நமியுறுதல் மருந்து :-

லவுங்கப் பட்டை பலம்.௫, பச்சைக் கற்பூரம்.௫, பொன்னாங் கண்ணி சிறு தேக்கு .௧, சந்தனம், நெல்லிப் பருப்பு, செண்பகப் பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பொன்னாங் கண்ணி, சிறுகுறை, வட்டத் துத்தி குறுந் தொட்டி யிவ்வேருகளும், கருப்பான் கிழங்கு இவை எலுமிச்சம் பழச் சாறு முலைப் பால் விட்டரைத்து நெய்யாவது நல்லெண்ணையாவது விட்டெரித்து நாசியில் நிறுத்தித் தலையிலிம் தடவவும். மண்டை வியாதி, நீல காசம், பித்த காசம், கண்ணிடை யெடுப்பு அறுவிதல் எல்லாந் தீரும். கண்ணிமையுள் சிவந்திருக்கும். மரம் போலு மிருக்கும். நாசி வறளும். அடைத்து நீர் பாயும். தலை கனக்கும். கண் குவளை துடிக்கும். விழி நேராய்ப் பார்க்கக கூடாது. கூச்சமுண்டாயிருக்கும்

இதுக்கு மருந்து :-

செங்கழு நீர் கோஷ்டம், சாதிக்காய், புலம் சீரகம் பலம்.௫. ஏலம் ஒரு களஞ்சி விஷ்ணு கிரந்தி வேர், ஒரிலைத் தாமரை வேர், கறுத்த ஆமணக்கம் வேர், நாவல் பட்டை அரப்பொடி, துரிசு இவை கூட்டி எலுமிச்சம் பழச் சாத்திலரைத்துக் கண்ணி லிட கண்ணில் பூப் பறந்து போம். மண்டை வியாதியின் குணம் :-

மண்டை வியாதியின் குணம் :-

தலை சொறியும். சோதியாது. மூளை சுருளும். மயிரு உறும். முதுகு தாரை வலிக்கும். சிறுகுய சத்தமும் முகயதைப்பு, தலை நரம்பு தெறிக்கும். உச்சி யிடிக்கும் நாசி வறளும். பல்லுக் கொதுக்கும. அலகு திறவாது. தசை நரம்பு திமிர்த்தல், அதிக பாரம், நாசியில் மோரு போல பருத்திக் கொட்டை போலே சலந் தெறிக்கும். மூத்தி நாசியில் இரத்தமாய் விழும். வெடி நாறும். நெஞ்சு விலா நோவும். உள்ள வறளும். கடுக்கும்..

சலதோஷத்துக்கு மருந்து :-

அவுரியிலை கையாந்த கரையிலை இந்தச் சாத்தில் நல்லெண்ணை வசம்பு, வெங்காயம் போட்டு எரித்து ஒரு காசிடை இரண்டு நாசியிலும் விட்வும். சலதோஷந் தீரும். இளநீர் படி.௪, மரமஞ்சள்.௧, திரிபலயம் பலம்.௧, அதிமதுரம் பலம்.௧, சிறுகீரை வேர் பலம்.௫, பொன்னாங் கண்ணி வேர் பலம்.௫ இவை கூட்டி நாலிலொன்றாய்க் காய்ச்சி பிசைந்து பிளிந்து வடித்து யிதுப்ப களிஞ்சி பொடிசெய்து போட்டு தேன் மாகானி விட்டு லேகிய பதத்திலிறக்கி களஞ்ச பச்சைக் கற்பூரமுங் கூட்டிச் சாதித்து பறணிலடைத்து கண்ணி விடக் காசங்களும் படலங்களும் தீரும்.

பிளித்த கண்ணுக்கு மருந்து :-

செங்கொட்டை கறி, துத்தம் துரிசு, நிலஞ்சனம் சரி கூட்டி பசுவின் வெண்ணை யுடன் கலத்திலிட்டு இழைத்து மை யிடத் தீரும். வேப்பம் பிசின் மோரில் தேய்த்துக் கண் உவளையம் பூசவும். நறிக்காசவலை கருக்கி கடுக்காயும், கத்தாழை மணியும் கூட்டிப் பிசைந்து கண்ணில் வார்க்கவும்.

(வேறு)

சங்கு செம்பு மலைப் பாலில் தேய்த்துக் கண்ணிலொழுக்கத் தீரும். துத்தி வடக்கே வேர், வாய் பேசாமல் கொண்டு வந்து காய்ந்த யிரும்பில் எலுமிச்சம் பழச் சாறு

விட்டுரைத்து கண்ணிலுமிட்டு மேலும் பூசவும். எருக்கம் பஞ்சில் எருக்கம் பாலூட்டி யுலத்திக் காதில் வைக்கவும். கண்ணோவு தீரும். வள்ளிக் கொழுந்து முறித்து அந்த நீரைக் கண்ணில் விடத் தீரும். எலந்த முள் சுட்ட பொடியும், எள்ளம் முலைப் பாலிலூட்டின பஞ்சுடன் கூட்டி அனலில் காய்ச்சி படுக்க வைத்துப் புழியவும். கத்தாழை மளியில் கடுக்காய்ப் பொடி கூட்டி மத்திச்சுப் பொட்டணங் கட்டி கண்ணிலும் பிளிச்சு மேலும் ஒத்தட மிடவும். நாறு வருஉம் சென்ற நந்தியா வேரை நறுக்கி நீர் விட்டு ஏழு நாளரைத்து உருண்டை பண்ணி நெய்யி லரைத்திட ஆணி கரையும். தேனில் படலந் தீரும். நீரிலுரைத்திட நீர் விருகிறது நிற்கும். கய்யாந்த கரை சாத்திலுரைத்திடக் காசந் தீரும்.

<u>நேத்திர வாய்வுக்கு மருந்து</u>:- வேப்பம் பிசின் வீ.க, வெள்ளைச் சாறணை வ.க, புங்கம் விரை வீ.க, கஸ்தூரி மஞ்சள் வீ.க, பவளக் காய், மனோசிலை வ.க, வறுத்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து ஒரு சாமம் அரைத்து பிறகு தேன் விட்டு அரைத்து ஒரு சாமம் செம்புளவு பச்சைக் கற்பூரம் இரண்டு பணவிடை கூட்டி மிளைக்கவும். எருமைக் கொம்புச் சிமிளில் அடைத்து நேத்திர வாயுவக்கு ஒரு பயறளவு இரண்டு நேரமும் மிடவும். பத்து நாளி டவும். இதுக்குத் தீரும் வியாதி நேத்திர வி வாய்வு, வாத காசம், பித்த காசம், திமா காசம், பீனிசங்கள், பூப்படலம், நீர்ப் பாய்தல், கண்ணையும் நெத்தியும் குத்தியும் குடைதல் ராத்திரி காலம் நித்திரையில்லாமல் நேர்தல், விளக்கில் முழிக்கபடாதல் இது முதலானதந் தீரும். நாலு நாளைக்கொருக்கால் விளக்கெண்ணை யிட்டுப் பச்சை யாப்பிட்டு வெந்நீரு முழுகவும். மாங்கிஉஷம் விடவும். உப்பு, புளி விடவும். துவரை, முருங்கைக் கீரை மிளகு நீர் கூட்டவும். இது கை கண்டது. நம்பிச் செய்யவும்.

<u>நீல காசத்துக்கு மருந்து</u>:-

புங்கம் பருப்பு, ஆமையோடு சங்கு கடுக்காய்; பீதரோகணி, சுக்கு, மிளகு, தேன் கொடுக்கிலைச் சாத்திலரைத்துக் குளிகை பண்ணி நேத்திரத்துக்கு முலைப் பாலிவிட வும். நீல காசத்துக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும். கடுகு நேத்திரத்துக்கு உஉங்ளத் துக்கு முலைப் பாலில். நீலக் காசத்துக்கு பனைப்பட்டைச் சாத்திலிடவும்.

<u>நீல காசங் குணம்</u>:-

சமுத்திரா பாசத்தை பசுவின் பாலில் வே.க வைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு கண்ணுக்கு முலைப் பாலிலிடவும். நீலக் காசம் பித்த காசம் தீரும். வெள்ளை வேளை வேர் இலையும், பசுவின் பால் வார்த்து அரைத்து ஊறு முருங்கைப் பூவும் அவ்வளவு துத்தம் கருசு இத்தனையுங் கூட்டி அரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

(வேறு.) வெள்ளைக் காவளை வேர் சாறணை வேர் கடுக்காய் பருப்பு சுக்கு அரிசு சத்து மாதளை யிலை மிளகு கய்யாந்த கரையிலை எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து உருண்டை பண்ணி உலர்த்தி*வெ* கண்ணுக்கு யிடுவகை பூப்பட்டதுககு மாதளைச் சாத்திலிடவும். படலத்துக்கு தேனில் புண்ணுக்குப் புளியிலை தினவுக்கு இலைக் கள்ளியிலை புகைச்சலுக்கு கய்யாந்த கரை யிலை இப்படி யுரைத்திடவும்.

<u>கண் பூவுக்கு மருந்து</u>:-

பலகரை, கடல் நுரை, மருள விரை, தேத்தான் கொட்டை, கோழி முட்டை, காக்கைப் பொன் இது சமன் எலுமிச்சஞ் சாறு விட்டரைத்து தேனு குத்தி அரைத்து உருண்டை பண்ணி முலைப் பாலிலாவது தேனிலாவது யிடக் கண் பூப் போம்.

<u>சிப்பூவுக்கு மருந்து</u>:-

நீலாஞ்சனம் மனோசிலை, அரிதாரம் சந்தனம் திப்பிலி மிளகு தகரை விரை இவை சமன் கொண்டு வெள்ளாட்டுக் கோமியத்தில் அரைத்து உருண்டை பண்ணி உரைத்திட எந்தப் பூவாகிலும் போம்.

<u>கண் பூவுக்கு</u>:-

கண்ணிமையுள் சிவந்திருக்கும். மரம் போலுமிருக்கும். நாசி வறளும். அடைத்து நீர் பாயும்.

தலை கனக்கும். கனதவமை தடிக்கும். விழி நேராய்ப் பார்க்க வொட்டாது. கூச்ச முண்டாயிருக்கும்.

மருந்து:- செங்கள நீர் கோஷ்டம், சாதிக்காய் பலம், சீரகம் பலம் அரைக்கால், யேலம் களஞ்சி, விஷ்ணு கிரந்தி வேர், ஒரிலைத் தாமரை வேர், கருத்த ஆமணக்கம் வேர், நாவல் பட்டை, அரப் பொடி, அரிசு இவை கூட்டி எலுமிச்சம் பழத்திலரைத்து உருண்டை பண்ணி முலைப் பாலிலுரைத்துக் கண்ணிலிடக் கண்ணில் பூப்பறிந்து போம்.

உரோமரிஷி ஓம் வீரமா முனிவர் சூஸ்திரம்.

1. சீரருளான சோதி சின் மயமான சோதி
பாறளி கொன்றை சூடி பரனந்த ரசன் போத்தி
வாரணி ரிஷிகள் பாதம் வணங்கியே வைத்திய நூலை
காரணமர்கப் பாடக் கணபதி காப்புத் தானே.

2. தானை வைத்தியத் திரண்டு பத்துநூறு சாத்திரனேன் னதைக் குறுக்கி பத்துநூறு
தேனை யிதைக் குறுக்கி முன்னூற்றி நாற்பது திரட்டியே கரு வெல்லாந் திறந்து சொன்னேன்
பானை மானிடர்கள் பிழைக்க வேண்டி பரிபாசையில்லாமல் பாடினேனே.

3. பாடியதோ ரென்னூலைப் பதினெண் பேருமள் பார்த்திட்டு மன மகிழ்ச்சித்தரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வைத்தியமும் நன்றாய் பாடினார் கருக்குருவ வெளியாய்ச் சொல்லி
தேடியே சித்தலெல்லா மெச்சிக் கொண்டு செப்பினர் விரம் மரிசி யாகையாலே
ஆடிய தோர் கருவை. யெல்லாம் வெட்ட வெளியாக உரைத்திட்டாரென்று சித்த ரொளித்திட்டாரே

4. ஒளித்திட்ட சாஸ்திரத்தை வாங்கினும் உலகிலுள்ளோர் மயங்காமல் வெளியில் போட்டேன்
அளித்திட்ட அளிம் பருக்கு யின்னூலியார் ஆகாது சீஷருக்கு யின்னூ லியார்
களித்திட்ட மனதிலே கசடில்லாமல் கவடத்த சீஷருக்குக் கை முறையைக் காட்டு
பளித்திட்டுப் போமல் சாஸ்திரத்தை பதறாதே கை முறையும் செய் முறையும் பாரே

5. முறையோடே பார்த்தாக் கால் ல்லாம் சித்தி முறை தப்பிச் செய்திடுவோர் மோசம் மோசம்
முறையோடே செய்தவர்க்கு யென்னூல் பாரு மொளிந்திட்டேன் மருந்தொன்றில் பல பிணியுந் தீரும்
முறையோடே செய்து வாலேகுயங்கள் பொரு கோடு களங்கு மாத்திரை செந்தூரம்
நிறையான நவலோகம் பாஷாணங்கள் நீத்தினமும் உருக்கினமும் நிறைத்திட்டேனே.

6. நிரைத்திட்ட தெச்சனர் மூர்த்தி பாதம் நிகரில்லா வயித்தியத்தில் இரண்டு லட்சம்
உரைத்திட்டார் செந்தூர முன்னூறுஞ் சொன்னார் உத்தமனே வாதமுதல் வயித்தியமுந்தேறும்
மரைத்திட்டார் வயித்தியத்திலாறுநூறு அப்பனே வெளி திறந்து சொல்லி விட்டார்
கறந்திட்ட வைத்தியருக் கென்னூல் ஆதி கண்ணடி முகம் பார்த்தால் போலே யாமே.

7. காணப்பா நோயாளி தாது பார்க்க கண் பார்த்து முகம் பார்த்துக் கையைப் பாரு
தோணப்பா தத்துவ நூலாய்ந்து பாரு தோகத்திலெழு பத்தீராயிர நரம்பு
ஊணப்பா நரம் பெல்லா நாடி யோடும் உத்தமனே யுயர் நிலையை யூனிப் பாரு
தேனென்ற வால்மீகர் சூஸ்திரந் தான் தெளிவாக யெழுபத்தி இரண்டும் பாரே.

8. பாரே நீ முன்னால் தாயிரத்தில் பாடினேன் பகலைக் இ நாடி தோண்
பாரே நீ கொங்கணர் தன் தத்துவ நூல் பாரு பாங்கான சட்டை முனி நூலும் பாரு
பாரே நீதிருமூலர்ராநூறு பார்த்திடவே பலனூலும் மதிலே தோயும்
பாரே நீ நானென்ற ஆணவத்தை நீக்கி ஊங்கார கோபத்தை யடர்த்துத் தள்ளே

9. தள்ளுவது பொய்யோடு கொலை களவுமாகா சண்டாளக் குருத்து ரோகம் செய்தால் தள்ளு

வில்லாதே வெகு விட்டுப் போதம் பாரு வேதாந்த சரக்குறுவை நித்தம் பூசு
தள்ளாத வைத்தியந்தான் தர்மம் வித்தை சார்வாக வேர்க்கருவை யொளித்தார் சித்தர்
உள்ளாதே வாதமென்ன வயித்தியந் தானென்ன சொல்லதே முப்பூவின் குருவதாமே.

10. குருவென்ன நவச்சாரம் உவர்ப்பூ வென்றும் கூறினர் முப்பூவும் பூனீர் யென்று
கருவென்ன ஆகாசப் பருதி யென்றும் சந்திர ரேடிந்த வென்று சாற்றினர்கள்
பருவ மென்ன மார்களிதையி மாசி பனி பெய்யுங் காலமப்போ பருவமாகி
பொருவென்ன பூமியுடனாகாசமாகி பூப் போலே வளர்ந்ததுவும் பூனிராச்சே.

11. பூவான வாதத்துக்கு காதியாச்சு புகலுகிறேன் வெள்ளைக் கல்வீரம் காற்பம்
ஆவென்ன பாரையுப்பு மூன்றுஞ் சேரில் ஆகாச முப்பூவாம் அறிந்து பாரு
தேவென்ன சவுக்கார வழலையென்று செப்பினர்கள் கருமறப்பாய் சத்தர் தானே.

12. தானென்ற முப்பூவின் முறையைக் கேளு சாத்தினர் கும்ப முனி பூறணத்தில்
வேனென்ற பூனீறு வெள்ளைக் கல்லுப்பு விளவிட முசுத்தி முறை விளம்பினர் பார்
கானென்ற பங்குனியு மாதம் பார்த்தால் காத்திலாக் கதிர் போலே வளர்ந்திருக்கும்
பானென்ற மணம் படா தெடுத்து வந்து படி நாலு அளந்து ஒரு பாண்டத்திட்டு.

13. யிட்டுமே அமுறி படியெட்டு வாரு யியல்பான நல்லெண்ணை அரைப் படி தான் வாரு
யியல்பான நல்லெண்ணை அரைப்படி தான் வாரு அட்டுமே கலக்கியே தெளிவிறுத்து
அடுப்பேத்திக் காய்ச்சி நீ யுப்பாய்க் காச்சி
மாட்டுமே மறுபடியும் அமுறி விட்டு மைந்தனே தெளிவிறுத்துக் காய்ச்சி முன் போல்
பாட்டுமே யிப்படியே பத்து முறை காய்ச்சி பாங்கான சவுக்காரக் குருவதாமே.

14. குருவான சவுக்கார உருண்டை செய்ய கூறுகிறேனொரு முட்டை சாம்பல் மேலே
மெருவான மெல்லிய தோர் சீலை போட்டு விட்டதின் மேல் சவுக்காரக் குழம்பு தன்னை
கருவான உண்டை செய்த கை முறை தான் சொல்லுகிறேன் ஒரு பாண்டத்தில்
அருவாக நெல்லதனைப் பிசறி வைக்க அதின் மேலே மல்லிகையிலை பரப்பி
குருவான சவுக்கரர உண்டை யெல்லாம் குறிப்பாக வைத்ததின் மேல் வைத்துக் கொள்ளே

15. வைத்துமே மேலுமந்த யிலை பரப்பி மறுபடி மேல் நெல்லிட்டு சட்டி மூடி
அய்த்துமே அடுப்பேத்தி யெரித்து நன்றாய் ஆவி கண்ட பதத்திலே யெடுத்துக் கொள்ளு
அய்த்துமே யெண்ணெய்க்குச் சுத்தியாச்சு அரகராச சவுக்காரம் யென்ன சொல்வேன்
வைத்த தொரு சவுக்கார யெண்ணை வாங்க மாட்டாமல் வாதி கெட்டார் வண்ணார் கதை
வைத்துமே யிப்படியே கை முறையாய்ச் செய்யில் சவுக்கார வழலை யென்ற குருவ தாச்சே.

16. குருவென்ன முப்பூவின் வழலையாச்சு கூறிடு மேல் போக்கறிந்தால் வாதமாச்சு
தீருவேன் வீரமொடு காரம் ரெண்டும் சேரு நீ யொவ்வொன்றுக்கும்படு சிப்பி
பருவென்ன பச்சையா யெடுத்து ஞா பணம் போலே த்மரிட்டு சிப்பிக்கெல்லாம்
புற வென்ன பூனீறுடன் இரண்டும் பொடி செய்து சிப்பியுள்ளே போடு கொஞ்சம்
மறுவென்ன சிப்பியெல்லாம் போட்டுப் போட்டு அகண்ட தொரு சட்டியிலே பரப்பி வைய்யே.

17. வைக்கவே பல பலனை தண்ணீருடும் வளமான தண்ணீரில் நாத விந்து
அய்க்கவே சமனாகச் சேர்த்துக் கொண்டு அதில் போடு குறு வண்டு யுறமுஞ் சூதம்
அய்க்கவே கருடைபி புறுகு புறம் ஆறு புள்ளி வண்டு முட்டை கார சாரம்
செய்க்கவே வகை வகைக்குப் பணவிடை தான் போடு தெளிவிறுத்துச் சவுக்காரந் தன்னிலாட்டே.

18. ஊட்டியே சவுக்காரங் கல்வத்திட்டு உத்தமனே ஒரு சாமம் ஆட்டி மை போல்
பாட்டியே வில்லை மட்டி ரவியில் காய்ந்து பச்சுவ மாயண்டோடு பொடித்துக் கீழ் மேல்
நாட்டியே உபசலிட்டுச் சவுக்காரம் வைத்து நலமாக மேலோடு கொண்டு மூடி
தீட்டியே சீலை செய்த புடத்தைப் போடு சிறப்பாக யெடுத்ததனைக் கல்வத்தாட்டு.

20. ஆட்டியே முன்னீரால் வில்லைத் தனைக் கல்வத் செய்து அப்பனே ஒட்டிலிட்டுப் புடத்தைப் போடு
பூட்டியே யிப்படியே அய்ந்து தரம் போடு புடமென்ன யஞ்செருவுக் கதிகம் வேண்டாம்
ஆட்டியே கடுங் கார மேத்தக் கேளு அழகான முன்னீரிலரைத்திடாயே .

21. அரைத்துமே வில்லை தட்டி ரவியில் காய்ந்து அஞ்சு சுண்ணக் குகையிலிட்டு மேலே மூடி
நிரைத்துமே சுண்ணாம்பு சீலை செய்து நிச்சயமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
கரைத்துமே யஞ்சு சுண்ணக் குகையிலிட்டு கடுங்காரச் சுண்ணமதில் பூசிப் போடு
அரைத்துமே யிப்படியே வழுயாத தாளைப் பசை பண்ணு சொற் பெரிய நாதாக்கள் சாபந் தீரும்
கரைத்துமே சவுக்கார வழலை தொட்டு கை முறையாய் கடுங்காரச் சுண்ணமாச்சே

22. சுண்ணமாம் ஆத்தாளைப் பூசை பண்ணு சொற் பெரிய நாதாக்கள் சாபந் தீரும்
சுண்ணத்தால் பாஷாணம் அறுபத்திநாலும் சொல்லரியவேன் வகை யிருபத்தஞ்ச
சுண்ணத்தால் நவலோக நவரெத்தினங்கள் சொல்லரிய உப ரசங்கள் நூத்திரண்டு பத்து
சுண்ணத்தால் சொன்னதொரு சரக்கு வகை யெல்லாம் தொடு முன்னே கட்டினமுருக்கினதுமாகும்
மென்னெத்த சரக்கெல்லாஞ் சுண்ணமாகும் மெழுகோடு செந்தூரங் களங்குமாமே.

23. களங்காம நவலோகந் தனித் தனியே நீறும் கண்ணிமைக்கு முன் தூரிசு சுண்ணமாகும்
களங்க மென்ற சூதமது மணி போலாடும் கைக்குள்ளே ரசவாதஞ் சிக்கிப் போகும்
பழங்கிசையாய் முப்பூவின் சூட்சந் தன்னை பாடினேன் சித்தரெல்லாம் பகைத்திட்டார்கள்
பழங் கதை போல் பேசினார் வருவதென்ன பார்த்திடவே மனமுரைத்தால் சித்தியாமே.

23. ஆமப்பா மானிமர்க்குத் தேக ரோகம் அறைகிறேன் வாத பித்த சிலேற் பனந் தான் மூனு
நேமப்பா யிதிலெடுத்த மேகங் கேளும் நிலையாத் வாதத்திருச்சு
தாமப்பா பித்தத்திலாற தாச்சு சண்டாள சயத்திலே பதினெண்ருச்சு
காமப்பா வித்தையிலெடுத்த ரோகம் கலந்து பாரிருபத்து ஒன்று மாச்சே.

24. மேக ராசாங்க லேகியம்.

ஆச்சுதென்ற மேக வகை யிருபதுந் தான் போக அறைகிறேன் மேக நாங்கந் தன்னை
நீச்சென்றுவிது வெல்லாம் உலகுள்ளோர்க்கு நிலையாது மத்த தெல்லாம் நிசமாகாது
காச்சென்ற மேக ராசாங்கங் கண்டால் கடிதான நோயெல்லாம் ஓடிப் போகும்
சூசமென்ற சூட்சத்தில் சூசமாக சொல்லுகிறேன் மருந்து வகை சொல்லுகிறேன்.

25. சொல்லுகிறேன் நிலப் பனையு முத்தக் காசி சுக்மான நிலை வேம்பு தண்ணி மிட்டான்
நல்லதொரு விலாமிச்சம் வில்வ வேரு நன்னாரி குமரி வேர் முக்கிரு வேர்
ஒள்ளி நிலையாவரையு முள்ளலத்தி ஒரிதட்டாமரை கரந்தை வெட்டி வேரு
அல்லியோடு தாமரையின் வளையங் கொட்டி ஆல் விழுது நீர்ப் பலா அருகன் வேரே.

26. வேரான வல்லாரை சிவதை சங்கு வெண் சாக்கை வேர் வள்ளி கீழ்க்காய் நெல்லி
பேரான நாவலத்தி கரிசலாங் கண்ணி பிரமி வெண் சாறணை பூவரசாடா தோடை
வாறுக நிழலுணத்திச் சூரணமே செய்து வடி கட்டி வகைக்கிரண்டு பலந்தான் கூட்டே

27. கூட்டியே பறங்கிப் பட்டை பலந்தானெட்டு கூர் பிரப்பங் கிழங்குமவும் பலந்தானெட்டு
சாட்டியே சடைக் கஞ்சா பலந்தானெட்டு நயவாக ஆவின் பால்சுத்தி செய்து
ஆட்டியே யிடித்து நன்றாய் முன் மருந்தில் சேரு அமுர்த சர்க்கரை பலந்தான் ரெண்டு போடு

28. வித்தான அத்தி வித்து அகத்தி வித்து வெளி கடம்பு நீர் முள்ளி அவரையின் வித்து
மத்தான மாவித்து பூனைக்காலி மருமத்தை சடைக் கஞ்சா தேத்தான் வித்துந்
நத்தான மயக்கொன்றே சரக்கொன்றை அளரி நாயுருவி சிறு நெரிஞ்சி கருவேல வித்து
முத்தான மாதளையின் மகிழம் வித்து முன்னையொடு கோதம்பை யெள்ளுந்தே.

29. உந்தான் நெல்லி செம்பை மூங்கில் வித்து உத்தமனே கூவிளத்தின் பழமும் பூவும்
ஊளசணந் தான் குறி வித்து பொறி காலின் வித்து கொம்மட்டி மாதளை நார்த்தை
பெருமிச்சையின் வித்து
நெளிதான தென்னம் பால் குறண்டைப் பூவ நெய்க் கொட்டான் பூவந்தி அல்லி வித்து
கந்தான முருங்கைப் பூ யிலுப்பைப் பவி தாமரையின் விடு சவரை யிலவம் பிசின்
குருந்தான படரவரை மரு தோணி குன்றி கூந்தல் பனை புரசு மருக்காரை வித்து
பருதில்லா வகைக்கு வகை கால் பலமே தூக்கு வகையாக யிடித்து முன் மருந்தில்
சேரே.

30. சேர்க்கவே பிசின் வகையைச் சொல்லக் கேளு திறமான முள்ளிலவு முருங்கை வேம்பு
கார்க்கவே விளாவோடு கருவேலத்தி கருவாகை கொன்றை மாம்பிசினோடொக்க
போக்கவே புங்கம் பூ சியக்காக் கொழுந்து பகமான வகை வகை கால் பலமே
தூக்கு
சேர்க்கவே யிடித்தெல்லாம் ஒன்றாய்ச் சேரு திறமான கடைச் சரக்கைச் செப்பக்
கேளே.

31. கேளப்பா சாதிக்காய் சாதிபத்திரி கிரம்பேலம் லவுங்கப் பட்டையுடன் பத்திரி
ஆளப்பா குங்குமப் பூ கோரோசனையும் கஸ்தூரி அதிவிடையம் திப்பிலியுங் கோஷ்ட மூலம்
வாளப்பா அரைத்தை சுக்கு அக்கிரகாரம் வால் மிளகு கோரோசனி சீரகம் நல்லோமம்
கேளப்பா சடாமஞ்சி கூகை நீர் சிறு தேக்கு நாகப்பூ தாளிச பத்திரியே.

32. திரியான காமப்பூ மகிழ் பூவும் மதுரச் செங்கழுநீர் வாலுளுவை கருவாப் பட்டை
கிரியான கண்ட திப்பிலி கஸ்தூரிப் பட்டை சிறுநல் செவ்வியம் கொத்தமல்லி
பரவாகி தர்க்கோல மதற யிந்துப்பு பாங்கான ரேவல்சின்னி ~~சாம்பிராணி கடுகுரோகணி கடுக்காய்~~
சாம்பிராணி கடுகுரோகணி கடுக்காய் தானிக்காய் கசகசா மண் திஷ்டி கார்ப் பருப்பே.

33. பருப்பான திரிபலையும் சமுத்திராப் பழமும் பகரரிய வலம்புரிக்காய் கற்கடக சங்கி
கறுப்பான சீரகமும் நற்சீரகமும் கார் போகி செண்பகப் பூ நெல்லி முள்ளி வறுப்ப
வறுபபான செஞ் சந்தனம் மகில் தேவதாரம் வெட்பாலை வெளிச்சப் பிசின் முந்திரிகைக்
கொட்டை
மறுப்பான குளிவிந்த கஸ்தூரி மஞ்சள் வகை வகைக்கு ஒரு பலந்தான் வரிசை கேளே.

34. வரிசையாய் சலக்கெல்லாம் யிளவறுப்புச் செய்து வளமாக யிடித்து நன்றாய்ச் சூரணமே
செய்து
கரகையாய் முன் மருந்தோடொக்கச் சேரு கண்டிடைக்கு வங்காளச் சனி பாதி
பரிசையாய் அடுப்பேற்றிக் கொதிக்கும் போது பால் வார்த்துப் பதம் பார்த்துச்
சூரணமே கொட்டு
யரசையாய் அடுப்பேத்திக் கிண்டுவாய் நீ யதில் போடு முந்திரிகை பேரீச்சம் பழமே.

35. பழமான வகைக்கிரண்டு பலந்தான் போடு பாங்கான கொம்புத் தேன் இரண்டு படி வாரு
வளமாகக் கிண்டியே யிறக்கி வைத்து வாகான கணபதி முன் வைத்துப் போத்து அளவாக
அளவாக லட்சமுரு ஓதித் தீரு அப்பிரேக செந்தூரம் இரண்டு பலம் போடு
நகாதே வைத்தியர்க்கு மனம் நோகாமல் நாலிலொன்று வைத்திய பாகமீயே.

36. யீந்தவர்க்கு மனங் குளிர வெகுமானஞ் செய்து யிதமான லேகியத்தைக் கொள்ளு கொள்ளு
தாள்வது தான் வாராது அந்தி சந்தி ஒரு மண்டலந் தான் கொள்ள
சார்வான மேக வகை யிருபதுந் தானெங்கே பாய்ந்து வரும் வாத பித்தம்
சிலேற்பனந் தானெங்கே பறந்தோடுஞ் சயமீளை மந்தார காசம்
ஒளிந்திடுமே பதினெட்டுக் குஷ்டரோகம் ஒடுமே கிரந்தி யரையாப்புச் சூலை தானே.

37. சூலையென்ற யெட்டு வகைக்குஞ் மந் தீரும் தலையாத வாயுவெல்லாந் தூரவோடும்
தலையென்ற தேகத்தில் படரும் வெள்ளை உதிர விட்டைப் பிரமேகம் புண்

பாலையென் மிகளுக்கு கெற்ப் நேர்யும் பறந்தோடு மலடிக்கு பிர் ளையுண்டாம்
கா லையென்ற உடங்ஙங்கள் காந்தி தீரும் கண்களுமே செவ்வலரிப் பூப் போலாமே.

38. ஆமென்ற லேகியத்தக்குச்சா பத்தியம் அந்தி சந்தி மாறாதே கொள்ளு கொள்ளு
பறமென்ன தேகமென்ன பசும் பொன்னாகும் பரிவான மன்மதன் போல் வடிவு கொள்ளும்
தேமென்ற காமப்பால் நித்த மூம் ஸ்ரீகளுமே அரபோகஞ் செய்யமாட்டார்
வாமென்ற வயித்தியரே யிந்த முன்ற விட்டு மதி கெட்டு அலையாதே மகிழ்ந்து பாரே

39. <u>முக்கூட்டெண்ணை</u> :-

பார்க்கவே மேக ராசாங்கள் சொன்னேன் பாடுகிறேன் முக்கூட்டுத் தயிலந் தன்னை
யேர்க்கவே நல்லெண்ணை படி தானெட்டு யிதமான ஆவின் நெய் படி தானு
பார்க்கவே யேரண்ட எண்ணை படி நாலு கலந்தொன்றாய்ப் பாண்டத்திலளந்து விட்டு
ஆர்க்கவே ஆவின் பால் படி தானு அப்பனே செவ்வள நீர் படிதானு

40. படியான கறிசாலை பொன்னாங் கண்ணி ப்சளி யொடு கத்தாளை பிறமி கஞ்சா
செடிதான தளுதாளை சிறு கீரை நொச்சி சிறு பூளை வல்லாரை மொசு மொசுக்கை
நடியான ஆதண்டங் கற்பூரவல்லி நாத்தாளை விழுது முடக் கொத்தான் சிங்கி ெ
கொடியான கொளிஞ்சி கிடா நாறத்தைப் பழமும் குமட்டி மாதளையோடு யெலுமிச்சம் பழமே

41. பழமான மல்லிகையும் செவ்வந்தி பிச்சி பழம் பாசி வகைக்கிரண்டி படி தான் சாறு
திரம்பிறவே யெண்ணையிலே சேரவாரு சீறு செங்களனிரோட வுறிவுச்சி
திரம்பா தென்னம் பூ முருங்கை யிலுப்ப சொந்திருக்கம் பூவோடு புங்கம் பூவும்
கிளங்கு வகை தாமரையும் செங்களனீரல்லி கெருடனுட கிளங்கு பல நெய்தல் கொட்டியாமே
வெளங்கவே மறள் கிழங்கு தோவைக் கிழங்கு வெறு சோடு நெல்லிக்காய்ப் பட்டை

42.
42. பட்டையொடு அரு நெல்லி புவந்திப் பழமும் பரிவாக வகைக்கிரண்டு படி தான் சாறு
திட்ட முடனெண்ணையிலே கரைத்துக் கொள்ளு செவ்வந்தி வில்வவேர் அமுக்கிறு வேர்
கொட்ட மிட்ட குறுந் தொட்டி பாதிரி நன்னாரி குருந்த வேர் பொன் முசுட்டை குமிளம் நீர்ப் புலா
துட்ட மிட்ட சித்த முட்டி பேறு முட்டி ஆதவளை குமரி சாறு காஞ்சொறி தோடை
சட்ட முடனிலப் பனையுந் தண்ணீர் மிட்டான் சங்கோடு சாறணை வேர் சிவனார் வேம்பே.

43. வேம்பான தளுதாளை நொச்சி வீளி வெள்ளருகு காக்கட்டான் கிழ்க்காய் நெல்லி
கூறுன மருதோணி நாகவல்லி குமிளோடு புரசு முன்னை கோவத் தண்டு
பேறுன புன் முருங்கை முக்கா வேளை புங்கோடு நல்வத்தி புனலி சீந்தி
கூறன கடலிருளுசி வெட்டி விலாமிச்சி குறுவிச்சி அளிஞ்சி பூ. விரசம், பட்டை.

44. பட்டையா மிசிறுப்பை உள்ளலத்தி பன்னீரு நீர்ப்பூலா கிறுவை சுண்டை வெட்டியே
வகை வகைக்கு நால் பலமே தாக்கு விதமாக யிடித்தவைப் பாண்டத்திட்டு
விட்டுமே பதினு மரக்கால் நீர் தான் விட்டதனை யெட்டொன்றாய் யெரித்துக் காச்சு
யிட்ட தொரு கஷாயமதை யெண்ணையிலே வாரு யியம்புகிறேன் சரக்கு வகை யினி தாய்க் கேளே.

45. யினிதான சாதிக்காய் கிராம்பு பத்திரி யேலமொடு லவங்க மதுரம் கோஷ்டம்
குணமான பெருங்காயம் அரத்தை சுக்கு குரோசானி வால் மிளகு கொத்தமல்லி
வனிதமாங் கருஞ் சீரகம் கஸ்தூரி மஞ்சள் வாலுளுவை சிறு நாகப்பூ வொடிந்த
வனிதமாய் சதகுப்பை வசுவாசுப் பட்டை வறத்தங் . திகிலோடு தேவதாரம்.

46. தாரமாங் கார்போகி கடுக்காய் தானி தாளிச பத்திரி ஓமகூள விந்தம் மஞ்சள்
ஆறமாங் கண்டந் திப்பிலி அக்கிலாக் காரம் மதிவிடையம் கிரியூறல் காவாப் பட்டை
சோரமா நற்சீரகம் கூகை நீறு குங்குமப் பூ வலம்புரிக்காய் விளங்காமஞ்சி

47. தேக்கான செண்பகப்பூ கடுகுரோகணி திரிபலையும் சமுத்திரப் பழமுங் கல்னுர்
தேக்கான கச்சோலம் மாதளங்கா யிஞ்சி சென்ன கறப்பட்டையொடு நெரிஞ்சிக் காயும்
வாக்கான பெருங் குரும்பே சித்திர மூலம் வகைக்கு ஒரு பலந்தானும் வரிசையாக
தாக்கான புங்க வேர்ப் பாலாலாட்டி தவறாதே யெண்ணையிலே கரைத்திடாயே.

48. கரைத்துமே யருப் பேத்திக் கணேசன் பூசை கை முறையாய்ச் செய்திட்டு யெரித்து வாய் நீ
நிரைத்திடவே ஒரு விறகால் நெருப்பை மூட்டி நிலையான பதமாக கிண்டு கிண்டு
முரைத்துமே யெண்ணையுட பதத்தைப் பார்த்து முருங்கைப் பூவு ஒரு பிடி தான் போட்டுக் கொண்டு
கரைத்துமே மருக்கொழுந்து பிடிதான் போடு
கருகாமல் பச்சை நிறங் கண்டு கொள்ளே.

49. கொள்ளவே மெழுகு பதமிது தானென்று குறிப்பான் வடிக் கலசந் தன்னில் கோரு
மெள்ளவே புனுகு கோரோசனைங் கஸ்தூரி விதமாக வகை வகைக்கு நாற் களஞ்சி தூக்கு
வள்ளவே வடி கலசந் தன்னில் போடு வளமான என்னை தன்னை வடித்து வாங்கி
கள்ளமாயடியிலே கசடில்லாமல் கம்பிளித் துண்டிட்டுப் புளிந்திடாயே.

50. புளிந்துமே பூசை பண்ணி வேடு கட்டி புதைத்துமே நெல்க் குளியிலிட்டெடுத்து
நனிமாய் நாலு நாள் வட்ட முழுகு நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு நோயும்
மருந்திடவே நாள் வட்டமாகாத நோய்களெல்லா மகன்று போகும் குளிர்ந்த தண்ணீர்
தள்ளி யிள வென்னீர் முழுகு சுலமான பசும் பயறு சீயக்காய் தேய்
தருந்தவே புளியோடு புகையிலையுந் தள்ளி நாற்பது நாள் மண்டலந்தான் முழுகும்போது
பருதில்லாத தேகம்து கஸ்தூரி வீசும் பார்ப்பதற்குப் பசுந் தங்கமாகும் பாரே.

51. பாரே நீ தயிலந்தான் முழுகு நாளில் பாங்கான ஸ்திரீகளுடன் சஞ்சாரமாகா
சேராத வாய்வு வகைப் பதார்த்தந் தானும் சிறப்பான மோர் தயிரும் புளியுந் தள்ளு
வேறே நீ வெயில் நடையும் நித்திரையுமாகா சிறப்பான மத்தா நாளெல்லாமாமே.

மேக ராசாங்க யெண்ணை.

52. ஆமென்ற மேகராசாங்க யெண்ணை அறைகிறேன் சர்வாங்க நோய் தீர
யேமென்ற சித்தரண்டத் தெண்ணை படி நாலு, யிதமான யீருள்ளிச் சாறு படி இரண்டு,
போமென்ற கழுதைலத்திச் சாறு படி ரெண்டு, பேய்க் குமட்டிச் சாறு படி இரண்டு, கறிசாலை இரண்டு,
போமென்ற பொரியாரை, வல்லாரை, குறுக்கு. பரமியொடுப் பொடி தழுதாழை மவுரிச் சாறே.

53. சாறான செருப்படியும் இரண்டு வகையுங் கூட்டு சடைச்சியொடு யிம்புறல் காட்டுச் சேம்பு
கூறன கனல் கொட்டி கோபியாவரையும் குளிமிட்டான் காட்டுள்ளி தேள்க் கொடுக்கான்
ஆனைகவு தும்பை ஆதளை நீர் முள்ளி அய் விரலி முருக்கிலைச் சார் கோவை குன்றி
வாறான வழுதலையும் வெள்ளறுகு கரந்தை வகைக்கிரண்டு படி சாறு யெண்ணையிலே வாரே.

54. வாத்துமே எட்டு வகை மருந்தைக் கேளும் வாகையொடு முருது கருங்குருந்த வன்னி
சாத்துமே கருஞ் சூரை செங்கத்தாரி தாழை பூவரசு கருவேலிண்டு கூத்
கூத்துமே குவளைப் பிரு யெறி காலிக் கொன்னை குமந் தொட்டி நன்னாரி குமிள் நீர்ப் பூலாம்
சாத்துமே வறப்புலாம் புரசு சங்கு தந்தாழை கண்டங் கத்திரி தூதுவளை நொச்சியே.

55. நொச்சியொடு சித்தா முட்டி பேரு முட்டி நோய்க்கரிய யேறலிஞ்சி கரந்தை புங்கு
மச்சியே பூத கரப்பான் வெம்பாடம் பட்டை மரு தோணி நாகவல்லி மகிழம் பட்டை
யிச்சியொடு முள்ளிலவு சங்கங் குப்பி யெருக்கோடு மறுக்காறே சின்னி புன்னை
கச்சியே கருமுள்ளி செம்முள்ளி துத்தி கார்சொறி காட்டு மூள்ளி குறிஞ்சா வேரே.

56. வேரான சிறு குறண்டை மலை கலக்கி சிவதை வெண்காக்கை வேர் வீளி கீழக்காய் நெல்லி
பேரான சிவன் வேம்பு அமுக்கிறு வேர் புனமுருங்கை தை வேளை குப்பை மேனி
பேருன சனியுடையும் சத்தி சாறணையும் நிலக் குமிளம் நிலாவிளா நறியுடையம் பூறல்
மறி நெடுஞ் சாரணையும் வெள்ளைச் சாறணை மூக்கட்டான் முள்ளுருஞ்சி வட்டச் சாரணையும்
வாரான பால் குறட்டை மூக்கா வேளை வட்டக்கிலு கிலுப்பை யொடு வட்டத் துத்தி யென்னே.

57. துத்தி வட்டத் திருப்பியொடு நிலக் கடம்பு சுடறி சுடு சுறத்தியுள்ளலத்தி பாதிரி நீர்க் கும்பு
வெத்தியே மாத்தாளை மருள் கிழங்கு வேறு கொடு வெள்ளிண்டு மூக்கா வேளை
சித்தமா விலிங்கோடு கிறந்தி நாயகமும் சிறு கிளா பொன் முசுட்டை சிறு காஞ் சோறி
முத்தியே நிலப்பனையும் வில்லை வேறு முள்கறணை விடத்தெலா வேர் உசிலம் பட்டை.

58. உசிலையோடு கொடுவேலி சீந்திற் தண்டு உகாயோடு நிலவாகை கோவைத் தண்டு
கெசையான பாவட்டை நாரட்டை யிலுப்பை சிறு வயாம் மாச்செவியும் முத்தெருக்கச் செவியும்
மசையான மந்தாரை மயக் கொன்றை காசா ஆத்தி நுணா ஆத்தாசு யிலவம் பட்டை
நசியவே நவ்வலத்தி முதளைப் பூ நாய்க் கொட்டான் புனலிக னூ மத்தை வேம்பே.

59. வேம்பான பெரு மருந்து ஆத்தலறி அறசு வெல் குவளை சன்குசி முருங்கை மாதளையும்
சோம்பாதே வகை வகைக்குப் பலந்தான் பத்து சொல்லுறேன் புல்லுருவி வகையைக் கேளும்
வேம்போடு அரசு யிலந்தை மாவிலுப்பை வில்லையொடு விடத்தெலை மாதளை யோடெட்டும்
செப்பாதே புல்லுருவி வகை தானெட்டு செப்பிய தோர் முன் மருந்தில் சேர்க்கக் கேளே.

60. கேளப்பா யிடித்ததனைப் பாண்டத்திட்டு கெடியான நாத் தாணி சலந்தான் வார்த்து
யேனப்பா யெட்டொன்று யெரித்துக் காய்ச்சி யிருத்தமே கிஷாயத்தை யென்னையிலே வாரு
ஆறுமே வெள்ளாட்டு நீர் படி தான் இரண்டு ஆவின் நீர் படி இரண்டு அதிலே வாரு
ஆறு நீ கலக்கியதை ரவியில் வைத்து அதில் போடு மருந்து வகை யறைகிறேன்..

61. அறைகிறேன் சாதிக்காய் கிராம்பு யேலம் அழகான லவுங்கமதி மதுரங் கோஷ்டம்
விறையிறேன் கண்டந் திப்பிலி மூலம் வெங்காரம் வால் மிளகு குரோசானி ஓமம்
கரையாத பெருங்காயம் கடுக்காய் தானிக்காய் கருஞ்சீரகம் கார்போகி கஸ்தூரி மஞ்சள்
அறையுறேனரத்தை சுக்கு அக்கிலாக் காரம் அதிவிடையம் கடுரோகணி யிந்துப்பு.

62. உப்பான சடாமாஞ்சி தாளிச பத்திரி உத்தமனே கசகசா ஓமம் கஞ்சா
செப்பாதே வலம்புரிக்காய் பறங்கிப் பட்டை சென்ன கறப்பட்டையொடுக கஸ்தூரி பட்டை
தப்பாதே வாலுளுவை சிறு நாகப்பூ தற்கோலம் சிறு தேக்கு தகரை கல்நார்
தொப்பாத அபினி யொடு வசம்பு நீர் வெட்டி சுத்தித்த நேர் வாளஞ் செங்கொட்டை கூட்டே.

63. கூட்டிய தோர் வசுவாசி ஆனைத் திப்பிலியும் கொத்தமல்லி குங்குமப் பூ சீரகங் கச்சோலம்
ஆட்டி யிவர்ச் சாரம் சத்திச் சாரம் அரேணுக்கும் நவச்சாரம் சாத்திர பேதி
கெட்டியாய் வகை வகைக்கு ஒரு பலந்தான் தாக்கு கெருடை கிளங்கோடு செங்கழு நீர்க் கிள
கொட்டு கார்த்திகையு நப்பையுடன் கிளங்கு காட்டுக் கறணைக் கிளங்கு செடியான மூருக்கம் பூ எருக்கம் பூவே.

64. தாங்காதே புங்கம் பூவு வரசம் பூவு மாதளை யொடு முருங்கைப் பூவு செந்திருக்கம்

அளங்காதே செண்பகப்பூ சித்தகத்திப் பவு ஆவரையின் பஞ்சாங்கந் தேத்தான் கொட்டை
புனங்கவே கடை மருந்தோடெல்லாஞ் சேர்த்து புங்கம் பால் விட்டாட்டி யெண்ணையிலே போடே.

65. போட்டுமே யடுப்பேத்தி யெறி நேர்ப்பாக புகளான கணபதிக்குப் பூசை பண்ணி
நாட்டுமே மெழுகு பதந் தன்னைப் பார்த்து நலமான பதமறிந்து வடிக்கக் கேளு
ஊட்டுமே கஸ்தூரி விராகன் அளகான பச்சைக் கற்பூரம் ரெண்டும்
நாட்டுமே சுத்தி செய்த லிங்கம் நாலு நல்லரச கற்பூரம் விராகனிலே.

66. நாலான யிவை யெல்லாங் கலசத்திட்டு நலமான யெண்ணை தன்னை வடித்திடாய் நீ
சேலோடு தையிலத்தைப் பதனம் பண்ணு திறமான கடுகு தன்னை யெறிந்திடாதே
பலமான பச்சை யெண்ணை யதிலே விட்டுப் பரிவாக ஊற வைத்து மேலே பூசு
சேலோடு சிறங்கு குஷ்ட மேல் ரோக மெல்லாந் தீருமடா அரைப்பிட்டுக் குளித்துப் போடே.

67. குளிக்கவே யெண்ணை தன்னை வடித்துக் கொண்டு குடிக்கவே நாளொன்றுக்கோர் கரண்டி
ஒளிக்கவே மூன்று நாளந்தி சந்தி கொள்ளு கடிதான பத்தியந் தான் காக்க வேணும்
உளிக்கவே யேளா நாள் தலை நீர் வார்த்து உப்பதனை யெட்டா நாள் வறுத்துக் கூட்டு
அளிக்கவே யிப்படி நீ கொள்ளும் போது ஆகாத நோயெல்லாம் கண்டு போமே.

68. போமென்ற மேகமொடு சிறந்தி யரையாப்பு பொல்லாத பதினெட்டு குஷ்டரோகம்
வாமென்ற குன்ம மொடு வாதத்தோடும் வாய் குலை மகோதரமுந் தீரும்
தாமென்ற வாத பித்தஞ் சார்ந்த போகும் சயரோக மேமங்கே தானே ஏறும்
நேமென்ற வண்டு கடி செய்யான் புருன் தீர யெலி கடியுந் தீர்ந்து போமே.

69. போகுமே விஷமோடு பிறப்பாடெல்லாம் புளவை யொடு காமாலை விஷ கடியும் பாண்டு சோகை
யேகுமே கற்பத்திலெழுந்த நேயம் யென் மக்கள் உதிரத்தில்த்திறச்சி ஓடும்
போகுமே வயித்திலுள்ள மலக் கட்டெல்லாம் புழுவான கிருமியொடு வாய்வு போமே.

70. வாய்வோடு மூல வகைப் பவுத்திரமுந் தீரும் மகத்தான விப்புருதி கண்டமாலை
வாய்வோடுந் தொடை வாழை புளவை புத்து மகத்தான கடி கரப்பான் மண்டைச் சூலை
வாய்வோடு விரை வாதம் அண்ட வாதம் மத்துமுள்ள வாதமெல்லாந் தேயுமே
யெண்ணையுட பேருச் சொன்னால் தேகத்திலில்லாம லோடிப் போமே.

71. போமென யெண்ணைக்குப் பத்தியந் தான் கேளு புகளான வென்னீரு சோறு மூன்றும்
வேமென்ற யேளா நாள் தலை நீர் வார்த்து விதமான உப்பதனை வறுத்துக் கூட்டே.
வாமென்ற மருப்படி தான் யெண்ணை தேய்த்து மைந்தனே முழுகிய பின் யெல்லாங் கூட்டு
தேமென்ற யிம்முறை தானுஞ் சொல்வார் செப்பாதே வைத்தியரே தேர்ந்து பாரு
வர்மென்ற நோயாளன் பிணி தீர வென்றால் வயித்தியரை வணங்கியே உபசாரம் பண்ணே.

72. பண்ணிலும் செய் மருந்து பலிக்கும் பாரு பரிவான நோயெல்லாம் பறந்து போகும்
யெண்ணியே யிவனென்ன வயித்தியன் தானென்று வேகாறி உள்ளியம் போல்ச் செய்யச் சொன்னேன்
மண்ணியே வயித்தியர்க்கு மனமே நொந்தால் மானிடர்க்கு நோய் தீர மருந்தாகாது
தன்னிலே தானறிந்து வணங்கிச் செய்தால் சண்டாளனுளவுந் தீரும் நோயே.

73. நோய் தீர வல்லாதி செங்கொட்டை சொல்வேன் நறுக்கமாய்ச் சேங்கொட்டை பலந்தான் பத்து
மெய்யவே சாணிப்பால் சுத்தி செய்து மூக்கு வெட்டி யின்னமதில் முறையைக் கேளு
சாய்வே கொடிவேலி பறங்கிப் பட்டை சங்கோடு அமுக்கிரா சிவனார் வேம்பு
நாயவே மாவிலிங்கம் பட்டையோடு நலமாக வகை வகைக்குப் பலந்தானென்றே.

74. யென்னவே கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் யிரு திப்பிலி கடுக்காய் வாலுளுவை கோஷ்டம்
சொன்னதொரு யிவை யெல்லாம் யிடித்து வேறாய் சூரணமான வத்திட்டுச் சொல்லக் கேளு
உன்னியே சுத்தி செய்த செங்கொட்டை தன்னை உரலிலிட்டுக் கொப்பரையின் தேங்காய் இரண்டு

75. கொட்டியே சேர்ந்தொன்று யிடிக்கும் போது கும்றவே பனை வெல்லமச்சு பலம் போடு
2.11.62.

திட்டமாறச்ச் கற்பூரம் விருகனஞ்சு சேர்த்திடித்து வல்லாதி செய்து கொண்டு
நாட்டவே வல்லாதி அந்தி சந்தி நாளொன்று அந்தி சந்தி நயந்து கொள்ளு
குஉஷ்டமாங் கிரந்தி யரையாப்புச் சூலை மென்மமொடு வயத்து வலி வாய்வு சூலை.

76. சூலையொடு சூதக வாய்வு தீரும் சொற் பெரிய மேகமெல்லாஞ் சொல்லாதோடும்
வாலையாந் தேகமொடு சித்தியாகும் மண்டலந் தான் பத்தியமாய்க் கொண்டு வாற
காலையே பத்தியந் தான் சொல்லக் கேளு ஙகப்போடு புளி புகையும் பெண்ணுந் தள்ளு
பாலோடு மத்ததெல்லாம் யிச்சா பத்தியம் பாங்கான உப்பதனை வறுத்துக் கொள்ளே.

77. கொள்ளவே வயித்தியத்துக் காதி பீடம் கூறுகிறேன் சண்ட மாருதக் குளம்பு
அல்லுரு ரச மோடு சாதிலிங்கம் அரிதாரம் மனோசிலையும் ரசகற்பூரம் செ
வெல்லுறேன் கரு நாபி வெங்காரங் கெவுரி வெள்வோய் வகை வகைக்கு விருகன் இரண்டு
சொல்லுறேன் கரந்தைச் சாற் பழச் சாறுலே சுருக்கிட்டுச் சுத்தி செய்து கல்வத்திட்டே.

சண்ட_மாருதக்_குளம்பு.

78. பாட்டுமே சுத்தி செய்து நேர்வாளமப்பா யிந்திடைக்குப் பதினறு விராகன் போடு
காட்டு வால் மிளகு குரோசாணி ஓமம் கண்டந் திப்பிலி அரத்தை கடுக்காய் தானி
காட்டுமே கிரும்போடு சுக்கு கடுகுரோகணியும் ஆனைத் திப்பிலி ஓமம் பெருங்காயங் கஸ்தூரி மஞ்சள்
ஆட்டுமே திப்பிலியும் திப்பிலி மூலம் நாகப்பூவே.

79. பூவோடு யிந்துப்பு விளங்கங் கோஷ்டம் புகளான சாதிக்காய் வகை வகைக்கு
தேவோடு விருகனெடை நாலுங் கூட்டி செப்பரிய முன் மருந்தோ டொக்கச் சேர
தேவோடு திருகு கள்ளிப் பாலு வாரு சிவதையொடு கொடி வேலிக் கஷாயம் வாரே.

80. வார்த்துமே பனிரெண்டு சாமமாட்டு வளித்துமே அயச்சி மிளி லெடுத்து வைத்து
ஆத்துமே சுறத்துக்கு அரத்தை சுக்கு அதிகமாஞ் சொல்லியதோர் சுரத்துக் கெல்லாம்
கோத்துமே யின மறிந்து சரக்குக் கூட்டு குடி நீரிலாட்டிடவே சுரங்களோது
ஆத்துமே குளம்பிறட வேக மெத்த அப்பனே அநுபான மறிந்து கொள்ளே.

81. கொள்ளவே பதிமூன்று சன்னி தோசம் சூலையவே அரத்தை சுக்கு சிராம்பு திப்பிலி
மெள்ளவே மச்சியொடு மாவிலிங்கப் பட்டை வளை காட்டாமணக்கு வெண்ணொச்சி வேரும்
கொள்ளவே அரத்தை தனைச் சுரசம் பண்ணி குளம்பிடவே சன்னி சுரம் தோசந் தீரும்
வள்ளவே யிருமலென்ற வகைகளெல்லாம் மாட்டு நீ கடுக்காயின் கஷாயந்தானே

82. தானுன வாதமென்ற யென்பதுக்கு தருதாளை வெண்ணொச்சிச் சாத்திலிட்டு
தேனணவே சயமொடு யிருமல் போக ஊளு பத்திரி கண்டங் கத்திரி ஆடா தோடை
தேனுன சித்தரத்தை சிறு காஞ்சோறி திப்பிலியுங் கடுக் கடுக்காயும் சேர்த்து
கோனுன ஊளத்தியே ஒரு சேரைப் போட்டு குடி நீராம் கஷாயமிட்டுக் குளம்பு கூட்டே.

83. கூட்டவே பித்தமொடு பாண்டு சோகை கொடிய தொரு காமாலை யிவைகளெல்லாம்
காட்டியே பளச்சாறு வெள்ளாட்டு நீரு கரிசாலைச் சாறேடு மிளகுங் கூட்டி
மாட்டியே களம்பிட்டுக் கொள்ளு கொள்ளு மகோதரமா நீராம்பல் பெரு வயறு சோகை
காட்டியே கவுசி உன்மாந்தை வீக்கங் கனத்த தொரு நீருமை போருமை பீலியென்னே.

84. பீலியாம் வகைகளெல்லாஞ் சொல்லக் கேளும் பலத்தியே நீர் முள்ளிச் சாறத்தில் சத்தே
கோலியே நவச்சாரங் கொஞ் சமிட்டு குளம்பு தனைக் கூட்டியே கொடுத்தாய் பாரு
போலியே குன்மமெட்டும் போக்கக் கேளும் பூவரசம் பட்டையொடு குமட்டி வேரும்
சேரவே சீரகமு மிளகொடேலம் சேர்த்து நீ குடிநீரால் குளப்பியூட்டே.

85. குளம்பான பித்த வகை சொல்லக் கேளும் கொத்தமல்லி சீரகமும் முடக் கொத்தானீர்
குளம்பிடவே பித்த மெல்லாம் ஓடிப் போகும் கொடிதான சிறந்தியரை யாப்புச்
சூலை
களங்கமாமேக வகை கரப்பானெல்லாம் கரந்தைச் சார் தன்னிலிடக் காணதோடும்
குளம்பான விரை வாதம் அண்ட வாதம் கூட்டு நீ வற்க்கம் பூச் சார்கள் கொட்டிச்
சாறே.

86. சாறென்ற வாய்வுக்கு வேளை சுக்கு சாறத்தாமணி நொச்சி விஷத்துக்கெல்லாம்
கோனென்ற வெத்திலைச் சாற் முரியாகும் கொள்ளாட்டால் வென்னீரில் குளம்பை
யூட்டு
ஆனென்ற பதினெட்டு கரப்பான் குஷ்டம் அமுக்கிரு சிவன் வேம்பு பறங்கிப் பட்டை
கோனென்ற தூள் பண்ணி அமுறி விட்டு கா குளைத்த /ி தனிக் குளம்பிடவே குஷ்ட
மெங்கே
ஆனென்ற மேக வகை யிருபதுக்கும் அப்பனே உலத்திப் பட்டைச் சாறே.

87. சாறுன கெற்ப நோய்க் கிருமி தீர சாற் கிறேன் பாகல் சாற் பாலைச் சாத்தில்
காறண கறபப்ஞெடு வ்கைகளெல்லாம் கரந்தைச் சார் குமரிச் சாற் கறிசாலைச்
சாறும்
வேருன எலி கடிக்கு முருங்கைப் பட்டை வேளையிலை வெள்ளுள்ளி சாத்திலிட்டு
ஆருன் விரியனுக்கு அளிஞ்சி வாகை அறுவத்துக் காடு தோடா மூலி வேரே.

88. மூலியே வாதமொடு யிளம் பிள்ளை வாதம் முனையான பச்சை வாதம் பார்ச வாதம்
நாலியே யிதுக்கெல்லாங் கருவாகைக் வேம்பு நந்தி கேசாதித் தயிலம் கோப்பெறண்டைச்
சாறு
கோலியே யிலுப்பை மேல் புல்லுருவிச் சாறு கூட்டி குளம்பிடவே வாதமெல்லாங் கொள்ளை
போகும்
மாலியே நோயறிந்து அனுபானஞ் செய்து அதற்கான அனுபானம் அறிந்து கொள்ளு
நாலியே நாலாயிரத்தி நானூறு நோயும் நாடாது கும்ப முனி குளம்பென்றென்னே.

89. என்னியே வாத மெல்லாம் ஓடிப் போக யியம்புறேன் அஞ்சென்ணைத் தயிலங் கேளு
யென்னவே யெள்ளெண்ணை பேரண்டத் தெண்ணை யிலுப்பை யெண்ணை புங்கெண்ணை
வேப்பயெண்ணை
அய்ந்துமே வகை வகைக்குப் படி தான் ரெண்டு சொன்னேமே அளந்து விட்டுப் பாண்டத்
திலப்பா கேளு
நண்ணவே தூதாளை காட்டா மணக்கு நாயுருவி தை வேளை குப்பை மேனி தானே.

90. மேனியா மாவிலங்கு வேம்பு புங்கு வெண்நொச்சி ஆதவளை கண்டங் காலி
கூனியே குருந்து கருவாகை சங்கு கொடி வேலி நிலக் கடம்பு சடைச்சி யிண்டு
போனியே அவுரி யொடு மருக்காரை யெருக்கு புன் முருங்கை ஊர் முருங்கை வெள்ளைச் சா
சாறணையும்
மானியே மருதோனி காட்டு மல்லி மத்தையுத்தாமணி யோடு களக் கொட்டிதானே.

91. கொட்டியே மிளகரகன் திருகு கள்ளி குமிளோடு அமுக்கிரு பரம்பு குன்றி
யெட்டி வெப்பாலை அடம்பு சின்னி யிலுப்பை மேல் புல்லுருவி அகிலம் பட்டை
வெட்டிடவே சொன்னதொரு மூலியெல்லாம் வேரோடு தூரோடு சமூலங் கொண்டு
அட்டியே பண்ணாதே வெட்டி வந்து அப்பாலே வகை வகைக்குப் பலந்தான் பத்தே.

92. பத்தாவே யிவை யெல்லாம் யிடித்து நன்றாய் ப்ரும் பாண்டத்திட்டு நீ பாகங் கேளு
அத்நாகப் பதினாறு மரக்கால் தண்ணீரளந்து விட்டு அடுப்பேத்தி யெரிக்கக் கேளு
யெத்தாலே யொரு விறகாலெரிய விட்டு யெட்டொன்றாய் வத்த மட்டும் யெரித்துக்
காச்சு
அத்தா கஷாயமது படி தான் பத்து அளந்து விட்டு யெண்ணையிலே அறையக் கேளே.

93. அரைகிறேன் திப்பிலியுந் திப்பிலி மூலம் ஆனைத் திப்பிலி ஓமம் அரத்தை சுக்கு
குறையாத தாளிசையுங் கண்டந் திப்பிலியும் குரோசாணி கருஞ் சீரகம் கிரும்பு மக்கிலம்
தரையான சதகுப்பை வசம்பு கல்நார் சிறு தேக்குப் பெருங்காயம் வெள்ளுள்ளி யிஞ்சி
உரையான் வெளிச்சப் பிசின் நாகப் பூவும் உத்தமனே சடாமஞ்சி ஒக்கக் கேளே.

94. கேளே நீ வகை வகைக்கு அரைப் பலமே சொன்னேன் கெடியான வெள்ளாட்டு நீர் தன்னிலாட்டி
ஆறே நீ யென்னையிலே கரைத்தவாறு அப்பனே மயில் பீலி அரைப் பலமே போடு
கேளே நீ வாராதே அடுப்பிலேத்தி குறிப்பாக யின்னமொரு சூட்சங் கேளு
நாளே நீ யாகுந்தான் சொல்லாரே நீ அருகேத்தி யெரித்துக் காய்ச்சு லார் கேளு நந்தி கேசர் சாறு நாலு படி வாரே.

95. வாரே நீ அடுப்பேத்தி யெரித்துக் காச்சு வளமான மெழுகு பதம் தன்னைப் பார்த்து
சாரே நீ வடி கலந் தன்னில் கேளு கஸ்தூரி விராகன் ரெண்டு சாதிலிங்கம் ரெண்டு
போடே நீ ஆகாசத் தூள் களஞ்சிரெண்டு போட்டுமே யெண்ணை தனை வடித்து வாங்கு
வேறே நீ அண்டத்தின் தயிலத்தோடு வெள்ளுள்ளி முசுறு முட்டைத் தயிலந்தானே.

96. தயிலமென வகை வகைக்கு கால் படி தான் சொன்னேன் சாத்தியே முன்சொன்ன தயிலத்தில் வாரு
தயிலத்தை வேடு கட்டிப் பதனம் பண்ணு சண்முகர்க்குங் கணபதிக்கும் பூசை பண்ணு
தயில மிந்த முறைப்படியே யார் செய்வார்கள் சார்வான வாதி மகன் வயித்தியன் செய்வான்
தயில மாந்தயிலத்துப் பெருமை சொல்ல ஆராலு முடியாது அறிந்து பாரே.

97. அருந்தவே தயிலத்தைக் காசிடை தானுண்ணு அப்பனே மேலெங்கும் பூசக் கேளு
செறிந்து வருஞ் சன்னி யெங்கே தோச மெங்கே தீருத உள் குத்துப் பிற வீச்சு மெங்கே
அறந்து வரும் வாத மெங்கே வாயு வெங்கே நடுக்கடி தாளுவலு சன்னி யெங்கே
யெறந்து வரும் பக்க வாதம் பாரிச வாதம் யிளம் பிள்ளை வாதமொடு அண்ட வாத மென்னை.

98. வாதமொடு காக்கை வலி முயல் வலிப்பு வருண வலி குதிரை வலி குமர கண்ட வலிப்பு
ஓமென்ற வாத பித்த முகவாத சன்னி உத்தமனே பித்த நோயந்தகச் சன்னி
போதவே சிரு சிரப்பு மண்டைக் குத்து பிடரி வலி பீனிசமும் பொல்லாத நோயும்
பாதகமே செய்த தொரு நோக்களெல்லாம் பறக்குமே தயிலத்தின் பேரு சொன்னால் தானே.

99. சொல்லவே கைப்போடு புளிப்புத் தள்ளு சொல்லிய தோர் நோயறிந்து பத்தியத்தை
சொல்லவே உப்பதனை வறுத்துக் கட்டு சுகமான வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சு
வெள்ளவே தூதுளங்காய் வத்தலாகும் வெள்ளாட்டு வத்தல் பசும் பயறுமாகும்
பல்லவே பத்தியந் தான் கண்டு தேறு பாங்காக யின்ன மொன்று பாடுறேனே.

வில்வாதிக் குளம்பு.

100. பாடுறேன் வில்வாதிக் குளம்பு தன்னைப் பகர்ரிய நோய்களெல்லாம் பறந்து போக
ஆடியதோர் வில்வ வேர் பலமு மய்ந்து அதனுடைய பழந் தானும் இரண்டு பத்துப் பலமாம்
பாடியே யிடித்து மொரு பாண்டத்திட்டு பதக்கு நீரளந்து விட்டு அடுப்பிலேத்தி
வாடியே யெரித்ததனை மூன்று படியாக்கி வத்திய பின்னிறுத்ததிலே சர்க்கரையும் போடே.

101. போடுவது நல்ல வெல்லம் சர்க்கரை தான் மைந்தா புகளான பாகு வரும் பதத்தில் கேரு
தேடுவது திப்பிலியுந் திப்பிலி மூலம் செவ்விய மிளகு யிஞ்சி சித்திர மூலம்
தேடுவது சீரகமும் யேலம் லவுங்கம் சிறு நாகப்பூ வோடு தாளிச பத்திரி
ஆடுவது அதிமதுரம் கூகை நீரும் யளகான வாலுளுவைக் கிரும்ப மஞ்சி கானே.

102. கானென்ற அதிவிடையம் மதும் யிந்து கண்டு கொள்ளு வகை வகைக்கு இரண்டு பலந தான் சொன்னேம்
தானென்ற குங்குமப் பு பத்திரி சாதிக்காய் வகை வகைக்கு விருகன் இரண்டு
போனென்ற யிவை யெல்லாம் யிள வறுப்பாய்ச் செய்து பொடித்தந்தக் கிஷாயத்தில் போட்டுக் கிண்டு
யேனென்ற கஸ்தூரி விராகன் போடு யிறக்கி வைத்து நாளொன்றுக்கிரு நேரங் கொள்ளே.

103. கொள்வது நேரமது புன்னைக் காயளவு குன்ம மெட்டு சத்தி விக்கல் நெஞ்சு வலி தீரும்
கொள்ளவே அரோசிகம் மூக்கு நீர்ப் பாச்சல் சூலை யெரிவு காமாலை கிராணி மூலம்
வள்ளவே யிளைப்போடு யிருமலினை வயத்து வலி புறக் குடைச்சல் கிருமி மூலம்
வள்ளவே யிளைக்கோசு வீதள்ளிய தோர் நோய்களெல்லாம் ஓடிப் போகும் தேக மது மண்டலத்தில் தீர்க்கமாமே.

சுத்த வல்லாதி யெண்ணை.

104. ஆமென்ற சுத்த வல்லாதி யெண்ணை அரைறிறேன் சித்தா முட்டி சமூலங் கொண்டு
பானென்ற முப்பத்தி ரெண்டு பல யிடித்து பாண்டத்திலிட்டு யிரு தூணி சலம் வாரு
போமென்ற குறுணி சலமாகக் காய்ச்சி யிறுத்து தனி யெண்ணை குறுணி வாரு
தானென்ற சந்தன மதுரம் கோஷ்டம் சாதிக்காய் கிரும்பேலம் பட்டை பத்தியே.

105. பட்டையா மரத்தை சுக்கு அக்கிலாக் காரம் பாங்கான தாளிச பத்திரியு மாஞ்சி
திட்டமாய் பெருங்காயம் கடுகுரோகிணி திப்பிலியும் வாய் விளங்கங் கூகை நீர் கோஷ்டம்
வால் மிளகு குரசாணி ஓமம் குங்குமப் பூ கருஞ் சீரகம் கடுக்காய் தானி
திட்டமாஞ் செண்பகப்பூ கொத்தமல்லி செவியம் வாலுளுவை சிறு நாகப்பூவே.

106. பூவோடு வகை வகைக்குப் பொடியே செய்து போடு நீ றாற்களஞ்சி சீவிதமப்பா
வோடு பளச் சாறு படிதான் வாறு பசுவின் பால் படி வார்த்து அடுப்பிலேத்தி
செயலோடு கணபதிக்குப் பூசை பண்ணு சிறப்புரச யெரித்தனை மெழுகு பதம் பார்த்து
பூவோடு வடிகலசந் தன்னில் கேரு புனுகு கோரோசினையுங் கஸ்தூரி போடே.

107. போட்டிடு வாய் வகை வகைக்கு களஞ்சி போட்டு நீ யெண்ணை தனைப் பதனம் பண்ணு
நாட்டுவாய் உள்ளுக்குக் காசிடை தான் கொள்ளு நாசியிலும் தளி குத்தி மேலும் பூசு
திட்டமாய் முகவாதம் மண்டை சூலை தீர்ந்து விடும் பித்தமொடு நீறக்காசம் ஓ
ஓட்டுமே பீனிசமும் வாய்வு சூலை உடம்பிலுள்ள நோயெல்லாம் ஒடுந்தானே.

108. ஓடுமே சிரசிலுள்ள நோய்களெல்லாம் உத்தமனே பசும் பயறு தன்னில் மூழ்கு
பாடுகிறேன் பத்தியந் தான் கைப்பு புளியாகா பாங்கான மறு பத்திய மெல்லாங் கூட்டு
ஓடுமே ஒரு தலை நோய் மண்டைச் சூலை உத்தமனே நாசிகா பீமங் கண்ணுச் சூலை
நாடாது நயன வாதஞ் சன்னி நலமான பத்தியந் தான் நன்றாய்ப் பாரே.

மேகத்துக்கு சிறுதம்.

109. பாரப்பா சர்வாங்க நோய்கட்கெல்லாம் பாடுகிறேன் மகா மேக சிறுதந் தன்னை
காறப்பா பேய்த் தும்மட்டி வேர் பலந்தான் பத்து கடுக்காய் வேர் நெல்லி வேர் தானி வேர்
வேரப்பா சித்தா மல்வி பேருமல்லி வேர் வெட்டி வேர் விலாமிச்சம் வேர்
பேறப்பா தூதுவளை மாதளை காஞ்சொறி பொன் முசுட்டை நன்னாரி நெய்தல் வேரே.

110. நெய்தலொடு செங்கள நீர் தாமரையு மல்லி நிலைப் பனையும் நிலவாகை கண்டங் கத்திரி
பொய்யாற வகைக் காறு பலந்தான் போடு பேய்க் குமட்டி வேரோடே பொடியிடித்து
பெய்தமே பாண்டத்திலிட்டுக் கேளு யிரு னாளி சலம் விட்டுப் போட்டொன்றுக்கி
அய்த்துமே கஉடாயமது படிதனை அளந்து விட்டு ஆவி னெய் படி தானலே.

111. நாலோடு சாதிக்காய் கிரும்பு பத்திரி நற்சீரகம் யேலம் லவுங்கப் பட்டை
காலோடு மன் திஉட்டி சாஸ்திர பேதி சதகுப்பை வாய் விளங்கம் தாளிச பத்திரி
சேலான தேவதாரம் நல்ல சந்தனமும் மஞ்சி சிறு நாகப்பூவோடு மதுரங் கோஷ்டம்
காலோடு மிளகுநவை சிங்கி தேக்கு கருஞ் சீரகம் கஸ்தூரி மஞ்சளாமே.

112. மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலி மூலம் மாஞ்சியுடன் கடுக்ரேகணியும் நெருஞ்சிக் காயுட
கொஞ்சியே கொத்தமல்லி கோரைக் கிளங்கு குரோசானி வால் மிளகு கடுக்காய் நெல்லி
மஞ்சாதே குங்குமப் பு மாதளையின் பிஞ்சி விளங்கவே வகை வகைக்கு நாற் களஞ்சாக்கு
அஞ்சாதே ஆவின் பால் கால் படி தான் சொன்னேம் அரைத்து மேகரைத்துமே முன் நெய்யில் வாரே.

113. வாரே நீ வல்லாரை சாறு படி ரெண்டு வாறு சேரே நீ பழச் சாறு படிதான் ரெண்டு சீனி சர்க்கரையும் பலந்தானு
காரே நீ காம்பு வெல்லம் பலந்தானு கரைத்துமே யடுப்பேத்தி யெரித்து காச்சி
வாரே நீ மெழுகு பதந் தன்னைப் பார்த்து வடித்திடவே வடி கலசந் தன்னில் கேளே.

114. நன்னிலே சீரகமும் கோரோசினையுங் கூட்டு சாறவே வடித்த பின்பு சாத்தக் கேளு
நின்னயமாய்க் கணபதிக்குக் கந்தன் பூசை நிலையாகச் செய்து நீ நிலைப்புடத்தில்
முன்னதாய் முப்பது நாள் வைத்தெடுத்து முறையோடே முக்களஞ்சி நெய்தான் கொள்ளு
சொன்னதொரு நாளொன்றுக்கிரு நேரங் கொள்ளு துலையாத வினையெல்லாந் துலைந்து போமே

115. போமென்ற பவள பற்பம் பொல்லாத நோய்களெல்லாம் பொடியாய்ப் போகும்
தேகமென்ற கெற்பத்தி லெளுந்த நோய் தீர்ந்து விரு மலடிக்குப் பிள்ளை யுண்டாம்
காமென்ற பத்தியந் தான் சாதகமாய்க் கொள்ளு கைப்போடு புளிப்பு ரெண்டும் தள்ளிப் போடு
காவென்ற கண் மேக மெல்லாந் தீரும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே.

பீனிசத்துக்கு எண்ணெய்.

116. பாறப்பா யெரு வகைப் பீனிசங்கள் போக பாடுகிறேன் வெகு சுருக்கு யெண்ணை கேளு
காறப்பா நல்லெண்ணை படி தான் ரெண்டு கரிசாலை அவுரி கஞ்சா பொன்னுங்காணி
ஊறப்பா வெத்திலைச் சார் முசுமுசுக்கைச் சாறு உள்ளுலத்தி மூக்குறட்டை யத்திப் பட்டை
ஆறப்பா வகை வகைக்குப் படி தான் சாறு ஆகண்டங் சாறு படி ரெண்டு வாறே

117. வாறே நீ படி சாறு ஆவின் பாலும் வாறு நீ படி ரெண்டு வீளிச் சாறு ரெண்டு
காறே நீ கருஞ் சீரகம் கடுகுரோகணி கஸ்தூரி மஞ்சள் காரோடு கடுக்காய் தானிக்காய்
கூறேனி அதிவிடையம் அரத்தை சுக்கு கோஷ்டமொடு சதகுப்பை குரோசானி ஓமம்
சேறே நீ நாகப்பூ தாளிச பத்திரியும் திப்பலி மூலமொடு சித்திர மூலம்.

118. மூலமாம் பெருங்காயம் நெல்லி முள்ளி முளகுநணை யளிஞ்சி பிச்சி கீழ்க்காய் நெல்லி

பாகமாய் வகை வகைக்கு களஞ்சி வீதம் பழச் சாத்திலாட்டியே பெண்ணையிலே போடு
ஆலமே மடுப்பேத்தி யெரித்துக் காய்ச்சி அப்பனே மெழுகு பதமறிந்து நீயும் யேலவே
முருங்கைப்பூ ஒரு பிடி தான் போடு யிதமாக வடித்திட்டுப் பூசை பண்ணு.

119. பண்ணுவது கந்தரொடு கணேசன் பூசை பண்ணியே யேரு நாள் வட்ட முழுகு
யெண்ணுவது சீயக்காய் பசும் பயறு தேய்த்து யிள வென்னீர் முழுகின நாள் புளியா
மண்ணுவது மறுநாள் தான் கூட்டிக் கொள்ளு மைந்தனே யிப்படி நீ முழுகும் போது
ஒண்ணுவது சிரசிலுள்ள நோய்களெல்லாம் ஓடியிடும் யேழு வகைப் பீனிசமும் போமே.

120. போமே நீ தயிலத்தை முழுகும் போது புளியோடு புகையிலையும் பெண்ணுமாகா
ஆகு மேகைப்போடு புளிப்பு மாகா அப்பனே மத்தா நாளெல்லாங் கூட்டு
வேனுமே கை முறையுஞ் செய் முறையும் பார்த்து யிதமாகச் செய்திடவே வியாதி தீரும்
ஆகாத வளியிடும்பு செய்வாரகில் அவருக்கு மருந்தன்டோ மக்கள் பாரே.

121. பாரே நீ சிரசிலுள்ள நோய்களெல்லாந் தீரப் பாடுகிறேன் அக்கிரா முப்பத்திரண்டே
ஆறே சீ சுண்டை வேர் சமுத்திராப் பழமாம் அரத்தை சுக்கு அக்கிலாக் காரம்
அதிவிடையம் ஏமம்
சேரே நீ திப்பிலி மூலம் குரோசாணி வால் மிளகு சித்திர மூலம்
காறே நீ கருஞ் சீரகம் கஸ்தூரி மஞ்சள் கடுகுரோகணி பெருங்காயம் கண்டந் திப்பிலியே.

122. திப்பிலியுஞ் சாம்பிராணி பேரரத்தை திறமான அளிஞ்சி விரை வெப்பாலரிசி கடுகு
செப்பாதே யெருக்கிலை மேல் சுண்ணயுங் கூட திறமான வகை வகைக்கு களஞ்சி
ஆக்கு
கப்பெரிய ஆவலை கண்டங் காலி கடிதான மிளகுனை வெள்ளைச் சாறணை வேரு
ஒப்பரிய பெருமருந்து பங்கம் பாழை உத்தாமணியோடு கடலிருஞ்சி யென்னே.

123. யென்னவே தை வேளை குப்பை மேனி யிவை யெல்லாம் வகை வகைக்கு களஞ்சி கூட்டி
விள்ளவே அத்திப் பால் வெள்ளாட்டு நீரும் விட்டு வதிலிடித்துத் தூள் வடியே கொண்டு
யென்னவே யெட்டியுட சியிதான் நன்று யில்லாட்டால் பேய்ச் சுரையின் குடுக்கையிலே
அடைத்து
பன்னவே பணவிடை தான் நாசிக் கேத்தப் பரிவான கபால நோய் பறந்து போமே.

124. போமென்ற பொடியதனைக் கடுதாசி தன்னில் புகட்டியே திரியாகத் திரித்துக்
கொண்டு
நாமென்ற நிம்ப யெண்ணை கொளுத்தி யாத்தி நலமான புகையதனை நாசிக் கேத்த
ஓமென்ற கபால சன்னி மண்டைக் குத்து ஒருத் தலை நோய் நீர்ப் பாச்சலோடும்
பித்தம்
காமென்ற கபாலத்தில் வாய்வு சூலை கறப்பானொடு கண்ணோசி கன்னப் புத்தே.

125. புத்தான யேழுவகைப் பீனிசமும் போகும் பொல்லாத சலதோஷம் புகை நீர்ப் பாச்
சல்
கத்தான கபாலத்தில் விப்புருதி சூலை காசமொடு புண் புரையும் காணதோடும்
முத்து முள்ள தந்த நோய் செவி நோய் கண்ணோய் மருத்தான சன்னி வகை தோசம்
போகும்
சித்தான சிரசிலுள்ள தொண்ணூறு த்தாறும் தீருமென்று விர்ம்ம முனி செப்பினரே.

126. செப்பியதோர் மானிடர்க்கு சன்னி தோஷம் சிறந்த தொரு பல்கிட்டு முச்சடக்கமா
னல்
நம்பியே அக்கிரும் பணவிடையே கொண்டு நவச்சாரம் பணவிடை தான் கலச்சுண்ணம்
கொஞ்சம் தப்பியே மத்தித்து நாசிக்கேத்த நாட்டாத பல்க் கிட்டு சன்னி தீரும்
ஒப்பியே யின்ன மொரு சேதி கேளு உத்ததொரு சடத்திலே ஆறுத புண்ணே.

127. புண்ணென்ன மேகத்திலெடுத்த ரோகம் புரை யோடி ஆறாத் புண்ணுக்கெல்லாம்
அண்ணே நீ அக்கிராங் களஞ்சி யூட்டு அரிதாரம் சாதிலிங்கம் ரச கற்பூரம்
கண்ணென்ன கொடிக் கள்ளிப் பட்டைத் தூளு கழுதை லத்தி உலத்திய தூள் கலந்து
கட்டு
விண்ணென்ன வகை வகைக்குக் களஞ்சி கட்டு விரவிடு நீ திருகு கள்ளிப் பால்தான் விட்டே.

128. விட்டதனை அரைத்துலத்தி வைத்துக் கொண்டு விதமான புங்கு புளித் தனல் ரெண்டோட்
டில்

யிட்டதின் மேல் தனலிலே பொடியைப் போட்டு மேலான கன் சிரட்டை கொண்டு மூடி
விட்டதனை வியாதி மேல் புகையைக் கொள்ளு வெடி குலை மேக வெடி சிறந்தி யரையாப்பு
திட்ட மொடும் பவுத்திரமும் அறு கன்னி குஷ்டட்டம் தீருத குளிப் புண்ணுந் தீருந் தானே.

129. திருமென்ற பொடியதனை அறலிப் பாலில் சேர்த்துநீ மத்திருச் சீலையிலே பூட்டி
ஆறவென்று ஆறுத புண்ணிலே போட அளி கிரந்தி குளிவாளைப் புண்ணுந் தீரும்
தீருமே குறை நோய் குஷ்ட மொடு தேகத்திலெழுந்த தொரு நோய்களெல்லாம்
காறே நீ கண் காணதோடுமப்பா கடிதான பத்தியந் தான் கண்டு கொள்ளே.

130. கண்டு கொள்ளுமூவு நாள் புகைதான் காட்டு கண்டிப்பு பத்தியந் தாறு நாள் காரு
சென்று தான் யேளா நாள் தலை நீர் வார்த்து சிறப்பான உப்பதனை வறுத்துக் கூட்டு
மூன்று செய்யா மறுபடி தான் விளக்கெண்ணை தேய்த்து மூழ்கிய பின் மத்த தெல்லா முண்டு தேறு
சென்று வரும் புகை வேக மென்ன சொல்வேன் தீருத நோயெல்லாந் தீரும் பாரே.

131. விஜமுட்டித் தயிலம் :-
தீரவே விஷ முட்டித் தயிலங் கேளு தீருத கறப்பானொடு அழுகண்ணி குலை
மாரவே செவ்வட்டை மறவட்டை செய்யான் வண்டு கடி புலிச் சிலந்திப்புடையன் குத்து
பேருன பில்லியொடுவஞ்சினையும் யேவல் தனியம் பிசாசோடு பூத வேதாள மோடு
மாருத குஷ்டமொடு குறை நோய் தீர மைந்தனே தயிலமொன்று வரையக் கேளே.

132. விளம்பவே யெட்டி யேறஞ்சி சங்கு பிவனணி புங்கு வண்டு கொல்லி சங்கங் குப்பி
அளம்பறவே அடம்பு சின்னி அகிலம் பட்டை ஆவாரை வெள்ளெருக்கு மறுக்காரையின்டு
கொளம்பவே சிவந்த நாயிருவி கொத்தான் குண்டுமணி ஆவியொடு கறுத்த கன்னி
வளம்பெறவே சிவன் வேம்பு கழுதை முள்ளி மறு தோணி கருங்காலி புரசே.

133. புரசான யுள்ளலத்தி சிறுவை வாகை புலி சுடக்கி கருஞ் சூரை கரந்தை மத்தை
விறசான கொடி வேலி அமுக்கிரு தேக்கு விடத்திலையும் பிலாவாசு மூளகறணை குமரி
அரசோடு பூவரசு மறுக் கொன்றை ஆத்தலறி கொட்டி செங்கத்தாரி சறி குவளை
பெரு மருந்து காட்டு எளிய விறி சமனிடை தானிவை யெல்லாந் தறித்துலத்தே.

134. உலத்தியே பரும் பாண்டத்திட்டு நீயும் உத்தமனே குளிப் புடத்தில் தயிலம் வாங்கி
அலத்தியே மூக்குறு அண்டங் காக்கை அருங்கோடு கழுகாமே ஆந்தை கூகை
பலத்தியே தேவாங்கு பச்சோந்தி மூசுறு பசுந்தவளை பெரு விரியன் பச்சைப் பாம்பு
அலத்தியே பன்றி விட்டை கழுதை லத்தி ஆனை லத்தி பறிக் குளம்பு யெருமைக் கொம்பு
முளத்தியே தலை மண்டை முசல் புழுக்கை வாலோடெலிப் புழுக்கை யென்னே

135. என்னவே யொட்டை லத்தி வெள்ளாட்டுப புழுக்கை யிவை யெல்லாஞ் சமனுகக் கொண்டிடித்துலத்தி
தன்னவே சீவ செந்து வகைகளெல்லாம் சமூலம் பிடித்துலத்தித் துணுக்கச் சேர்த்து
பன்னவே பரும் பாண்டத்திட்டு மூடி பதறுதே குழி வெட்டி அடிக்கலம் வைத்து
தன்னவே குளிப் பிடத்தில் தயிலம் வாங்கி சமனுக முன் தயிலம் ஒக்கச் சேரே.

136. சேருமென்ற வகை தயிலம் மொன்றதாக செங்கொட்டைத் தயிலமொரு படி தான் வாரு
சாறுமே கருங் குங்கிலியம் களஞ்சி கானறெத்திகைப் பூண்டு களஞ்சி யெட்டு

ஊற நீ க்ரிய சீரகந் தானெட்டு அளகான தேவதாரங் கஸ்தூரி மஞ்சள்
சேற நீ ரசகற்பூரம் களஞ்சியெட்டு சென்ன கறப்பட்டை யொடு பலந்தானென்றே.

137. பலமான பறங்கிப் பட்டை பலந்தான் ரெண்டு பாங்கான கஸ்தூரிப் பட்டை பலம் ரெண்டு
பலமான பிரம்பிரட கிரங்கு பலம் ரெண்டு பேறான வலம்புரிக்காய் வாலுளுவை கடுக்காய்
இலையாதே வகை வகைக்கு பலந்தானென்று ஆட்டுவாய் கொடிக் கள்ளிச் சாறெதியம் பட்டைச் சாறு
மலையாதே விட்டரைத்த தைலத்திலே வாறமருத்தான ரோக மெல்லா மாண்டு போமே.

138. மாண்டு போம் பூதப் பிசாசு வேதாளம் மறண்டோடும் வஞ்சனையும் பில்லி சூனியம்
மாண்டு போம் சொறி சிரங்கு குஷ்டம் மாருத அருகண்ணி வாத சன்னி
மாண்டு போம் யிவை யெல்லாந் தயிலம் பூச மயிலெண்ணை வேப்பெண்ணை சேர்த்துக் கொள்ளு
மாண்டு போம் சன்னி பதினெட்டுங் கூட மறு நாறு வேது விட்டுக் குளித்துப் போடே.

139. குளிக்கவே தழுதாளை கரந்தை நொச்சி குன்று மணி சங்கன் குப்பி வாதமடக்கி
களிக்கவே நோயறிந்து வேது கூட்டு கைப்போடு புளிப்புகையுந் தள்ளிப் பாறு
விளிக்கவே உப்பதனை வழுத்துக் கூட்டு வெள்ளாடு மூயலுடும்பு அயிரை விரல் ஞாளி
அளிக்கவே வழுதலங்காய் முருங்கைப் பிஞ்சு அரைக்கீரை பசும் பயறு ஆவின் பால் நெய்யாம்
குளிக்கவே பத்தியந் தான் சொன்னேம் பாரு குணமாக வியாதிகள் தானறிந்து கூட்டே.

140. <u>கும்மட்டிக்காய் பதங்கம்</u>:-

கூ*லேகுக்*கூ கூறவே கும்மட்டிக்காய் பதங்கங் கேளு கூறிய தோர் வாதமென்பது தான் தீர
கூறவே தழுதாளை அயிலம் பட்டை கொடி வேலி பாவட்டை அமுக்கிரு வேர்
மூறிட வேன் சாறதனையும் சத்தி சாறனை முடக் கொத்தான் பெருவாகை தூதுவளை
சடைச்சி தேறியே தை வேளை குப்பை மேனி சிவன் வேம்பு பிரம்பிரட கிராங்கு சங்கு
மாறிவிடு அவுரி யோடு வெப்பாலை வேரு மாவிலிங்கு வகை வகைக்குப் பலந்தானென்று

141. ஒன்றுன யிவை யெல்லாஞ் சூரணமே செய்து உத்தமனே கண்டந் திப்பிலி ஒமம் கூட
தின்றுன வால் மிளகு தாளிச பத்திரி திப்பிலியும் வாலுளுவை திப்பிலி மூலம்
அன்றுன சதகுப்பை பறங்கிப் பட்டை அரத்தை சுக்கு அதிவிடையம் சிறு தேக்கு சிறு நாகப்பூவே.

142. பூவான கருஞ்சீரகம் வகைக்கு நாற் களஞ்சி போட்டிடித்து முன் மருந்தோடொக்கச் சேர
தேவோடு கல்வத்திலிட்டுக் கேளு திருகு கள்ளிப் பாலோடு உத்தாமணிச் சாறு
பாவோடு வாத்தனை அரைத்துலத்தி பக்குவமாய்ப் பேய்க் குமட்டிக் காய்தான் கேளு
கோவோடு வேண்டியது கொண்டு வந்து குடைந்துள்ளே விரையோடும் சதையும் போக்கே.

143. போக்கியே மருந்தெல்லாங் காய்க்குள்ளாக புகட்டி யந்தத் தோட்டாலே மேலே மூடி
மேய்க்கியே பாண்டத்திலிட்டு நீயும் மேல் மூடிச் சீலை செய்து குழிதான் வெட்டி
சேர்க்கவே வெள்ளாட்டுப் புழுக்கை மைந்தா கீழ் மேலும் வைத்து மத்த நடுப் பாண்டமிட்டு
பார்க்கியே புடம் போட்டு ஆறவிட்டுப் பாறு பருவ மாங்கா யெல்லாஞ் சிவந்து காணும்.

144. காணுவது <u>கறுகா மாலிப் பால்</u> வாங்கி காயெல்லாம் ஆற விட்டு மருந்தைக் கொட்டி
பேணியே குங்குமப் பூ சாதிக்காயும் போட்டு நீ பொடி செய்து வைத்துக் கொண்டு
ஆளுவது வெரு கடி தானந்தி சந்தி அப்பனே மூன்று நாளாறு நாள்க் கொள்ளு

காணுவது வயறு ஊதந்தால் நீரில் போடு கலங்காதே யெருமை மோரு சேர்த்து முண்ணே.

145. உண்ணவே வாதமெல்லாம் ஓடிப் போகும் உத்தமனே புளிகை புளிங்கப்புந் தள்ளு
மன்னியே வாதத்துக் கெல்லாந் தள்ளி மத்ததெல்லாம் யிச்சா பத்திய மதாகும்
முண்ணுவது உப்பதஊ வயத்துக்கட்டு கண் காண தோடும்டர் வாத மொடு சூலே
ஒண்ணுவது கால் கை முடங்கிருக் கால் வாதம் உத்தமனே உத்தமனே பச்சை வாதம் ஓடும் பாரே.

ஆடாதோடை லேகியம்.

146. பாரே நீ மச்சேந்திரா ஆடாதோடை பாடுகிறேன் தூதுவளை சிறுகாஞ்சொறி
காரே நீ மொசு மொசுக்கை கண்டங் கத்திரி கறிசாலே முள்ளங்கி மணத்தக்காளி
சேரே நீ சிறு பறங்கி வதலையும் சங்கு சேர்த்துமே ஆவரையுஞ் சூரணமே செய்
காரே நீ கடுக்காயுங் கோஷ்டந் திப்பிலியுங் கருஞ்சீரகம் மிளகு வசம்பு யிந்துப்பே.

147. உத்தமனே சித்தரத்தை பேரரத்தை உத்ததொரு வ்ாலுளுவை கூகை நீறு
செப்பாதே சீரகமும் கற்கடக சிங்கி சிறு நாகப்பூ வோடு நெல்லி முள்ளி
ஒப்பாத வகைக்குக் கால் பலமே கூட்டு உத்தமனே யிடித்து நன்றாய் மூன் மருந்தில் சேரு
செப்பாதே ஆவின் நெய் படிதான் வாரு சிறப்பான வெள்ளாட்டுப் பால் படிதான் வாரு.

148. வாத்துமே அருக்கம் பால் சாறு படி தான் வாரு வளமாக அடுப்பேத்திக் கொதி யிடும் போது
பார்த்துமே பனங் கல்கண்டு பலந் தாலு பழைய வெல்லம் பலம் நாலு போட்டுக் காச்சு
கோத்துமே பாகுவரில் சூரணத்தைக் கொட்டி கெம்புத் தேன் கால் படி தான் கூட வாரு
ஆத்துமே லேகியமாப் பண்ணிக் கொண்டு அந்தி சந்தி நாளொன்றுக் கிரு நேரங் கொள்ளே.

149. கொள்வது பவள பஷ்பம் அரிதார பஷ்பம் கூட்டியே நேரமொரு களஞ்சி கொள்ளு
தள்ளாதே மண்டலந் தான் கொள்ளும் போது சயமீளை கபயிருமல் மந்தார காசம்
விள்ளாதே ஓடி விடும் சயரோக மேஹம் மேக வகைக்கிரந்தி குஷ்டம் உஷ்ண வாய்வு
கள்ளமாம் வியாதி யெல்லாம் காணுதோடும் கை கண்ட வித்தை யிது கண்டு பாரே

150. பாரே நீ கைப்போடு புளிப்புந் தள்ளி பசுவின் நெய் வெள்ளாட்டுப் மாங்கிசமும் கூட்டு
சேரே நீ ஆவின் பால் வெள்ளாட்டின் பால் தினந் தோறும் சீனியிட்டுக் காச்சிக் கொள்ளு
சாரே நீ பத்தியந் தானிம் முறையே செய்து சார்ந்த பார் கண்டாள ரோகம் போகும்
மாறே நீ தலே முழுகு ஆவின் நெய்யால் யில்லாட்டால் முக்கூட்டு யெண்ணை முழுகே

அரிதார பற்பம்.

151. மூழ்கவே அரிதார பற்பஞ் சொல்வேன் முனையான அரிதாரம் பலந்தானென்று
தேளான கல்ச் சுண்ணம் படி தானென்று தேசிநீர் படி ரெண்டு செப்பக் கேளும்
வாள்கவே புதுச் சட்டி தன்னிலே தான் வளமாகக் கல்ச் சுண்ணங் கீழ் மேலிட்டு
நாளவே அரிதாரங் கிளி போல் கூட்டி கடுகவே நிரைத்திடவே தேசி நீர் வாரே

152. தேசிநீர் தன்னிலே உவர்ப்பு விட்டுத் தெளியவே தெளி விறுத்து வார்த்து நீத்து
ஆசியே யிப்படியே யேழு தரம் நீத்து அரிதார மஞ்சள் கக்கி வெள்ளையாகும்
மாசியே அதை யெடுத்து மறு சட்டியிலிட்டு மைந்தனே அடுப்பேத்தி யீருள்ளிச் சாறு
காசியே படியொன்று கரந்தைச் சாறு மொன்றாய்க் கலந்து சுருக்கிட்டுக கருதக் கேளே.

153. கருகியே புரசம் பட்டை புளியம் புறணி கனமான நாயுருவி சுட்ட சாம்பல்
கருவென்ன வகைக்கு இரண்டு படிதான் சாம்பல் கலந்து தான் சட்டியிலே கீழ் மேலிட்டு
அதியே தாளகத்தைக் கவசங் கட்டி அண்டோடு உவர்ப்பூவு தலை மண்டை யோடும்
வெறவியே சுண்ணத்திலாவின் பால் விட்டரைத்து மேல்க் கவசங் கட்டிப் போடே.

154. கட்டியே ரவியிலிட்டு உலர்ந்த பின்பு கனமான சாம்பலிலே நடுவே வைத்து சட்டியே
மேல்ச் சட்டி கொண்டு மூடிச் சந்து வாய் சீலை செய்து அமப்பிலேத்தி கட்டி
கட்டியே தென்னை மட்டைதென்னை விறகால் கமலம் போலெரித்திடுவாய் நாலு சாமம்
மட்டில்லா தெறித்து நீ ஆற விட்டுப் பாரு அரிதார நீறுமப்பா ஆருஞ் சொல்லாரே.

155. சொல்லாத பற்பமது பணவிடை தான் மைந்தா சீகமாக நெய்தனிலே கூட்டிக் கொள்ள
கொல்லாது ~~பற்பமது பணவிடை தான்~~ சீயமீளை மந்தார காசம் சூலையொடு சிறந்தி அரையாப்புக் குஷ்டம்
சொல்லாதே வேதை யிட்டாலேது மாத்து சுருக்காது ரச பற்பஞ் சேர்த்து வுண்டால்
கல்லான வியாதி யெல்லாந் தீரும் பாரு கை முறையாய்ச் சொல்லி விட்டேன் கண்டு பாரே

பவள பற்பம்.

156. பாரே நீ பவள பற்பஞ் சொல்லக் கேளும் பாங்கான நற்பவளம் பலந்தான் தூக்கு
நேரே நீ யிலந்தை யிலைதனை யரைத்து உருண்டையாய்ப் பிடித்ததன் மேல் பவளம் வைத்து
போரே நீ மேலுமந்த அடையால் மூடி பொருந்தவே சீலை செய்து முளப் பிடத்தில் போடு
ஆறே நீ ஆற விட்டு யெடுத்துப் பாரு அப்பனே பவள மெல்லாம் பீங்கானிலிட்டு

157. யிட்டுமே ஆவின் பால் நிரையாய் வார்த்து யென் மக்கள் ரவியில் வைக்க நீரதாகும்
திட்டமாய்ப் பவள பற்பமாருஞ் சொல்லார் தேடாதே வெகு சுளிவு திறமாய்ப் பாரு
கொட்டாதே பற்பமொரு பணவிடை தான் தூக்கு கொம்புத் தேனு நெய்யுங் கூட்டிக் கொள்ளு
தட்டாதே மேகமொடு சூலைகிரந்தி சய யீளை யிருமல் நீர்ச் செறிப்புப் போமே.

சிங்கி பற்பம்.

158. போமென்ற சிங்கி பற்பஞ் சொல்லக் கேளு புகழான கலை மான் கலமங் கொம்பு பிளந்து நாலாய்
ஆமென்ற மேனியிலை அரைத்து அப்பி அப்பனே முளப்பிடத்திலிட்டு வாங்கி தே
தேமென்ற நீறுமது திறமான ஆவின் பால் விட்டரைத்து
வெமென்ற வில்லை தட்டி காய வைத்து விதமாக ஒட்டிலிட்டு மேலே மூடி
தாமென்ற முளப் புடத்திலிட்டு வாங்கி சங்கு போல் நீறியது தவளமாமே.

159. தவளமாம் பற்பம் ரெண்டு பணவிடை தான் தூக்கு சார்வாக ஆவின் வெண்ணை தன்னில் கொள்ளு
தவளமாமேக மொடு உஷ்ண காந்தி தூலையாத குடெறிவு நீர்க் கடுப்பு நீர்ச் செறிப்பு
களபமா ... பவள பற்பஞ் சேர்த்துக் கொள்ளு கல்லடைப்பான் நீரடைப்பான் காச ரோகம்
துவளமாஞ் சயமீளை துன்மாங்கிஷங்கள் துலையாத வியாதி யெல்லாந் துலைந்து போமே.

பல்நோய்
160. போமென்ற தந்து நோய் முப்பத்திரண்டு போகவே உப்பு ஒரு பலந்தான் வாங்கி
வேகவே யெருக்கம் பால் மேனிச் சாறு விட்டரைத்து வில்லை தட்டிக் காயப் போடு
ஆமென்ற ஓட்டிலிட்டு ஓடு மூடி அப்பனே முளப்பிடத்திலிட்டு வாங்கு
மூமென்ற முறையதுவே நீறவைத்து அயப் பொடியும் தரிசு துத்தம் காசிக் கட்டி.

161. கட்டியொடு கருஞ் சீரகம் கண்டங் கத்திரி விரை வகை வகைக்கு களஞ்சியிட்டுச் சமனுய்ச் சேர்த்து
உத்தமனே அயக் கரண்டி தன்னிலிட்டு ஆட்டியே வறுத்து நன்றாய்க் கல்வத்திட்டு
அதிலேது கொட்டாங் குச்சி கறியுஞ் சேர்த்து யிட்டுமே பொடி செய்து முன் பொடியோடொக்க
யிடை பாகங் குறையாமல் சரியாய் சேரே.

13.11.62.

162. சேரே நீ கொப்பளிக்கக் கியாழங் கேளு சிறப்பான கடுக்காயுஞ் சக்கான் கல்லு
யேறே நீ முடக் கொத்தான் கருவேலம் பட்டை யெறி காலி நீர்ப் பூலாயிலை
தானும்
பாரே நீ யிடித்து மொரு பாண்டத்திட்டு பதக்கு நீர் விட்டெறித்துக் கஷாயம் பண்
ணி
காறேனிப் பொடி யெடுத்து தந்த சுத்தி செய்து கஷாயத்தே வார்த்து நீ கொப்
பளித்துப் போடே.

163. போடவே பல்லசைவு தந்த வாய்வு பொல்லாத பல் குத்து பல்லறனை
மூடவே பல்க் கூச்சம் பல்ப் புழுவு முகவாத சன்னியொடு தந்த சன்னி
நீடிய தோர் பல்வாத பல்லு லைச்சல் தேத்திர நோய் வேர் விட்டச் சொத்தைப்
பல்லு
பாடியதோர்தந்த நோய் முப்பத்திரண்டும் பறந்து போம் பொடியிட பாகந்
தானே.

கெற்ப நோய்

164. பறந்து போம் கெற்ப நோய் தீர வேண்டிப் பாடுகிறேன் விளக்கெண்ணை படிதா
ரெண்டு
விரைந்திட்ட பேய்க்குமட்டிச் சாறு படி ரெண்டு வேப்பம் பட்டை களக் கொட்டிச்
சாறு
முரைந்திட்ட அயவிறலி பிறமிச் சாறு முடக் கொத்தான் யுள்ள லத்தி காட்டுள்ளிச்
சாறு
மிரைந்திட்ட வகை வகைக்கு சாறு படி ரெண்டு யெண்ணையிலே வார்த்திடு நீ பின்னு
ங் கேளே.

165. கேளே நீ கொடிவேலி பங்கம் பாலை சிறுவை நிலையாவரையுங் குறுந்து சங்கு
வேளே நீ முருங்கிலிலை கஸ்தூரிப் பட்டை வெள்ளறுகு தலைச் சுருளி காக்கறட்டான்
குமரி வேர்
வாறே நீ வெள்ளைச் சாறனை வேறு வகை வகைக்கு ஒரு பலந்தான் வரிசையாக
கோனென்ற கொடிக்கள்ளிச் சாத்தாலரட்டி ஒளப்பியே யெண்ணையிலே கரைத்த
வாறே.

166. வாரே நீ கடுகோடு திப்பிலியுங் கடுக்காய் வால்மிளகு ரோசனி கடுகுரோகணி
ஊரே நீ கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் அரத்தை சுக்கு வால் மிளகு சிறு நாகப்பூ
பேறேனி யிந்துப்பு ஆனைத் திப்பிலியும் பெருங்காயம் சாதிக்காய் தாளிச பத்திரி
யும்
யேறேனி செங்கொட்டை கற்பூரம் யிஞ்சியொடு யவச்சாரம் யியம்பக் கேளே.

167. யியம்புகிறேன் வகை வகைக்கு நாற் களஞ்சி வீதம் யெருக்கிலஞ் சார் வெள்ளாட்டு
நீரும்
மயம்பாதே வார்த்தரைத்து யெண்ணையிலே வாரு அடுப்பேத்தி யெரித்து நீ மெழு
பதம் பாரு
அப்பனே வடி கலசந் தன்னில் கேளு ஆகாசத்தாளோடு வெங்காரரண்டு வயமாக
வகைக்கிரண்டு களிஞ்சி போடு
வடித்தெடுத்து வைத்துக் கொண்டு நயம்பாதே தா ரதிருஷ்ட்டி மூன்று நாளானொன்
றுக் கொரு கரண்டி யெண்ணை கொ
ள்ளே.

168. யெண்ணை தான் மூன்று நாள்க் கொள்ளும் போது யென்ன சொல்வேன் கெற்ப
நோய் யெல்லாம் போக
துன்னவே குதக வாய்வு போகும் திர்ச்சி குல்மங் குலைந்தோடு கெற்பக் கிரணி
வாய்வி குலை
வின்னவே பத்தியந்தான் மூன்று நாளும் வெள்ளாட்டின் பாலொளிய வேறொன்றுகா
அன்னவே பாலில்லா வென்னீராகு அப்பனே நாலா நாள்த் தலை நீர் வாறே.

169. வார்த்த நாள் முதல் மறு மூன்று நாளும் மைந்தனே ஆரையிலை சிறுவையிலை
இரண்டும்
ஆத்துமே அய் விறலியிலையுங் கூட்டி அரைத்தாவின் பால் வெண்ணை தன்னிற் கொ
ள்ளு
யேத்துமே ஆறு நாள் யெண்ணெய் மூளசி பேனா நாள் நாயகனோடிணங்கச் சொல்லு
போத்தரிய மலடியுமே பெறுவாள் பிள்ளை மெண் மலடோ உலகத்திலில்லை கா
ணே.

170. யில் லைப்பா கை கண்ட வித்தை பாரு யிரசியே ஆலும் பிர் ளையுண்டாம்.
தொல் லையே பிசாசு பிணி, கிரகதோஷம் துலைந்தோட்ச் சாந்தி செய்து தகடு செய்து
அல்லவேரோடே பேயுங் கூடில் அவுழ்தந் தானென்ன செய்யமப்பா கேளு
மல்லவே மணி மந்திர முன்னே செய்து மாபடி நீ மருந்து செய்யப் பலிக்கும் பாரே.

சக்கரம்.

171. பலிக்கவே அயத் தகடு சதுரமாக பண்ணி யதிலிருபத்தஞ்சறை தான் கீறி
மலிக்கவே அரைதோறும் சிவய் நம நயவ சிம் வென்று மாறிப் போடு
சுளிக்கவே சுத்தெல்லாம் சூலம் போடு சூலத்தில் வளி தோறு மகாரம் போடு
அளிக்கவே அறை தோறு ஓங்காரம் போடு அம்பத்தோர் லக்கமதை அடைத்திடாயே.

172. அடைத்திடவே நோயாளி பேருமிட்டு அயங்காயத் தேசியுடக் கருவும் பூசி
கடுத்திடவே லச்ச முருவே செய்து சாந்தி யொடு ஓமஞ் செய்து சாபம் நீக்கி
நெடித்திட்டு கும்பத்தில் சிலத்தே வா நோயாளி சிரசிலே புரோசித்து நீயும்
வடித்திட்டு யிப்படியே தகடு வைத்து வைத்தியமே பின்பதற்கு மருந்து செய்யே.

173. செய்திடவே தீருத நோயு முண்டோ தேசத்திலுனைப் போலே வயித்தியருண்டோ
நொய்யாதே நோயாளி சொல்லக் கேளும் நோய் தீர வைத்திய னையுபசாரம் பண்ணு
மெய்யனே யென்று குருபாதம் போத்தி மேதினியில் தானதர்மஞ் செய்து வானி
அய்யனே வினையெல்லாம் அகலப் போகும் மாதவன் போல் நீடுளி வாழ்வதாமே.

174. வாழ்கவே யெண்ணையிலே நவச்சாரம் போடு மைந்தனே நீர் முள்ளிச் சாறுங் கூட்டி
வாழ்கவே யுள்ளுக்குக் கொள்ளச் சொல்லு மகோதரமும் நீரும்பல் வயறு சூலை
வேளுமே பொல்லாத குல்ம மெட்டு பித்த மோடும் உள் மாந்தை பாண்டு சோகை
யேளுமே கறப்பாறெடு வாத சூலை யிந்திரியக் கட்டு மலக் கட்டு யிறச்சல் வாய்வே.

175. வாய்வோடு புளுக்கிருமி யெல்லாம் போகும் வாகு வெறச் சொல்லி விட்டேன் யென்னை தன்னை
வாய்வோடு வியாதிகள்க்கு மலடிகளுக்கு மத்துமுள்ள பேர்களுக்கு யென்ன சொன்னேன்
நோயேது அவர்கள் செய்த தர்மம் நோய் போலே அவரவரே நோகச் செய்யும்
நாய் போலே அலையாதே சொல்லக் கேளும் நலமான கர்ம மத்தேத் தீர்த்துச் செய்யே.

176. தீரவே தானதர்மம் செய்ய வேணும் சிவபூசை குரு பூசை செய்ய வேணும்
தீரவே அன்ன சொர்ன கன்னிகா தானம் திருவரசு நந்தாவனம் செய்ய வேணும்
தீரவே தர்ம மத்தேவி விரும்ப வேணும் தீருத வினையது தான் தீருதென்னே.

177. தீர வென்றால் வைத்திய னை யுபசாரம் பண்ணும் திறமான வாதி மகேந்துர் மக்ன் வைத்தியனே யாகில்
தீரவென்றும் சாஸ்திரத்தே ஆய்ந்து பாரு செய் முறையிங் கை முறையுந் திறமாச் செய்வான்
ஆரென்றும் வேதனுலறியா மூடா ஆப்பிட்ட படி செய் வானவர்கள்க் காகா
காரென்றும் குரு பத்தத்தேப் போத்தி செய்து கை முறையாய் மருந்து செய்யில் பலிக்கும் பாரே.

<u>நிலவாகைச் சூரணம்.</u>

178. பாரே நீ நிலவாகைச் சூரணத்தேக் கேளும் பறிவாக நிலவாகை கொண்டு வந்து
சேரே நீ நிழலினத்தி யிடித்துத் தூளாய் சிறப்பாகப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
சேரே நீ மிளகோடு கடுக்காய் தானி சீரகமும் வாலுளுவை சிறு நாகப்பூவும்
காறே நீ யேலம் லவுங்கப் பட்டை கடுகுரோகணி சிவதை தாளிச பத்திரியும்
சேரே நீ சாதிக்காய் கிராம்பு பத்திரி திப்பிலியும் செவ்வியமுட னிந்துப்பு சுகை நீரே.

179. நீரான சுக்கோடு வகைக்கு கால் பலமாய் நிறுத்தெடுத்து முன மருந்தோ டொக்கச் சேரு

சேரே நீ ரெண்டு வகை சூரணஞ் சமமாய் சீனி சர்க்கரை பாதி சேர்த்துக் கொண்டு
நேரே நீ நாளொன்றுக் கந்தி சந்தி நெய்தனிலே வெரு கடி ஆள் குழைத்துக் கொள்
சேரே நீ மண்டலந்தான் கொள்ளும் போது தீராத நோயேது செய்யக் கேளே.

180. செய்யவே மேகமொடு பித்தம் போகும் சிறப்பான ஆரோசிகம் வாய் நீரூறல்
துய்பறவா மலக் கட்டு வாய்வு காந்தி முப்போது மலசுத்தி யாகும் பாரு
மூலத்தில் நோயெல்லா முறிந்து போகும் ~~செப்பாதே~~
செப்பாதே வெகு சுலவு சிவனார் வேம்பு சூரணத்தைச் சொல்லுகிறேன் சொல்லு
றேனே.

சிவனார் வேம்பு சூரணம்.

181. சொல்லுகிறேன் சிவன் வேம்பு சூரணத்தைச் செய்ய சுகமாகப் பலம் பத்து நிறுத்து
கொண்டு
மல்லுறேன் சிவன் வேம்புத் தயிலந் தானும் வாங்கியே படியொன்று வேரை வைத்து
அல்லுறேன் வாலுளுவை தாளிச பத்திரி யளகான கிரும்பேலம் மதுரங் கோஷ்டம்
கல்லுறேன் சாதிக்காய் சாதிப்பத்திரி கருஞ்சீரகம் மிளகு கடுக்காய் திப்பிலியே.

182. திப்பிலியு மதிவிடையம் பறங்கிப் பட்டை சிறுநாகப்பூவோடு வால் மிளகு சிங்சி
யிப்படியே வகை வகைக்கு கால் பலமே தூக்கு யிடித்துமே சிவன் வேம்புச் சூரண
த்தோடொக்க
தப்பாதே சமபாகம் பாதி சீனி சாறித்து ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு
செப்பாதே தினமொன்று வெருகடிதானப்பா சிவன் வேம்புத் தயிலத்தில் குழைத்துக்
கொள்ளே.

183. கொள்ளவே பதினெட்டு குஷ்டரோகம் குலைந்தோடு மேக சூலை மேக வாய்வு
கள்ளமாங் கரப்பானொடு சொறி சிரங்கு வெட்டை கடி விஷங்கள் சில் விஷங்கள்
ரணங்கள் காந்தி
மெத்த
துள்ளியே நோய்களெல்லாம் ஓடிப் போகும் சொல்லறிய காய சித்தி சுருக்கு
கள்ளமில்லை சொல்லி விட்டேன் சிவன் வேம்பு கற்பம் காதியாங் கண்டு கொள்ளே

184. கண்டு பார் குதகத்திலுதிரம் போக காலோடு கை மேலுங் கடுத்துக் குத்தி
சென்று பார்வை யத்திலே சோர்ந்து தங்கி திறச்சி குல்ம வாய்வாகச் சூலையாச்சி
அன்னமே பார் சூசிக வாய்வு மாச்சு மப்பான மாங் கருக் குளியிலுதிரங் கட்டி
உண்டு திற உதிரத்தில் வாய்வு சேர்ந்து உள்ளங் காலலுந்தலாச்சே..

185. ஆச்சென்ற குதகத்தின் வாய்வு பொல்லான் ஆருந்தான் திர்க்கறி யாரப்பா கேளு
பேச்சென்ற கொடிவேலி அமுக்கிரா வேர் பெரு மருந்து கோப்பெறண்டை நொச்சி
சங்கு
வேச்சென்ற மாவிலிங்கு மிளகரணை கொளிஞ்சி வெள்ளைச் சாறணை அடம்பு கழற்சிப்
பீனை
ஆச்சென்ற நிலவாகை அப்பனே வகை வகைக்குப் பலந்தான் தூக்கே.

186. தூக்கியே யிடித்தனைச் சீலை வடிக் கொண்டு சூரணமாய்ச் செய்து நீ சொல்லக்
கேளு
ஆச்சென்ற வால்மிளகு கடுக்காய் தானி ஆனைத் திப்பிலி ஓமம் அரத்தை சுக்கு
தாக்கியே யிஞ்சி பெருங்காயங் கண்டந் திப்பிலி சதகுப்பை குரோசாணி திப்பிலி மூலம்
தாக்கியே சாதிக்காய் கிராம்பு பத்திரி தாளிச பத்திரியோடு சிறு நாகப்பூவே.

187. பூவோடு திப்பிலியு மதிவிடைய மாஞ்சி புகளான செங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகை வகைக்கு கால் பலமே தூக்கு கொள்ளுளைச் சார் தேங்காய்ப்
பால் விட்டு ஆட்டி
ஆவோடு முன் மருந்தோடொக்கச் சேர்த்து அடுப்பேத்தி ததனைக் காயவைத்து
கோவோடு நல்லெண்ணை படிதான் வாறு கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டு பல
ம் போடே.

188. போடவே தோலோடு பாதி நெறித்துப் பாதி பொருளான பனை வெல்லம் நாலு
பலம் போடு
ஆட்டவே ஆவின் பால் படி தான் வாரு அப்பனே மூங்கிலிலை அரைத்து நன்றாய்

தேடவே தேசிக்காயளவு போடு சேறித்துக் கிண்டிடவே பாகு போலாம்
சாடியே சூரணத்தைக் கொட்டிக் கிண்டு சம்பா நெல்ப் பொறியதிலே சேரப் போடே.

189. சேரே யெப்பொட்டு நீ கிண்டு நன்றாய் சேர்த்துமே லேகியம் போல் பண்ணிக் கொண்டு
ஆறே நீ நாளொன்றுக் கந்தி சந்தி அப்பனே கொட்டைப் பாக்களவு கொள்ளு
சேரே வயத்திலுள்ள உதிர மேது திறச்சியொடு வாய்வேது குல்ம மேது
சேரே யென்ற உதிரமெங்கே கட்டியெங்கே சூதக வாய்வு குத்தல் குதவாய்ந் தலைந்து போச்சே.

~~190. போச்சென்றும் பத்தியந்தான் சொல்லக் கேளு புகையோடு புகையிலையு முப்புத் தள்ளு
புகளான புகையோடு புகையிலையு முப்புத் சுறாவத்தல் வெள்ளாட்டு வத்தல் கூட்டு
கூச்சென்ற புளியில்லா வித்து கூட்~~

190. போச்சென்றும் பத்தியந்தான் சொல்லக் கேளு புகையோடு புகையிலையு முப்புத் தள்ளு
புகளான சுறாவத்தல் வெள்ளாட்டு வத்தல் கூட்டு
கூச்சென்ற அறுக்கீரை முருங்கைப் பிஞ்சு குள்க்கஞ்சாங் கருவாடு கோளிச் சாறு
மாச்சென்ற புளியில்லா வித்து கூட்டு அப்பனே உப்பதனை வறுத்துக் கூட்டு.

191. கூட்டுவது மருந்து கொள்ளும் போது தள்ளிக் கொண்டு மறுபத்தியத்தில் கூட்டிக் கொள்ளு
நாட்டியே பின்னமொன்று சொல்லக் கேளு நலமான வாதமொடு சூலைரோகம்
பார்ட்டியே ரோக்கமெல்லாம் ஓடிப் போக பறங்கிப் பட்டைப் பதங்கத்தைப் பகரக் கேளே.

பறங்கிப் பட்டை பதங்கம்.

192. பாடுறேன் பறங்கிப் பட்டை பலந்தான் பத்து பறுபறுக்கையா யிடித்துப் பாகங் கேளு
பார்டுகிறேன் புக்ச் சட்டி ஒன்று வாங்கி பட்டைத் தூள் ஒரு கலசந் தன்னில் போட்டு
சூடுறேன் முளப்புறக் குழிதான் வெட்டி தூளிட்ட கலசத்தே அடியில் வைத்து
நாடியே மறு கலசந் தன்னில் கேளு நலமான கலசத்தில் தமுர் மூன்றிட்டு.

193. யிட்டுமே சுத்தித்த நெல்லிக்காய்க் கெந்தி யிதமாக ரெண்டரைப் பலந்தான் கலசத்திட்டு
போட்டுமே அடிக்கலத்தின் மேல் வைத்து பொருந்து சந்து செய்து மறுகலசந் தன்னில்
காட்டுமே தூ றிலேதமா மூன்றிட்டு கார்த்திகையின் கிளங்கிலே பலந்தானயந்து
அட்டியில் வாதடித்திந்தக் கலசத்திட்டு அக்கலசம் வாய் மூடி சீலை செய்யே.

194. செய்துமே கெந்தி யிட்ட கலசந் தன்னிலே சிறப்பாக வைத்து நீ சீலை செய்யே
செய்யவே கல்ச ண்டு அடியில் நிற்க தெறியவெக் கிழங்கிட்ட கலச மேலே வைத்து
போர்துமே கலசந் தான் மூன்று மொன்றாய் பொறுதவே செய்து மேல் புடத்தைப் போடு
யெய்துமே கிளங்கிருட தயிலந் தாளும் யிறங்கியே கெந்தியிலே யிளக்கங் கொண்டு.

195. யிளகியே கெந்தியுட தயிலறண்டு யிறங்கியே பட்டையிலே றேகித் தொன்றாய்
ப்ளகியே றெண்டு வகைத் தைலந் தாளும் பறங்கிப் பட்டை தன்னிலே சோரி நிற்கும்
யிளகியே ஆறி யந்தப் பறங்கிப் பட்டை யிடித்துமே நன்றாகச் சீலை வடி கொண்டு
விளங்கமா புதுப் பானை வாயிலே தான் மெலிசான சீலையினி வேடு கட்டி.

196. வேடு கட்டிச் சூரணத்தை யதின் மேல் வைத்து மேல் சட்டி கொண்டு நீ பொருந்த மூடி
வேடு கட்டிப் பானையுட விலாவில் பொத்து விதமான புங்கந் தழலுள்ளே யிட்டு
போடுவது சாம்பிராணி பலந்தான் பத்து பொடி செய்து புகையெழும்பப் போட்டு நீயும்
ஆடுவது சாம்பிராணி யெல்லாம் போட்டு அப்பனே சூரணத்தைப் பதங்க மேத்தே.

197. யேத்தியே யெடுத்ததனைப் பதனமாக பெண் மக்கள் நாளொன்றுக்கிரு நேரங் கொள்ளு
போத்திய வாத சூலை மேக சூலை பொல்லாத கறப்பாணொடு கிறந்தி குஷ்டம்
யேத்திய காலுகை முடக்குச் சூலை யிருமலொடு மேகத்தி லெடுத்த ஊறல்
பாத்துமே சந்து வலியிடுப்புளத்தல் பறதி கண்ட பனி போலே பறந்து போமே.

198. பறந்து போம் புளிப்போடு கைப்புத் தள்ளு பசுவின் பால் நெய் மோரு பாங்காய்க் கூட்டு

பறந்து போ முப்பதனை வறுத்துக்கூட்டு பசும் பயறு அறுக்கீரை மருங்கைப் பிஞ்சு பறந்து போம்

பத்தியந் தான் சொன்னபடி செய்து பாங்கான மருந்து பண்ணத் தீரும் நோய்தான்

பறந்து தான் பத்தியத்தில் பாகந் தப்பில் பல பலவாய் மருந்துண்டால் பாழாய்ப் போமே.

199. போமென்ற அவுள்தங்கள் கொள்ளும் போது புகளான பத்தியந் தான் முறித்துக் கொள்ளில்

ஆமென்ற ரோகத்துக் கசடில்லாமல் அவுரி வேர் பிறமியிலை மிளகு கூட்டி

பாமென்ற கஷாயமாய் வைத்துக் கொண்டு அப்பொழுது கொள்ளு பத்தியத்தில் முறி வெல்லாம் பாகமாகும்

முமென்ற பத்தியத்தில் புளிப்புக் கூட அறைகிறேன் புளி பாக வெள்ளச் சாறணையே.

200. சாறணையிலை யரைத்துப் புளி மேல்ப் பூசி சார்வாக சுட்டதனை யாம்றந்திட்ட பொறிந்து.

சார்வாகக் கூட்டிடு வாய்ப் புக் கேளு சாறணையாய் வாதியென்றல் கூட்டிக் கொள் வான் யில்லாவிட்டா[illegible]

கங்கிலையைப் புளிப்பினிலையும் போட்டு சீருவின் பால் தெளித்து வறுத்துப் போடு

திறமான வைத்தியந் தான் தீரு நோயே.

201. தீருமே அஸ்தியிலே சூடு கொண்டால் தீருத வறச்சியொடு யிளைப் பிருமல்

தீருமே புகைச்சலொடு தொண்டை கம்மல் சிறுக் கிருமல் நாக் கூறல் வாச்சி கோளை

கூடுமே உள் வறச்சி மூல சூடு கூறியப் பித்தமொடு கன வேகங்கள்

ஆறுமே யிவையெல்லாம் பொடியாய் போக அறைகிறேன் ஆடாதோடை கோர்ஷ்டந் திப்பிலியே.

ஆடாதோடை சூரணம்.

202. திப்பிலியும் வசம்போடு நெல்லிமுள்ளி கடுக்காய் சீறிய வறுதளை வேர் அரத்தே கற்கடாக சிங்கி

பாப்பறிய மிளகோடு சிறு நாகப்பூ வகை வகைக்குக் கால் பலஞ் சேர்த்திடித்து சூரணமே செய்து

வெம்பியே நாளொன்றுக் கந்தி சந்தி வெறுகடி தூள் தானெடுத்து வளம்பக் கே[illegible]

செப்பறிய நெய்தனிலே குழைத்துக் கொள்ளு செப்பியதோர் நோயெல்லாந் தீரும் பாரே.

203. பாரே நீ பதினெட்டுக் குஷ்டம் போக பாடுகிறேன் கால கண்டச் சூரணக் குடோரி

ஆறப்பா பறங்கிப் பட்டை பலயீராறு அளிஞ்சி சங்கு குப்பியொடு கஸ்தூரிப் பட்டை

காறப்பா சிவன் வேம்பு பூவறசம் பட்டை கருங்காலி வெட்டிலை யோடகிலம் பட்டை

வேறப்பா கறந்தையொடு வகைக்கிரண்டு பலந்தான் மிஞ்சாதே கற்பூரம் பலந்தானென்றே.

204. ஒன்றாக யிவை யெல்லாஞ் சேர்த்திடித்து உத்தமனே வடி கட்டி வைத்துக் கொள்ளு

குன்றான செங்கொட்டை யெட்டிக் கொட்டை கொடிவேலி செய சூரை கார்த்திகையின் கிழங்கு

பண்டான கொடிக் கள்ளி வாழ்குவை வகை வகைக்குப் பலம் பத்து நறுக்கிக் கொண்டு

நறுக்கியே குளித் தயிலம் வாங்கிக் கொண்டு பண்டான தையிலமுஞ் சூரணமும் பறிவாக வெற்வேறே வைத்துக் கொள்ளே.

205. கொள்ளவே சூரணத்தில் வெறுகடி தூளப்பா குத்திவா காசிடை தான் தயிலந் தன்னை நல்லவே

நாளொன்றுக் கந்தி சந்தி நாற்பது நாள் மண்டலந் தான் கொள்ளும் போது

விள்ளாதே பதினெட்டுக் குஷ்டமெங்கே விரிதான மேகமொடு கிறந்தி சூலை

கள்ளமாங் கறப்பானொடு வாத சூலை கடிதான விஷங்களெல்லாங் காணுதோடும்

கொள்ளவே குல்ம மெட்டுங் ஒடி போகச் சொன்னோம் கூறறிந்து பத்தியமாய்க் கொள்ளுவாயே.

206. கொள்ளவது பத்தியந்தான் குஷ்ட நோய்க்குக் கூறுவேன் புளிதனைக் கோது தள்ளி காயாலிது
கொள்ளவது புளியிட கொட்டை போக்கி கூறுக யிடித்ததனைப் பிசைந்து நன்றாய்
தள்ளாதே சாறதனையின் சாறு விட்டு சார்வாக யிடித்ததனைப் பிசைந்து கொண்டு
உள்ளபடி யெட்டி மரத் தடியில் சென்று உளி கொண்டு குடைந்ததனைக் குடைவாய்ப் பண்ணே.

207. பண்ணியே புளியதனுள்ளே வைத்து பரிவாக மேலு மந்தச் சிறுயால் மூடி
யெண்ணியே யிருபத்தஞ்சி நாள் சென்றெடுத்து யெடுத்து மே வைத்ததனைப் பத்தியத்தில் கூட்டு
வன்னிதான் சொன்னமுள குஷ்ட நோயின வன்னிப் பட்டைச் சாத்திலே யூற வைத்து கூட்டு
யெண்ணியே வெள்ளாடு கொண்டு வந்து யிலைக் கள்ளி திருகு கள்ளி சதிரக் கள்ளி யென்னே.

208. கள்ளியே கத்தரளை யெருக் கொண்டு கருஞ் சூரைக் கொடிக் கள்ளி அளிஞ்ச யெட்டி
தின்னியே யிவையெல்லாங் கொணடு வந்து தினமேய்த்து யெட்டு நாள் தின்ற பின்பு
தின்னியே அதனுடைய கறிதான் கூட்டு சிறு நீரில் புங்கயு ஊற வைத்து
அள்ளியே மேல்க் கண்ட புண்ணுக் கெல்லாம் அந்த நீர்தனை வார்த்துக் கழுவிப்போடே.

209. போடவே குஷ்ட மெல்லாம் பறந்து போச்சு பொல்லாத குன்ம மெல்லாம் பொடியாய்ப் போகும்
மாடவே வெளக்கெண்ணை தேய்த்து மூளகு அவசரப் பத்தியங்கள் பண்ண வேண்டாம்
ஊடுமே தீர்ந்த நோய்களெல்லாம் உன்னுடை சிறு நீரில் ஒரு சேரைக் கொள்ளு
போடவே மண்டலந் தான் கொண்டேயாகில் பொல்லாத விஷரோகங் குன்மம் போமே.

210. போமென்ற தனக்குள் மருந்து வைத்து பூமியிலே நீ மருந்து தேடுவானே
ஆமென்ற தன்னுக்குள் மறியிலைத்துப் போம் அறிந்து பாறு போ
போமென்ற மேகமென்ன பொல்லாத ரோகம் போகவே உள்ளலத்திப் பட்டை வாங்கி
ஆமென்று யிடித்ததனை அமுறி விட்டுப் பிசைந்து அல்லாட்டால் வென்னீரால் பிசைந்து கொள்ளே.

211. கொள்கவே நாளொன்றுக் கரைப்படி தான் போது குறிப்பாக மூன்று நாள் கொள்ளும் போது
விள்ளவே மேகமொடு கிரந்தி யரையாப்பு வெட்டையொடு பிறமேக மேக வாய்வ
கொள்ளவே வாதமொடு சூலை குன்மம் கொடிதான நோயெல்லாங் முடிபோகும் பாரு
கொள்ளவே பத்திய மென்ன யிச்சா பத்தியம் முடி கெடுத்த புகை யோடும் புளியுந் தள்ளே.

212. புளியோடு வாய்வென்ற பதார்த்தந் தள்ளு புகளான உப்பதனை வழித்துக் கூட்டு
யெளிதான பத்தியந் தானுறு நாளப்பா யேளா ---. யெல்லாங் கூட்டு
ஒளியாத வெள்ளாட்டுக் கறி கொழுப்பு உத்தமனே. போதற வாயுண்டு தேறு
களிப்பான மேகமொடு வாத வாய்வு கால் முடங்கை முடங்கல் கடுப்புக் குத்து
மொளிப்பான திமிர மொடு வாதமிஞ்சி முடங்கிலுல் சொல்லுகிறேன் புலவித் தண்டே.

<u>கால் முடங்கல் கை முடங்கலுக்கு.</u>

213. தண்டோடு திரு கள்ளி சுடுதுறத்தி தளதாளை முடக் கொத்தான் வேப்பம் பட்டை
வேரான் கொடு உத்தாமணி வெண்ணொச்சி பறிக் குளம்பு வெள்ளிண்டு பிரம்பு
பன்றுன பதினென்று வகை வகைக்கு பலம் பத்து நிறுத்திடித்து பாண்டத்திட்டு
அன்றுன சிலமதிலே பதினெட்டு மரக்கால் அளந்து விட்டு அடுப்பேத்தி யெறித்துக் காய்ச்சி
கன்றுன சில மாறு மரக்காலாக காய்ச்ச பின்பு வேகு போல் மேலே வாறே.

214. வாத்துமே மூன்று நாளிப்படியே செய்வாய் மைந்தனே ஆனைலத்தி ஒட்டகையின் லத்தி
சேர்த்துமே வெள்ளாட்டின் புழுக்கை யோடு தேள் கொடுக்கு களக்கொட்டி தேங்காய்ப் பூவும்
வறுத்து நீ மூன்று நாளொத்தும் போற வாதமொடு மேகமெங்கே வாய்வு மெங்கே
ஆத்துமே அண்ட வாய்வு விரைவாத மோடு ஆகாத நோயெல்லா மகன்று போமே.

215. போச்சு தென்று பத்தியந் தானென்று மாகா போக்கோடே யௌா நாள் வறுத்தப்புக் கூட்டு
போச்சென்ற யெட்டா நாள் தலை நீர் வார்த்து புளி கூட்டு யின்னமொன்று புகேள்
ஆச்சென்ற திரு குள்ளி கொண்டு வந்து அப்பனே வரகை வய்க்கல் தன்னில் வாட்டு
காச்சென்ற கள்ளிச் சார்க் கன்டெடைக்கு கனமான நல்லெண்ணை கூட்டிக் கொள்ளே

216. கொள்ளவே வாதமொடு வாதசூலை வாய்வு குறக்கு வலி முடக்கு வலி குதிங்கால் வாதம் குலைந்து போகும்
ஊணே கொள் மூன்று நாருப்பில்லாமல் உண்டு நீ ஆறு நாள் பத்தியமே கா
விள்ளாதே மேக வெட்டை வெள்ளை காங்கில் விதமான பழம் பாசி கொண்டு வந்
தெள்ளியே யிடித்ததனை யிடித்துப் பாகம் செலத்தை விட்டுப் பிசைந்து நன்று யிறுத் துக் கொண்டே.

217. யிறுத்ததிலே நற்சீரகம் யீருள்ளி ரெண்டு யிதமாக வகை வகைக்குக் கால் பலமே போடு
அரைத்துமே கலக்கியதில் நல்லெண்ணை தான் அப்பனே சாறு கண்ட அளவில் பாதி
நிரைத்துமே விட்டதனில் சொல்லக் கேளும் ராமபுரிச் சக்கரை தான் கால் பலமே போடு
அரைத்துமே. கலக்கியதில் நல்லெண்ணை தான் அப்பனே சாறு கண்ட அளவில் பாதி
நிரைத்துமே. விட்டதனில் சொல்லக் கேளும்
முறை தப்பா யிப்படியே மூன்று நாள்க் கொள்ளு முதிய வெட்டைப் பிறமேகம் மோடுந் தானே.

218. தானென்ற யின்ன மொன்று சொல்லக் கேளு சார்வான பழ மிளகு முப்பத்தி மூன்று
யேனென்ற கொடிக் கள்ளிக் கொழுந்து தானும் யெலுமிச்சங் காயளவு கூடக் கூட்
வேனென்ற அரைத்தனை அந்தி சந்தி வேளைக்கு அரைக் கொட்டைப் பாக்களவு கொள்ளு
பானென்ற மூன்று நாள்க் கொள்ளத் தீரும் பத்தியந்தான் மோருஞ் சோறு முண்ணே.

219. புங்கம் பூச் சூரணம்:-
உன்னவே கை கண்ட வித்தை சொன்னேன் உத்தமனே மேகம் யிருவதுந் தான் போக
மன்னவே புங்கம் பூ படி தானென்று பாங்கான சட்டியிலே யிட்டு அடுப்பிலேத்தி
ஒன்னவே ஆவினெய் ரெண்டு சேரு உன்ன உன்ற விட்டதனில் வறுத்து வாங்கு
நன்னவே நெய்யெல்லாம் பூவில் சேர நன்றாகப் பிறட்டியே வறுத்து வாங்கி
திண்ணமாய்த் தீயாதித் தன்னில் கேளு தினமொன்றுக் கந்தி சந்தி வெரு கடிப் பூக் கொள்ளு

220. வெறுகான புளியோடு பகையிலையுந் தள்ளு வெள்ளாட்டு வத்தமொடு ஆவின் பால் நெய்
வெறுகாதே மிகுதியுமாக கூட்டிக் கொள்ளு மேக வெடி மேகப் புண் மேக சூலை
வெறு சான பிரை மேகம் வெட்டை தீரும் மெய்யிது வேகை கண்டபடி தான் சொன்னேன்
மருத்தனமே மருத்தான மேகங்களெல்லாம் போக கஸ்தூரி யொன்று கருதிக் கொள்ளே.

கஸ்தூரி யென்னை.

221. கருதியே சித்தண்டத் தென்னை தானும் கலங்காதே இரண்டரைப் படி தான் காணும்
கருதிய பழகியதோர் பாண்டத்திட்டு கால்படி தானிறு தாளிச் சாறு வாறு
கருதவே பறங்கிப் பட்டை பலந்தானவு கஸ்தூரிப் பட்டை யொரு விருகனேறு
வரிசையாய்க் கெருடறுட கிளங்கு தாலும் வாகாகப் பலமெட்டு நிறுத்துக் கொள்ளே.

222. கொள்ளவே கஸ்தூரிப் பட்டை தன்னைக் குறுந்த நீர் தன்னிலே யூறப் போட்டு

அள்ளவே அரைத்ததனை யெண்ணையிலே வாரு அதன் பின்பு மறங்கிப் பட்டை அரைத்துப் போடு
யெள்ளவே கெருடபட கிளங்கு தன்னை யீருள்ளிச் சாறதலரைத்துப் போடு
கொள்ளவே யிவை யெல்லாம் வெவ்வேறாக அரைத்து நீ குருந்த தண்ணீர் கரைத்தந்த
யெண்ணையிலே வாரே.

223. வாத்துமே அடுப்பேத்திப் புளி விறகு தவிர மத்த நீ யோர் விறகால் யெரிய மூட்டு
வாத்துமே வைத்தனை மெழுகு பதம் பார்த்து வடித்து நீ சுப்பிரமணியர் பூசை பண்ணு
வாத்துமே யெடுத்ததனை வைத்துக் கொண்டு மைந்தனே யெண்ணை கொள்ளு வகையைக் கேளும்
வேத்துமே யெண்ணை கொள்ளும் முதநாளப்பா விளக்கெண்ணை தேய்த்துமே முழுகிப் போடே.

224. மூள்கியே மத்தா நாள் சொல்லக் கேளு முனையான யெண்ணையிலே அரைச் சேருக் கொண்டு
பளகியே சரீர பெலன் பார்த்துக் கொள்ளு பத்து விசை பேதியாம் பதறுதே நீயும்
கறுதியே அடுகஞ்சி வறுத்துப்புக் கூட்டு காச்சியே கொண்டிடனே வேதி நிற்கும்
நேரவே மறுநாள் விளக்கெண்ணை தேய்த்து நீராடிக் கறி பதார்த்தங்களெல்லாம் கூட்டு.

225. கூட்டு நீ பத்து நாளாறப் போட்டு கொள்ளிந்த முறைப்படியே யெண்ணை தானும்
மூட்டியே யிப்படித் தான் மும் முறைதான் கொள்ளு முனையான மேக வகை யிருபதுந் தான் போகும்
மீட்டியே யிந்த முறை ஆறுஞ் சொல்லார். யெண்ணை நிசமப்பா கொண்டு பாரு
காட்டாதே யிந்த யெண்ணை யொருவருக்கும் கை முறையாய்ச் சொல்லி விட்டேன் கண்டு பாரு.

226. <u>அமுக்கிறச் சூரணம்</u>.

கண்டிடா அமுக்கிறச் சூரணத்தை கருதுவேன் பல பத்து நிறுத்துக் கொண்டு
விண்டிடா வடி கொண்டு சூரணமே செய்து வால் மிளகு கோரோசினி பறங்கிப் பட்டை
கண்டிடா கருஞ்சீரகம் கடுக்காய் சுக்கு கடுகுரோகணி வாலுளுவை அறத்தை திப்பிலியும்
பிண்டிடா வகை வகைக்குப் பலமே தூக்கி யிடித்துமே முன் மருந்தில் சமனாய்ச் சேரே.

227. சமனாகச் சீனியதின் நாலத் தொன்று சாறித்து வெருகடி தானந்தி சந்தி
அமனாக ஆவி னெய் தன்னில் சேர்த்துக் கொள்ளு அரையாப்பு மேக வெடி கிறந்தி குஷ்டம்
யிமனாக வாய்வோடு கடி விஷங்களெல்லாம் யெலி கடியுஞ் சில் விஷங்கள் எல்லாம் பூரன் செய்யான்
சமனாக மேகமொடு வாய்வு பித்தம் வாதங்கள்கண்டு போம் பத்தியந்தான் கண்டு கொள்ளே.

228. கொள்ளுவகை கசப்போடு புளிப்புந் தள்ளு கொள்ளவே மத்தெல்லாம் யிச்சா பத்தியம்
தள்ளாதே அப்பா கேளடா கோடை சாத்துகிறேன் லேகியமாய்ச் சகல நோய்க்கு
கொள்ளவே தேரடையது சமூலங் கொண்டு குறிப்பாக நிமுலணத்திச் சூரணமே செய்து
விள்ளாதே பலம் பத்து நிறுத்துக் கொண்டு மிளகோடு கொத்தமல்லி அரைத்தே சுக்கு
229. சுக்கான அதிமதுரம் தாளிச பத்திரி சுகமான யிந்துப்பு பேரரத்தை கோஷ்டம்
நைய்க்கவே கருஞ்சீரகம் கடுகுரோகணி விடையமா நாகப்பூ வாலுளுவை கிரும்பு தேக்கு
யொக்கவே வகை வகைக்கு நாற் பலமே சொன்னோம் யிடித்துமே முன் மருந்தில் சமனாய்ச் சேரே
ஆய்க்கவே சீனியதில் நாலத்தொன்று ஆவினெய் தேனிலே அருந்தக் கேளே.

230. அருந்தவே லேகியமாய்ப் பண்ணிக் கொண்டு அந்தி சந்தி கொட்டைப் பாக்களவு கொள்ளு
அருந்தவே சய மீளை மந்தார காசம் அஸ்தி சுரம் பித்தமொடு வாய்வு காந்தி
அருந்தவே குத்திருமல் சிறுக்கிருமல் புகைச்சல் கார் பிறட்டல் பித்தங் கிறு கிறுப்பு வறச்சி
அருந்தவே குத்திருமல் சூலை யெரிவு குடல் பிரட்டலாகாத பல பிணியு மறுகாதப்பா.

அருந்தவே பத்தியந் தானிச்சா பத்தியம் கசப்போடும் புளிப் பூண்டும் தவிர்த்துக் கொள்ளே.

நாறு கரந்தைச் சூரணம்.

231. தவுறவே நாறு கரந்தைச் சூரணத்தைக் கேளு சார்வான கரந்தை யிது நிழலுணத்தி
வலிறவே யிடித்ததனைச் சூரணமே செய்து பலம் பத்து நிறுத்தப்பா பகறக் கேளு
நவிறவே கருஞ்சீரகம் கடுக்காய் தானி நல் வசம்பு திப்பிலியு மிளகிந்துப்பு
தவிறவே வாலுளுவை கோஷ்டம் சுக்கு சிறுதேக்கு கார்போகி சித்திரமூலம்.

232. சித்திரமாம் வகை வகைக்கு பலந்தானென்று சேரக் கல்பூரம் பலந்தான் முக்கால்
சித்திரமா யிடித்ததனைச் சூரணமெ செய்து சேர்த்திடு நீ கரந்தையுட சூரணத்தில் சமனாய்
சித்திரமாய்ப் பனைவெல்லம் சர்க்கரையுந் தானும் சேர்த்துமே ஆவி நெய் விட்டுக் கிண்டி
பத்தியமாய் நாளொன்றுக்கந்தி சந்தி பாறுங் கொட்டைப் பாக்களவு கொள்ளு கொள்ளு.

233. கொள்ளவே குஷ்டமொடு சிறந்தி ய்ரையாப்பு கெடிதான மேகவெடி கறப்பானுறல்
கொள்ளவே நெஞ்சடைப்பு நாவடக்கல் மேனி வெளுப்போடு படர் தாமரை தனை நருப்பு சூலை
அள்ளவே பவுத்திரமும் புரைப் புண்ணுறும் வளிவாலை அக்கினி சிறந்தி சொறியும்
தெள்ளியே ஆனைச் சொறி தவளைச் சொறி தேமல் தீருத வெடி கறப்பான் தீருந் தானே.

கல்கண்டு சூரணம்.

234. தீரவே சகல நோய் தீரக் கேளும் சீரகத்தோடதி மதுரம் மகரப்பூவும்
தாரமாங் கருஞ்சீரகம் சன்ன லவுங்கம் சதகுப்பை வகை வகைக்குப் பலந்தானென்று
கூறவே சறக்காறு பலமே சொன்னோம் கொத்தமல்லி பலமாறு சமனாய்க் கூட்டி
சேருமே வகையென்ன பனிரெண்டாச்சு சீனி கற்கண்டு பலம் பனிரெண்டாமே.

235. பனிரெண்டும் வெவ்வேறாய் யிடித்து நன்றாய் பாங்கான காசியென்ற மேறுவிலே அடைத்து
உன்னியே வெருகடித் தூளந்தி சந்தி கொள்ளு ஒரு நேரம் வென்னீரில் கொள்ள உண்மையாக்கும்
முன்னுது சரீர திடம் சூலையெறிவு நெஞ்சு வலி நெஞ்சு திடமாகும் உ
உன்னியே சிறல் நோயெல்லாந் தீரும் யோடுமே பித்தமொடு பிறட்டல் நீராறல்
கண்ணீர் நீர்ப் பாச்சலறும் பிறகாசமாகும் கலங்காது புத்தியது யுமத்தந் தீரும்.

236. தீருமே நித்திரையுஞ் சுகமுண்டாக்கும் தீருத புழுக் கிருமி சேரப் போகும்
வாறுமே யிடுப்பு வலி கல்லடைப்பு வாய் கோணல் வாய் ஊறல் உத்த பித்தந் தீருமே
செவி நோய் செவிடுடை சேத்துமமும் பில்லியொடு வஞ்சினையுந் தீரும்
சாறிடுமே தொண்டைப் புண் கண்டமாலை சரீரத்தில் நீர்க் கட்டு சார்ந்து போமே.

அமுர்தாதி மாத்திரை.

237. போமென்ற அமுர்தாதி உண்டை கேளும் புகளான கோரோசனை செண்பகப்பூ கோஷ்டம்
வேமென்ற வெட்டி வேர் யேலம் அதி மதுரம் விதமான சாத்திர பேதி மாஞ்சி பச்சை
காமென்ற தானிக்காய் வகை வகைக்கு களஞ்சிரெண்டு முலைப் பாலால் கருதி ஆட்டு
ஆமென்ற தில்லராட்டால் வெட்டி வேர்க் கிஷாயம் ஆட்டியே கடலை போலுண்டை செய்யே.

238. செய்துமே நிழலுணத்தி வைத்துக் கொண்டு திறமான முலைப் பாலில் வென்னீரிடவே
தைய்துமே குடல் பிறட்டு உஷ்ண காந்தி தாபசுரம் பித்த சுரம் சார்ந்து போகும்
பொய்துமே கண் மாந்தம் சன்னி புருக்களிச்சல் போர் மாந்தங் கணவெட்டைடு

யெய்து புள்ளை நோயெல்லாந் தீர யிதமான அமுர்தாதி யுண்டை சொன்னேன்
பொய்துமே காமாலை சோகை பாண்டு போகவே சித்தாதி புகளக் கேளே.

239. புகருறேன் புளியிலை யலந்தாரென்று பகளான அருப்பிடித்து யிரும்பதிலே பாதி
நிகருறேன் முல்லை வேர் சாறணையின வேரு நெருஞ்சி வேர் துதாளை கண்டங் காலி
சேலான கறிமுள்ளி கீழ்க்காய் நெல்லி செம்முள்ளி வகை வகைக்கு பலந்தான் பத்து
யிகருறேன் முன் மருந்தோடொக்கச் சேரு யிவையெல்லா மோர் பாண்டத்திட்டடாயே.

240. யிட்டுமே யிருதானி சலந்தான் வார்த்து யெறித்ததனை யெட்டொன்றுய் வத்தக் காச்சி
கட்டுமே கஷாயத்தே யிறுத்து வாங்கி கறிசாலை சாறதிலே படி தாரென்று
கொட்டியே பழச் சாறு படிதாரென்று கொமட்டி மாதளைச் சாறு படி தாரென்று
நாட்டுமே யீருள்ளிச் சாறு படி ஒன்று நல்லெண்ணை படி ஒன்று அதிலே வாரே.

241. வார்த்துமே கொதிக்கையிலே மருந்து கேரு வளமான யிஞ்சி யொடு தேவதாரம்
சேர்த்துமே செவ்வியம் திப்பிலி மூலம் திறமான வகை யொன்று பலம் பத்தாக
காத்துமே குரோசாணி மிளகு திப்பிலி கருஞ்சீரகம் ஓமம் லவுங்கப் பட்டை

242. சேர்த்துமே யிவை யெல்லாம் யிடித்துத் தூளாய் சேர்க்கவே கஷாயத்தில் போட்டுக் கிண்டு
ஊட்டுமே பனைவெல்லம் நாலு பலமே போடு லோகச் செந்தூரமது ரண்டு பலம் போடு
வீட்டுமே ஆவின் நீர் கொஞ்சமாக விட்டதனை லேகியமாக் கிண்டிக் கொண்டு
மட்டுமே நாளொன்றுக் கந்தி சந்தி அப்பனே நேரமொரு பாக்களவு கொள்ளு.

243. கொள்ளவே பாண்டு காமாலை சோகை குற்றலொடு பீனிசமுஞ் சுவாச காசம்
கொள்ளவே யின்ன வகை வியாதி யெல்லாம் குலைந்தோடச் சித்தாதி லேகியந் தான் சொன்னேன்
கன்னவே லேகியந்தான் கொள்ளும் போது கைப்போடு புளி புகையுந் தள்ளு தள்ளு
வெள்ளாட்டு வத்தலாமே வைத்துப்புக் கூட்டு விளம்புறேன் சுருங்கிஷ மாத்திரையைச் சொல்லே.

சுருங்கிஷ மாத்திரை.

244. சொல்லியே விலாம்பிச்சு வேர் ஆதவளை கண்டங் காலி, துளசி, தும்பை செருப்படியும் விஷ்ணு காந்தி
சொல்லவே விலாம்பிச்சு வேர் கோரைக் கிழங்கு சித்தா முட்டி பேருமுட்டி வேளை பேய்த் தும்பை
செல்லவே குமிலோடு பேராமல்லி சிறு குமிழு சித்தமல்லி புன் முருங்கை அவுரி
யெல்லவே சொன்னதொரு வேர் வகைகளெல்லாம் யிடித்துமே வகை வகைக்கு களஞ்சி ரண்டு
சொல்லவே சித்தரத்தே அதிமதுரங் கோஷ்டம் சிறுகைப் பூவோடு சிறும்பு திப்பிலியே.

245. திப்பிலியும் நில்வேம்பு தானிக்காய் சுக்கு, சீரகமுங் கருஞ்சீரகம் கடுகுரோகணி ஓமம்
ஒப்பறிய நில விளா வெரி வங்கப் பிசிநு உத்தமனே வகை வகைக்குக் களஞ்சி ரெண்டு
கப்பறிய அவுரிச் சாறுடாதோடை கறிசாலை சிறு புள்ளடி முதியார் கூந்தல்
செப்பிலே சாரஞ்சு சாமமஞ்சு சேர்த்தரைத்து உருண்டை பண்ணி வைத்துக் கொள்ளே.

246. வைத்துமே யிஞ்சி நீர் முலைப் பால் வென்னீரில்லாட்டால் நொச்சி சங்குயிலைச் சார் தேனில்
உத்துமே யிந்த வகை யனுபானந் தன்னில் உத்தமனே நோயறிந்து ஒரு உருண்டை கொள்
நைத்துமே சுரமெல்லா நாடாதோடு நலமான அஸ்தி சுர மாந்த சன்னி
உய்த்துமே கனவேக வாத சன்னி உத்தமனே மாந்த பித்தம் ஆறப்பிருமல் வாரே.
உய்த்துமே குளிர் சுரங்கள் ஊது கணை மாந்தம் உப்பிசமும் போமென்று உரைத்த

கடுக்காய் லேகியம்.

வாறுன கடுக்காயின் லேகியத்தை வளமாகச் சொல்லுகுறேன் மக்கள் கேரும்

பாத்துமே கடுக்காய் தான் கொட்டை போக்கிப் பலம் பத்துச் சிவதை வேர் பலந்தான் ரெண்டு
வாறுன கரிசாலை பலந்தான் ரெண்டு வல்லாரை புளியாரை வகைக்கிரண்டு
காறுன நிலவாகை பலந்தான் ரெண்டு கருதியே யிடித்து நன்ருய் சூரணமே செய்து
சீறுன கடுகுரோகணி கிராம்பு திப்பிலி சிறுகைப்ப வோடு வாலுளுவை சிங்கி

2.48. சிங்கியொடு கருஞ்சீரகம் மிளகு தானி சிறப்பான கொத்தமல்லி தாளிச பத்திரியே
யிங்கதுவே வகை வகைக்கு கால் பலமே தூக்கு யிடித்துமே வடிகட்டி முன் மருந்தில் சேரு
தாங்கியே ஆவினெய் தேனு விட்டு சர்க்கரையும் போட்டு நீ லேகியமாய் பண்ணே

2.49. பண்ணியே நாளொன்றுக் கந்தி சந்தி பறங்கொட்டைப் பாக்களவு கொள்ளு கொள்ளு
திண்ணமாய்த் தீரு நோய் செப்பக் கேளு சிலக் கட்டு மலக் கட்டுக் கோளக் கட்டு
நண்ணவே உஷ்ண வாய்வு மேக காந்தி உள்ளங் கால் கை யெறிவு பிறட்டல் சோகை
யெண்ணவே மூலத்தில் சூடு காந்தி யிளைப்பிருமல் புகைச்சலொடு வறச்சி கோசை தீரும்
யெண்ணியே பத்திய மாயுண்டு தேறு யிதை விட்டால் கர்ப்பம் வேண்டோ சொல்லே.

இஞ்சி லேகியம்:

250. சொல்லவே யிஞ்சி லேகியத்தைக் கேளு தோல் போக்கிப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
மல்லுவேன் பழச் சாத்தாலாட்டி மை போல் மைந்தனே சட்டியில் யிட்டுக் கேளும்
அல்லவே சீரகமும் மிளகோடேலம் அதிமதுரம் திப்பிலியும் கோஷ்டம் மூலம்
கல்லலே வாலுளுவை தாளிச பத்திரியும் கடுகோடு கொத்தமல்லி சித்திர மூலம்
மல்லவே சிங்கி யொடு சூரோசாணி ஓமம் அப்பனே வகை வகைக்கு அரைப் பலமே தூக்கு.

251. தூக்கியே கரிசாலை பூவரசின் பட்டை சாத்தால் துவளரைத்து முன் மருந்தோடொரக்கச் சேரு
ஊக்கமாம் பிரம்பட்டையது மோரிலூப்பிட்டு ஊறியே யுலர்த்திடித்து ஒரு பலமே போடு
ஆகக்வே வங்காள சீனியப்பா அதில் பாதி போட்டாவின் நெய்யே வார்த்து.

252. நெய் வார்த்து லேகியம் போல் பண்ணிக் கொண்டு நேரமொரு பாக்களவு அந்தி சந்தி கொள்ளு
பொய்யலோ பித்த வாய்வு சுஷ்டடன காந்தி பிறட்டல் சத்தி வலிகுன்மம்
மெய்யான அஸ்தி சுரம் சன்னி தோஷம் வீறுன யெரிகுன்மம் சீறுன வாய்வு வாதம்
செய்யவே யுப்பிசமு மரோசிகமுந் தீரும் திவனமாய்ப் பசி யறிந்து சீராய்க் கொள்ளே.

253. சீறுன வாதமென்ன வைத்தியந் தானென்ன செய் முறையோட அவுஷ்தங்கள் செய்வதென்ன
பாறுன பல நூலும் பார்க்க வேணும் பார்த்தறிந்து செய்யுகிற பாகம் வேணும்
கூறுன சரக்கு வகையின மறிய வேணும் குருவரசன் கை தொட்டுக் காட்டவே வேணும்
சார்வாத யிதை விட்டு முறை தப்பிச் செய்தால் சாஸ்திரம் பொய்யென்பார்கள் சண்டாளர் தானே.

254. பொய்யென்றும் சாஸ்திரத்தைச் சொல்வானாகில் பூவான பாள் நரகில் வீழ்வான்
மெய்யென்றுங் குருபதத்தேத் தொண்டு பண்ணி வேதாந்த பலநூலு வறித்துப் பார்த்து

கை முறையுங் குரு முறையுங் கண்டு தேறி கத்தவனை வணங்கியே சொல்லைக் கேட்டு
பொய் மறந்து மெய்யுகந்து அறிவில் கூடி புறணமே தெய்வமென்று போத்தி நித்தம்
தய்யவனே முறையோடே செய்து பாரு தொட்டதொரு வித்தை யெல்லாம் பலிக்கும் பாரே.

255. பலிக்கவே குருவென்ன பூமிநாதம் பாங்கான வாதமொடு வைத்தியமுஞ் செய்யும்
பலிக்கவே சொல்லாமல் மறைந்த சித்தர் பாடினர் சாஸ்திரத்தில் முன் பின்னாக
பலிக்கவே சொல்லுகிறேன் பூனித்தே வாரி பத்து முறை சுத்த சிலம் தெளித்துக் காய்ச்சி
பலிக்கவே சிறுவாக வைத்துக் கொண்டு பாடியதோர் வைத்தியத்தில் பாகங் கேளே.

256. பாகமாந் தயிலங்கள் வடிக்கும் போதும் பாங்கான வடி கலசம் களிம்பு குறப்போடு
பாகமாக் கட்டின முருக்கினமும் பற்பம் பாங்கான லேகியங்கள் செந்தூரங்கள்
பாகமாங் குருவதிலே சேர்த்துப் பண்ணு பாங்கான வைத்தியமே திறமே மெத்த
ஆகமா மிதை விட்டால் வாதம் பொய்யாம் ஆகாசபத்தி யுப்பு வேகந்தானே.

வைத்தியக் கருக்கிடை.

257. தானென்ற மிதிலே வெடியுப்பாச்சு சத்தியுட ஊதமென்ற கெந்தி சேறில்
ஆமென்ற அண்டரண்ட முருவிப் போச்சு அர்சர் கோடி கல்க் கோட்டை மிடியலாச்சி
போமென்ற காரமென்ன வெடியுப்பாச்சு புகளான சாரமென்ன நவச்சாரமாச்சு
ஆமென்ற கார சாரம் மிரண்டில் சேறில் அறுபத்திறல் சரக்குங் கட்டிப் போச்சே.

258. போச்சென்ற சார் விட்டால் சாரமில்லை புகளான காரம் விட்டால் காரமில்லை
ஒச்சென சாறத்தில் மகிமை யென்ன ஒன்பது நீர்ச் சாரமோ நவச்சாரமாச்சு
தேச்சென்ற சாறத்தின் மகிமை சொல்ல சித்தர் முதல் ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்ற ராம்தேவர் சாரந் தொட்டு ஆடினர் யேருயுகம் வாதம் பார்த்தார்.

வெடியுப்பு காய்ச்ச.

259. பார்த்திட்ட காரமென்ன யுப்பு யுப்பு பாங்கான யுவருப்பு மண்ணை வாரி
வேர்த்திட்ட திம்முறை தான் காச்சுவார்கள் வெடியுப்பாங் கடையில் விக்குங் கடுங்காரமில்லை
ஆத்திட்டு வாத முறை செய்ய வென்றால் அந்த உப்பை வாங்கியே கரை சிலத்தில்
வார்த்திட்டு அடுப்பேத்திக் காச்சி யுப்பு வளருமந்தப் பதமறிந்து மறு பாண்டம் வாரே.

260. வாக்கவே பதமறிந்து மறுபாண்டம் கம்பி போல் வளருமுப்பு மருந்து மந்த உப்பிலே சுத்த சலம் விட்டு
பாத்துமே அடுப்பேத்தி யெறித்துக் காய்ச்சு பதமறிந்து மறு பாண்டத் தெடுத்து வாரு
ஊத்துமே கருவென்ன பழச் சாறு மோரு உரை குத்தமாப் போலே கொஞ்சம் வாரு
ஆத்துமே பொங்கியது வளந்து ஒங்கி அதிகமாம் வெடியுப்புங் கடுங்காரமாச்சே.

261. காரமாம் மிந்துப்பு வேதைக்காகும் கடை தனிலே மூங் காச்சலக் கறு மருந்துக்காகும்
வெடியுப்புபச் செயநீராய்ச் செய்யில் கருதியே சரக்கெல்லாம் கட்டிக் கொல்லும்
பாரமா வாதத்துக் காதியுப்பு பார்த்திட்டார் சித்தரெல்லாம் வேதை கோடி
ஆரமா வெடியுப்புச் செயநீர் கேளு அறையிறேன் ஆறுநீர் விபரந்தானே.

262. விபரமாம் வெடியுப்பு அஞ்சாங் காச்சல் விளங்கவே பலம் பத்து நிறுத்துக் கொண்டு
சுபரமாஞ் சீன மது பலந்தான் இரண்டு கறை கண்டதுறிசதவும் பலந்தான் இரண்டு
சுடன் இரண்டு விபரமாங் கடல் நுரையும் பலந்தான் இரண்டு யோவென்ற சிப்பி சதை பலந்தான் ரெண்டு
அப்ரமா வெடியுப்போடொக்கச் சேர்த்து அப்பனே கல்வத்திலரைக்க கேளே.

263. அரைக்கவே அமுறயிலே பூரிறிட்டு அத்தளவு அண்ட வெள்ளைக் கறவுங் கூட்டி
உரைத்துமே அரைத்து வில்லை ரவியில் காயந்த ஒட்டிலிட்டு மேலோடு கொண்டு மூடி
நிரைத்துமே சீலை செய்து முழப்பிடத்தில் நீறியது சுன்னமாய் நிலைக்கும் பாரு
குரைத்துமே சுன்னத்தில் நவச்சாரம் பாதி கூட்டியே பொடி பண்ணிப் பீங்கானில் வைய்யே.

264. வைத்துமே தாளிவாய்ச் சட்டி தன்னில் வளையம் போல் சாணியிட்டுத் தண்ணீர் வார்த்து
அய்த்துமே பீங்கானை அதின் மேல் வைத்து அசையாமல் சட்டிதனைக் கவுழ்த்தி மூடி
மெய்த்துமே காத்தில்லாக் குளிர்ந்தவிடந் தன்னில் குழி வெட்டி மணலிட்டுத் தண்ணீர் வார்த்து
மெய்த்துமே குழியிலிந்த சட்டிதனை வைத்து மேலே ஒரு தாளி கொண்டு மூடிப் போடே.

265. மூடியப் பச்சத்தெடுத்துப் பாரு முசியாதே பிரட்டி யத்து சிலமாய் நிற்கும்
ஆடியே செயநீரைக் குப்பியிலெ வாங்கி ஆத்தாள்க்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு
வாடியே செய்நீரில் வீரம் பூரம் வகைக்கு ஒரு விராகனெடை பொடித்துப் போடு
பாடியே சரக்குபத்து நாலும் பறிவான வைப்பு வகை யிருபத்தஞ்சு
ஊடியே கட்டினமு முருக்கினமு மாகும் உபரசங்கள் சத்தாகு மெருகுமாமே.

266. மெழுகாகும் சரக்கெல்லாந் தனித் தனியே கட்டும் வேதையிட வெகு தாரம் யெட்டி யோடு
மெழுகாகும் நவலோக மெல்லா நீரும் விட்டிட்டால் சூதமது வெண்ணை போலாம்
தருகாகும் சூதவெண்ணை வேதை பாரு சாறணை தான் செய் குருகை கவனமாகும்
கறுவான வாதமொடு வைத்தியந்தா ரெண்டு கருதியே குகூத்தில் கலந்தொன்றாக
பருதில்லா நவமணிகள் கோர்த்திட்டாப் போல் பாகமாய் கை முறையாய்ப் பாடினேனே.

சண்ட மாருதக் குடோரி.

267. பார்டுரேன் சண்டமாருத குடோரி பார்த்திட்ட நோயெல்லாம் பறந்து போக
நீடியே வெள்ளைப் பாசான சிலையும் லிங்கமொடு நெறி விளமு மறிதாரங் கெவுரி துத்தம்
கூடியே வெங்காற வீரம் பூரம் சூதமொடு பனிரெண்டும் வெவ்வேறாக
காடியே வெடியுப்பு நீராலாட்டி கட்டியே வகை வகைக்கு களஞ்சி ரெண்டே.

268. களஞ்சிரெண்டு அப்பிரகம் நவநீதந்தான் கட்டியதோர் கெந்தி ரெண்டு குரு ரெண்டு
வளமாஞ்சி யிவை யெல்லாங் கல்வத்திட்டு வாக்கம் பால் புள்ளடிச் சார் முருக்கிலைச் சார் பளச்
தளஞ்சியே நீல்த் தாமரைச் சார் கத்தாளஞ் சார் அரசன் பட்டைச் சார் நாவல் பட்டைச் சார்
ஊஞ்சியே கரந்தைச் சார் ஊசி மல்லிகைச் சார் உத்தாமணியோட வுறிற் சார் மேனிச் சாறு
அளிஞ்சியே வெடியுப்பு நீரங் கேரு ஆட்டு நீர் சாறென்று சாமம்மொன்றே.

269. சாமந்தான் பனிரெண்டு ஆட்டி வில்லை சாதகமாய்க் கட்டியோறவி யுலத்தி
சேமென்றும் ஒட்டிவிட்டு மேலோடு மூடி மூடியே சீலை செய்து முளப்பிடத்தில் செந்தூரமாகும்
காமென்ற தாம்பிரச் செந்தூரமோடு நாகச் செந்தூரமே.

270. செந்தூர வகைக்கிரண்டு களஞ்சிடை தானப்பா சிறப்பான கஸ்தூரி களஞ்சி ரெண்டு
காந்திர ஆனை திப்பிலியு மூலம் கருஞ்சீரகம் சதகுப்பை சித்திர மூலம்
மாந்திரம் மாந்திரிகடுகு கிராம்பு கோஷ்டம் மாவிலிங்கு முருங்கை வேரே.

271. எருக்கோடு லாம்பிச்சைக் கோரைக் கிளங்கு யிவை யெல்லாம் வகை வகைக்கு களஞ்சு கட்டி
அருககோடு சேரவே கல்வத்திலிட்டு அரைக்கவே சாறு வகைக் கியாளங் கேளு
சுழக்கோடு ஆவரை கண்டங் கத்திரி தும்பை பேய்த் தும்பை யொடு துளசி காந்தி
பெறக்கான சித்தாமல்லி பெருங்குமிட்டி புன்முருங்கை வெண்ணொச்சி யென்னே.

272. நொச்சியொடு சித்தா முட்டி நோக்கரிய குறுந் தொட்டி முக்கா வேளை
காச்சியே யிவை யெல்லாம் யிடித்தொன்றாக கசாயந் தானெட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி
ஆச்சியே கசாயத்தால் நாலு சாமம் அவுரிச் சார் கரிசாலை குமரிச் சாறு

தீச்சியே மேனிச் சார் வேலேச் சார் பிறமிச் சார் மாச்சியே சாறவகை
மாச்சியே சாறவகை சாமமெட்டு அரைத்திடவே சாமமாகும்
உச்சிதமாங் கணபதியைப் பூசை பண்ணி உருந்தளவு உருண்டை செய்து நிழலுணர்த்தே.

273. உணர்த்தியே நோயறிந்து அநுபானஞ் செய்து உத்தமனே ஒரு உருண்டை அநுபானத்தில்
சலத்தியே ஒரு உருண்டை கொள்ளும் போது சன்னி வகை தொண்ணூறாத்தாறு மெங்கே
அலத்தியே பதினெட்டு சுரதோஷ மெங்கே அசையாத வாத பித்த சிலேற்பன மெங்கே
நிலைதியே யெட்டு வகைக் குன்மம் மெங்கே அலையாத வாய் வெங்கே வாதமெங்கே
போச்சு.

274. யெங்கோ போம் சயமீளை மந்தார காசம் யேத்தரிய ஊக்குத்து பிறவீச்செங்கே
தாங்காது முயல கண்டன் குமர கண்டன் தலுவாதம் தாக்க வலி குதிரை வலிவாத
மங்காத பதினெட்டு குஷ்டம் சூலை வாய்வு வொடு கிரந்தியரையாப்பு காசம்
தாங்காகு கெற்ப நோய் குதக வாய்வு அந்திற வாய்வு திரியாத பெருவயறு
பீலி உள்மாந்தை யென்னே.

275. மாந்தையா விரைவாதம் அண்ட வாதம் மாரடைப்பு வளர் வாய்வு அந்திர வாய்வு
மாந்தையா மருத்தற வாய்வு மூல வாய்வு மந்தார நீலகாச மருத்தற காசம்
தாந்திரக சன்னியொடு கெம்பீற சன்னி சத்தி பித்தங் காமாலை பாண்டு சுக சன்னியும்
மாந்த நோய்யெல்லாம் வாருதோடு யேமசண்ட மாறுதக் குளிகை யென்னே.

276. <u>அப்பிரக செந்தூரம்</u>:-

யென்னவே அப்பிரக செந்தூரம் கேளு யிதமான கிஷ்ட்டன அப்பிரேக நன்ற
நன்னயமா வாங்கியதைக் காச்சிக் காச்சி நலமான ஆவின் பால் தன்னில் தோய்த்து
யென்னவே கறிசாலை பொர்த்தலையின் சாத்தில் காச்சித் தோய்த்து நன்றாய்
வென்னவே சுத்தி செய்து நவநீதம் பண்ணி மேனிச் சார் விட்டு ஒரு சாமமாட்டி
யெண்ணியே வில்லை தட்டி உலர விட்டு ஓட்டிலிட்டு மேலோடு கொண்டு மூடே.

277. மூடியே முளப்பிடத்திலிட்டு வாங்கி முசியாதே ஆட்டி முன் போல் புடத்தைப் போடு
மூடியே மேனியிலை புடந் தான் பத்து முள்ளங்கிச் சாத்திலே புடந்தான் பத்து
போடவே பொர்த்தலையின் சாற்றில் பத்து பொன்னுங் கண்ணிச் சார் பத்து
நீடவே மல்லிகைச் சார் மணத்தக்காளி நீர்முள்ளி முருங்கிலைச் சார் கத்தாளச் சர்
ஆடவே அவுரிச் சார் முசுமுசுக்கை அப்பனே ஒவ்வொன்றில் புடந்தான் பத்தே.

278. பத்தென்ன முன் போலே அரைத்துப் போடு பதறாதே நருக்கரு தின்னங் கேளு
வித்தென்ன குருவதிலே கேளு கேளு வெடியுப்பு நீரிலே சாமமாட்டி
நைத்துமே வில்லை தட்டிக் காயவைத்து நலமான முன் போல புடத்தைப் போடு
அய்த்துமே யெடுத்துப் பின் செயநீரிலே ஆட்டியே முன் போலே புடத்தைப் போடே
அய்த்துமே யிப்படியே பத்து முறையோடு அம்மம்மா வெடியுப்புச் செயநீலே
கைத்துமே போகாத நருக்கிறது கசடில்லா அப்பிரே செந்தூரமாமே.

279. செந்தூரச் சோதினை தானறிய வேண்டில் செலத்தே ஓடி தன்னில் விட்டுச் செந்தூ
செந்தூர மேலே பணவிடை தான் சீத்தில் போட்டு சிறக்கவதில் மேலே ஒரு
உருந்தைப் போடே
செந்தூரம் உருந்ததனைத் தாங்கித் தாலல் செயமாகும் மில்லாட்டால் பின்பு கேளு
செந்தூரந் தனை யெடுத்துக் கல்வத்திட்டு சிறப்பாக ஆட்டி முன போல் புடத்தைப்
போடே.

280. போடவே அப்பிரேக செந்தூர மகிமை புளுகுதாக்கு நாவுண்டோ பாவுண்டோ
வாடவே வெடியுப்புச் செயநீர் விட்டால் மத்தொன்றிலப்பிரேகந் தருக்கருத
கூடியே தருக்கிறந தாவுடலில் தங்கும் குடி கெடுக்கு ரேகசியம் நோய் ஞூமாகாத
நேடியே செந்தூரந் திறமாய்ச் செய்து தின்டிடிலோ நோயேது செப்பக் கேளே.

<u>சூத செந்தூரம்</u>.

281. செப்பரிய சூத செந்தூரங் கேளு திறமான சூதமது பலந்தான் பத்து
ஒப்பரிய கெந்தியது ரெண்டரைப் பலந்தான் ஒட்டிலிட்டு கெந்தகந் தாழுருகும் போது

மலப் பெரிய குதத்தேக் கொட்டிக் கிசுடு மணல் போலே அரைமிது கல்வத்திட்டு
அப்பெரிய காட்டுச் சொம்பு சாத்தால்ச் சாமம் யரைத்துமே பொடியாக்கிக் குப்பிக் கேத்தே.

282. யேத்தியே வாலுகையில் மேலே வைத்து யெரித்திடு நீ தீபம் போல் மூன்று சாமம்
ஆத்தியே மறுபடியு மன்ரத்து முன் போல் அப்பனே வாலுகையிலெரித்த வாங்கு
போத்தியே மறுபடியுங் கல்வத்திட்டு புகளாக முன் சாத்திலாட்டித் தூளாய்
ஆத்தியே யரைவாசி யிட்டு அப்பனே வாலுகையில் தீயை மூட்டே.

283. மூட்டியே தீபம் போல் மூன்று சாமம் முறையாக யெறித்திடவே கருவைக் கேரு
போட்டிடவே தாளகந் தான் பலமிரெண்டு பொடி பண்ணி வைத்து நீ கொஞ்சம் கொஞ்சம்
ஆட்டியே குப்பியிலே போட்டுப் போட்டு அப்பனே கிண்டி வாசிலாகையாலே
தீட்டியே அடியிலே மருந்தில்லாட்டால் சீனை பதமென்று அடுப்பை ஆத்தே.

284. ஆத்தியே செந்தூர மறன்னும் போலே அப்பனே தேங்காய் போலிருக்கும் பாரு
தேத்தியே தாளகந் தான் போடாவிட்டால் சிவக்காத சி மயில்க் கழுத்து வண்ணம் போலாம்
பார்த்துமே ஆத்தாளைப் புசை பண்ணி பணவிடை தான் செந்தூரம் பனைவெல்லத்தில்
ஆத்துமே உள்ளுக்குக் கொண்டேயானல் அரையாப்பு கிறந்தி குஷ்டரோகம் போமே.

285. போமென்ற பத்தியந் தானுண்டு தேறு பொல்லாத குன்ம மொடு வாய்வு சூலை
தாமென்ற சொறி வெண் குஷ்டம் அருகண்ணி கரப்பான் நாமென்ற நோயெல்லாம் நாடாதோடு
நல்லதொரு செந்தூரந்தன்னை ஆட்டி ஆமென்று அரைத்து முன் போல் தங்கச் சேர்த்து
அய்ந்து தரம் வைத்தெடுக்கச் செந்தூர மறுணருமே.

286. அறுணைச் செந்தூர வேதையிட்டால் அழகான நவலோகம் பத்து மாத்து
மறுணு வாதத்தில் சித்தரெல்லா மறைத்து வைத்த கருவை யெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
கறுணை குரு முடிக்க வகையுஞ் சொன்னேன் கறுவாளி யாருக் கால் கண்டு பாரு
தருணமா வைத்தியத்தில் முறை தப்பாமல் சாத்தினே விசமாகுஞ் சார்ந்து பாரே

<u>மகா திராவகம்.</u>

287. பாரப்பா மகுத்தான திருவகத்தை பாடுகிறேன் மாணக்கர் பறிந்து கேரு
மாரணம் நோயெல்லா மாண்டு போக மகுத்தான சறக்கெல்லாங் கட்டிப் போக
ஆகுத்தா காரணம் சித்தரெல்லாம் மெச்சிக் கொள்ள கை முறையாய் ரசவாதத்தி வகைக்குள்
நாறணமா நாயுருவி குப்பை மேனி நற்றுளை நாணல் தென்னல் கதலி யென்னே.

288. கதலியா முருங்கை கொடுவேலி கத்தி கரூ மத்தை கொடிக் கள்ளி திருகுகள்ளி யெருக்கு
வதலியே வெவ்வேறு சுட்ட சாம்பல் வகைக்கு நால் படி யளந்து பாண்டத்திட்டு
கதலியே ஆனை குதிரை நீரும் கழுதை நீர் ஆட்டகை நீர் மனுசன் நீராமே.

289. நீரான ஆவின் நீர் வெள்ளாட்டு நீர் நிலையாகக் கலந்தொன்றாய்ச் சொல்லக் கேரு
சாரான சாம்பலுக்கு ரெட்டி வாறு சாதகமாய்க் கலக்கியே தெளிவை வாங்கி
ஊறுத அடுப்பேத்தி யெரித்துக் காய்ச்சி அப்பனே ரவியிலப்பா வகை வகைக்கு
பூரக வகைக்கிரண்டு பலந்தான் சொன்னேம் புனிறு காச்சி யுப்பு இரண்டு பலம் போடே.

290. பலமான கல்லுப்பு வழலுப்பு பாறையுப்பு வெடியுப்பு சவுட்டுப்பு போடு
கலமான யிந்துப்பு அட்டுப்பு கறியுப்பு வகை வகைக்குப் பலந்தான் ரெண்டு
கல்மான நவச்சாரம் கூடன் சீனம் காட்டு நவச்சார முடனன்ன பேதி சூலமான
யிவ்வை யெல்லாம் வகைக் கிரண்டு பலமாக கூறயதோர் வெடியுப்பு யிறுவதஞ்சே.

291. அஞ்சோடு சீனமது யிருவத்தஞ்சு ஆக வகையெல்லாம் பல நூருச்சி
தன் சார மேனிச் சார் நாயுருவிச் சாறு தனிலரைத்து சன்னல் விரை போல் வில்லை செய்து
அஞ்சாதே ரவி தனிலே உலரச் செய்து அஞ்சு பங்கிட்டதனைப் பாண்டந் தன்னில்
அஞ்சாதே ஒரு பங்கு மருந்தெடுத்து அரைவாசி யிட்டு மே அரையக் கேளே.

292. அரையிறேன் சக்கரமா வாலை சட்டி அது மேலே சந்து வாய் பொருந்த மூடி
அரையுறேன் திருவகமே வறுகு வாங்க வகை கேளு அடுப்போரம் வளயஞ் சாணி
விரையான சாணியின் மேல் சிலந்தே விட்டு பீங்கானுங் கிண்ணி யதின் மேல் வைத்து
முறையான சக்கர மாவாலை சட்டி மூக்கந்தப் பீங்கானில் முக நோக்கி வைய்யே.

293. வைக்கவே முந்தி முந்தி வெள்ளை நீர் தான் வறுகுமப்பா வாங்கியதை வீசிப் போடு
நயக்கவே சிவந்த நீர் பின் வறுகும் நயமான நீரதனை வாங்கி நீயும்
மயக்கவே மறுபங்கு சரக்கிட்டு அரைத்து தன்னையே காயவைத்து
தயிக்கவே முன் போலே பாண்டத்திட்டு சக்கர மாவாலையே மேலே மூடே.

294. மூடியே அடுப்பேத்தி யெறித்து நன்றாய் முனையான திருவகத்தை வாங்கு வாங்கு
ஆடியே மறுபங்கு சரக்கிட்டு அப்பனே முன் போலே அரைத்துக் கட்டி
சாடியே முன் போலே பாண்டத்திட்டு சக்கர மாவாலை கொண்டு மேலே மூடி
போடியே அடுப்பேத்தி யெறித்து மூட்டு புகைபட்டால் சட்டி விறியும் பின்பா நில்லு
நாடியே யுன் முகம் விக்கி நில்லு நலமான திருவகத்தை வாங்கு வாங்கு.

295. வாங்கியே மறுபங்கி லூட்டி வாங்கு வாகாக யிப்படியே ஐந்து தரம் வாங்கு
தோங்காதே ஆத்தாள்க்கு வடுகனுக்கு பசை செய்து அறக்கென்ற குப்பியிலே அடைப்பாயப்பா
ஓங்கியே மத்தொன்றுலடைத்தா யானால் உருகிப் போம் கல்லு முதல் நவலோக மெல்லா
வாங்கியே நாதாக்கள் பாதம் போத்தி வாதமொடுன் வயித்தியங் கைக்குள்ளாச்சே.

296. ஆச்சென்ற விபரமென்ன வென்று கேட்டால் அப்பனே யெட்டு வகை சூலை குன்மம்
ஆச்சென்ற வலிவாய்வு யுதிற வாய்வு கதிர வாய்வு சூலை முட்டி மூத்திர வாய்வு
நீச்சென்ற தமர் வாதம் வாய்வு பித்தம் வாய்வு நீறுன மகவுசை கெண்டே மகோதிரமாம் போருமை
தேச்சென்ற பெரு வயறு காமாலை சோகை பாண்டு ஊசிக வாய்வு விரை வாதந்தானே.

297. தானென்ன அந்தந்த வியாதிகள்க்கு சாற்றியதோர் அவுள்தத்தில் திருவகங் கூட்டி
கூச்சென்ற யில்லாட்டால் அநுபானத்தில் கொண்டிடவே நோயெல்லாங் கும்பிட்டோடும்
வேச்சென்ற பாசாணம் அறுபத்தி நாலும் மெருகாகும் யுபரசங்களீய்யமாகும்
கோச்சென்ற நவலோக மெல்லா நீரும் கொள்ளேயோ கொள்ளையிதில் வாதந்தானே.

298. வாதமாங் கல்வத்தில் சேரே சூதம் வாத்துமே திருவகந் தான் மஞ்சாடிகுத்த
வேதமாஞ் சூதமது வெந்து நீரும் வேதையிலே வெகு தூரம் யெட்டியோடும்
சூதமா நவச்சாரங் கட்டி வாங்கி தோய்த்துமே திருவத்தில் ரவியில் போடே.
நாதமாஞ் சாரமது கட்டிப் போகும் நாதாக்களாட்ட மெல்லாஞ் சாரத்தாலே
போதமாங் கட்டிய தோர் சாரந் தன்னை போட்டிடவே நாழிதமது கட்டிப் போமே.

299. கட்டியதோர் நாதத்திலோகஞ் சேறில் கண்டு கொள்ளும் வேதையிது கண்டு கொள்ளு
திட்டமா நவலோகம் நவரெத்தினங்கள் திருவகத்தில் தோய்த்துமே ரவியிலிட்டு
ஆட்டிடிய புடம் போட நீறிப் போகும் நலமான மால்தேவி சிலையு லிங்கம்
திட்டமா வீறமொடு பூறந்தாறு சீனம் சிறப்பான கெந்தியொடு கெவுரி கூடன்
தட்டியே சரக்கு யறுபத்திலும் தனித் தனியே கட்டியது மெழுகுமாமே.

300. மெருகாகு ஒவ்வொன்றில் வேதை கோடி விறித்த நான் சொல்ல வென்பல் ஒப்பனை ஒப்பில்லை
அருகாதே புத்தி மானீயே யானால் அலையாதே பல நூலும் பார்த்து பார்த்து
வருகாதே செகந் தனிலே பரயம் போல் மைந்தா விறிதான யிந்த நூல் விரைந்து பாரு

சுருகாக வாதமுதல் வைத்தியமுள் தேறம் சுணங்காத் திருந்துவிட்டால் சொல்வதென்னே.

301. சொல்வதர்க்கு வாதத்தின் கறுவேன் கேளு செப்பாதே தாருசி யிதில் விந்து நாதம்
செய்வதென்ன பூமியுடனுதமொன்று சிறப்பான வீறம் கெற்பங் கல்லுச் சுண்ணம்
பைய்வதென்ன பாரையாங் கல்லுப்பொன்று பாங்கான அண்டமொன்று பிண்டமொன்றா
தைய்வதென்ன பஞ்ச பூத மஞ்சு மாச்சு தன்னுக்குள் பயனறிந்தால் குருவுமாச்சே.
யுய்வதென்ன பயனென்ன காரசாரம் உரையாமல் சித்தரெல்லா மொளித்திட்டாரே

302. ஒளித்திட்டு பல பலவாய்ச் சொன்னூர் சித்தர்ருள்ப் பொருளை யறியாமல உலந்தார்
அளித்திட்டு அண்ட பிண்ட மாதியந்தமாகா அடி முடியுந் அறியா தீதம் மகிழ்திட்டு
மனித்திட்டு சாகாம் வேகாதெல்லாம் மங்கின்ற பொருளென்ன விந்து நாதம்
தெளிந்திட்ட மனோமணித் தாய் புறமேயாகும் சிவா சிவா தறிய வெளியச் சறமுமாமே.

303. அச்சறத்தை அறிந்தார்கள் சித்தரெல்லாம் அறியாமலுலகத் தோர உலந்து கெட்டார்
நிச்செயமா யென்னூ லில் நிலைக்கச் சொன்னேன் நிலைத்தகும் புறணத்தே நிலைத்து பாரு
அச்சறமாம் நிலை தங்கி அறிவில்க் கூடி யடங்கி நின்ற பொருளெல்லாம் மவுனமாச்சு
அச்சறமாஞ் சொல்வதற்கு ஆருலாகும் அறிவு குரு அல்லாது ஆசானுண்டோ
நிச்சயமா வாசிதனை மூலத்துனி நிலைத்திட்டால் சுளி முனை தானிசமாங்கானே.

204. கானே நீ யின்னூலை யார்க்குங் காட்டார் காட்டில் ரவி கோடி நரகமெய்து
வீணே நீ வாசிதனை அங்கென்றுனி வேதாந்த சர்க்குருவே நித்தம் பூசி
யூணே நீ மூலத்தி நன்றியுள்ளிருந்து உகந்துனக்கு உபதேசிப்பார்
ஆணென்ற ஆணவமு மாயை நீக்கி ஆங்கார கோபத்தை அடித்துத் தள்ளி
காணவே கருவிகானது போக்கி கண்ணாடி சுளி முனையைக் கருதிப் பாரு.

தாருசுக்குறவு.

205. கருதியே தாருசிருட குருவைக் கேளு கை முறையாய்ச் சொல்லுகிறேன் காட்டார் சித்தர்
கருதியே தாருசோடு பலந்தானப்பா கட்டியே வாங்கியே தசடு போக்கி
தாருசியாங் கட்டியின் சுண்ணாம்பு சீலை சுத்தியே கறுவங்கங் மகையில் வைத்து
உறுகையிலே லெயக் குறட்டால்த் தாருசை வாங்கி யுருதியாய் வங்கத்திலுணத்தி வாங்கே.

206. வாங்கவே யிப்படி தானேழு தரம் தோய்த்து வாங்கிடவே தாருசியது வெள்ளையாகும்
நாங்காக யின்ன மதில் பாகங் கேளு நாய்ப் பாகல் அய்வறலித் தயிலம் வாங்கி
யேங்கியே தாருசு யதில் தோய்த்து தோய்த்து யேழு நாள் வெய்யிலிட நீரும் பாரே.

307. பாரினிலே முதல்த் திறந்த நாதம் வாங்கி பாங்கான வித்துவதில் சமையச் சேரு
தேறே நீ சூடறெறு காசிபோடு தெளிவாகு வாங்கியதில் வீரம் பூறம்
பாறே கறுவியுறமுஞ் சூதம் மாற புள்ளி வண்டின் முட்டை கழுதை வண்டு
சேரே நீ குறுவண்டு புறகெட்டெட்டும் சிறப்பாக வகை வகைக்கு பணந்தான் தூக்
வாறே நீ பொடியாக்கி அதிலே போடு மத்திக்கக்கை வேரும் வகை தான் கேளு
வாறுன அயக் கோலாலறிக் கொம்பால் மத்திக்கச் சிலமாகித் தயிலமாமே.

308. சிலத்திலே முன் சொன்ன தாருசு தன்னை தீர்க்கவே யுன்ன யுன்னப் பிறட்டிப் போட
மலத்தியே ரவி தனிலே யேழு நாளும் போட மல்லிகைப் பூப் போல் மலருஞ் சுண்ணந் தானும்
நலத்தியே கடுங் காரமேத்தக் கேளு நவச்சாற விறுகென்று யுலத்தியே சவுக்காரச்
சுண்ண முன்னீருலரைத்துமே தாருசு மேல்க் கவசம் போடே.

309. போட்டுமே அஞ்சு சுண்ணக் குகையில் வைத்து மூடி புகள் குகை மேல்ச சுண்ணமாச் சீலை செய்து
பூட்டுமே பச்தெருவில் புடத்தைப் போட அம்மம்மா யென் சொல்வேன் குருசு சுண்ணம்
காட்ட வென்றலாறந் தான் காட்டுவாறே கை முறையாஞ் சித்தர்கள் தான் சொல்லுவாறே
நீட்டென்ன குருவறிய நிசமாய்ச் சொன்னேம் நிலத்தொரு மஹேமணியேப் பூசை பண்ணே.

310. பண்ணியே குருசுருட குருவைத் தொட்டு பாங்கர்க கோடியுகம் வாதம் பார்த்தேன்
யெண்ணியே பார்த்திட்டு து லையவில்லை மெடுத்ததொரு சரக்கெல்லாம் சுண்ணமாக்கும்
தன்னியே குரு குசு சுண்ணந் தன்னை தொட்டிட்ட சேரை தேரை ரசம் வெண்ணையாகும்
பண்ணியே நவலோக மெல்லாம் நீரும் பாசான வர்க்கமெல்லாம் மெழுகாப் போகும்
தண்ணீரும் சாறு வருத்தலை களெல்லாம் சவனை போல ரசங்களியமாமே.

311. யியமாஞ் சூதமெல்லா மணியுமாகும் யென் மக்கள் ஒளிகை கட்டிச் சாறணையே செய்யில்
பொய்யல்ல சடத்தோடே யுயறத் தூக்கும் போக்கோடே அகண்ட வெளி கடந்து போகும்
கை கண்டேன் நவலோகந் தங்கமாகும் கல்லோடு மன் முதலாய்த் தங்கமாமே.

திசை முகக் குருச் செந்தூரம்.

312. தங்கமென்ற திசை முகமாங் குருச் செந்தூரம் சாத்துறேன் நோய்யெல்லாந் தவுடு பொடியாக
பொங்கமா நவலோகந் தங்கமாக புகல்கிறேன் காரீயம் பலந்தாறென்று
சங்கமா நீரின் மேல் நெருப்பின் சாத்தில் காரீயந் தனை யுருக்கிச் சாய்க்க கட்டும்
வங்கவே காரீயம் குகையிலிட்டு வுருகும்போ கெவுரி ஒரு பலந்தான் போடு
கங்கமாஞ் செயநீரில்லொக்கப் போடு கலந்துருக்கி ஒன்றாகக் கல்வத்தூட்டே.

313. ஊட்டியே தாம்பூரம் பலந்தாறென்று சுத்தி செய்த கட்டியதோர் கெந்தி யொன்று
தாட்டியே குமரியுட சாத்தாலாட்டி தாம்பூரத்தின் மேல் பூசிப் புடத்தைப் போட்டு
ஊட்டியே புடமாறி யெடுத்துப் பாரு உற்பனமா நொறுங்கியது பற்பமாகும்
தீட்டியே கல்வத்திலிட்டுக் கேளு சிறுகன நாகமது பலந்தான் வாங்கி
மூட்டியே யிலுப்பை நெய்யில் சாரம் போடு மூவாறு திறஞ் சாய்த்து யெடுத்துக் கொண்டு
ஊட்டியே செயநீரில் ஏழு தரஞ் சாய்க்க அதிகமா நாகமது கட்டிப் போகும்.

314. கட்டியே நாக நின்று யுருகும் போது கசகாதே சூதமொரு பலத்தை யூட்டு
தெட்டியே சென்றேய் யுருகும் போது செயமான. மாலதேவி யொரு பலந்தான் போடு
வெட்டியே பலமொன்று குகையிலிட்டு உருக்கி ஆட்டியே ஆடாவின் தோடைச் சாத்தில்
அப்பனே யெழுதரம் உருக்கிச் சாயே.

315. சாய்க்கவே வெள் வங்கம் நொறுங்கிப் போகும் சார்வான குகையிலிட்டு உருகும் போது
வாய்க்கவே மஹேசிலை தான் பலந்தாறென்று வளமாகச் செயநீரில் கட்டிப் போடு
சாய்க்கவே யுருக்கு ஒன்றாய் கல்வத்திட்டு தங்கமொரு பலம் நின்று உருளும் போது
ஆய்க்கவே சாதிலிங்கம் பலந்தாறென்று அதிலிட்டு உருகும் போது குருகு தங்கம்
ஆர்க்கவே யிவை யெல்லாங் கல்வத்திட்டு அப்பிரகம் நவநீதம் பலந்தாறென்றே.

316. பலமான பஞ்ச முகம் சரக்கு றெட்டி ப்ராங்கான திசை முகமாங் குருவுமாச்சு
பலமான கருவோடே பனிரெண்டாச்சு பேசாதே பனிரெண்டாந் தீச்சையாச்சு
மூலமாங் கருவென்ன சொல்லக் கேளும் முப்பூவின் குருவதிலே களிஞ்சி போடு
பலமாக யிவை யெல்லாஞ் சேர்த்து ஒன்றாய் பேறன வெடியுப்புச் செய் நீராலாட்டே.

317. ஆட்டியே நால் சாமம் வில்லை கட்டி அப்பனே காய்ந்த பின்பு அகலிலிட்டு
தீட்டியே மேல் மூடிச் சீலை செய்து சுறு புடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத்திட்டு

நாட்டியே பொர்த்த லையின் சாத்திலே நால்ச் சாமம் ஆட்டி முன் போல் புடத்தை

318. புடம் போட்டு யெடுத்த தனைக் கல்வத்திட்டு புகள முருக்கம் பூவோடு செம்பறத்த பூவும்
குடம் போடு மாதளம் பூகத் தாளம் பூ முல்லா மல்லிச் சாத்தோடு ஊசி மல்லிச் சாறு
படம் போடு பனிரெண்டு சாமந் தானும் கைய் முறையாரைந்து மேல்த் தாளாய் பண்ணி
அடம் போடு காசியென்ற மேருக் கேத்தி அளகான வாலுகையில் தீ வைத்திடாயே

319. வைத்துமே முத்தீயும் பனிரெண்டு சாமம் வளமாக யெரித்திட்டு ஆறிப் பின்பு
அய்த்துமே குப்பியெனி அப்பால் வாங்கி ஆத்தாள்க்கு வழுகவைக்கும் பூசை பண்ணு
உய்த்துமே கந்தனொடு கணபதிக்குப் பூசை யுறுதியாய்ச் செய்து குப்பியுடைத்துப் பாரு
அய்த்துமே செந்தூர மென்ன சொல்வேன் பறுகியென்ன கண் கூசும் பார்க்கப் போமோ.

320. போமென்ற செந்தூரம் அநுபானத்தில் நாற்பது நாள் மண்டலந்தான் கொள்ளும் போது
போமென்ற நாலாயிரத்தி நாலு த்தெட்டும் பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப் போகு
கோமென்ற பதினெட்டுக் குஷ்டரோகம் குன்மமொடு சிறந்சி யரையாப்புச் சூலை
போமென்ற பாண்டு காமாலை சோகை குன்மம் சத்தி பித்த வாய்வு சூலை மாண்டு போமே

321. மாண்டு போம் சன்னி சுரம் தோசம் காசம் வாத பித்த சிலேற்பனத்தில் வந்த நோயெல்லாம்
மாண்டுமே காறுதே ஓடிப் போகும் மண்டலத்தின் காயசித்தி சுருக்கு மெத்த
கண்டு போக கற்ப மின்னம் வேறே யுண்டோ கைப்புப் புளிப்புத் தள்ளிப் பத்தியமாயுண்ணு
ஆண்டு பார் செந்தூர வேக மெத்த ஆறுந்தான் சொல்லார்கள் அறிந்து பாரே

செம்பு சுத்தி.

322. அறிந்துமே தாம்புறத்தின் சுத்தி கேளு அறிதப்பா சொல்லுகிறேன் தகடு வாங்கி
பறித்தான பளச் சாறு புளியிலையின் சாறு பசுவிடட கோமியத்தில் பத்துமுறி
பொறிந்து தானெடுத்த தனைப் புளியிட்டுத் தேய்த்து புளியற வுனக் கிளங்கு நெய்க் கொட்டான் பட்டை
செறிந்து தானிடித்த தனைப் பொதிந்து செம்பில் திறமாகப் புடம் போட்டு யெடுத்துக் கொள்ளே

323. யெடுத்தே அகத்தியுட பருப்புச் சாத்தில் யிதமாக முருக்கிலைச் சார் நல்ல பாகல் சார்
கடுத்துமே கள்ளிலைச் சார் தேசி நீர் கலந்தொன்றாய் ஒரு கலசந் தன்னில் வாரு
உடுத்துமே உவறுப்பு ஒரு பலமே போடு உகந்த கருங்குன்று மணி யரைத்து நீயும்
கடுத்துமே தேசிக் காயளவு போடு கலக்கியே தாம்புறத்தை யுருக்கிச் சாயே

324. சாய்க்கவே வெவ்வேறே பத்து முறை சாயப்பா தம்புறங் தாங் கடியு சுத்தி தங்கம் போலாம்
ஆய்க்கவே வேதை யிட்டாலால் காணு செம்பு நாகில் வெள்ளியாகு சேர்க்கமா மாத்தென்ன
ஆறுகாணும் மயங்காதே தாம்பிறத்தின் சுத்தி நேறு தேய்க்கவே தாம்புறத்தில்
செய் முறைகளெல்லாம் சுத்தி செய்ய மெத்த நன்று சுருக்காய்ப் பாரே.

சூத பற்பம்.

325. சுருக்காகச் சூத பற்பம் சொல்லக் கேளு சூதமது ஒரு பலந்தான் கல்வத்திட்டு
வறுக்காத அண்டமாங் கொட்டைத் தயிலம் வாங்கியே சூதத்தில் விட்டு ஆட்டி

விருக்காகச் சூதமது சவளை போலாம் யெடுத்துமே கல்வத்திலிட்டுக் கேளு
மக்காக விடந் தீஞ்சான் மூலிச் சாறு மாதேவி கிளங்குச் சார் வெள்ளெருக்கம் பாலே.

326. பாலோடு வகை வகைக்குச் சாம மெட்டு பாங்காக வில்லை தட்டிக் காய வைத்து
கோவியே யகலிலிட்டு மேல் கல்த் தான் மூடி குக்குடமாப் புடம் போடச் சூதம்
ஆலவே தும்பைப் பூ போலவாகும் ஆத்தாளைப் பூசை பண்ணி யெடுத்துக் கொண்டு
பாலென்ற பணவிடை தான் நாளொன்றுக்கு பனைவெல்லந் தன்னோடே பத்தியமாய்க் கொள்ளே.

327. கொள்ளவே ரச பற்பம் வாய்வே காது ஊமாறு நோயெல்லாங் கூறக் கேளே
கொள்ளவே கிறந்தி மேகட்டம் வாய்வு சூலை கூற்றிய அரையாப்பு வன்ம மெட்டு
மெள்ளவே நோயெல்லா ஓடிப் போகு விருது சொல்லி வைத்தியத்தை விரும்பிப் பாரு
உள்ளபடி இதபற்பத் சொல்லிப் போட்டேன் உத்தமனே தங்கமென்ன தாயைச் சேரு
கள்ளமில்லை நவலோகம் பத்துக் கொன்று காட்டிடவே மாத்தாறு கனகமாமே.

328. பாசானக் கட்டு:-

கனகமா வெள்ளிக்கு வெள்ளைப் பாசானம் கட்டுதர்க்கு உச்சமாங் கருவைக் கேளு
கானகமாம் பாசான கட்டி வாங்கி கருதியே வெள்ளாவி போகும் போது
வசனமா வெள்ளாவி சீலை நடுவே வைத்து வாங்கிடவே யெண்ணைக்கு சுத்தியாகும்
துனங்கவே பிரம்பட்டைத் தயிலம் வாங்கி சுருக்கிடவே கட்டியது சுத்தியாமே.

329. சுத்தியாம் வெள்ளறுகு சவுக்கார வெல்லம் சுகமாக ரேசித்து அரைத்துக் கொண்டு
புத்தியாம் பாசான கட்டி மேலே பொதிந்து நீ தாம்பிரத்தின் சிகையில் வைத்து
சித்தியாம் மேலுமந்தச் சில்லால் மூடி சீலை செய்து குக்குடமாம் புடத்தில் போட்டு
பத்தியாம் தேவி பதம் பணிந்து போத்தி புகையாது பாசனங் கட்டிப் போமே,

330. கட்டியே யுருகியது மணி போலாடு கசடத்த கிசம்பிலே பத்துக் கொன்று
மூட்டிடவே வெள்ளியாம் மெழுகு செய்ய முறை கேளு முள்ப் பன்றி நெய்யை வாங்கி
தட்டியே வெண் கருவுஞ் சதிரக் கள்ளிப் பாலும் சாறிக்கச் செலமாகுந் தன்னை வாங்கி
கட்டியே முள்பன்றி நெய்யோடொக்க கலந்துமே பாசானங் கறண்டியிலே வைத்து
முட்டியே ஒரு சாமம் சுருக்குப் போட் மெழுகாகும் பூசை பண்ணி யெடுத்துக் கொள்ளே.

331. யெடுத்துமே வைத்திட்டால் பனிரெண்டு மாத்து யெட்டியே வெகுதூரமோடுமப்பா
யெடுத்துமே வாதமென்ன வைத்தியமே பாரு யென் மக்கள் மோட்ச கதிக் கிடமாம் பாரு
அடுத்துமே கட்டியதோர் பாசானந் தன்னை அறுபான சுறங்கி சக்கி சாயந் தன்னில்
கொடுத்திடவே சுரமேறு தோஷமெட்டு ஓடிப் போகு வாத சன்னி தொண்ணூறாத்தாறு
மருத்துமே கிட்டாது ஓடிப் போகும் அறையுறேன் பாசான அதீதந் தானே.

லிங்கக் கட்டு.

332. கானென்ற சாதிலிங்கக் கட்டுக் கேளும் கருதியே நெடுங்கம்பிலிங்கம் வாங்கி
பானென்ற பலமொன்று அயக் கரண்டியிலிட்டு பளச்சாறு முலைப்பாலுசுருக்குத் தாக்கு
கோனென்ற ஒரு சாமம் சுருக்குத் தாக்கு கொம்புத் தேன் ஒரு சாமம் சுருக்குத் தாக்கு
யேனென்ற லிங்கமது சுத்தியாகும் யெடுத்து மறுபடி அயக் கறண்டி தன்னில் வைய்யே.

333. வைத்துமே ஒவிறலி பழுபாகல்ச் சாறு வகை வகைக்கு ஒரு சாமம் சுருக்குத் தாக்கு
அய்த்துமே அறுப் பொடியைப் பழச் சார் விட்டு அரைத்து மேலிங்கத்தின் மேலே பூசு
யுய்த்துமே பேய்க் கும்மட்டிக் காய்க்குள் வைத்து ஒரு புடந்தான் போட்டெடுக்க முருக் கட்டாச்சு
யித்துமே சன்னி சுரந் தோஷ மெல்லாம் சன்னுமே தொண்ணூறாத்தாறு சன்னி வாதம்
செய்த்துமே மெழுகு செய்ய வேலூ மென்றால் செவ்கத்திப் பூப்பட்டை யிடுறு சாறு
பய்த்துமே பன்றியுட நெய்யுங் கூட்டி பாங்காகச் சுருக்கிடவே மெழுகுமாமே.

334. மெழுகெடுத்து நவலோகந் தன்னிலிய மேதிக்குப் பத்தரையே மாத்தங் காணும்
தளுக்கெடுத்து மெழுகு லொரு பந்தானுன்னில் சன்னி சுரம் தொண்டூர் த்தாமம் போகும்
தெளிவாகு மரிதாரம் தன்னை ~~வதக்கி~~ வாங்கி தேசிநீர் சுண்ணும்பிலே சுத்தி செய்து வெளிர
வெளிதான ஓட்டிலிட்டு அடுப்பிலேற்றி யிரு சாமம் கறந்தைச் சார் சுருக்குத் தாக்கே

<u>அரிதார கட்டு</u>.

335. தாக்கிடவே அரிதாரம் கட்டிப் போகும் சன்னி சுரம் தோசமொடு சயமீளை காசம்
சேர்கிடவே அரையாப்பு அழுகண்ணி கிறந்தி குலையொடு பதினெட்டுக் குஷ்ட வாய்வு போகும்
தாக்கிடவே செந்தூரம் செய்யக் கேளு சத்தி நெடு சாறனை வேர் முக்கில் ரெண்டு
ஆக்கிடவே முருங்கிலைச் சார் வாய் நீராளும் அரைத்து மால்தேவிக்கு அங்கி பூட்டி
போக்கான காவி மண் சீலை செய்து பொதிந்து மேருக் கிடத்தில் போட்டு வாங்கே.

336. போட்டெடுக்கச் செந்தூரம் அருணன் போலாம் புகட்டிடவே நவலோகம் பத்த மாத்து
பாட்டெடுத்த நாளொன்றுக் கநு ப்பானத்தில் பணவிடைதான் மண்டலமே கொண்டா யாலல்
கர்ட்டெடுத்த நெய்யெல்லா ஓடிப் போகும் காய சித்தாம் கருத்தோட்டு செய்து பாரு
ஆட்டெடுத்த காரீய்யப் பற்பங் கேளு அறையிறேன் காரீய்யம் தன்னை வாங்கே.

337. <u>காரீய்ய பற்பம்</u>:-

வாங்கியே நல்லெண்ணை படி தானென்று வகையாக யேழு தரம் முருக்கிச் சாய்க்
தாங்கியே காரீய்யம் சுத்தி யாகும் தகடாக கனதியி வெத் தட்டிக் கொண்டு
பாங்கியே பத்திருட்சதனை அரைத்து பக்குவமாய்ப் பொதிந்து மேல் சீலை செய்து
ஆங்கவே புடமிட்வே வருகம் நீரும் மப்பனே மறுபடியு மெடுத்துக் கொண்டு
தாங்கியே சத்தி சாறனை யரைத்து சார்வாக முன்போலே பொதிந்திடாயே.

338. பொதிந்துமே புடமொன்றில் காரீய்ய பற்பம் புதுமை யென்னதும்பைப் பூ நிற மொவ்வாது
அறிந்து மேற் பற்பத்தை அநுபானத்தில் லரிந்தன்னச் சன்னி சயமீளை காசம்
க்திந்த தொரு தேகத்தில் கடுப்புக் குத்தல் கடிதான நோயெல்லாங் காதோடுங்
செதிந்தெழுந்த பற்பத்தில் பரிகுதம் சேர்த்து செய நீலாலாட்டியே புடத்தைப்
கதிந்தெழுந்த குருவாகும் வேதையாகும் காயசித்தாங் காரீய்ய பற்பந்தானே.

339. பற்பத்தில் வெகு கடின தாம்புறந் தன்னிலஞ்சு முத்திரைக்கு குடாமல்லாமல் சல்லி
இகாறப்பான் கறுங் குன்றி மணியரைத்து கொள்ளிலையின் சாத்திலே கனக்கிக் கொண்டு
கற்ப்பமா பளச் சாறந் தேசி நீரும் கலந்ததிலே தாம்பூறத்தைக் காச்சித் தோயே.

340. தோய்க்கவே யேழு தரம் சுத்தியாகும் சொல்லறிய ஆத்தலறி கொண்டு வந்து
போத்தியே அரைத்தனைத் தாம்பூறத்தில் பொதிந்து மே புகளாக ரவியுலர்த்தி சுண்ணும்பு சீலை
சுத்தியே பெரியதொரு புடத்தைப் போடு சொல்லறிய தாம்பூறந் தான் வெண்மை மெத்த
நாத்துமே வெள்ளை நீர் முள்ளி வாங்கி நலமான வெள்ளெருக்கம் பாலலாட்டி.

<u>தாம்பூற பஷ்ப்பம்</u>.

341. ஆட்டியே தகட்டின் மேலரைத்துப் பசி அப்பனே யுலர்ந்ததின் மேல் சுண்ணும்பு சீலை பூசி

நட்டியே செய்து முன் போல் புடத்தைப் போடு ஆத்தாள்க்கும் வடுகனுக்கும் பூசை பண்ணு
தாஷ்டிகமாய்த் தாம்பிர பற்பம் யென்ன சொல்வேன் சங்கு போல் நீறியது தவளமாகும்
தேட்டென்ன சித்தர்கள் தான்கு சொல்லுவாரே சகத்தி லெந்தன் சீஷருக்குச் செப்பினேன்குன்
காட்டாதே ஒருவருக் குகை முறை யிதப்பா காட்டினல் கடை நற்கீல் வீர்வாயப்பா.

342. நீ மாளாதே யென் மக்கள் சொல்லக் கேளு மருந்தான பற்பத்தேப் பதனம் பண்ணு
கோளான சூதமொரு களஞ்சிக்கப்பா குறிப்பான பற்பமொரு களஞ்சு போடு
தேளான வெண்கருவு யெருக்கம் பாலும் சேர்த்தாட்டச் சூதமது விரைந்து போகும்
வேளே நீ வில் லை தட்டி அகலிலிட்டு மேல் மூடிச் சீலை செய்து குக்குடத்தில் போடு
கோளான சூதமொடு தாம்பிர பற்பம் கொடிதான சுண்ணமாங் குருவுமாச்சே.

343. குருவெடுத்து நவலோகந் தன்னிலீய குறையாது பத்தரைரயோ மாத்துக் காணும்
பருவான சரக்கெல்லாம் சுண்ணமாக்கு பருவத்தில் பணவிடை தானனுபானத்தில்
செறிவான மண்டலமே கொண்டேயானல் தீருத குன்மமெட்டு வாய்வு சூலை
அ வெருந்த கிரைந்தி யரையாப்பக் குஷ்டம் ஆகாத காசரோக மந்தார வாய்வு
திர்க்கெடுத்த பல பிணியுந் தீர்ந்து போகும் தீர்க்க மாங்காயமது சித்தியாமே.

நாக பற்பம்.

344. சித்தியாம் நாகத்தில் செந்தூர் பற்பம் செப்புகிறேம் மானுக்கள் தெளிந்து கேளு
பத்தியே சிகனுகம் நாகமது பலந்தான் பத்து பாங்கான யிலுப்பை நெய்யில் சரம்
முத்தியாம் மூவாறுந் திறங் சாய்க்க முனையான நாகமது சுத்தியாகும்
சித்தியாம் ஆடாதோடைச் சாறு செய்நீர சேர்த்ததிலேரு திறஞ் சாயே.

345. சாய்க்கவே நாகமது கட்டிப் போகும் தருவான நாகமல்லி யிலை அரைத்து
ஆய்க்கவே நீர் மேல் நெருப்புக் கூட்டி அரைத்துமே கவசமாய்ச் செய்துலர்த்தி
ஆத்துமே யெறிய தொரு புடத்தில் போடு அப்பனே நாகமது நீறிப் போகும்
சாய்க்கவே கறடு தட்டி நின்று நானல் கற்பூர வெத்திலைச் சாற் விடந்தீஞ்சாகு சாறே.

346. சாறுடனே கல்வத்திலரைத்து நன்றாய் அப்பனே வில் லை தட்டிப் புடத்தைப் போடே
புகறுடனே நாகபற்பம் யென்ன சொல்வேன் பொர்க் கொடியைப் பூசை பண்ணி யெ யெடுத்துக் கொண்டு.
குடம் போடு அநுபான மறிந்து கொள்ளு குன்ம மொடு காசரோகம் காசி சூலை
சுடம் போடு பறமூலம் பிறமூலம் சூலை தீருத காசிரோகந் தீருமென்னே.

347. யென்னவே குடல் வாதம் குடல் பிறட்டல் யீளை பித்தம் தாளாத யிருமல் வாய்வு
நன்னயமாச் சொன்னதொரு வியாதியெல்லாம் நாடாது நாக பற்பம் கண்டபோதே
சொன்னதொரு கட்டி தோர் நாகந் தன்னில் சூதமிட்டுத் தங்க மிட்டுக் கெந்தியிட்டு
கன்னன குலாமல்லிச் சாத்தாலாட்டி காசியென்ற வாவுகையில் மேறுக்கேத்தே.

348. யெத்தியே பனிரெண்டு சாமந்தியில் யிட்டாட்டி யெடுத்துமே ஆத்தாள் பூசை பண்ணி
பாத்துமே நவலோக மூ த்துக் கொன்று பறிசிக்கப் பதினறு மாத்துக் காணும்
ஆத்துமே அநுபானத்தோடே கொண்டால் ஆகாத நோயெல்லாம் அகன்று போமே
காத்துமே மண்டலமே கொண்டேயானல் காயத்துக் களிவேது கற்பந் திறமாமே.

349. கர்ப்பமென்ன யிது வல்லார் கற்பமல்ல காய சித்தி
காயசித்திக் கேத்த கற்பங் காட்டார் சித்தர் சொர்ப்பமா செய்யவென்று சொல்லுண்ணது
சொன்னுங் கற்மத்தைச் சொல்லப் போகா அற்ப்பமென்று கைப் பொருளைச் சிலவு செய்து
அலைந்து கெட்டுப் போவார்கள் அதனல் பாவம் தப்பிலை சீசரென்ற பிள்ளைக்கா
சாகாத கற்பத்தைச் சாற்றினேனே.

350. சாத்துகிறேன் மீசாதிவர்க்கம் நாலு தனையறிந்து முதல் திறமாய் நாதம் வாங்கி
சேர்த்துமே கற்பூரம் பொடித்துப் போட்டு பார்க்கவே சிலமானுத் தெளிவதிலே சமனய் வித்து
சேர்த்தமே நாளொன்றுக் கரைக் களிஞ்சி வீதம் செய பற்பங் கூறு பற்பச் சேர்த்துக் கொள்ளு

சாத்தறிய மண்டலத்தில் தேகம் பொன்னும் சத்தியமாய்ச் சொல்லி விட்டேன் சாவில்லை தா

351. யில்லையே யெம்மென்ற மேறவாச்சு யிறக்குப் பேர்பான மென்ற வசு வென்று
மல்லவே செயநீரு சுரமான மென்று அப்பனே மத்திய பானமென்று ~~செய்யவே~~
செய்யவே ஆயிரத்தெண் மலருக்குள்ளே சிறந்திருந்த பூ வென்று மதிய மூர்தமென்று
சொல்லவே காகாத வேகாதென்று சித்தர்கள் தான் பூசிக்கும் வாமமென்று
வல்லவே யிதை விட்டு வேறு நீருண்டால் வகையறிய மாண்டார்கள் வாமிதானே.

352. மாளாமலச் சொன்னதொரு கர்ப்பங் கேளு மறைத வழலையுட கருவைக் கே
மாளாமல் மதியருத்த மூர்தம் புறன்ந்தானப்பா மயங்காதே கண்டத்தில் வழலை தன்னை
மாளாத பீங்கானில் — —மான கற்பூரம் பொடித்துப் போட்டு மாளாமல் பொறுமியத் வழலையப்பா
மைந்தனே கல்வத்திலிட்டுக் கேளு பறிதியுப்பு வகை சமயைக் கொண்டு சிப்பி நீரு லாட்டி
மாளாதே வில்லை தட்டி ரவியில்க் காய்ந்து வளமான அஞ்சு சுன்ன —— ள்ளே.

353. குகைதனிலே வீறமொடு புறகு பூரம் குறவான கருவி யுறமுஞ் சுதம்
வகையாகச் சிப்பி நீர் தன்லைாட்டி வ்லையின் மேலங்கி பூட்டி அசை
அசையாத அஞ்சி சுன்ன குகைக்குள் வைத்துப் பசி அரக்குள்ளே வழலை யென்ற வில்லை வைத்து
முடிச்சுன்னச் சீலை சுத்தியே காடையொரு புடத்தைப் போடு முகையாக முப்புவின் வில்லையாச்சு முறையோடே.

354. போட்டவே வழலையென்ன சுன்னமாச்சு புத்தி கெட்ட சித்தர்களே வாதி சொல்வர்
ஆடவே நாதாக்களாட்ட மெல்லா —— வேறே யுண்டோ போமென்ற
அடிமுடியுங் காரு சாரம் பேறுன் அண்ட பிண்டம் வர்மம் கெற்பம்
வாடெயேறி யென்றும் பாறை கல்லென்றும் காரமென்று
ஆடவே சொன்னதெல்லாம் வித்து நாதம் மதை யல்லால வேறென்று மறிவேன் பாரே

355. நாதத்தில் விந்துபக்கு பாங்கான பிறதிவு மப்பும் வாய்வு
ஆறென்ற அய்வறுந் தான் சேர்ந்ததாலே அறுயுறவா யங்கோல றென்ற
வழலை யென்ற முப்பூ வென்று சவுக்காரக் குறவென்று யிதர்க்குப் பேராம்
பாறென்று கோச பீச யிதற்க்குப் பேராம் சாக்கென்று யிதற்குக் பேராம்
பாறென்ற யிதை மறைத்துச் சித்தரெல்லாம் அரு பல் பல வாய்நூல் தோறும் பாடினரே.

356. ரென்னூலில் வெளியாய்ச் சொன்னேன் பதினெட்டுப் பேரு மென்னைப் பகைத் திட்டார்கள்
வீடியே சொன்னதொரு வழலைப் பேரா ——— வேறே யென்று சொல்லி மலைக்க வேண்டாம்
பாடியதோர் நாத விந்து வழலையாகும் பறிவான பிண்டத்தில் வழலையாகும்
பாடிய ரோரடி முடியும் வழலையாகும் மதியமுதலமூர்த முதல் வழலையாகும்
ஆடியே வழலை தொட்டு வாதம் பாரு அலையாதே கர்ப்பத்தே யுண்டு தேறே.

357. தேறவே ரச வாதஞ் சிவ சொத்தப்பா செப்பாதெப் பொருள்தன்னையே யிச்சிக்காதே
ஆறுவே செய்தாலும் பறத்துக் கீய்ந்து அறிவு குரு போதத்திலடங்கி நின்று
பாரு நீ பறபறப்பாய் யலைந்தே யாலும் பலியாது அவன் தனக்கு வாதமேது
கூருர்கள் வாதமொடு ஞானமறண்டும் குரு பதத்தில் போத்தி செய்து அறிவில்க் கூட்
ஓீருக யென்னூலில் வெளியாய்ச் சொன்னேன் விண்டிட்டால் வின்னிடி விருகும் பாரே

358. வீளாமலறிவுக்குள்ளறிவே யுன்னி வேதாந்த வாலையைத் தான் விதமாய்ப் பூசி
மாளாதே யோக சித்தி அஷ்ட மாஞ் சித்தி வசமாக வெள்ளெருக்கு தன்னைப் பார்த்து
மாளாதே அகவடைய மூலி வாங்கி மயங்காதே வகை இயன்ன கதிர் நாள் பக

ளாதே மூலியென்ற வேறராமல் அடி மூலங் கண்டவுடன் வெட்டிச் சோதி கே
கேளே மூனி வேர் நூனையிலப்பா கிளங்கதுவும் லிங்கம் போலிருக்கும் பாரே.

359. இருக்குமதை வெண் சாவல் பொலி கொடுத்துப் பொங்கலிட்டுமே தூப தீப
நிவே த்தியத்தோடு
கருக்குமே கன்னி நூல் காப்புக் கட்டி கருதியே கிளங்கதனை வேரே வாங்கே
வாங்கியே விநாயகன் போல் பண்ணிக் கொண்டு மீதுள்ள வேறையெல்லாம் வெவ்வேறே
குளிசமாடி
மூடிக்கவே செய்து நீ தம்பனம் வசியம் மோகன உச்சாடினமு முறையாய்ச் செய்யே.

360. செய்துமே வெவ்வேரை வைத்துக் கொண்டால் செகமேர்கதம் பண்ணும் வசிய சித்தி
செய்துமே யெட்டெட்டுஞ் சித்தியாகும் திறமான அடி மூல விநாயகனைக் கேளு
கொய்துமே கோரை படாதலை மண்டையோடு கொண்டு வந்து குளி வெட்டிக்
கவுள்த்திக் கொண்டு அதின் மேலே மண் திரனைப் போட்டு ஒங்கார பீட்டதின் மேலிருந்து
கொண்டு
வுய்துமே மசான மாகாளி கோட்டம் மல்லாட்டால் மசானமே யில்லறமென்று
மய்துமே பறித் தகட்டில் நவகோணமிட்டு விநாயகனை வைத்ததின் மேல் சிங்கென்றுதே.

361. ஓதவே ஓம்றீங் உங்மங் சிவகௌ தேவாய நமவென்று ஓதிடவே லச்ச முரு மண்டலந்தானப்பா
ஓதுவது அனந்துள்ளெழுத்தைப் பற்றி உத்தமனே வாசிதனை அடக்கி உள்ளே ஓதிடவே
சரிதேயொடு கிறிகை மார்க்கம் உத்தமனே யோக சித்தி ஞான சித்தி
தீறவே யெட்டெட்டுஞ் சித்தியாகும் சிவயோகங் கைக்குள்ளே சிக்கிப் போச்சு.

362. போச்சென்ற சித்தரெல்லா மெச்சிக் கொண்டு புகள்ந்து கொண்டு சகல சித்தங்
கை யிய்ந்து
ஆச்சென்ற சித்தருக்குச் சித்தலுவா யறிதான வெள்ளெருக்குத் சிவ மூலியப்பா
தேச்சென்ற யிம்முறை தானுஞ் சொல்லார் சித்தர்கள் தான் செய்யுகிற முறையிதப்பா
நாச்சென்ற வெள்ளெருக்குத் தயிலந் தன்னில் ரச நீரும் நவச்சாரங் கட்டி போமே.

363. போமென்ற நவச்சாரந் தன்னை வாங்கிப் புகளான தயிலத்தில் பூசிப் பூசி
தேமென்ற யொரு நாள் ரவியில் வைத்து சிறு புடமாய் வைத்தெடுக்கச் சாறங் கட்டும்
மானென்ற சாரத்தால் செய நீரும் அறுபத்தி நால்ச் சரக்குங் கட்டலாகும்
ஆமென்ற சூதகத்தைக் கல்வத்திட்டு அரைத்தந்தத் தயிலத்தால் வில்லை கட்டே.

364. கட்டியே ஓட்டிலிட்டு மேலோடு மூடி புடம் போடச் சூதகமது நீறுமப்பா
நீட்டியதோர் தயிலத்தில் சொல்லக் கேளு நிசமான புனுகு கோரோசினையுங் கூட்டி
காட்டி நீ காருவின் பாலாலாட்டி கருவென்ன சுக்குலமுங் கூடக் கூட்டி
தெட்டியே தயிலத்தி லொக்கப் போட்டு திலதமிடச் செகமில்லா வசியமாமே.

365. ஆமென்ற தேசியிலே அனேக வித்தை ஆறந் தான் சொல்லார் களப்பா கேளு
காமென்ற தேசியென்ன கடைப் பறப்பு கூவறியார் மானமபர்களே கழுதை யென்பார்
தாமென்ற யொரு பிறப்புக் கடைந்து போச்சு காசினியில் மறுபிறப்பு யில்லையப்பா
தேமென்ற தேசி யென்றுல்ச் சிவந்துக் கொக்கும் தேகமென்று சித்தர் செப்பினரே.

366. செப்பினர் தேசியுட வித்தை கேளு திறமான பாசாணம் அறுபத்திலும் செப்பி
செப்பிலல் சுத்தி செய்யத் தேசி நீரும் சிறப்பான அன்னீரில் புண்ரிட்டு
நப்பியே கலக்கியந்தத் தெளிவை வாங்கி நலமாகச் சொல்லிய தோர் சரக்கெல்
லாந் தான்
செப்பியே கடுஞ் சுத்தி யாகும் பாரு செப்பறிய யிதை விட்டால் செயமாகாது.

367. செயமாகத் தேசியுட கொளம்பு தன்னை சிறப்பான பூப்பிடத்தில்த் தயிலம் வாங்கி
கயமாகுங் காரிய்ய முருக்கிச் சாய்க்க கூடியாது குறுவாகும் வேதை கோடி
நயவான தேசியுட மண்டே தன்னை தயிலமா யிறக்கியதில் சாரம் போட்டு
செயமாக நாகத்தை யுருக்கிச் சாய்க்க கட்டிப் போம் தயிலத்தில் லிங்க மெழுகு.

368. மெழுகாகு மதின் பிறகு ஆறங் காணர் மெய்க் கார்ட்ட வித்து வேசனத்தை ஓதில்
தெளிவாகுங் கருங்கழுதை பித்து வாங்கி சிறந்தலாமணக்கும் பேய்ப் பீக்கன் வித்து

குளியான கருவை முன் தயிலம் வாங்கி குளியராஊ யோடுந்தான் சுக்குலமுங் கூட்டி
தெளிவான பித்துடனே சோத்துமத்தி திலதமிடச் சிவனுலங் காணுர் கேளே.

369. கேளப்பா அதிவிடைய கண்ணை வாங்கி கெடியாக உலத்தியே பொடியாய்ச் செய்து
வாளப்பா வெண்ணுடை விலக்குச் சீலை வாங்கி யந்தப் பொடி யூட்டித் திரியாப்பண்ணி
ஆருமே காறெள்ளின் தயிலந் தன்னில் லானைக் கண் சட்டியிலே யெறித்து வாங்கி
காருமே கொறைபடாப் பூனைக் கண்ணன் கையிலிடப்பாதாள முறிவி யோடும்.

370. ஓடுமே காசி முதல் கன்னியா குமரி வரைக்கும் உத்தமனே புதையலெல்லாம் வெளியாயித் தோணும்
ஆடுமே அஞ்சனங்கள் பார்க்கும் போது அணுகாமல் பூத வேதாளம் ஓடும்
யேடேணியிருமலமும் பன்றி விட்டை யிடை பாகம் றன்டும் ஒன்ருய் தயிலம் வாங்கி
ஓடே நீ சிவந்த கருசீலையிலே யட்டி யுலத்தியே திரியாகத் திரித்துக் கொள்ளே.

371. தரித்துமே தேசியுட கொழுப்பை வாங்கி திறமாக நெய்யுருக்கி தீபமேத்தி
மறித்துமே அய்யனெடு பிடாரி தர்க்கை ஆகாத பூத வேதாள மருண்டே யோடும்
பிரித்துமே பிறமராச்சித்தே பூத பில்லி பிசாசு தொட்டு மானிடரைக் கொட்டிக் கொண்டால்
நெறித்துமே தீப முகம் பார்க்கச் சொல்லு நெத்தி தனில் சிங்கென்றே அச்சறுத்தே யொட்டே.

372. ஒட்டவே பூதப் பிரேத வேதாளம் ஓடுமே நவக்கிரக தோசமெல்லாம்
மட்டில்லாப் பேயோடு பிசாசு மாறணமே செய்ய வென்குல் தகட்டில் வெ
தெட்டியே தேசியுடரெத்தம் வாங்கி திறன்டிருக்கும் பிறங்காலில் சட்டையுங் கூட்டி
ஆட்டியே அயங்காயந் தன்னைத் தொட்டு அரைத்துமே பூச உச்சாடினமு மாமே.

22-12-62

அயங்காயக் கருவு.

373. ஆமென்ற அயங்காயக் கருவைக் காணுர் அறிதான கடையிலே அயங்காயமென்பார்
தானென் அயங்காயப் பேரு கேளு தலைப் பிள்ளை நஞ்சோடு சமூலம் வாங்கி
ஆமென்ற வசம் புள்ளி கடுகு காயம் அப்பனே அரைத்ததின் மேல் பூசி
உலத்தியே பொடியாக்கு பேய்ச் சுரையின் குடுக்கையிலே அடையே.

374. அதந் அடைத்திட்ட மில்லாட்டால் தயிலம் வாங்கி அதற்கிது தான் நேத்தி மெத்த அப்பா கேளும்
அடைத்திட்ட முறக்கருவும் பறக்கருவு மப்பா பாரு ஆகாச வெளிக்குள்ளே அமர்ந்ததப்பா
கரைத்திட்டம் றெண்டும் ஒன்ருய்ச் செறித்துத் தானே கருவாகி யுருவாகி கடுங் குலாசி
பிறந்திட்ட பிண்டமப்பா அயங் காயந்தான் பேசாதே வெளி திறந்து சொல்லார் சித்தர்
நடைத்திட்ட கருவாலை வாதமாச்சி நவகோடி சித்துமிது நாவாடலாச்சே.

375. ஆச்சென்று வாய்ச் பேச்சுச் சொன்னதிலென்ன ஆராய்ந்து ஒவ்வொன்று யறியவேணும்
நீச்சென்ற நீச்சறிந்து நிலைக்க வேணும் நிலையாட்டால் வெறும் பேச்சி நிசமாகாது
நாச்செசர்க் குருவே யினமறிய வேணும் சத்துருவ மித்துருவு மறிய வேணும்
ஊச்சென்ற குரு முறையு செந்தூ ரத்தினமுங்குப்பி முறையு புடைத்திட்டம் யெறிப்புத்திட்டம்
காரச்சென்ற குகைத்திட்டம் யூத்து முறை வறிசை கை முறையாயஞுச்சி நீர்க் கருவுங் கேளே.

அஞ்சி நீர் விபரம்.

376. கருவென்ன கட்டு மித்துற ஒருக்கினத்துக் கெல்லா கருதியே முலைப் பாலும் பனச்சாறு வாய் நீறல்
குருவான சுண்ணமொடு நீத்தினத்துக் காதி கொடுஞ் சருக்கு வெண் கருவை சுண்ணம்பு நீர்

திருக வென்ன விட்டரைக்கில் செயமாம் மெத்த செந்தூ ரத்தினங் கேளு சுதங் கெந்தி
அருவென்ன மால்தேவி அப்பிரேகம் தாத்தம் மடியான சீலையொடு வெடியுப்பேரு
அருவென்ன யிவை யேளும் செந்தூ ரத்தாதி அல்லாட்டால் செந்தூ ரமாகா தென்னே.

செந்தூ ரங்களுக்கு குப்பித் திட்டம்.

377. ஆகவே செந்தூ ர வைப்புக் கெல்லாம் அனபான குப்பியுட முறையைக் கேளு
போகவே புண்டு குப்பி வாங்கி பகளான கழுத்து வரை சீலை செய்து
யேகவே குடத்து மேல்க் கழுத்து வரை யிரு விரல் கடையளவு செய்து நீயும்
நேகவே சீலை செய்து மட்டும் போக நீண்டிருக்கும் குப்பி வாயுடைக்கக் கேளு
தோகையே தீபநூலை சுத்தி காட்டி சுண்டிடவே கத்திரிப்பாத் துண்டித்துப் போமே.

378. போமென்ற குப்பி அரைவாசி மருந்து போட்டு நீ புதுச் சட்டி தன்னில் கேளும்
தாமென்ற அடி துளியுந் தள்ளி சட்டியில் நால் விறக்கிடை தான் மணலையிட்டு
ஆமென்ற குப்பி யதின் மேலே வைத்து அதின் மேலே மணல் கொட்டி அழுத்தி நன்றாய்
ஓமென்ற குப்பிக்கு கழுத்து மேலே யிரு விறக்கிடை தெ ---
கோமென்ற தனச் செந்தூ ரமான வளப்பு பகலக் கொண்டு குப்பி வாய் மூடாதே
சிலாகை யிட்டுப் பாரு
வாமென்ற ****வளப் பகலக் கொண்டு குப்பி வாயே மூடே.

379. மூடியே வாலுகையின் மேலே யெத்தி முசியாதே ஒரு விறகு தீபமாகும்
நாடியே யிரு விறகு கமலமாகும் நால் விறகு காடாக்கினி யாகும்
சாடியே விறகுண்ட திட்டங் கேளு சாண் நீளரெண்டு
காடியே புடத்திட்ட மென்ன கேளு காட்டெருவாம் புடமொன்று காடையாகும்
பாடியே மூன்றெருத்தான் கவுதாரி யாகும் பத்தெருத் தான் குக்கிடமாம் பறிந்து கொள்ளு
நாடியே அன்பரதெருயேறு மாகும் நலமான நூ றெருத்தான் கெசபுடமுமாச்சே.

யெறிப்புத் திட்டம்:-

380. புடமான மூகை திட்டஞ் சொல்லக் கேளு புகளான கழுதை லத்தி பலமிரண்டு
வாட்டமாறு மிகுக்கு சீலை சுட்ட சாம்பல் வகைக்கிரண்டு பலமாகு களி மண்ணிருகு
ஆடமான கடுக்காயின் கஷாயம் விட்டு அமரவே ஆட்டி மை போல் மூகை தான்
பண்ணு
மடமான மேல்ச் சில்லு மதிலே பண்ணும் மத்த மூகை யுருக்கினத்தில் பலமாகாதே.

381. பலமாகும் அன்ன மென் உய்த்துமே கிண்டு காமசங் களத்து யுருகியே வெள்ளி
பொன் போலே கண் விட்டோ
கத்துமே கருவெல்லா வெளியாய்ச் சொன்னேன் கருவாளி யரளக் கால் கண்டு பாரு
செய்த்துமே சித்தருட நூலே யெல்லாம் திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச் செசின்னேன்
பைத்துமே ஆயிரத்தைக் சுருக்கி நன்றாய் பாடினேன் முன்னூ ற்றிச் சிலவானமப்பா
உய்த்துமே கருவெல்லாம் வெட்ட வெளியாக ஒளியாமல் சத்தியமாய்ச சொல்லிப்
போட்டேன்
கைய்த்துமே சிறு புள்ளை முதலாயுள்ள கருவறியதோர் மூடர்களுங் காணுவாரே:

வாருக கருவை யெல்லாம் வெளியாய்ச் சென்னேன் வாதமொடு வைத்தியமு வகையாய்ச
சொன்னேன்
கூறுன செந்தூ ர களங்கள் செய்நீர் குருமுடிக்கும் வகை யெல்லாங் குறிப்பாய் சொன்
னேன்
வாறுன அஞ்சனமுந் திலதஞ் சொன்னேன் வசியமொடு அளப்பு வித்தை மாறணமுஞ்
சொன்னேன்
ஆறுன ஞானமொடு வாசியோகம் அடங்கி நின்ற பூரணமு மறியச் சொன்னேன்
தேறவே வழலையுட கருவுஞ் சொன்னேன் செப்பினேன் கருக்கிடை சூஸ்திரந்தான்
முற்றே.

தெய்வ சகாயந் துணை செய்யவும். சப்பானிப் பட்டி. அப்பாவுக் கவுண்டன் எழுதினது.
இதைக் காணாமல்க் கொண்டு போகக் கூடாது.

16.11.62.

தாளக பற்பம்.

தாளகத்தை வாங்கிச் சுண்ணம்புலே சுத்தி பண்ணி மருள்கத்தாழைச் சாறு வார்த்தரைத்து ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து காடைப்புடத்தில் போடவும். இரண்டாவது கும்கோவைச் சாறு வார்த்தரைத்து முன் போலப் புடம் போட நீராம். இது உத்தமம்.

நாகசெந்தூரம்.

நாகம் பலம்.க, யிலுப்பை நெய்யில் பத்து தரம் உருக்கிச் சாய்த்து பிற்பாடு அயச் சட்டியில் போட்டு நேராக அயக் கறண்டி கொண்டு முன் போல் நெய் தடவி வறுக்கவும். வறுக்கிறதுக்கு மேல் பொடி. வறையலுப்பு படி அரை பொடி செய்துக் கொண்டு கெந்சங் கொஞ்சம் போட்டு வழக்கப் பொடியானதுக்குப் பிறகு நாயுருவு சமூலம் கூடித்துப் போட்டு வழக்கச் செந்தூரமாகும். பணவிடை செந்தூரம் அனுபானத்தில் கொடுக்கவும். தீரும் வியாதி:- காசநோய்கள், குன்மம், எரிகுன்மம், காசிப்புண்ணை, சூலை பாண்டு, குடல் வெட்டு, மேக காச்சல், குளிர் மாந்தம், சுவாச காசம் காதை உள் மூலம், யென்பது வாதம் கிருணி மேகம் நோய்கள் பீலிகை காமாலை, சத்தி போகுங் காணே.

வெள்ளீயப் பற்பம்.

ஒரு பலம் வெள்ளீயம் வாங்கி வந்து நெல்க் கனமாய்த் தகடு தட்டி ஆடாதோடை வேர் பலம்.க, வெண் தொட்டிக் கிழங்கு பலம்.க, வேரையுங் கிழங்கையும் அரைத்துக் கீழு மேலும் தகட்டுக்குப் பூசி ஓட்டிலே வைத்து மேலோடு மூடிக் கவசங் கட்டிப் போட்டால் பற்பமாகும். தேனில் கொள்ளவும். வியாதி தீரும். ?

பவழ பற்பம்.

வேப்பிலையைத் அரைத்துப் பவழத்தில் பிசுகி ஒட்டிவிட்டு சீலை மண் செய்து ஒன்றரை முழ உரம் போட பற்பமாகும். பற்பத்தின் குணம். உள்மூலம், பிறமூலம் ஓடிப் போகும். பனிமூலக் கட்டியெல்லாம் போகும். கதருகின்ற விப்புருதி ஓடிப் போகும். இந்த பவழ பற்பத்துடனே உப்பு பற்பம் கால் பணவிடை சேர்த்து தேனில் வாங்க சன்னி வாதம் கபமுந் தீரும். க்ஷயந் தீரும். நீர்க்கட்டுப் போகும். தாகமூர்ச்சை தீரும்.

கல்நார் பற்பம்.

கல்நார் ஒரு பலம் சின்னக் கம்பியாய் குளிச்சி எலுமிச்சம் பழச் சாத்திரா றப் போட்டு மூன்று நாள் நாலு நாளும வைத்து யெடுத்து வேளைத் தலையை யிடித்துக் கவசங் கட்டி சீலை மண் செய்து கெசப்புடம். வெள்ளெருக்கன் தழையை யிடித்து கவசங் கட்டி கெசபுடம் போடவும்.

நெல்லிக்காய் தயிலம்.

சித்தா முட்டி பலம்.ருய, சிறுகீரை பலம்.ய, பொன்னுங்கன்னி பலம்.ய, சீதேவி செங்கள நீர் பலம்.ய, கையான் தகரை பலம்.ய, யிந்தக் கொன்னூத்தாறு பல யிடித்து எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு ஒரு வள்ளமாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு நல்லெண்ணை படி சா, நெல்லிக்காய் சாறு படி. சா, பசுவின் பால் படி. சா, கடைச் சரக்கு விபரம். மதுரம், கோஷ்டம், யேலம், சன்ன லவிங்கப் பட்டை, மஞ்சள், செண்பகப்பூ, கிராம்பு, அரத்தை, சதகுப்பை, சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், தேவதாரம் வெட்டி வேர், விலாமிச்சம் வேர், ச,ந்தனக்கிருய் வகைக்கு பலம் ௧ பாலிலரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து தலை முழுகவும். இதுக்குத் தீரும் வியாதி நேத்திர காசம், தலைவலி, கபால சூலை, கண்மாசுதல் இதிலுள்ள வியாதி யெல்லாந் தீரும். கண்ணில் தொண்ணூற்த்தாறு வியாதியுந் தீரும். கண் ஒளிவுண்டாம். தலை முழுகி நாளைக்கு புளி, புகை, ஸ்திரீசங்கம் இது முதலானதுங் கூடாது.

மண்டை வியாதிக்கு.

அமுக்கிலாங் கிழங்கு விதகனிடை.ய, சித்தவரைக் கிழங்கு, பனைங் கோவேகிழங்கு, பழுபாவைக் கிழங்கு, பனை மேல் புல்லுருவிச் சாறு ஒரை ஒன்னு, நன்னாரி வேர், செங்கத்தாரி வேர், கொளிஞ்சி வேர், சிலம்பட்டை, புரசம் பட்டை வகைக்கு விதகனைடை.க, ஓமம் விராகன்.க, வசம்பு விராகன்.க, ஈரவெங்காயம் கட்டி.உ, வருத்தாத்தின யெண்ணை படி.வ, போட்டு யெறித்து வடித்து இருவது நாளைக்கு காதில் குத்தி பஞ்சடைத்து வைக்கவும். இதில் தீரும் வியாதி மண்டை மாதவான், காதில் பிறந்த வியாதி, ஈளைமாதவான், செவிப்படுவான் வியாதி யெல்லாந் தீரும். கை கண்டது. தேனில் திரிச்சனம் போட்டு எரிச்சுக் குத்தவும்.

தாளக பற்பம்.

தாளகம் சுத்தி பண்ணி கருங்குன்றி மணத்தழையை அரைத்து கவசங் கட்டிச் சீலை செய்து குக்குட பிடம் போடவும்.

நிமிளைச் செந்தூரம்.

தகரம்.க, தாளகம்.ய, யிங்கிலிகம்.ரு, நாகம்.ய, ருசிருப் பொடி.ய, எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்து ஒட்டிலே வைத்து மூன்று சீலை மன் செய்து பத்துப் புடம் போடவும். செந்தூரமாகும். பத்துக்கு.க, கொடுக்கவும்.

வெள்ளி மேலே காமாலை, சோகை, பீய்க்கிருணி.

எலுமிச்சம் பழம் யஉ, கொண்டு வந்து நாலு கீத்தாக் கீறி சுக்கு, மிளகு, திப்பிலி, வாய் விளங்கம், அரப்பொடி, கொத்தமல்லி, இந்துப்பு, வழுயலுப்பு, பெருங்காயம், சீரகம் இது வெல்லாஞ் சரி கூட்டி அந்தப் பழத்திலிட்டு ஒரு கலசத்தில் வைத்து பழம் தெரியாமல் நல்லெண்ணை வார்த்து மேலோடு மூடிச் சீலை மன் செய்து அடுப்பில் புதைத்து எட்டு நாள் அடுப்பெறித்து ஒன்பதாவது நாளெடுத்து தினம் ஒரு கீத்துத் தின்னவும். உப்பு, புளி தள்ளவும்.

அத்தி கொழுந்து ஒரு பிடி, வாழைப் பிஞ்சு , கா்சுகட்டி விராகன்.க, களிப் பாக்கு விராகன்.க, யிதை மாம்பட்டைச் சாத்திலரைத்து உருண்டை பண்ணி வாழை மரத்துக் குளியிலூறின தண்ணீரில் கரைத்துக் கொடுக்கவும். வயிற்றுக் கடுப்புத் தீரும்.

பருத்தி விரைப் பொடி, நெல் பொரிப் பொடி, விளாவிரை, வில்வை விரை, சுக்கு, திப்பிலி, மிளகு, எலம், வேப்பம்பூ, சீரகம், இந்துப்பு இது வெல்லாஞ் சரி கூட்டி மாதளம் பழச் சாற்றில் தேன் கலந்து கொடுக்கவும். விக்கல் நிற்கும். கருங்குங்கிலியம், காவிக் கல்லும் பொடி செய்து எருமைப் பாலில் போட்டு கொதிக்க வைத்துக் கொள்ள பீய்க்கிருணி தீரும்.

சாறக் கட்டு.

சாரம் பலம்.உ, வெங்காரம் பலம்.உ, வெங்காரத்தே வெள்ளக் கருவு விட்டு அரைத்து சாறத்துக்கு கவசஞ் செய்து வாட்டி நாலு சேர் பூண்டு சட்டியில்ப் போட்டு சாறத்தே நடுவை வைத்து நாலு சாமம் எரிக்கவும். தென்னை மட்டை கொண்டு எரிக்கவும்.

வெடியுப்புச் சுண்ணம்.

வெடியுப்பு இரண்டு சேர், காட்டு முருங்கைப்பூச் சாறு விட்டு சுண்டின பிறகு காட்டு முருங்கை பட்டை சார் விட்டு வத்தின பிறகு உலர்த்தி.வாத நாருயணங் கொழுந்து மூன்று பங்கு உப்புக்கு ஒரு பங்கு கொழுந்து அரைத்து புகலைபிலை மேலே சுத்தி கொழுந்து ஒரு பங்கு வெடியுப்பு மூன்று பங்கு போட்டு அரைக்கவும். முழப் புடம்.

~~கவுக்கார பற்பம்~~.

Incomplete

சவுக்கார பற்பம் :-

சவுக்காரம், மாதளம் பழச் சாறு விட்டு அரைத்து வில்லை பண்ணி மூன்று நாள் நிழலிலுலர்த்தி மறுபடி இரண்டு நாள் வெய்யிலில் காய வைத்து சான் குழியில் சீலை மண் செய்து முழப் புடம் போடவும், பற்பமாகும். மறுபடி விஷ்ணு கிறந்தி சார் விட்டு அரைத்து முன் போல் புடம்

வங்கச் சுண்ணம் :-

வங்கம் சேர்.க, கொண்டு வந்து சுத்தாவைச் சாத்தில் உருக்கிச் சாய்ந்து பிறகு ஆவாரையிலை அரைத்து அதின் மேல் நெல்லிக்காயரைத்து அதி**லை அள் பண்ணி அந்த அடை மேல் அள் அவி மேலடை மூடி மூன்று சீலை செய்து கெசபுடம் போட பற்பம். அந்த பற்பமெடுத்து திரிகடுகு பொடிசெய்து நெய் லேகியம் பண்ணி பற்பம் பலம்.உ, போட்டு தேன் விட்டு லேகியம் பண்ணி கடலைப் பிரமாணம் உ,க, உருண்டை சாப்பிடவும். மேகம் இருபத்தொன்றுந் தீரும். புத்திரருண்டாம்.

அப்பிரக பற்பம் :-

அப்பிரகம் வேண்டியது கொண்டு வந்து பனை வெல்லம் வெடியுப்பு தண்ணீர் விட்டுக் கரைத்து அப்பிரகம் பிசறி அகலில் வைத்து சீலை மண் செய்து கெசபுடம் போட பற்பமாம்.

நாக பற்பம் :-

நாகங் கொண்டு வந்து கல்கண்டு புரைத்துத் தடவி ஒட்டில் வைத்து சீலை செய்து கெசபுடம் போட பற்பமாம்.

அண்டச் சுண்ணம் :-

அவித்த அண்டம் வேண்டுமளவு கொண்டு வந்து உப்புத் தண்ணீரில் போட்டு நிரையப் பழச் சார் விட்டு 40 நாள் வைக்கவும். அதை எடுத்துக் குடுக்கையில் போட்டுச் சீலைமண் செய்து கெசபுடம் போடவும் சுண்ணமாம்.

தாளக கட்டு :-

தாளகங் கொண்டு வந்து சுண்ணாம்பில் சுத்தி பண்ணி அதை யெடுத்து பிரம மருக்கிச்சிப் பூண்டு சாறு சுருக்கு கொடுக்கவும். பிறகு நீர் முள்ளிச் சாறு சுருக்கு கொடுக்கவும். கொடிவேலிக்கறந்தைச் சார் சுருக்கு கொடுக்கவும். பிறகு எடுத்து வைத்துக் கொண்டு சுரம், சன்னிக்கு கொடுக்கவும் பற்பமாக வேண்டுமானல் ரசதாளிப் பழச் சார் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து ஒட்டில் வைத்து சீலை மண் செய்து புடத்தில் போட பற்பமாகும்.

குருசு சுண்ணம் :-

குருசு கொண்டு வந்து வேலிப் பருத்திச் சார் வாங்கி துவைச்சு மூன்று நாள் வைக்க ஏழாம் நாள் வெய்யிலிலே வைக்க பற்பமாம்.

தாளக பற்பம் :-

தாளகம் வேண்டுமளவு கொண்டு வந்து உப்புத் தண்ணீரில் அண்டம் ஊறவைத்து அவை யெடுத்து தாளகமும் அண்டமும் சமன் கூட்டி கல்வத்திலிட்டு வெள்ளைப் பூண்டு தயிலம் விட்டரைத்து சின்ன வில்லை செய்து குடுவையில் வைத்து சீலை மண் செய்து புடம் போட பற்பமாம். ஈளை, இருமலுக்கு சுவாச காசத்துக்கு மந்தார காசத்துக்கு

ஈளை, இருமலுக்கு, சுவாச காசத்துக்கு, மந்தார காசத்துக்கு.

கெந்தகம் பலம்.ய, வெங்காரம் பலம்.ய, பலகறை பலம்.உய, பளச் சாறு விட்டு நேக அரைத்து வில்லை தட்டி அகலிலே வைத்து மூடிச் சீலை மண் செய்து கெசபுடம் போடவும் பற்பமாம். அதை எடுத்து மிளகு வெதுப்பி பொடி பண்ணி இருமலுள்ள பேருக்கு பற்பம் ஒரு பணவிடையும், மிளகு ஒரு பணவிடையும் தேனில் கொடுக்கவும். புளி யாகாது, நெய் பால் கூட்டிக் கொள்ளவும்.

கலை மான் கொம்பு பற்பம் :-

தேத்தான் விரையை அரைத்து கவசம் பண்ணி மண் சீலையிட்டு குக்குடப் புடமிட பற்பமாகும். சுத்தி முறை :- வீரசுத்தி, சுண்ணாம்புக் கல்லில் தொளாந்திரம், ரசகற்பூரம் சுத்தி கழுதை நீரில் வெங்காரம் சாணிப் பாலில் லிங்கக் கட்டு, உப்பு மண்ணைப் பழச் சார் விட்டு அரைத்து கவசங் கட்டி கத்தரியை மட்குக்குள்ளே வைத்து சீலை மண் செய்து குக்குடப் புடமாக வைத்து எடுத்து பார்க்க லிங்கம் உருகிக் கட்டும்.

நாபி கட்டு :-

மெதிபாகற்காய் கொண்டு வந்து நாலு படி சாறு, சாறு பிழிந்து வெள்ளை பாஷாணம் ஒரு கட்டியாய் நாலு விறகன் கொண்டு வந்து சுருக்கு கொடுத்து எடுத்து காவிக்கல் விறகன், மிளகு விறகனிடை இது மூன்றும் ஒன்றாய்ச் சேர்த்து அரைத்துப் பாசிப் பயறு பிரமாணம் உருண்டை செய்து சர்வ சுரத்துக்கு அநுபானமறிந்து கொடுக்கவும்.

பல் சவுக்கு மருந்து :-

தேங்காய் கொட்டி, சாம்பிராணி மூன்று பலம், செருங்கொட்டை பத்துக் கொட்டை மூன்றும் போட்டுக் குழித் தயிலம் இறக்கி பல்லுக்குத் தேய்க்கவும். பல் சவு நிற்கும்.
(*இடையில் இரண்டு ஏடுகள் நோய்க் காரணம், நட்சத்திர பலன் கூறுகின்றது. பிரதி செய்யாமல் விடப்பட்டது)

பாஷாண சுண்ண முறை :-

சவுக்காரம் பலம்.க, வெடியுப்பு பலம்.க, இது இரண்டையும் கல்வத்தில் வைத்து ஆகாச தாமரை ரசம் விட்டு மை போலரை அரைத்து ஆனதின் பிறகு மறுபடியும் அந்த சாறு விட்டு அரைத்துக் கரைத்து ஒரு பானையில் விட்டு அடுப்பில் வைத்து எரிக்க யெண்ணெ பத்தி எரிந்சு சுண்ணமாம். ஆறவிட்டு பனியில் வைத்து காலமே சுறண்டி எடுத்துக் கொள்ளவும். அந்தச் சுண்ணத்தே கல்வத்தில் வைத்துப் பொடி பண்ணிக் கொண்டு வெள்ளைப் பாஷாணம் ஒரு கட்டியாய் வாங்கி வந்து அதுக்கு சுத்தி முலைப் பாலிலே ஒரு நாழிகை ஊறவைக்கவும். ஒரு சட்டியில் சுண்ணத்தே வைத்து நன்றாய் அமுக்கி சிறு அனலாக எரிக்கவும். பதம். அதை சுண்ணத்தே குச்சியினாலே உருகிப் பாயும். அந்தப் பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு ஆறின பிறகு பாஷாணம் கட்டிப் போகும். கட்டின பாஷாண இரண்டு எடையும் ரசம் ஒரு ரூபாயிடையும் கூட்டி முலைப்பால் விட்டு அரைத்து வில்லை செய்து சதிரக் கள்ளி சாம்பலிலே வைத்து ஒரு சாமம் எரிக்க சுண்ணமாகும். வெள்வங்கத்தே நீர் வாங்கும்.

வெள்ளி முறை :-

முள்ளித் தழை கொண்டு வந்து இடிச்சு இரண்டு படிச் சாறு பிழிந்துக் கொண்டு வெள்வங்கம் ஒரு சேர் கொண்டு வந்து அயக் கரண்டியிலுருக்கி ஏழு தரம் உருக்கிச் சாய்க்கவும். அதை எடுத்து எருக்கம் பால் அரைப்படி பால் பிடிச்சு பத்து நாளைக்கு ஊறப் போட்டு வெள்ளை விஷ்ணு கிறந்தி ஒரு பிடி பிடுங்கி வந்து ஊறப் போட்டான் பால் விட்டரைச்சு வங்கத்துக்கு கவசம் போட்டு கெசபுடம் போடவம் வெள்ளியாகும். கை கண்ட முறை.
* இந்த ஏட்டில் தாதன் லட்சணம் கூறும் பகுதி முனி பக்கம் விடப்பட்டது.

லங்கண நிதானம் :-

வாதமான சுரமாகில் செப்பு நாளே ஒன்பது நாள். சீதே தொந்த சுரமாகில் செப்பு நாளே பத்தாகும். மாதே சுரத்தின் குத்தம் வாறம் வருந்த வேண்டா மருந்து கொடே. தாக்கமும் பயமுந் தோர தாரத்தி சுமந்தோர் மெத்த மிக்கவாறிடத்தோர் பிள்ளை விஷமுண்டோர் பயமுமானோர். சிக்கெனக் காமத் தீயாலடி புண்டோர் சிறியோர் மூத்தோர். ரிக்கென மொழியாய் கேளாய் பிதற்கு லெங்கண மாகாதே.

குன்மம் இருபத்தொன்றுக்கு மருந்து :-

சத்தவரைக் கிழங்கு சிறு குறிஞ்சான் வேரும், நன்னாரி வேர், பெருமரத்தின் வேர்,

அபெபெங் கிழங்கு, ஆதண்டன் வேர், பிரமி வேர், சிறுகிழா வேர், காட்டு மல்லிகை வேர் சத்திச் சாறணை வேர், மூக்றட்டே வேர், உத்தமதாளி வேர், கொவேலி வேர், செங்கத் தாரி வேர், மிளகரணை வேர், நத்தைச் சூரி வேர், களக் கொடி வேர், சிறுகுறட்டே வேர், இனி கடைச் சரக்கு:- சுக்கு, மிளகு, வெள்ள வெங்காயம், கருஞ்சீரகம், சன்னக சாலே, கடுகு, இந்துப்பு, நேர்வாளம், எறப்பன்னிக் குடல், சீனக்காரம், நவச்சாரம், கல்லுப்பு, செங்கொட்டை அச்சி, செங்கொட்டையைக் கருக சுடவும். நேர்வாளங் கொட்டையை நச்சி போக்கவும். சேர்க்கிற வகை. காட்டு மருந்து வெவ்வேறுக வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். பிறகு இரண்டு மருந்தும் ஒக்கக் கலந்து கொள்ளவும். வியாதிக்குத் தக்க அனுபானம் கருப்புட்டி முன் தின்று பிறகு ஒரு வெருகடிப் பிரமாணம் உள்ளே கொள்ளவும். பத்தியம் உப்பு; புளி தவிர்க்கவும். முருங்கைக் காய், அவரைப் பருப்பு, பசுவின் பால், நெய் பத்தியம். இந்த மருந்து தின்ன உடனே ஒரு சேர் வென்னீர் தண்ணீர் குடிக்கவும். இதில் தீரும் வியாதி வாத குன்மம், வலிகுன்மம், எரிகுன்மம், ஓங்கார குன்மம், வாந்தி குன்மம், சத்தி குன்மம், இந்த குன்மம் சோகை குருவே நீரேம்பல், சீறக் கிருவே, பெரு வயறு, வுறுவே வெப்பு பார்வை, குடல் வாதம், மலிக்கவுசை, சூலை நோய், பருவறே, குளிசை குடல், விப்புருதி ஆக வியாதி இருபத்தொன்றும் தீரும்.

கோசல லேகியம்:-

கோசலம் படி.உ, அதை நாழியாகக் காய்ச்சி அதில் பாவட்டை இலைச் சாறு, கழுதை லத்திச் சாறு, ஒவ்வொன்று படி கூட்டி நாழியாகச் சுண்டி கோசலத்தில் விட்டுக் குழம்பாகக் காய்ச்சி அதில் சுக்கு, வெள்ள வெங்காயம், ஓமம், மிளகு, சீரகம், இந்துப்பு, கடுகுரோகணி, பெருங்காயம், வசம்பு ஒவ்வொன்று விராகனெடை.ரு, கடுக்காய் விராகனெடை, ய, சுத்தி பண்ணின நேர்வாளம் விராகனிடை இது வெல்லாம் அரைச்சுக் காய்ச்சின லேகியத்தில் போட்டு கிளாவிக் காச்சி பதமா இறக்கி கொண்டு கழற்க் கொட்டை அளவு உதைய மூன்று நாளிடத் தீரும். தீரும் வியாதி மகோதரம், பாண்டுரோகம், காமாலை, சோகை வீக்கம், இது வெல்லாம் தீரும். வீக்கத்துக்கு மேல் வயறு கிளிஞ்சால் இந்த மருந்து ஆகாது. கை கண்டது.

கோசலக் குழம்பு:-

கோசலம் நாழியில் நூறு கடுக்காய் தட்டிப் போட்டு குழம்பான பதத்தில் இந்துப்பு, சதகுப்பை, சுக்கு, திப்பிலி, கடுகுரோகணி, சிவதை வேர் வகைக்கு ஒரு பலம் இடித்து சூரணம் பண்ணி குழம்பிலே தூவி வைத்துக் கொண்டு தினம் ஒரு களஞ்சி உள்ளே கொள்ளவும். இதில் தீரும் வியாதி வஊதபாகம், மகோதிரம், பாண்டுரோகம், பெருவயறு வெப்பு பார்வை, கணப்பு இவை யெல்லாந் தீரும்.

ரெத்த சீத கடுப்புக்கு மருந்து.

அபினி விராகன்.க, அதிவிடையம் விராகன்.க, சாதிக்காய் விராகன்,க, சாதிபத்திரி விராகன், சிரும்பு விராகன்.க, விளாம்பி சிசிறு விராகன்.க, இலவன் பிசிறு விராகன்.க, மாதழந்தோடு விராகன் .க. திரி நெல்லிப் பருப்பு விராகன்.க, ஊறின மாங்கொட்டை விராகன்.க, காசுக்கட்டி விராகன்.க, இது சேரைப் பொன்னெறமாக வறுத்துப் பொடி பண்ணி எருமைத் தயிர் வடிகட்டின தயிரிலே இரண்டு விரல் கொண்டது இரண்டு பிடி அளவு தயிரில் சாறித்துக் கொள்ளவும். பத்தியம்:- வாழைக்காய், முள்ளிப் பிஞ்சிஅ அத்திப்பிஞ்சி, ஆமையுடும்பு, காய்க்கெல்லா நல்லெண்ணை கூட்டவும். எருமை தயிர் கூட்டவும். கை கண்டது.

கிறந்திக்கு எண்ணெய்:-

பறங்கிப் பட்டை, திப்பிலி, திப்பிலி மூலம், வெள்வெங்காயம், கடுக்காய், தாளிக் காய், கொத்தமல்லி, வாய்விளங்கம், மிளகு, ஓமம், சங்கம் பட்டை, வெள்ளறுகு, சிவனார் வேம்பு, பொடுதலைச் சாறு வில்வப் பட்டை சின்னியிலைச் சாறு, சங்கங் குப்பி, செங்கத்தாறிப் பட்டை அதையெல்லாம் நல்லெண்ணையில் கடுகு பண்ணிக் கொடுக்கவும்.

ஏலாதி குளிகை:-

ஏலாதி குளிகை:-

ஏலம், லவுங்கப் பட்டை, பச்சிலை, அதிமதுரம், சந்தனம், சுக்கு, பொன் மிளகு யிலுப்பேப் பூவு, வேலிப் பருத்தி, சடாமாஞ்சி, கடுகுரோகணி வகைக்கு விராகனிடை.க, இளநீர் வார்த்து அரைத்து வண்டு பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்திக் கொள்ளவும். இளநீரை அவித்து இ த்துக் கொண்டு சர்க்கரை கூட்டி ஒரு உருண்டையிட சுரமும் தாகமும் உழலையுந் தீரும்.

கோப்பாட்டுக்கு:-

வாயிலெடுக்கிறது, வயிறு கனியும். மயங்கி வரும். இதுக்கு மருந்து. ஆட்டுப் புழுக்கையை சுட்டியிவிட்டு கருக்கி மோர் வார்த்து தெளிய விட்டு இறுத்து உப்பு போட்டுக் கொடுக்கவும்.

(வேறு)

கம்பிளி சுட்டு, சுண்ணாம்பு மஞ்சளுங் கூட்டி அரைத்து இள வென்னீரில் கொடுக்கவும். சோறு செரியாமல் வயிறு களிஞ்சால் சாட்டறணை வேர், முக்காவளை வேர், சுக்கு, வெள்ள வெங்காயம், கொத்தமல்லிகை வகை ஒன்றுக்கு விராகனெடை.க, ஒரு படி தண்ணீர் விட்டு ஆழாக்காகக் காய்ச்சி கொடுக்கத் தீரும்.

(வேறு)

வெள்வேலம் பட்டை, வசம்பு ஓமம் வகைக்கு விராகனெடை.உ, கூட்டி நறுக்கி பொன்னிறமாக வறுத்து நாளி நீர் விட்டு நாலிலொன்றுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும். கை கண்டது.

கவுசைக்கு மருந்து:

கவுசை வயித்தில் தோன்றி கிடக்கு கவுசை வயித்தில் திறண்டு கிடக்கு. உப்பு சமா இருக்கும். அதி இதுக்கு மருந்து:- நொச்சியிலை, தும்பயிலை, துளசியிலை, கஞ்சாங் கோரை, குப்பைமேனி, செருப்படி, கையாந்த கரை பொடித ளையிவை துவைச்சு சாறு கொண்டு வசம்பு, சுக்கு, கடுக்காய், திப்பிலி, மிளகு, வெள்ள வெங்காயம், இந்துப்ப பெருங்காயம் இவை கூட்டி அரைத்துக் கரைத்து குழம்பாகக் காய்ச்சி கழல்க் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு தினம் ஒரு உருண்டை வெறு வயத்தில் மண்டலங் கொள்ள கவுசை தீரும். கார்ப்பு, புளிப்ப தவிர்க்கவும்

காது கேளாததற்கு மருந்து:-

கடுகு தைலத்தியும், இஞ்சி சாறும் சீலையில் பிடித்துக் காதில் பிழியவும். காது கேட்கும். கை கண்டது.

சுரதோஷத்துக்கு வாந்திக்கு:

ஏலம் பனவெடை பொடி செய்து பச்சரிசி கழுநீரில் கலக்கிக் கொடுக்கவும்.

வாந்திக்கு மருந்து:-

மணத்தக்காளிச் சாறும், தேனும் கூட்டிக் கொள்ளவும். வாந்தி நிற்கும். நெல் பொறி கொத்தமல்லிகை பில்லையோடு இது கஷாயம் வைத்து கொடுக்க வாந்தி நிற்கும். வில்வப் பழச் சோறு சீரகம் பொட்டணங் கட்டி முகந்து பார்க்க வாந்தி நிற்கும்

குழந்தைக் கிறுணிக்கு மருந்து:-

மாதழங் கொழுந்து, சீரகம், நெல்லிப் பருப்பு, லவுங்கம் இந்த மருந்தை பசுவின் மோரில் இரண்டு நாழிகை அரைத்து மோரில் கொடுக்க நிற்கும்.

(வேறு)

குழந்தைக்கு வயிறு களிஞ்சால் பீய்க்கிராந்தி வடக்கே போன வேரை பிடுங்கி குளிசமாடி அரையில் கட்டத் தீரும்.

நீர் செறிப்புக்கு மருந்து:-

கத்தாழை வடக்கே போன வேரைப் பிடுங்கி வந்து எலுமிச்சங் காயளவு அரைத்து சந்தனமும் அவ்வளவு யரைத்து பசுவின் பாலில் கொடுக்கத் தீரும்.

நீர்கடுப்புக்கு மருந்து :-

நீர்க் கடுத்து விழும். இதக்கு கங்கங் கொழுந்து, ஆவரங் கொழுந்து, நீர்ப் பூலாங் கொழுந்து கூட்டிப் பசுவின் பாலில்க் கொடுக்கத் தீரும்.

செத்த பிரூணன் எழும்ப, அடக்க எழுப்ப மருந்து :-

பிரண்டை வேர், அவுரி வேர், சாறணை வேர், சிறு நீரிலரைத்து நசியம் பிழியவும். செத்த பிருணன் எழுந்திருக்கும். தப்பாது. தலை நோவு தீரும். ஒரு தலை நோவு தீரும்.

ஒருத் தலை வலிக்கு-முக வலிக்கு :-

சாட்டறணை கொழுந்து உள்ளி வசம்பு நறுக்கி நசியம் விட ஒருத் தலைவலி முகவலி தீரும். நெறிஞ்சி வேர், சிறு நீரிலரைத்து கற்பூறக் குளிகையில் நசியம் விடத் தீரும். பச்சைகற்பூரம் விராகன்.க, ஏலம் விருகனெடை.க, திப்பிலி விருகனெடை.க; இது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி இளநீர் வார்த்து அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலிலுணத்தி சகல சகல வியாதிகளும் அந்தந்த அநுபான மறிந்து எருமைத் தயிரில் கொடுக்கத் தீரும். கை கண்டது :

வீரிய விர்த்திக்கு :- .

சாதிக்காய் விராகனெடை.க, லவுங்கம் விருகனெடை.நஉ, நீர்முள்ளி விராகனெடை.உ, விலாரி விரை விருகனெடை.உ, பேய்ப்பீக்கன் விரை விருகனெடை.உ, முருர அபினி விராகனெடை.உ, முருங்கைப் பிசின் விராகனெடை.உ, முருங்கைப் பூவு படி.உ, பசுவின் பால் படி இரண்டு சட்டியிலே வார்த்து சீலை வேடு கட்டி அதின் மேலே முருங்கைப்பூ சீலை மேல் வைத்து மத்த மருந்தெல்லா சீலையில் பொட்டணங் கட்டி நடுவே வைத்து மேலே பூவு மூடி மேலே சட்டி கவுழ்த்தி சீலை மண் செய்து ஒரு வகை விறகு கொண்டு எறிய விட்டு பாலு பாகமாக சுவறின பின்பு இறக்கி மூடின் சமுலுந்தை மூன்று சாமம் அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுணத்தி வைத்துக் கொண்டு தினம் சரிதி ரெண்டு தேசகாலமும் சாப்பிடவும். போகிக்கும் போது சாப்பிடவும். இதில் தீரும் வியாதி தாதுவர்த்தினை, வாதமுஉஷ்ட்டி. தந்தெட்டு வாய்வுந் தீரும். வீரியமுண்டாம். இது கை கண்டது. சித்தர் மூலம். இச்சா பத்தியம்.

கிறந்திக்கு யெழுதீநீறு யெண்ணை :-

சங்கங் குப்பிச் சாறு படி.க, ஈர வெங்காயச் சாறு படி.க, இளநீர் படி.க, சித்தா மணக்கெண்ணை படி.க, இது வெல்லாம் ஒக்கக் கலந்து ஒரு சட்டியில் வார்த்து விடான் விறகு கொண்டு எரிய விட்டு பதமாகசுவறின பின்பு பறங்கி பட்டை பலம்.கு, இடித்துச் சூரணம் பண்ணி கூடப் போட்டு கிள்ளாவிப் பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு விநாயக பூசை பண்ணி தினம் அரைக்கால் படி மூன்று நாள் உள்ளுக்குக் கொள்ள பேதியாகும். இதில் தீரும் வியாதி:- எரிமூத்திரம். சீயப் பிரமியம், ரத்தப் பிறமியம், சுக்கிலப் பிறமியம், சிகை ரேகம். வெள்ளை விழுகிறது. கிறந்தி சூலை, உஷ்ண வெட்டை, மேக வெட்டை அஉஷ்த்தி வெட்டை, கெர்ப்ப வெட்டை இது வெல்லாந் தீரும். பத்தியங் கடும் பத்தியம். மறுபத்தியம் எழு நாள் தலை முழுகி உப்பு, புளி கூட்டவும். பத்து நாள் கிறந்தி பண்டந் தவிர்க்கவும். கை கண்டது..

வெள்ளை நிற்காமலிருந்தால். நன்னாரியிலையை மூன்று நாள் தின்னவும்.

(வேறு)

செம்பருத்தியிலையை யிடிச்சு சாறு படி.ரு, எருமைத் தயிர் படி.ரு, மஞ்சள் தூள் விராகன்.உ, போட்டுக் கலந்து குடிக்கவும்.

(வேறு)

சிறு புள்ளடியும், ஈர வெங்காயமும் இடித்து கம்மத் சேர்த்து காடியில் பிசைந்து வடி கொண்டு குடிக்கவும்.

(வேறு)

வேலிப் ~~பருத்~~ பாதியிலை கொண்டு வந்து எருமைத் தயிர் வார்த்து அரைத்து எருமைத் தயிரில் குடிக்கவும். இதுவெல்லாங் கை கண்டது.

வாய்வுக்குச் சூரணம்:-

கம்மன் சேர்த்துக் காடியில் ஈர வெங்காயத்தே யிடித்துக் காடியில் கலந்து பிசைந்து வடி கொண்டு குடிக்கவும். (வேறு) வாய்வு சூரணம்:- இந்த பொன் முசுட்டை காயம், ஏலம், சுக்கு, மிளகு, ஓமம், முத்திய முக்கா வேளை, முயந்திட பலமஞ்சாக சுந்திறமாகத் தானே சுரமது வந்து கொண்டால் வந்திடும் வாய்வுக் கெல்லாம் வளதடி போலதாமே.

சூலை குன்மத்துக்கு:-

கனல் மணி, வெள்ளுள்ளி, முருகன் கோல், வசம்பு தேறு மவ்விடை சுக்கு தானும் பிஞ்சுளக்காய்க் கொள்ள. குளவிடே யோசை போலே கொச்சியே கோதே வாதம், பழகிய சூலை குன்மம். பத்திடாதோடிப் போமே.

சளிக்கு:-

சுக்கு, சீந்தி யுடல், சிறுவழுதலை ஒக்கக் கொண்டிரு நாளி ஆக்கதாய் தக்க நீர்தானே குடித்திட மிக்கதோர் சளி விட்டோடு முண்மையே.

தேத்தாங்கொட்டை நெய்:-

மன்னிய தேத்தாங் கொட்டை மருவு சீரகம் நன்னாரி துன்னிய தண்ணி விட்டான் துலங்குங் கத்தாளைப் பாலும் மன்னியா தெங்கு நீர் நெய் பதித்தெரித்துள்ளே கொண்டால் அன்னியமாகு மேகம் அலைகடல் புகுவாதென்றே.

வாந்திக்கு மருந்து:-

புளியங் கொட்டையை அரைத்து வெந்நீரில் கொடுக்க வெள்ளோக்காளந் தீரும்.

வாத சன்னிக்கு மருந்து தயிலம்:-

அத்தனூர் தாமறியோ அதிபல விசாத்துக்கெல்லாம் உத்தம தாளி வேளை சாறுடன் முதலியாரும் மத்துள்ள யெருக்கன் மேனி வரத்துடன் ஒத்திட்டாக்கால் சித்தர்கள் வித்தே வெல்வார் தீதிலேலையுண்மை தானே.

வாத சன்னிக்குத் தயிலம்:-

நொச்சியிலைச் சாறு படி.க, வெள்ளாட்டுப் பாலு படி.க, நல்லெண்ணை படி.க, இவை யெல்லாங் கூட்டிக் கலந்து சூரிய புடம் வைத்து பிறகு எடுத்து எண்ணை நிறுக்கக் காய்ச்சி வடித்து சிவனீ யிட வாத சன்னி முதுகு இழுப்பு, கால் கை குடச்சல் இவை யெல்லாந் தீரும்.

அறிவு நினைவில்லாத மனிதருக்கு:-

நிலக் குன்னி வேர், சிறுவளை வேர் ஆயிலம் இந்த மூன்று பட்டையும் சுக்கு, சீரகம், மிளகு, நெல்லி வத்தல் இவை குளிர்ந்த தண்ணீரில் மூன்று சாமமரைத்து மஞ்சள் கட்டி மணியளவு குளிகை பண்ணிநிழலுணத்திக் கொள்ளவும். அறுபானம் சிறு குறுய் வேர் கஷாயம் வைத்து அதில் ஒரு குளிகை கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். அறிவு நினைவில்லாத மனிதருக்கு பழம் புளி, ஏலம், சுக்கு, சீரகம், அதிமதுரம், சந்தனம், பச்சைக் கற்பூரம், சர்க்கரை இவை ஒக்கக் கூட்டி புளிறட்டிப்பாக கூட்டி தண்ணீரில் குழம்பாக கரைத்து மூன்று விசை பிளிந்து தலைக்கு நன்றாய்த் தேய்த்து உள்ளுக்குங் கொடுத்து உள்ளங் கை உள்ளங் கால் தேய்த்து இப்படி மூன்று நாள் தேய்த்து மூன்று நாளுந் தண்ணீர் சொறியவும்.

அக்கறத்துக்கு குளிகை:-

அதிமதுரம் விறுகன்.உ, அக்கிலாக் காரம் விறுகன்.உ, கோஷ்டம் விறுகன்.உ, பேரீச்சம் பழம் வி.உ, முந்திரிப் பழம் விறுகன்.உ, கருஞ்சீரகம் விறுகன்.உ, கொத்தமல்லி விறுகன்.உ, வாய்விளங்கம் விறுகன்.உ, கண்டு பறங்கி விறுகன்.உ, சடாமஞ்சி விறுகன்.உ, கற்கடாசிங்கி விறுகன்.உ, கோரோசினை விறுகன்.உ அரத்தை விறுகன்.உ, சித்தரத்தை விறுகன்.உ, பூலாங்கிழங்கு விறுகன்.உ, சன்ன லவுங்கப் பட்டை விறுகன்.உ, தாளிச பத்திரி விறுகன்.உ, வில்லையோடு விறுகன்.உ, அமுக்கிறுங் கிழங்கு விறுகன்.உ,

பறங்கிப் பட்டை விறகன்.உ, பன்னை வேர், ஈர வெங்காயம் விறகன்.உ, பழம் புளி, பனை வெல்லம் இதுவெல்லாம் வகைக்கு விறகனெடை.உ, வேர் வகையெல்லாம் விளக்கெண்ணை தடவி விளக்கில் புடமிட்டு வென்னீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். கடச் சரக்கு வேரே வென்னீர் விட்டு அரைத்துக் கொள்ளவும். வேறு வகைக் கடச் சரக்கு ஒன்றாய்க் கூட்டி மூன்று சாமமரைத்து சுண்டைக் காயளவு உருண்டை பண்ணி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு திரிதோஷ தாகத்துக்கு மூலைப் பாலிலிடவும். தாப சுரத்துக்கு பாளி தண்ணீர் ஒரு படியில் அரை விராகனெடை சீரகம் பொடி பண்ணிப் போட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி ஒரு உருண்டை கூட்டிக் கொடுக்க தாப சுரமும் உழலையுந் தீரும். கை கண்டது.

விக்கலுக்கு:-

பூனைவேர் தனை போதவரைத்தொரு நாளி தண்ணீரில் நக்கிட வல்லியே, ஆனை நொந்தவன் வடந்திடும் விக்கலும் வேலையல் லென விரைந்து தானோடுமே.

கருங் கம்பிளி தன்னைச் சுட்டு பெருகுந் தேனில் பிசைந்து தான் வரிசை நாக்கில் வாங்கி தேய்த்திட பெருத்த விக்கலும் பிறப்பட்டோடுமே. பறந்த சாறனை வேருடன் முக்கிலா திருந்தி சுட்டி சமன் பொடி செய்துதான் உறத்ததே தேனிலுகந் தடவண்ணவே பறந்த விக்கலும் பத்தறு காணுமே. நீடு மாதனை நெல் பொரி சர்க்கரை தேடு திப்பிலி தேனில் குழைத்திட பீடை செய்த பெரு விக்கல் சத்தியும் ஓட ஓடத் துறத்தவலுண்மையே. வில்வைப் பத்திரி வேரோடு சர்க்கரை நெல்ப் பொறி, செல்ல வைத்த நீருள்ளி வெட்டொன்றாய் வெறித்துக் குடிக்கில் கொல்ல வந்த விக்கலும் சத்தியு மில்லையாம்றுமில்லை யமனு மிங்கில்லையே.

கொத்தமல்லி நெல் பொரி குருந்தமட்டி சுவிளம் ஒத்தே சுக்கு முத்தக் காசோங்கு திப்பிலி பேய்ப்புடல் வைத்த காசுடு சர்க்கரை வாறு நீரு நாளியுளக்கதாக்கிட சத்தி யென்றும் தோன்றுமோ சகத்திலுள்ள மாந்தரே இல்லை வெரிளாச்சது ஒரு சேரை சீலையில் முடிந்தது சீரக வசம்பு வகைக்கு காசிடை பொடி செய்து போட்டு நாளுளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி மூன்று திறங் கொடுக்கத் தீரும்.

வெட்டை மேல் இருமலுக்கு குளிகை.

பூசனி விரை பருப்பு, உழக்கு, நத்தை சாறனை, தீகை நெல்லிப் பட்டை, வெள்ளைப் பட்டை, கண்டங் கத்திரி, தூதுவளை, கருசிலாங் கண்ணி, அச்சல் பட்டை, திப்பிலி, ஓமம், சுக்கு, கொத்தமல்லிகை, கடுக்காய், தெசவறம், ஆக யங-ம் வகை ஒன்றுக்கு விறகனெடை.க, கூட்டி யினா வறப்பாய் வறுத்து அச்சல் பட்டை சாறு வார்த்து அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை பண்ணி அந்தி சந்தி இரண்டு நேரமும் கொள்ள வெட்டை மேல் இருமல் நிற்கும். பத்தியம் வென்னீருஞ் சோறு உண்ணவும்.

தேத்தாதி சாறத்துக்கு:-

..பெரு மரத் தோல், கோரைக் கிழங்கு, மாதளங் காய், தென்னம் பாளை இவை யெல்லாம் நறுக்கி சட்டியிலிட்டு நாழி நீர் விட்டு நாலிலொன்றாய் காய்ச்சிக் கொடுக்கவும். மூன்று நாளாறு பொழுது கொடுக்கவும். தேத்தாதி சாரந் தீரும்.

ரத்த பீனிசத்துக்கு:-

ஆவாரமொட்டு லே இருக்கிற பருப்பு எலுமிச்சங் காயளவு அரைத்து பசுவின் நெய் யில் வேக வைத்து இறுத்து ஆற வைத்து நாசியில் நசியம் விடவும் ரத்த பீனிசம், தீராய் பீனிசம், சமத்திறி பீனிசம் இவை தீரும். கை கண்டது.

பித்த சாங்கைக்கு முருந்து:-

வெள்ளை கல்நார் வேண்டியது கொண்டு வந்து பச்சரிசி கழுவின நீரில் மூன்று நாள் வைத்து எடுத்து மண்ணறு போக நன்றாய்க் கழுவி எருமைத் தயிர் வார்த்து அரைத்து சுண்டைக்காய் மறவாதி யுண்டை பண்ணி நிழலுலர்த்தி எருமை மோரு தெளிவில் கரைத்துக் குடிக்கவும் உஷ்ண காங்கை தீரும்.

பைத்தியத்துக்கு எண்ணை :-

கையாந்த கரைச் சாறு படி.க, நாபாலை சாறு படி.க, சீந்தித் தண்டு சாறு படி.க, நெறிஞ்சியிலைச் சாறு படி.க, நெல்லிக்காய் சாறு படி.க, பசுவின் பால் படி.க, நல்லெண்ணை படி.தரவு. இதுக்கு கடைச் சரக்கு அதிமதுரம், யேலம், கிரும்பு, செங்கழு நீர் கோஷ்டம், சிறுசுகப்பு, திப்பிலி, திப்பிலி மூலம் கசகசா, சாத்திர பேதி, செவ்வள்ளிக் கொடி, வெப்பாலை அரிசி கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய், பேய்ப்புடல், நன்னாரி வேர், வெட்டி வேர், விலாம் பிச்சம் வேர், தேவதாரம் நல்ல சந்தனம் இது வகைக்கு விராகனெடை.க, பொடி பண்ணிக் கொண்டு அந்த நாலு படி யெண்ணையும் சாறுங் காய்ச்சி மெழுகு பதமாய் வருகிற சமையத்தில் சூரணம் போட்டு பதத்திலிறக்கி வடித்துக் கொண்டு நேரம் ஒன்றுக்கு ஒரு கரண்டியுள்ளுக்கு கொள்ள. அந்தச் சக்கையை மேலுக்குத் தவளையிடவும். பத்தியம் பச்சரிசி, பச்சைப் பயறு, பருப்புச் கூடப் போட்டு காய்ச்சிக் கொடுக்கவும். இது கை கண்டது.

பித்த வெக்காளத்துக்கு :-

பூரகம், வெத்திலை, சீரகம் இந்த மூன்று வகையும் அரைத்துக் கொடுக்கவும். பத்தியம் கஞ்சி, புளி தவிர்க்கவும்.

பித்த விகாளத்து, பித்தக் காச்சல், வாய் பிதத்துகிறதுக்கு :-

கன்னி வேளைச் செடியே வாய் பேசாமல் வலக்கைக்குள்ளே மூன்று தரஞ் சுத்தி வந்து மூன்று கொழுந்து பிடுங்கி வந்து நோயாளி தலையே மூன்று சுத்து சுத்தி இறங்க வாங்கி தெருவில் போடவும். உடனே நிற்கும். கை கண்டது.

கல்லு மண்ணு அடைத்த நீர்ப் பாட்டுக்கு :-

முசுமுசுக்கை சாறு படி.க, கருமணல் பொன்னிறமாக வறுத்து இரை விராகனெடை சீரகம் போட்டு பொறிச்ச ? பிறகு சாறு வார்த்து பொங்க வைத்தால் முத்து தண்ணீர் போலே தெளியும். இறுத்து உள்ளுக்கு கொள்ளவும். பித்த மாறியும். கத்தாழை வேரு குப்பியிலி நன்றி வெந்த பிறகு யெடுத்து முருக்கித் தலையில் பிளிஞ்சி தேய்க்கவும். பிதத்தி சிலேத்தி தீரும்.

கல்லு மண்ணு அடைத்த நீர்ப்பாட்டுக்கு :-

அச்சமுள்ளு தளையைக் கொண்டு வந்து கம்பரிசியிலிடித்து பிட்ட வித்து நல்லெண்ணையும் வெல்லமுங் கூட்டி தின்னவும். இலந்தை பட்டையை அரைத்து வென்னீரில் குடிக்க நீர்ப்பாடு தீரும்.

வயத்தில் கருவுண்டானதுக்கு மருந்து :-

உதிர கட்டு மருந்து இது இரண்டு விதத்துக்கு ஆகும். வாழைச் சருவு சுட்டு சாம்பல் பனைவெல்லமும் இது இரண்டு அரைத்து தின்று வந்தால் உதிரமாய் வந்து விடும். இது கை கண்டது.

சகல நஞ்சுக்கு கஷாயம் :-

கருவேலம் பட்டை, சுக்கு, நறுக்கி சட்டியிலிட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி கொடுக்கவும். சீம்பால் தின்ன நஞ்சு தீரும். விளாத் தளையும், ஈர வெங்காயமுத் பொன்னிறமாகவே வறுத்து நாளி நீர் விட்டு யெட்டிலொன்றுக்கி இறுத்துக் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் மூன்று நேரங் கொடுக்கவும். நெய் நஞ்சு தீரும். கருவேலங் காயும், ஈர வெங்காயமும் நறுக்கி கம்மன் சேர்த்து தண்ணீரில் அரைக்கால் படி தண்ணீர் விட்டு பிசைந்து வடித்து கொடுக்க கோழிக்கறி, நஞ்சு தீரும். ~~ஆட்டுக் கறி~~

ஆட்டுக் கறி நஞ்சுக்கு :- முன் சொன்ன கோசலக் குறல்பு கொடுக்கவும். ஆட்டு கறி நஞ்சு தீரும். இது கை கண்டது.

குளிர் சுரத்துக்கு குளிசம் :-

தும்பைப் பூ, துளசிப் பூ, நொச்சிப் பூ, முருங்கைப் பூ, எருக்கம் பூ, சாறணைக் கொழுந்து, நார்த்தங் கொழுந்து, ஓமம், மிளகு, சுக்கு, வெள்ள வெங்காயம், பெருங்காயம், இவை யெல்லாம் விருகனைடை நிறுத்துக் கொண்டு அரைத்து முள்ளிக் காயளவு உருண்டை பண்ணி அந்தி சந்தி யிடவும். இந்தப் படி மூன்று நாளிடக் குளிர் சுரந் தீரும். குளிசம், குப்பை மேனி வேர், வாய் பேசாமல் பிடுங்கி வந்து குளிசமாடி கட்ட குளிர் விடும்.
(வேறு) கஞ்சாங் கோரை துளசி கய்யாந்த கரைதடிதனீ, நொச்சி விரை, வில்வ இல சிறந்தி, சங்கந் தழை, நாற் தேயிலை உத்தம தாளியிலை இவை யெல்லாஞ் சமன் கொண்டு படி தண்ணீர் விட்டு சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்வெங்காயம், ஓமம் இதுவெல்லாஞ் சமன் முடிஞ்சு போட்டு கால் படியாகக் காய்ச்சி இந்த மருந்து அரைத்துக் கரைத்து குடிக்கவும்.

குளிர் காய்ச்சலுக்கு மருந்து :-

ஓமம், சுக்கு, வெள்ளெள்ளி, அக்கிலாக் காரம், வாய்விளங்கம், சித்தரத்தை சிறு தேக்கு, கடுகுரோகணி, கிராம்பு, திப்பிலி, திப்பிலி மூலம், மிளகு சாதிக்காய், கொத்தமல்லி, சதகுப்பை, பேறரத்தை, நிலவேம்பு, தாளிச பத்திரி, கருஞ்சீரகம் இது வெல்லாந் தூளாக்கி உறிய தண்ணீர் விட்டு ஒரு படி தூள் போட்டு ஆழாக்காக காய்ச்சி கொடுக்கவும் குளிருங் காச்சலும் விட்டோடிப் போகும்.

தாப சுரத்துக்கு :-

நாற்தேயிலை ஒரு பிடி நாய் வேளைத் தண்டு ஒரு பிடி நாளி நீர் வார்த்து உழக்காக காய்ச்சிக் கொடுக்கவும் குளிரு மாறும். முருங்கை நாக்கு யிலை உருவிப் போட்டு தண்டே அவிஞ்சு வேக வைத்து தண்ணீரை இறுத்துக் கொண்டு மிளகு பழம் புளியிட்டு அரைத்துக் காய்ச்சி அந்தி சந்தி மூன்று நாள் கொடுக்கவும். குளிரு மாறும்.

தாப சுரத்துக்கு :-

யேலம், அதிமதுரம், செங்களநீர், கோஷ்டம், விலாம்பிச்சை, சமூலம் இலுவேலித் தண்டு, காலெழு, சுக்கு, சந்தனத்தின் கோது நன்னாரி பற்படாகம், முத்தகாசு, சாலவுடன் கூட்டியதில் பதக்கு தண்ணீர் விட்டு நாழி தாழ காய்ச்சி காலம்பற நீர் விரும்பி கொள்வீரகில் கடிதான தாப சுரம் கனிந்து போகும்.

பல் சூலைக்கு :-

அதிமதுரம், கோஷ்டமுடன் கொத்தமல்லி அழுக்கிரா வில்வமுடன் சித்தா முட்டி கெதி பெறவே சீனப்பாகு கறவிலாஞ்சி கெடிய தோரு கருஞ் சூரை வேருங் கூட்டி புதுமெபெற வைகக இரு நாழி நீர் விட்டு புகன்ற குடி நீரை வைத்தே உழக்குக யாகுல்-கதுமெ பெற இரு போது குடிநீர் கொள்ள கன்னியுள்ள பிணி கடிந்து போமே.

போமெமது நீர்ச் சூலை தந்தை சூலை யொடுந்தி நின்ற பல்லறனை கண்டமா லை யேகுமது பீனிசத்தோடுள்ள தெல்லாம் இரு காதி லெழும்பு மது வெளிச்சி யெல்லா தாது பெலங் கெட்ட தெல்லாம் ஓடிப் போகும். தறணியிற்ப் பொதிகை முனிதயிளால்ச். சொன்னுன் பாகயிது அறிந்து செய்யப் பிணியுமாறும். பறமனருளாலுரைத்த குடிநீருமே.

வாதம் என்பதுக்கு :-

நல்லெண்ணை இரு நாளியிலைக் கள்ளிச் சாறு இரு நாளி தாழை விழுது சாறு இரு நாழி வாத மடக்கி சாறு இரு நாளி ஆடாதோடைச் சாறு இரு நாளி இந்த அஞ்சு சமன் கூட்டி காய்ச்சி மெழுகு பதத்தில் வடிச்சு மேலும் பிடித்து உள்ளுக்கு இதைக் காசிடை அரை காசிடை கொள்ளவும். இப்படி இருபது நாளிடத் தீரும். வியாதி என்பது வாதமுந் தீரும். பத்தியம் பசுவின் பால் கோழிச் சாறு, துவரைப் பருப்பு தண்ணீர் வெள்ளாட்டு உப்புக் கண்டம் கெளித்தி மீன் கருவாடு சிறுகீரை குப்பை மேனியிலை கூட்டவும்.

வங்கு திராவகம் :- அஞ்சங் காச்சல் வெடியுப்பு பலம்.க, சீனம் இந்துப்பு பலம்ங், சிவக்க வறுத்த அன்னபேதி பலம்.எரு, வெளுக்க வறுத்த துருசு பலம்.உ, கறியுப்பு பலம்.உ, தாரம் பலம்.க, பூநீறு பலம்.க, வெங்காரம் பலம்.ரு, இது வெல்லா

அரைத்து மூன்று பங்கு செய்து ஒரு பங்கை குசாவில் அடைத்து மேலே சீசா வைத்து சீலை மண் செய்து தீ யெறிக்க திருவக மேலும். அதை எடுத்து மூன்று தரம் வைத்து எடுக்க வேண்டியது. அநுபான மறிந்து கொடுக்க சகல வியாதியுந் தீரும்.

தாளிச_வடகம்:-

தும்புருஉஷ்டகம் விராகனெடை.௪, கோஷ்டம் விராகனெடை.௪, அதிவிடையம் விராகன்.௪, ஊசை நீர் விராகன்.௪, கசகசா விராகன்.௪, குரோசானி, ஓமம் விராகன். சாரைப் பருப்பு விராகன்.௪, வசம்பு விராகன்.௪, வாய்விளங்கம் விராகன்.௪, கொத்தமல்லி விராகன்.௪, பொட்டிலுப்பு விராகன்.௪, வழையலுப்பு விராகன்.௪, கல்லுப்பு விராகன்.௪, மூங்கிலுப்பு விராகன்.௨, இந்துப்பு விராகன்.௪, ஓமம் புலம்.௧, சாதிக்காய், விராகன்.௪, அவினி விராகன்.௪, வனமூலிகை, செம்பெறண்டைக் கிழங்கு, புளிம்பிறண்டைக் கிழங்கு, கறிப் பிறண்டைக் கிழங்கு, கடைச் சரக்கு ஒரு பங்கும், பெறண்டை வகை ரெண்டு பங்காகச் சேர்த்து கொண்டு பெரும் மரத்துப் பட்டை தலைச்சு தண்ணீர் வாங்கிக் கொண்டு அந்தத் தண்ணீர் விட்டாட்டி வடகம் பண்ணிக் கொள்ளவும். தீரும் வியாதி குதக வாய்வு, முதலான பஞ்ச வாய்வுந் தீரும்.

அண்டவாதத்துக்கு_யெறண்டத்_தயிலம்:-

ஆமணக்கன் வேர், முடக் கத்தான் வேர், பெருமட்டி வேர், காட்டு முருங்கை வேர் சாறணை வேர், களிச்சிப் பருப்பு, கொட்டைக் கறந்தை வேர், சித்தர் மூல வேர் இவை வகையொன்றுக்கு பலம் பத்து போட்டு நாலு மரக்கால் நீர் விட்டு ஒரு மரக் காலாகக் காய்ச்சி இதில் பாவட்டஞ் சாறு விழுதிச் சாறு வகை ஒன்றுக்கு அரை நாழி சேர்த்து ஆமணக்கெண்ணை படி.௨, விட்டு அதில் பெருங்காயம் இந்துப்பு சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம் வகை ஒன்றுக்கு அஞ்சு காசிடை சேர்த்து கல்லுப்பு வெள்ளுள்ளி வசம்பு எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கரைத்து மெழுகு பதத்தில் வடித்து மூன்று காசிடை உள்ளுக்கு கொடுக்க பேதிக்கும் இந்தத் தயிலம் அண்டத்தில் தடவவும் அண்ட வாதந் தீரும்.

மேகம்_இருபத்தொன்றுக்கு_மருந்து:-

மாதேவிக் கிழங்கு பழுபாகல் கிழங்கு, கிளி மூக்குக் கிழங்கு அப்பேக் கிழங்கு, கோரைக் கிழங்கு, சங்கங் குப்பி, ஆடாதோடை கருநொச்சி வேர், பூமி சர்க்கரை கூடை திரவியம், திப்பிலி, அதிமதுரம், லவுங்கம், திப்பிலி மூலம் கொத்தமல்லி, சாதிக்காய், சாதிபத்திரி, யேலம் நல்ல சீரகம் கடுக்காய், வசம்பு ஒருக் கொட்டை பூடு ஈர வெங்காயம் இவை வகை யொன்றுக்கு விராக்னெடை.௪, இது வெல்லாம் அரைத்து பொடி செய்து முன் சொன்ன வனமூலிகையெல்லாந் தறித்து இடித்து வஸ்திர காயம் பண்ணி பச்சைக் கொட்டை யெண்ணை படி.௧, விட்டு தீபாக்கினியாய் யெறித்து பக்குவத்திலிறக்கி தினம் சறிதி வெருகடிப் பிரமாணம் கொள்ள மேகம் இருபது கிறிஷ்சப் பிரமியம், மங்க தாகம் அஷ்திசுரம் இது முதலானதுந் தீரும்.

சத்தி_குன்மம்_பதினைன்றுக்கு:-

நல்ல சீரகம் வீ.௰௨, யிந்துப்பு வீ.௰௨, சுக்கு வீ.௧ பெருங்காயம் வீ.௭, கருஞ் சீரகம் வீ. திப்பிலி வீ.௰௧, சர்க்கரை வீ.௮, வாய்விளங்கம் வீ.௪, கற்கண்டு வீ.௪, சதகுப்பை வீ.௪, மிளகு வீ.௪, செவ்வியம் வீ.௨, திப்பிலி வீ.௨, சித்திரை மூலம் வீ.௨, கருசிலாங் கண்ணி வீ.௨, இவை சூரணம் பண்ணி தேன் வார்த்து மத்திச்சு புதுப் பாண்டத்திலடைத்து வைத்துக் கொண்டு பதினஞ்சு நாள் தானிய புடம் வைத்து தான்றிக்காய் ம வாதி நாற்பத்தெட்டு நாள் கொள்ள தீரும் வியாதி காசம். சுவாச காசம், விக்கல் பதினைன்று, சத்தி குன்மம், தந்த வாய்வு பாண்டுரோகம், விஷபாகம் விஷ சுரும் இது முதலானதுந் தீரும்.

சாறணை_நெய்:-

சாட்டறணைக் கிழங்கு தாளி நீர் விட்டு பதக்கக் காய்ச்சி இதற்கு நெல்லிப் பருப்பு தானிக்காய், சித்தர் மூலம் தலைச் சுடி வள்ளி வேர், நன்னாரி வேர், தேவதாரம்

திப்பிலி யேலம், லவுங்கம்தற்கோலம் சிறு தேக்கு, கருஞ்சீரகம், முருங்கை வேர், புட்டில் ஓமம், ஒவ்வொன்று ஒரு களிஞ்சி கூட்டி பசுவின் பால் வார்த்தரைத்து நாளிப் பாலும், நாளி எண்ணெயுங் கூட்டி பதத்தில் வடித்துக் கொண்டு கால் மண்டலங் கொள்ள உள்ளங் கை கொண்டது கொள்ளவும். இதில் தீரும் வியாதி மூன்று மாறல், குலப்பு ஈளை, முழங்கால் சந்து வாதம் பெருவயிறு, பாண்டுரோகம் இவை யெல்லாந் தீரும். இந்த நெய் நசியம் பண்ண சுரதோஷந் தீரும்.

சலப்_பாண்டு_லேகியம்:-

நீர்ப் பூசனிக்காயில் நல்ல வெல்லம் போட்டு பிசைந்து வடித்த தண்ணீர் நாலு மரக்கால் ஆடாதோடைச் சாறு படி.க, நல்ல வெல்லம் இருவத்தைந்து பலம், பனைவெல்லம் இருபத்தைந்து பலம் போட்டு பிசைந்து காய்சி குழம்பான பக்குவத்தில் திரிகடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசாணி, ஓமம், அதிவிடையம், கடுக்காய், தானிக்காய், நெல்லிப் பருப்பு, கருஞ்சீரகம், வெந்தியம், கடுகுரோகணி, சுகை நீறு, வாய்விளங்கம், கொத்தமல்லி, சதகுப்பை, கஸ்தூரி மஞ்சள், நாய்க் கடுகு, வெடியுப்பு இந்துப்பு, வளையலுப்பு, சவுக்காரம், திப்பிலி மூலம், ஓமம், சித்திரமூலம், சிறுமூலம், காட்டுச் சீரகம், ஏலம், லவுங்கம், பச்சிலை, கச்சோலம், வெள்ளியிலி லோத்திரம் இவை ஒவ்வொன்றுக்கு மூன்று பலம் அதிமதுரம் பலம்.க, செங்கழு நீர் கோஷ்டம் பலம்.க, வெள்ளை வெங்காயம் பலம்.ரு, பெருங்காயம் பலம்.வ, இவை யெல்லாம் இளவறுப்பாய் வறுத்துப் பொடி செய்து இரண்டு படி தேன் விட்டு கிளறிக் காய்ச்சி கம்பி பதத்திலிறக்கி பழகின பாண்டத்தில் வைத்துக் கொண்டு தினம் சரிகி எலுமிச்சங் காயளவு இரண்டு நேரங் கொள்ள. இதில் தீரும் வியாதி உள் மாந்தை, சுரமாந்தை, யெரம்புருக்கி, யெலும்பெ பத்திய சுரம், அறிகுறல் நோவு, கெர்ப்பரோகம், எரிகுன்மம், நாய்ச் சூலை, பழஞ் சுரம், யெறிப்பு பிரமிய தாகம், நாவறச்சி, ஈறலைப் பத்தின வியாதி திமர் இவை யெல்லாந் தீரும்.

பித்தத்துக்கு_கலக்க_வகை:-

எலுமிச்சம் பழச் சாறு பிடி.க, பழைய புளிக்கொட்டைப் பாக்களவு, முசுமுசுக்கை வேர் பாக்களவு இது இரண்டு வகையும் முன் சொன்ன எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து சீனி சேர்த்துக் கொள்ளவும்.

(வேறு)

மலை நெல்லிக்காயைத் தவைத்து அரைப்படி சாறு வாங்கிக் கொண்டு அதில் சர்க்கரை சாறித்து மூன்று நாள் கொள்ளவும்.

(வேறு)

முத்தின் புளியங் காயை துவைத்து பசுக் கரந்தையுடனே விட்டுப் பிசறி வடித்துக் கொண்டு சர்க்கரை யிட்டு மூன்று நாள்க் கொடுக்கவும்.

சிற்சாதி_லேகியம்:-

இரும்பு பலம்.ருய, புளியிலை பலம்.ருய இவை போட்டு இருவது வள்ள தண்ணீர் விட்டு மூன்று வள்ளமாக காய்ச்சி அதின் மேல் கய்யாந்த கரைச் சாறு படி.ச, கீழ நெல்லிச் சாறு படி.ச, நெல்லிக்காய்ச் சாறு படி.க, கொடி வேலிச் சாறு படி.வ, பொன்னாங் கண்ணிச் சாறு படி.ரு, இவை விட்டு அதிரசம் பாகு பதமாய் காய்ச்சி அதில் மேல் சுக்கு பலம்.ரு, மிளகு பலம் அஞ்சு, திப்பிலி பலம்.க, தானிக்காய் பலம்.க, இந்துப்பு விருகன்.ரு, கடுக்காய் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, மஞ்சள் பலம்.க, இவை இடித்து வஸ்திர காயம் பண்ணி பாகில் கலந்து இறக்கி ஆற விட்டு மூன்று படி தேன் விட்டு கலந்து உள்ளங் கை கொண்டது கொள்ள தீரும் வியாதி பாண்டு காமாலை, விஷபாகம், சோகை இவை யெல்லாந் தீரும்.

கழல்_வாதத்துக்கு:-

திருயிலை வேர், சுக்கு, மிளகு, கடுகு, வெள்ள வெங்காயம், பழைய புளி, பனை வெல்லம், இசை வெல்லாம் அரைத்துக் கரைத்து மெழுகு நீர்ப் பண்ணி கொடுக்கவும்.

ஆருசிகத்துக்கு:-

,சீரகம் பலம்.க, கடுக்காய் இது இரண்டும் தண்ணீர் விட்டு மூன்று தரம் வேக வைத்து நீராத்திப் போட்டு பின்பு குப்பை மேனிச் சாறு படி.க, வேலிப் பருத்திச் சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, இந்த மூன்று வகைச் சாற்றிலும் முறை முறையாய் சுண்ட வேக வைத்து அதின் பின்பு எலுமிச்சம் பழச் சாறு விட்டு அரைத்து சுண்டைக்காயளவு உருண்டை செய்து ஆரோசிகத்துக்கெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றிலிடவும். ஆரோசிகந் தீரும்.

மலட்டு புழு விழ:-

துலுக்கெ வேம்புக்கு சனிக்கிழமை நாள் இரை யமுவுபிறக்கு யெடுத்து கம்பிளி நூலை டுத்து அதின் மேல் மஞ்சள் சிறடு சுத்தி அந்த துலுக்க வேம்புக்கு தீப தூபங் கொடுத்து பூசை பண்ணிக் காப்புக் கட்டவும். அதின் பின்பு அவள் முழுகின மூன்று நாள் காப்பை அவிழ்த்து அந்த மரத்தினிலையும் கூடக் கொண்டு வந்து துவைத்து அரைப் படி சாறு வாங்கிக் கொண்டு செக்கெண்ணெயும் சற்று சாறுடன் விட்டு முழுகி நிற்கிற இடத்தில் கொண்டு வந்து கொடுக்கவும். குடித்த பிறகாலே பிடியைப் போட்டு விட்டு பாராமல் வரவும். மூன்று நாள் சலவாதியே புழு விழும்.

விழுமிச மூலம் உரலில் துவைத்து சாறு பிடி.க, ஸ்ரீ காராட்டுப் பால் பிடிக், பாலில் ஊறப் போட்டு அதின் மேல் நாரமாகிறதற்கு முதலுக் கொடுத்து நாலு நாள் தொடுத்து நாலு நாள் இந்தச் சாறு உள்ளுக்கு கொடுக்கவும். அஞ்சாநாள் சதலவாதியிலே புழு விழும்.

கோடி ஜுரக் குளிகை:-

திரிக்குடு, நெல்லிக்காய், தானிக்காய், சமன் கூட்டி கரிசலாங் கண்ணிச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து குன்றி அளவு உருண்டை செய்துக் கொள்ளவும். அனுபானம் வாத சுரத்துக்கு திப்பிலிக் கஷாயத்திலிடவும். சேத்தும சுரத்துக்கு இஞ்சிச் சாற்றிலிடவும். தொந்த சுரத்துக்கு பஞ்ச கோல கஷாயத்திலிடவும். தோஷ சுரத்துக்கு முலைப் பாலில் வெதிப்பிடவும். அதிசார சுரத்துக்கு சிறும்பு கஷாயத்திலிடவும். இப்படி ஏழு நாள் குடிக்கத் தீரும். பத்தியம் இளங் கீரை, கீரைத் தண்டு, மிளகுங் கூட்டவும். உப்பு, புளி விடவும்.

சுரத்துக்கு கலிக்கம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, வாய் விளங்கம், லவங்கம், கொத்தமல்லி கை, பெருங்காயம் இது வெல்லாம் சமன் கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து நாலு சாமம் அரைத்து கம்பி உருண்டை செய்து நிழலுலர்த்தி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து கண்ணிலிட விடா வெதுப்பு குளிரு இது வெல்லாந் தீரும்.

சுரத்தின் மேல் நஞ்சேறினால் நஞ்சு முறிய:-

புளியம் பட்டையைத் துவைத்து ஒரு படி எருமை மோரில் பிசைந்து வடிச்சுக் கொடுக்கும்.

(வேறு)

தேங்காயளவு புளியிலை தேங்காயளவு பொன்னாங்கண்ணியிலை பொடுமி வேர், ஆவாரங் கொழுந்து ஒரு பிடி சிறு கீரை வேர் இது வெல்லாம் ஒரு பானையில் போட்டு அஞ்சு படி தண்ணீர் விட்டு வேகவைத்து ஒன்றரைப் படி கஷாயம் நிற்க இறுத்து மூன்று நாள்க் கொடுக்கவும். எலுமிச்சம் இலை தண்ணீர் விட்டு வேவிச்சு கஷாயம் கொடுக்க நஞ்சு முறியும்.

காது நோக்காட்டுக்கு:-

சுக்கு, முத்தக்காசு, கோஷ்டம், வசம்பு, உள்ளி, திப்பிலி இந்துப்பு, வகைக்கு விராகனெடை.ங், கூட்டி அரைத்து நல்லெண்ணை ஒரு படி விட்டு எருக்கம் பழுப்புச் சாறு ஒரு சேரை விட்டு காய்ச்சி பதத்தில் வடித்து காதுக்கு மூன்று துளி விடவும்.

<u>கெற்ப கிரிகளுக்கு எண்ணெய்:-</u>

சங்கங் குப்பி யிலை கருநொச்சியிலை பூவரசு இலை, தவசி முருங்கையிலை வகைக்கு ஒ. (மேல் முடிவு இல்லை)

<u>வயிறு கட்டி இழுக்கிற பிள்ளைகளுக்கு:-</u>

வெள்ளைக் காக்கன் வேரவது, கருங்காக்கின் வேருவது கொண்டு வந்து அரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும்.

<u>வயிறு நில்லாமல் ஓடுகிற பிள்ளைக்கு:-</u>

சங்கங் கொழுந்து களிச்சிக் காய், மறிவாதி ரேணித் தளை, களச்சிக்காய், மறிவாதி இந்த இரண்டு வகையும் அரைத்து பசுவின் பாலில் கொடுக்கவும், வயிறு நிற்கும்.

<u>வலிப்புக்கு:-</u>

பேய்ப்பீக்கன் கடு கொண்டு வந்து விரை வாங்கி அதில் ஈரமுண்டு அந்த ஈளை எடுத்துக் கொண்டு வெத்திலையை சுருளாக சுருட்டி ஆள் அதிலே வைத்து வலிப்பு வந்த சுருணத்தில் இரண்டு நாசியிலேயும் ஊதக் குணமாம். கை கண்டது.

<u>பித்த வெட்டை அறுநீ முருந்துக்கு:-</u>

சுக்கு, சந்தனம், கற்பூரம், பழைய புளி, ஏலம் சர்க்கரை அதிமதுரம், நெல்லி முள்ளி இது எல்லாம் அரைத்து முசுமுசுக்கை சாத்திலரைத்து குழப்பி தலையிலே தேய்த்து உள்ளங் காலிலும் தேய்க்கவும். பித்த வெட்டை அறுநீ மருது இதுவெல்லாந் தீரும். கை கண்டது.

<u>பால் சுரக்க:-</u>

கடுகு அரைத்து புளிச்ச மோரில் கொடுக்க பால் சுரக்கும். இது கை கண்டது.
ஏலம், காவிக்கல், கருஞ்சீரகம் சமன் கூட்டி பொடி செய்து நல்லெண்ணெயில் சாறித்து நசியம் விடத் தீரும்.

கையான் க்கரை யிலை தவசி முருங்கையிலை உள்ளி சமன் கூட்டி நறிக்சிப் பொட்டணங் கட்டி முலைப்பாலில் மூன்று துளி நசியம் விடவும். முலைப்பாலில்லாம இருந்தால் அந்த சாறு நசியம் விடவும். வடக்கே போற அருகன் வேறு வெட்டுக் கணுவு முறிச்சுக் கொண்டு வசம்புக்கு கடலை மாத்திரம் ஒரு திரி கூட்டி நறிக்சிப் பொட்டணங் கட்டி முலைப் பாலில் மூன்று துளி நசியம் விடத் தீரும். எலுமிச்சந் தளையே, ஈருள்ளியும் நறுக்கிப் பொட்டணங் கட்டி முகந்து கொண்டிருக்க உடனே நிற்கும்.

<u>நாகப்பூச்சிக்கு மருந்து:-</u>

இலைப் பொரசை மூன்று விரை செம்மண்ணில் புதைத்து மறுநாள் காலம்பற எடுத்து தோலும் முழையும் எடுத்துப் போட்டு பருப்பை யெடுத்துக் கொண்டு செம்மண்ணு ஊறப் போட்ட தெளிவு எடுத்துக் கொண்டு அதை விட்டு அரைத்து கரைத்து முன்னே ஊஞ்சல் கறி தண்ணீர் கொடுத்து பிறகு மருந்து கொடுக்கவும் நாகப்பூச்சி செத்து விழும். கை கண்டது.

<u>சிறங்கு மருந்து:-</u>

நெல்லிக்காய்க், கெந்தகம் பொன்னரிகாரம், மயில் துத்தம், வாய்விளங்கம், கொத்தமல்லிகை, கருஞ்சீரகம் இவை பொடி செய்து எருமை வெண்ணெயில் கலந்து வெய்யிலில் வைத்து சர்வாங்கமும் பூசி சாயங்காலம் எருமை சாணியிட்டு தேச்சு குளிர்ந்த தண்ணீர் விடவும். இந்தப் படி மூன்று நாள் விடவும். சிறங்கு தீரும்.

செகை மிஞ்சி கிறந்தியாலும் மாறாப் புழுக்கலரிசி சோறு வடிச்ச கஞ்சியில் முள்ளிக் காயளவு எருமை நெய் கலந்து மூன்று குடிக்கத் தீரும்.

<u>பித்தத்துக்கு:-</u>

பித்தங் கண் சுழலும். கை காலெறிக்கும். மதி மயங்கி வரும். இதுக்கு தேத்தாம் பழம் வெந்நீரில் பிசைந்து கொடுக்க மெடுக்கும். பிறகு சிறு பயறு நனையப் போட்டு நீர் வடித்து சுத்த கருப்புக் கட்டி கலந்து குடிக்க பித்தந் தீரும்.

<u>குலை கிறந்திக்கு சூரணம்:-</u>

சூலை சிறந்திக்கு சூரணம் :-

பறங்கிப் பட்டை பலம் நாலு, சங்கவேர்ப் பட்டை களஞ்சி.ரு, செங்கத்தாரிப் பட்டை களஞ்சி.ரு, நிலாவரைப் பட்டை களிஞ்சி.ரு, முடக் கொத்தான் பொடி களஞ்சி ரு சேரக் கூட்டி இடித்து வஸ்திர காயம் பண்ணி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு இரண்டு வெரு கடிப் பிரமாணம் இரந்டு நேரமும் இள வெந்நீரில் கொள்ளவும். இதில் தீரும் வியாதி பதினெட்டு சூலையும், பதினைந்து சிறந்தியும், பிறமேகந் தொன்னூற்றாறுந் தீரும். உப்பு, புளி தளிர்க்கவும். இளங்கீரை, அவரைப் பருப்பு, கோழிக் கறி கூட்டவும். பத்து நாள் தின்னவும். பின்ற் பிறகு கோழி முட்டை வெள்ளைக் கருவ கூட்டவும். உள் வெக்கை எடுத்து பசுவின் பால் பசுவின் நெய் கூட்டவும். இது கை கண்டது.

வயிறு நோவுக்கு :-

வேப்பீர்க்கு, கருவெப்பீர்க்கு; மிளகு; சீரகம் சட்டியிலிட்டு ஒரு படி தண்ணீர் விட்டு எட்டொன்றுக்கி சீரகம் வெள்ளைச் சீலையில் பொட்டணங் கட்டி மேலே நெய் தடவி விளக்கில் பொரித்துக் கரியாக்கி கொள்ளவும். அந்த கஷாயத்தில் சின்னத்தில் வார்த்து எருமை வெண்ணை சீலையில் கட்டி கஷாயத்தில் துவைத்து புளிந்த கீரைக் கறி கலந்து கொடுக்கவும். கோவைச் சாறு, சீரகமுங் கொடுக்கவும். சீரகம் செம்மண்ணு துணியில் முடிந்து விளக்கெண்ணெயில் துவைச்சு விளக்கில் பொருத்தி சுட்டு சாம்பலாக்கி இள வெந்நீரில் கொடுக்கவும். உப்பு சட்டியில் போட்டு சாம்பலா வறுத்து இறக்கி வைத்துக் கொண்டு அந்த சட்டியில் ஒரு சேரை தண்ணீர் தெளித்து மேலே முறம் மூடி வயிறு நோகிற விடம் முறத்தின் மேல் வைத்து படுத்துக் கொள்ள அந்த ஆவி படும். வயிறு நோவு உடனே நிற்கும்.

ஏலாதி சூரணம் :-

ஏலம் விருகனெடை.ச, சடாமஞ்சி விருகனெடை.ச, லவங்கம் விருகனெடை.ச, குறக்குலி விருகன்.ச, கொத்தமல்லி விருகன்.ச, பேரீச்சம் பழம் விருகன்.ச, அதிமதுரம் விருகன்.க, நற்சீரகம் விருகன்.ச, கருஞ்சீரகம் விருகன்.ச, பெரிய நாக கேசரி விருக.ச, முந்திரிப் பழம் விருகன்.ச, நல்ல சந்தனம் விருகன்.ச, காட்டெருமை பால் விருகன்.ச, சாதிக்காய் விருகன்.ச, தான்றிக்காய் விருகன்.ச, நெல்லி வத்தல் விருகன்.ச, முடிவர்தம் விருகன்.ச, நெறிஞ்சி வேர் விருகன்,ச, விலாமிச்சம் வேர் விருகன்.ச, சாற்றணை வேர் விருகன்.ச, நிலப்பனைக் கிழங்கு விருகன்.ச, அமுர்த் சர்க்கரை விருகன்.ச, கடுக்காய் விருகன்.ச இவை இடித்து வஸ்திர காயம் பண்ணி இதுக்கு சமன் சர்க்கரை கலந்து நெய்யில் ஒரு மண்டலங் கொள்ள. இதில் தீரும் வியாதி பித்தம் பாண்டு, அஸ்தி சுரம், க்ஷயவியாதி, ஆலபித்தம், மூல வாய்வி, குன்மம், சுவாச காசம் பிரமியம் மேக பித்தம், உம்மாதம் ஆரோசிகம், காமாலை, மூத்திர கிச்சறம், உஷ்ணம், இவை யெல்லாந் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு, பசுவின் பால் சிறுகீரைத் தண்டு, கீரை பொன்னாங்கண்ணி, உப்பு இவை (மேல் இந்த ஏடு இல்லை. விட்டு விட்டோம் என்று ஒரு தொடர் வாக்கியம் உள்ளது)

சன்னிக்கு :-

பெண் பிள்ளைக்கு ஆண் பிள்ளை துடை ரத்தம் வாங்கி கண்ணில் போட சன்னி முறியும். சன்னி முறியாவிட்டால் இரத்தத்தில் வேலிப்பருத்தி பால் சமன் கூட்டி கண்ணிலிட முறியும். இதுவும் சுக்கு, திப்பிலி, ஓமம் பெருங்காயம், கருஞ்சீரகம், இந்துப்பு, வழுவழுப்பு வகைக்கு பலம்.க, உள்ளி பலம்.க, கூட்டி சூரணம் பண்ணி நல்லெண்ணை விட்டு பிசைந்து கொண்டு தினம் வெரு கடி தின்ன தீரும்.

எருக்கம் பூ, அரும்பு, முருங்கைப் பூ, அரும்பு, உத்தாமணிப் பூ, அரும்பு; சாட்டறணை அரும்பு, சுள்ளிப் பூ, முள்ளிப் பூ, நொச்சிப் பூ, கஷட்ச் சரக்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், வெள்ளுள்ளி இவை யெல்லாம் அரைத்து நாளி நீரில் கலக்கி எட்டிலொன்றாய்க் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நேரங் கொடுக்கவும் சன்னி தீரும்.

சக_சன்னிக்கு:-

நாள். எ, அல்லது நாள். நாள். யஉ, நாள். யரு, நாள். உக, நாள். உ., இந்தப் படி நாளொன்றறியவும்.

முக_சன்னிக்கு:-

மூக்கு பறமற வென்று புன்றுமல் முக வேர்க்கும். மூப்பிற நாற்பது தும்பல் பிறக்கும். இதுக்கு மருந்து:- திரிகடுகு, ஓமம், சமன் கூட்டி இள வறுப்பாய் வறுத்து சூரணம் பண்ணி இதில் ஊசிலம் பட்டை முத்தி சிவந்த பட்டையை இடித்து தண்ணீர் சாறு இரு நாளி பிளிந்து ஒளாவிக் காய்ச்சி சூரணத்தே ஆவி கிண்டி வேக விட்டு களிச்சிக் காயளவு உருண்டை பண்ணி நேரத்துக்கு ஒரு உருண்டையாக இரண்டு நேரம் ஏழு நாள்க் கொள்ள தீரும்.

பெரும்பாட்டுக்கு_மருந்து:-

உச்சி நேரத்தில் பிறந்தால் மஞ்சள் ரத்தம் கந்த்து விழும். கீழ் வயிறு நோவும். பித்தத்தில் பிறந்தால் மஞ்சள் நீத்தாவது சிவந்தாவது விழும். சுரம் வரும். உடம்பு எரியும். தாகமாகும். சேத்துமத்தில் பிறந்தால் வெறிரைத்தம் பெருகும். உடம்பு நிவு தின்று மதி முத்தியிருக்கும். இருமும். உடம்பு வெளுறும். இடுப்பு வலிக்கும். இதுக்கு மருந்து:- பழுத்த ஆவாரைங்காய் மாங்காயளவு இடித்து புதுப் பானையில் கழுநீர் சேர்த்து தண்ணீர் நாளி விட்டு பனியில் வைத்துக் காலம்பற யெடுத்து இறுத்து சீரகம் சர்க்கரை காசிடை கூட்டிக் குடிக்கவும். மூன்று நாள் குடிக்க சகல பெரும்பாடு உஷ்ணமுந் தீரும். செம்பருத்தி பூவை அரைத்து சமன் பசுவின் வெண்ணெ கூட்டி தின்ன உடனே நிற்கும். முசுமுசுக்கை யிலையை துவைத்து சாறு கொண்டு சற்று பனை வெல்லங் கூட்டி குடிக்க பெரும்பாடு தீரும். கை கண்டது.

இடுப்பு__வாதத்துக்கு:-

சிறு மரிஞ்சான் வேர், சங்கம் வேர், தவசி முருங்கை வேர், முருங்கைப் பட்டை பெருங் கிழங்கு சமன் கூட்டி காற்படி கம்பரிசி இடித்து புட்டு பண்ணி பனை வெல்லம் நெய் கூட்டி தின்னத் தீரும். அல்லது இந்த மருந்து எல்லாம்நறுக்கி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி குடிக்க கன்னி வகை வாத வகை உண்டான வாய்வு தீரும். சாறணை வேர் நறுக்கி நாளி நீர் விட்டு இதில் திரிகடுகு உள்ளி ஓமம் பெருங்காயம் வகைக்கு அரை விராகனிடை கூட்டி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி குடிக்க சகல வாதமுந் தீரும்.

பொடி தலை யென்று கருப்புக் கட்டி, மிளகு, உள்ளி சமன் கூட்டி இடித்து அஞ்சு நாள் தின்ன தீரும். கொடைக் கொத்தாயிலை விளாங்காயளவு, உள்ளி கட்டி.ச, கூட்டி நறுக்கி வறுத்த தாத்தின் விளக்கெண்ணெ பிடி:ரு விட்டு காய்சி கசடு உள்பட தின்ன தீரும். நாய் வேளை சமூலம், தேங்காயளவு இடித்து இரு நாளி நீர் விட்டு அயங்காரமு முடிந்து போட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இறுத்து இதில் முடிந்த அயங்காரத்தே அரைத்து கரைத்து குடிக்கத் தீரும். நாருயுணக் கள்ளியும் இதே முறைக்கு பண்ணவும்.

மிளகறணைப் பட்டையும் இதே முறைக்குப் பண்ணவும். குசவன் சூளையில் வெந்த சட்டை பொடி பண்ணி இரு நாளி நீர் விட்டு யெட்டொன்றாய்க் காய்ச்சி இதில் கொடிக் கள்ளிப் பட்டை அவரை அளவு அரைத்துப் போடப் பொங்கும். இதை இறக்கிக் குடிக்க உடனே நிற்கும்.

ஊசித் தறத்திப் பட்டையை கம்பரிசியிலிடித்துபிட்டு பண்ணி சர்க்கரையாவது பனை வெல்லமாவது போட்டு நல்லெண்ணெ விட்டு தின்ன தீரும். கோதும்பை, அரிசி ஒரு படி யிடித்து நெய்யில் வறுத்து நெய்யில் தின்னத் தீரும்.

கீல்_வாதத்துக்கு:-

சாறணை வேர், திரிகடுகு, உள்ளி, ஓமம், பெருங்காயம், சமன் கூட்டி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி குடிக்கத் தீரும். காட்டு முருங்கைப் பட்டையை யிடித்து இருநாளி வெள்ளாட்டுக் கோமயம் விட்டு நீர் சுவற யெறித்துக் கட்ட கீல்வாதம் முழங்கால் வாதம், மூலிவாதம் தீரும்.

கொறங் காட்டுக் கொளிஞ்சியை யிடித்து சிறுநீர் விட்டு வறுத்துக் கட்ட வலி நிற்கும்.

ஒரண்ட வாதத்துக்கு மருந்து :- முயிளம் பட்டையைப் பாக்குடன் தின்னத் தீரும். கோழி அவ்வாரைச் சாற்றில் பெருங்காயம் அரைத்து எட்டு நாள் குடிக்கத் தீரும்.

மாவிலங்கம் பட்டையை வெள்ளாட்டு பாலிலரைத்து நல்ல வெல்லங் கூட்டி நாலு நாள் குடிக்கவும். மிளகு பலம்.க, உள்ளி பலம்.க, கழல் பருப்பு:உ, முடக்கொத்தானிலை கூட்டி நெய்யிலெறித்துத் தின்னத் தீரும். பத்தியம் வெந்நீருஞ் சோறும்.

துளசி சமூல மிடித்து முன்னுள் நீர் விட்டு பிசைந்து வடித்து எலுமிச்சந் காயளவு சுண்ணாம்பு போட்டு தெளிய விட்டு இறுத்து அரைப்படி குடிக்க மூன்று நாளையில் தீரும்.

எருக்கம் பூவு, அரும்பு மூன்று வெற்றிலையில் சுருட்டித் தின்னத் தீரும்.

அவுரி வேரை அரைத்து வெந்நீரில் குடிக்கத் தீரும். கழல் கொட்டியிலையை நசுக்கி சிறுநீர் விட்டு வதக்கி கட்ட வீக்கம் வாங்கும். வலி நிற்கும். சுழலாத்தியிலையை அரைச்சுக் கட்ட வீக்கம் வாங்கும். வலி நிற்கும்.

சர்வாங்க வாதத்திற்கு சட்டியைக் காய வைத்து தமுதளைச் சாறு உழக்கு விட்டு கொதிக்கச்சே நல்லெண்ணெ கால்படி விட்டு வடித்து செம்பனை வெல்லம் கடித்துக் கொண்டு மூன்று நாள் குடிக்கத் தீரும்.

<u>மேலுக்கு_அவளை :-</u>

எருக்கம் பால் இலைக் கள்ளி எதக்கி புளிச் சாறு நொச்சியிலைச் சாறு வேளையிலைச் சாறு வெள்ளாட்டுப் பன், நல்லெண்ணெ வகைக்கு படி.ரு, கூட்டி காய்ச்சி திரண்டு வருகையில் உள்ளி பலம்.க, வசம்பு பலம்.ரு நறிக்கிப் போட்டுத் துளாவிக் கலையத்தில் இரண்டு பணவிடை பெருங்காயம் நறிக்கிப் போட்டு யெண்ணெயை வடித்து சறுவாங்கமும் பூசவும். வென்னீர் விடத் தீரும். வாத நாராயணத் தழையை யிடிச்சது தேங்காயளவு வென்னீர் விட்டு பிசைந்து வடித்துக் கொண்டு மிளகு வெள்ள வெங்காயம் அரைத்து கலக்கி நல்லெண்ணெ கூட்டி ஒக்க கலந்து குடிக்கவும். சறுவாங்க கிழங்கு கொண்டு வந்து மேல்த் தோல் சீவிப் போட்டு வெள்ளாட்டுப் பாலாவதல், பசுவின் பாலாவதல் வார்த்தரைத்து நெல்லிக் காயளவு அந்தப் பாலில் கலந்து குடிக்கவும். பத்தியங் கடூரமாகக் காக்கவும். இது கை கண்டது.

(*பக்க எண் இல்லாத ஏடு ஒன் இடையில் உள்ளது. அதனை இங்கே எழுதப்பட்டுள்ளது)

<u>*_தலை_பைத்தியத்துக்கு :-</u>

குப்பை மேனியிலை, ஈற வெங்காயமும் முலைப் பாலிலரைத்து விளக்கெண்ணெயில் கலந்து தலைக்கு தேய்க்க பைத்தியம் முறியும். குண்டு மணியிலையும் பூசணிக் கொட்டைத் தோலும் ஈர வெங்காயமும் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து தலைக்கு தேய்க்கவும் பைத்தியம் முறியும்.

<u>அகஸ்தியர்_லிங்கக்_குழம்பு :-</u>

லிங்கம் விராகனெடை.ச, பூரம் விராகனிடை.உ, வெங்காரம் விராகனிடை.க, வாளம் விராகனெடை.யஉ, சித்தா மணக்கு பருப்பு.ச இவைகளை கிரமப்படி சுத்தி செய்து நிறுத்தெடுத்து கல்வத்திலிட்டு.ச, ஜாமம் அரைக்க மெழுகாகும். அதை எடுத்து மாட்டுக் கொம்பு சிமிழிலடைத்து வைத்துக் கொள்ளவும். வயிற்று வலிக்கு பிறண்டே கொண்டு வந்து இடித்து ஒரு பிடி எடுத்து அரைக்கால் படி சலத்தில் விட்டு சிவக்க காய்ச்சி இறக்கி வடித்த கியாழத்தில் ஒரு பணவிடை குழம்பு கூட்டி உள்ளுக்கு கொடுக்க காலை ஒரு வேளையாக மூன்று நாள் கொடுக்க நீங்கும். இச்சா பத்தியம்.

<u>அண்டவாத_குலைக்கு :-</u>

கற்கடா சிங்கி களிச்சிக் காய் பருப்பு வெள்ளுள்ளி, சுக்கு, முருங்கை, தளிர் சர்க்கரை இவை சமனிடை எடுத்து அரைத்து களச்சிக் காய்ப் பிரமாணம் எடுத்து அது நடுவில் மேல் படி குழம்பு பணவிடை வைத்து கொடுக்க நீங்கும். சட்ட புளி; வறுத்த உப்பு கூட்டவும்.

<u>உப்புச்_செந்தூரம் :-</u>

உப்புச் செந்தூரம் :-

இந்துப்பு.௩ ரூபாயிடை, பொட்டிலுப்பு .௩, கல்லுப்பு.௩ ரூபாயிடை, வெடியுப்பு .௩, ரூபாயிடை கெந்தகம்.௩ ரூபாயிடை இந்த அஞ்சும் தாமரைச் சாறு விட்டு ,அரைத்து கையில் வைத்து சீலை மண் செய்து புடம் போடவும். குக்குட புடம் செந்தூரமாகும். திரிகடுகு, சூரணத்திலே தேன் கூட்டிக் கொடுக்கவும் சகல வாய்வுந் தீரும்:

துருசு பற்பம் :-

துருசு, பச்சை துருசு, வெடியுப்பு அரைத்து கவசங் கட்டி எண்பது சீலை செய்து குக்குட புடம் போடப் பற்பமாகும். தேனில் இதில் தீரும் வியாதி ௰௨ நாள் கொம்புத் தேனில் கொடுக்கவும். குதக வாய்வு, வெகு மூத்திரம், கிரிச்சரம், நீரமை நீர்க் கோவை உஷ்ணக்காங்கை, வெள்ளை யோனிப்புற்று பவுத்திரம் இதுகளெல்லாங் கேள்க்கும்.

நரித்தலை வாதத்துக்கு :-

கருதும்பெயிலையும், கழுதை லத்தியுங் கூட்டி சிறுநீர் விட்டு வறுத்துக் கட்டவும் வீக்கம் அடைச்சல் தீரும். கருதும் பெயிலையும் அமுக்கிரா யிலையும் தவசி முருங்கையிலை சமன் கூட்டி சிறுநீர் விட்டு வறுத்துக் கட்ட இதுக்கு வாத சூலையும், குளியமுந் தீரும்.

சகல வாதத்துக்கு :-

சாறணை வேரை புளிந்து நரிக்கிப் பிழிந்து அயங்காரமு மிட்டு காய்ச்சிக் குடிக்க பேதியாம். கை காலுடம்பு வலி இடுப்பு வலி நிற்கும். சுக்கு சீரகம், பறங்கிப் பட்டை, பிறப்பங் கிழங்கு சமன கூட்டி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கத் தீரும். பறங்கிப் பட்டை அமுக்கிராங் கிழங்கு சமன் கூட்டி சூரணம் பண்ணி இதில் பாதி சர்க்கரை யிட்டு கலந்து தினம் இரண்டு நேரமும் மூன்று விரகனெடை தின்று வெந்நீர் குடிக்கத் தீரும்.

வாழைக் கிழங்கு விரகனெடை, நிலவேம்பு கண்டங் கத்திரி சீந்தி தண்டு, தேவதாரிப் பட்டை வகைக்கு விரகனெடை .௨, திப்பிலி, சுக்கு வகைக்கு விரகனெடை.௧, கூட்டி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி குடிக்கத் தீரும். விழுதியிலை கொளிஞ்சியிலை சமன் கூட்டி இடித்து அரைப்படி சாறு பிழிந்து நல்லெண்ணை அரைப் படி கூட்டி உடம்புக் வெந்நீர் விட்டுக் கொண்டு மூன்று நாள் குடிக்கத் தீரும். பத்தியம் வெந்நீரும், சோறும்.

நாசிகா பறணம் :-

திப்பிலி, திப்பிலி மூலம், சீரகம் பறங்கிப் பட்டை, பிறப்பங் கிழங்கு, செவ்வியம், சுக்கு, சித்திர மூலம் வகைக்கு விரகன்.௨, முந்திரிப் பழம், பேரீச்சம் பழம், கசகசா, நிலவேம்பு, சாதிக்காய், சாதிப் பத்திரி, நிலப்பனை, முள்ளி வேர், சுண்டை வேர் சமன் கூட்டி எருக்கம் பாலில் ஊறப் போட்டு உலர்த்தி இடித்து வடி கட்டி சுத்து தூளெடுத்து நாசியிலூத நிற்கும்.

வெள்ளை சுண்டை வேர்ப் பட்டை சூரணம் பண்ணி சற்று நாசியிலூத நிற்கும்: இதுக்கு சன்னி முகசன்னி, மண்டைக் குடைச்சல், தலைவலி, பிடனி வலி தீரும்.

கலிக்கம் :-

சுக்கு, மிளகு சமன் கூட்டி குப்பை மேனி சாற்றிலரைத்து பின்பு வெற்றிலைச் சாத்திலரைத்து சாறணை சாற்றிலரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்திக் கொண்டு இந்த வகைச் சாத்திலரைத்துக் கண்ணிலிட சுரம், சன்னி, சயித்தியம், தலைவலி, பிடனி வலி தீரும்.

திரிகடுகு, உள்ளி வகைக்கு விரகனெடை.௨; கடுக்காய் விரகன்.௧, கூட்டி முருங்கைப் பட்டை சாத்தில் குப்பை மேனிச் சாத்தில் வேளையிலைச் சாத்தில் துளசிச் சாத்தில், சாறணைச் சாத்தில் முறை முறையாய் அரைத்து உருண்டை பண்ணி இந்த வகைச் சாத்திலரைத்து கண்ணிலிட பூதப் பிசாசு விடும். சன்னி சயித்தியம், சன்னி வாதம், சுக சன்னி தீரும்.

கலிக்கம் முறிவு :-

சீதேவி செங்களனிப் பட்டை நய்ய தட்டி பொட்டணங் கட்டி முலைப் பாலிலூற வைத்து கண்ணில் குற்ற உடனே நிற்கும். புளியந் துளிரை அரைத்து யெருமைத் தயிரில் குழைத்து தலையில்ப் பத்தீரும்.

நசியம் :- மருக்காரைக்காய் படி.ச, புதுக் கலையத்தில் போட்டு கீழே வறகம் புல்லு படுத்தி மேலே வறகம் பில்லுப் போட்டு மூன்று நாள் பார்க்க பழுத்திருக்கும். அதை யெடுத்து நாலு கட்டு கருப்பு வெத்திலை கூடப் போட்டு இடித்து சாறு கொண்டு சீலையில் பிடித்து நிழலுணர்த்தி வைத்துக் கொண்டு சீலையில் சற்று கிளித்து பெண் பிள்ளைக்கு ஆண்பிள் சிறுநீர் ஆண் பிள்ளைக்கு பெண்பிள்ளை சிறு நீரில் இப்படி நசியம் விடவும். நசியம் பொறுக்க மாட்டோதே சுக சரீரத்துக்கு சற்று சீலை கிளித்து திரியாக்கி பெரித்தி புகையை மூக்குக்கு பிடிக்கவும். இதில் தீரும் வியாதி பூத பிசாசு சன்னி சயித்தியம் பிடனி அகல வலி தலை வலி ரத்தக் குடோரி, சந்த பித்தம், சுக்சன்னி இவை யெல்லாந் தீரும்.

நசிய முறிவு :-

நசியம் விட்டு மீறி ரத்தம் விழுந்தால் பத்து வாழைப் பழம் பிசைந்து கால் பலம் ஏலம் பொடி செய்து போட்டு சாறித்து தலையிலப்ப நிற்கும்.

பித்த சுரக் குளிகை :-

கோரோசனம், கிரும்பு, ஏலம், சுக்கு, சந்தனம், சீரகம், அதிமதுரம், மிளகு, சாதிக்காய், முத்தக் காசு சமன் கூட்டி மன்த்தக்காளி சாறு விட்டு மூன்று நாளரைத்து குன்றியளவு உருண்டை பண்ணிக் கொள்ளவும். முலைப்பாலில் எலுமிச்சம் பழச் சாற்றில் சர்க்கரையிலிடத் தீரும். பித்த சுரமும், தாப சுரம், தோஷமுந் தீரும்.

நீர் இறங்கிறதுக்கு :-

செவ்வகத்திப் பட்டையை அரைத்து பசுவின் பாலில் குடிக்கத் தீரும். இந்தப் பட்டையை நாளி பசுவின் பாலில் கரைத்து காய்ச்சி பிரையிட்டுக் கடைந்து வெண்ணையை முழுங்கத் தீரும்.

கெற்ப்ப உஷ்ணத்துக்கு லேகியம் :-

பால் சர்க்கரை பலம்.க, ஏலம் பலம்.ரு, சீரகம் பலம்.க, கூட்டி அரைத்து இதில் பொன்னாங் கண்ணிச் சாறு படி.க, இளநீர் படி.க, பசுவின் பால் படி.க, பசுவின் நெய் படி.க, கூட்டி எரித்து லேகிய பதத்திலிறக்கி சர்க்கரை பலம்.ரு, கூட்டி கிளறிக் கொள்ளவும். தினம் கடுக்காயளவு ஒரு மண்டலந் தின்ன. நாள்பட்ட கெற்ப்ப உஷ்ணம் தீரும்.

பால் சர்க்கரை விபரம் :- வேண்டின பசுவின் பாலை அடுப்பில் வைத்து சிறுகீரை வேரை குச்சியில் கட்டி துள்ளாவித் துள்ளாவிச் சுண்டக் காய்ச்சிச் சர்க்கரையாம்.

வல்லாரை நெய் பண்ண :-

நல்ல சீரகம் கருஞ்சீரகம், ஏலம், கிரும்பு, சாதிக்காய், சாதிபத்திரி, தக்கோலம், லவுங்கப்பத்திரி, வகைக்கு பலம்.தெ கொண்டு வந்து அரைத்து பொடி பண்ணி ஒரு படி பசுவின் நெய் அடுப்பிலே காய வைத்து ஒரு குத்து ஈர வெங்காயம் உறித்து குறுக அறிஞ்சு போட்டு வல்லாரை யிலை அவ்வளவு போட்டு வேக வைத்து கடைச் சரக்கு பொடியும் போட்டு பதத்தில் வடித்து வைத்து கொண்டு பொழுதுக்கு ஒரு கரண்டி சாப்பிடவும் மேக வெட்டை அஸ்தி சுரந் தீரும். கை கண்டது.

தாளிச பத்திரி சூரணம் :-

தாளிச பத்திரி விருகனெடை.ய, சுக்கு விருகன்.க, மிளகு விருகனெடை.அ, சுகை விருகன்.ரு, திப்பிலி விருகன்.ச, கடலாஞ்ச பட்டை விருகன். சன்னி குயின் விருகன்.ரு, ஏமாசஊரிகம் விருகன்.ரு, யேலம் விருகன்.ரு, இந்த சரக்கெல்லாம் வெய்யிலே லை

வைத்து இடித்து வஸ்திர காயம் பண்ணி இதுக்கு சமன் சர்க்கரை கலந்து வெருகடிப் பிரமாணம் கொள்ள இதில் தீரும் வியாதி உஷ்ண வாய்வு, முதலானது மற்றும் சகல வாய்வுந் தீரும்.

19.11.62.

<u>நீரடைப்புக்கு நெய் பண்ண:-</u>

எலுமிச்சந் தளையை தேங்காயளவு கொண்டு வந்து ஒரு படி காடியிலூற வைத்து அரைப் படிக்கு இறுத்து உள்ளுக்குக் கொடுக்க நீரடைப்புத் தீரும்.

<u>குன்மம் எட்டுக்கும் மருந்து:-</u>

கூறணை வேர் பலம்.ருய, வேளை வேர் பலம்.ருய, புங்கம் பட்டை பலம்.ய, மாவிலிங்கம் பட்டை பலம்.ய, செவ்வியம் பலம்.ய, சித்திர மூலம் வேர் பலம்.ய, இதை இடித்துப் பதினறு வள்ள நீர் விட்டு இரண்டு வள்ளமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நொச்சிச் சாறு படி.க, பொடுதலைச் சாறு படி.க, குப்பை மேனிச் சாறு படி.க, கொள்க் கட்டுச் சாறு படி.கஉ, இது நாரத்தம்பழச் சாறு படி.ச, கூவிழச் சாறு படி.உ, இது கசாயத்துடனே கூட்டி நாயுருவிச் சாம்பல் பலம்.ரு எள்ளுச் சக்கை சுட்ட சாம்பல் பலம்.ரு, பனம்பூவு, சுட்ட சாம்பல் பலம்.ரு, அட்டரை பலம்.ய, இலைக் கள்ளிச் சாறு படி.ச, இவல்ல இது கசாயத்தில் கலந்து வடித்துக் கொண்டு பனை வெல்லம் பலம்.ருய, கூட்டி அதிரச பாகு பதமாய்க் காய்ச்சி இதில் கடைச் சரக்கு இந்துப்பு விருகனெடை.ய, யவச்சாரம் விருகன்.ய, சுக்கு விருகன்.ய திப்பிலி விருகன்.ய, மிளகு விருகன்.ய, அசமதாகம் விருகன்.ய, திப்பிலி விருகன்.ய, பெருங்காயம் விருகன்.ய, வெள்ள வெங்காயப் பருப்பு படி.உ, கழப் பருப்பு விருகன்.ய, இது இடித்துப் பாகில் கலந்து ஆற விட்டு இரண்டு படி தேன் விட்டு கலந்து உள்ளங் கை கொண்டது இரண்டு நேரமுங் கொள்ள இதில் தீரும் வியாதி எட்டு வித குன்மம், வயிற்று நோவு, வாதம் நீருமை, வயத்தில் கல் போலே இருக்கிறது, வயித்தில் அம்மானை போலே பிறண்டு வந்து வாயிலெடுக்கிறது, வாயில் நீர் விழுகிறது. வயிறு பொருமுகிறது. பெண்டுகளுக்கு தீட்டுத்தடக்கு நாள் வயிறு நோகிறது. முட்டு குட்டு பெரு வயறு பாண்டுவம், காமாலை, சோபை, வயித்திலுள்ள வாய்வு, மார் நோவு, இருமல், உப்பிசம், பசியில்லாதது, வயித்தில் விப்புருதி, விரை இறங்கினது சோறு செறிக்கிற போது வயிறு நோகிறது இவை யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>பஞ்சாரக்குத் தயிலம்:-</u>

நொச்சிச் சாறு படி.க, முருட்டிகைச் சாறு படி.க, எருக்கிலைச் சாறு படி.க, முதியார் கூந்தல் சாறு படி.க, மாவிலிங்கம் பட்டைச் சாறு படி.க, தழுதாளைச் சாறு படி.க, மேனிச் சாறு படி.க, ஆயம்பட்டைச் சாறு படி.க, கள்ளிச் சாறு படி.க, சாறணைச் சாறு படி.க, புங்கம் பட்டைச் சாறு படி.க, நல்லெண்ணை படி.க, புங்கெண்ணை படி.ரு, வேப்பெண்ணை படி.ய, இலுப்பெண்ணை படி.ரு, ஆமணக்கு யெண்ணை படி.க, ஐந்து எண்ணையும் சாறும் ஒக்கக் கூட்டி வெள்ளாட்டுப் பால் இரண்டு படி விட்டு இதுக்குக் கடைச் சரக்கு கடுகுரோகணி விருகன்,ரு, சுக்கு மிளகு, திப்பிலி, பெருங்காயம் செங்கழுநீர், கோஷ்டம், வெள்ள வெங்காயம், குங்கிலியம், ஒரெக்க விருகனெடை .ரு, அரைத்து கரைத்து வழித்து சார் வாங்கி இட இதில் தீரும் வியாதி கால், கை முடங்கினது உடம்பு நோகிறது, உடம்பு குறுந்து வருகிறது, உடம்பு துடிக்கிறது, உடம்பு எறும்பு ஏறுப் போலேயிருக்கிறது சந்து சந்துகள் வீங்கி நோவுறது, கால் கை அசந்து போகிறது, கண்ணு வாய் கோண வாங்கிறது, நடுக்கிறது, வாதமென்னப் பட்ட தெல்லாந் தீரும்.

<u>உஷ்ணத்துக்கு மருந்து:-</u>

வெந்தியம் காசிடை இரண்டு, ஏலம் காசிடை.க, தேத்தாங் கொட்டை இரண்டு ராத்திரி புதுச் சட்டியில் போட்டு தண்ணீர் வார்த்து ஊற வைத்து காலம்பற எடுத்து நன்றுயரைத்து வழித்துக் கலத்தில் போட்டு அதிலே கூடப் போட்டு எல்லாம் ஒன்றாய்க் கலந்து

பிசைந்து உள்ளுக்குக் கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் சிறந்தி பண்டந் தவிர்க்கவும். உஷ்ணம் தீரும். கை கண்டது.

அருகம் சாறு நாழி அதிமதுரம் எண் களஞ்சி நறு நெய் நாழி பால் நாழி, நன்றாய்க் காய்ச்சிக் குடித்திடவே குறுகு வலியும் உஷ்ணமும் குன்ம வாய்வு போய் விடுமே

நிலப் பனைக் கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு; சீரகம், சர்க்கரை பசுவின் பாலில் ஏழு நாள் குடிக்கவும். இப்படி ஏழு நாளைக் கொருக்கால் மூன்று முறை குடிக்கவும். சகல உஷ்ணமுந் தீரும். மிகுதியும் லேபனமுண்டாம். இது கை கண்டது.

மேகவெட்டை கண்கர்சத்துக்கு தயிலம்:-

கய்யர்ந்த கரை நெல்லிக்காய், கலந்த சாறு நாழி மெய்யா றெண்ணெ அய்யுளக்கு மதியாய்ப் பாலிரு நாளி செய்ய றெண்ணை அதில் றெட்டி சிறுகச் காய்ச்சி சிறசிலிட அய்யுயோ பித்தங் கன்ங் காசம் அடைந்த செவியும் வெளியாமே.

கன காசத்துக்கு:-

நல்லெண்ணை படி.க, விளக்கெண்ணை படி.க, பசுவின் நெய் படி.க, இவை ஒன்றாய் கலந்து இதில் சாதிக்காய் விருகன்.ச, சாதிபத்திரி விருகன், சஏலம் விருகன்.ச கிரும்பு விருகன்.ச, குங்குமப் பூ விருகன்,ச, கஸ்தூரி விருகன் .ச, இவை சமன் கூட்டிப் பொடி பண்ணி எண்ணையில் கலந்து சூரிய புடம் வைத்து தலை முழுகத் தீரும். வியாதி மேகவெட்டை, பித்த வெட்டை, கனகாசம் கண் நோவு சிவப்பு இவ்வ யெல்லாந் தீரும். கை கண்டது.

காது நோவுக்கு:-

காது நோவு ஒரு விதம். சீய் விழுறது. நீராவது ரத்தமாவது பாய்றுற யெறிய தினவு தின்ன வீங்க் காதில் குமிழ் போலே விருற காது அடைத்துக் கொள்ள கேளா மலிருக்க, கேட்கிறுப் போலேயிருக்க, ஊதுகிறுப் போலே இருக்க இதக்கு மருந்து:- வெள்ளாட்டுக் கோமியம் உப்பு காய்ச்சி கை பொறுக்க சூட்டில் காதில் விட காது நோவு தீரும். எலுமிச்சம் பழச் சாற்றில் உப்புக் கூட்டி காதில் புளிய காது நோவு தீரும்.

முருங்கையிலைச் சாறு படி.ரு, துளசி இலைச் சாறு படி.ரு, எருக்கிலைச் சாறு படி.ரு, வெள்ளாட்டுச் சலம் படி.ரு, நல்லெண்ணை படி.க, பருத்திக்காய் சாறு படி.ரு, சுக்கு, இந்துப்பு, மிளகு, வெள்ள வெங்காயம், கடுகு, வலம்புரிக்காய், கொன்றப் பழம் வேளை வேர், முக்குலம், வசம்பு இது அரைத்து கரைத்து வடித்து காதில் விட காது நோவு தீரும்.

இரத்த பித்தத்துக்கு:-

இரத்த பித்தம் மூன்று விதமாக எடுக்கும். அசனத்திலே யோனியிலேறத்தமாக விழும். இதக்கு மருந்து:- காட்டெலவம் பட்டையை இடித்து பாலில் பிசைந்து சர்க்கரை கூட்டி கொடுக்க யோனி வாயிலே ரத்தம் விழுகிறது ரத்த பித்தம் தீரும்.

காட்டெலவம் பட்டை ஆலாவிருதை பற்படாகம் தென்னம் பாளை, ஆடா தோடையிலை அருகன் வேரு இடித்து இதக்கு தக்க முந்திரிப் பழம், பசுவின் நெய் படி.க, பால் படி.க, அதிமதுரம், கோதுமை அரிசி, முத்தக் காசு, சந்தனம், எலுமிச்சம் வேர் இலுப்பைப் பூ, நன்னாரி வேர், முடிவாழம், தாமரைத் தாது, முந்திரிப் பழம் வகை ஒன்றுக்கு விருகன்.உ, இவை இடித்து வஸ்திர காயம் பண்ணிக் கொள்ளவும். வாயாலே அசனத்திலே யோனிவாயிலே ரத்தமாக எடுக்கிற ரத்த பித்தம் தீரும்.

வாயில் செவியில் மூக்கில் ரத்தம் விழுகிறதற்க்கு:-

பருத்தியிலைச் சாறு, பசுவின் நெய், தயிர் ஏலரிசி, கருஞ்சீரகம், அப்பைக் கிழங்கு, ஈருள்ளி அரைத்து தலையில் தேய்க்கவும். வாயில் ரத்தம் விழுகிறதற்கு முன்

மருந்து பின்னாலே இவ்வகைக்கு ஒவ்வொரு சேரை கலந்து அடிக்கவும். நிற்கும்.

<u>நாசியில் ரத்தம் விழுகிறதற்கு:-</u>

குத்தாழை சாறும், சாம்பலும் பிசைந்து தலையில் மூன்று நாள் கட்டவும் தீரும். எருமுட்டையை சுட்டு சாம்பலாகிறதற்கு முன்னே உரலில் போட்டு இடித்து அந்தப் பொடியை பசுவின் தயிர் வார்த்துப் பிசைந்து தலைமேல் நிறைய அப்பி ஆமணக்கு இலை போட்டு சீலை மூடி கட்ட உடனே ரத்தம் நிற்கும். கை கண்டது. ~~பேயங்கல்~~

<u>ஏங்கல் இளைப்புக்கு:-</u>

விளக்கெண்ணை நாழி வேலிப் பருத்திச் சாறு உரி, ஊஞ்சல் பட்டைச் சாறு உரி., சுடு சுற்றிச் சாறு உரி, இந்த மூன்று சாறு எண்ணையும் ஒன்றாய் விட்டு இதில் தேத்தான் பிஞ்சி உலர்த்தி அது விராகன்.உ, துத்தம் இரண்டு பணவெடை துருசு இரண்டு பணவெடை, சாதிக்காய் விராகன்.உ, சாதிபத்திரி விராகன்.உ, கிராம்பு விராகன்.உ, குரோசானி, ஓமம், திப்பிலி, விராகன்.ங, கருஞ்சீரகம் இந்த எட்டு அருந்தும் பொடி செய்து எண்ணையில் போட்டு காய்ச்சி மெழுகு பதத்திலிருந்து நாழு காசிடை கொள்ள இருவது நாளையில் குணமாம். கை கண்டது.

<u>திருகு சன்னிக்கு:-</u>

முருங்கைப் பட்டையை துவைச்சு பசுவின் நெய்யில் பிசைந்து நல்ல வெல்லம் போட்டு கொடுக்கவும். வாங்கிற பிறத்தில் ஒருசுக்கு கொண்டு மூன்று சூடு போடச் சன்னி தீரும். ஆனை வசம்பு பலம்.க, மிளகு ஒரு பலம், புங்கம் விரை ஒரு பலம், வெள்ளுள்ளி ஒரு பலம், வேப்பம் புண்ணாக்கு ஒரு பலம்.க, கடுகு ஒரு பலம். வேப்பந் தளை ஒரு பலம்., முடக் கொத்தான் ஒரு பலம் இந்த எட்டு மருந்து இடித்து சீலையில் பொட்டணங் கட்டி அடுப்பில் சட்டி காயவைத்து நல்லெண்ணை வேப்பெண்ணை இலுப்பெண்ணை இந்த மூன்று எண்ணையுஞ் சரி கூட்டி அடுப்பில் சட்டி காயவைத்து நல்லெண்ணெ வெந்த பொண்டன எண்ணை இதயில் தவைத்து உச்சந் தலை முதல்க் கொண்டு வேது பிடிக்க உடனே நிற்கும். கை கண்டது.

<u>மந்தார காசத்துககு:- காந்தாயி மருந்து:-</u>

கடுக்காய் இடித்துப் பொடி செய்து சீலை வடி கட்டி ஏலம் பொடி பலம்.உ, இதில் சாதிக்காய் விராகன்.உ, சாதிபத்திரி விராகன்.உ, தேத்தா கர்ப்பம் விராகன்.உ, துத்தம் மூன்று பணவெடை துருசு மூன்று பணவெடை இந்தமருந்து பொடி செய்து முந்தின கடுக்காய் பொடியுடனே கலந்து அதின் பிறகு ஒரு புதுச் சட்டியில் ஒரு படி எருமை மோர் நல்ல மோர் விட்டு பத்தாமல் கிண்டி காச்சிக் குழம்பான பதத்தில் இந்த சூரணம் போட்டு லேகிய பதமாய் கிளறி இறக்கி அந்த சூடு ஆறு முன்னே சிறு களச்சிக் காய் மறிவாதி உருண்டை செய்து காலமே நாழு உருண்டையம் சாயங்காலம் ஒரு உருண்டையும் இப்படி இருபத்தைந்து நாள் கொள்ள மந்தார காசந் தீரும்.

<u>மல சலக் கட்டுக்கு:-</u>

கீழ்க்காய் நெல்லி சமூலம் இடித்த சாறு ஆழாக்கு எலுமிச்சம் பழச் சாறு ஆழாக்கு இரண்டும் சாறித்துக் கொடுக்க உடனே மலசலம் உடைக்கும். கை கண்டது.

<u>மலசலக் கட்டுக்கு கண்ட திப்பிலி ரசாயனம்:-</u>

சர்க்கரை பலம்.ய, திப்பிலி பலம்.ய, நெல்லி முள்ளி ஏலம், கொத்தமல்லி, கிரும்பு லவங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி, சுக்கு, கடுக்காய், மிளகு சடாமஞ்சள், அரத்தை முந்திரிகைப் பழம், நற்சீரகம் இது வகைக்கு மூன்று விராகனெடை பொடி செய்து நீர் வள்ளிச் சாறு முன்னாழி பசுவின் பால் நாழி நெய் நாழி, தேன் நாழி இது காய்ச்சி அதிலே சூரணம் போட்டு கிளறி குழம்பு பதத்திலிறக்கி அந்திக்கொரு கரண்டி காலமே ஒரு கரண்டி கொள்ள இதக்கு தீரும் வியாதி மந்தாக்கினி, வாய்வு, ஆயிந்திரிய பித்தம், சகல பைத்தியமுந் தீரும். கை கண்டது.

<u>சுரம் அமுர்தாதி குளிகை:-</u>

கடுகுரோகனி விராகன்.க, நேர்வாளம் விராக.ன, சுக்கு விராகன்.க, கருஞ்சீரகம்.

விருகன்.உ, இந்த மருந்தெல்லாங் கத்தாளை மனியில் கடுக்காய்யில் போட்டு பிசைந்து இதைத்துப் போட தண்ணீராம். அந்த தண்ணீர் வார்த்து அரபது நாளிகை அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டை செய்து வாத பித்த சுரத்துக்கு இஞ்சிச் சாத்திலிடவும். தாப சுரத் துக்கு முலைப் பாலிலிடவும். சேத்தும சுரத்துக்கு ஆடாதோடைச் சாற்றிலிடவும். சாம்பல் பூசனிச் சாற்றிலிடவும். பைத்திய விகார சன்னிக்கு முகுறு முட்டை தேச்சு பிளிச்சு அந்தப் பாலில் கொடுக்கவும். அதில் மீறினால் காளவாயன் பாலில் கொடுக்கவும். பத்தியம் அரைக்கீரை, மிளகு சாறு, வென்னீர் கூட்டவும்.

<u>இரத்த காசிக்கு மருந்து</u>:-

சன்ன லவுங்கப் பட்டை.விருகன்.க, சதகுப்பை விருகன், காமப்பு விரை விருகன்.க சீரகம் விருகன்.க, கருஞ்சீரகம் விருகன்.க, சாதிப்பத்திரி விருகன்.க, ஆக வகையும் விருகன் கொத்தமல்லி விருகன்.யஉ, பஞ்சதாரை விருகன்.யச, முந்தின மருந்தெல் லாம் இள வறுப்பாய் வறுத்து வஸ்திர காயம் பண்ணி சீலை வடி கட்டி சர்க்கரையை காயற சட்டியிலே உருகிற போது இந்த சூரணம் போட்டு கிளறி களச்சிக் காய் மாதிரி பிறதாய கண்டது.

<u>மலசலம் அடைப்புக்கு</u>:-

வெள்ளரி விரைப் பருப்பு விருகன்.க, கருங்கம்பளி சுட்ட கருக்கு விருகன்.வ, சீரகம் எளெட்டு பொன், சாரம் பணவிடை பொறிச்சுக் கூட்டி அரைத்து இள வென்னீரில் கொடுக்க உடனே மலசலமுடைக்கும். கை கண்டது.

<u>முட்ட ட்ப்பாருக்கு</u>:-

வேலிப் பருத்தியிலையும் ஒத்தைப் புடும் அரைத்து களச்சிக் காய் மறிவாதி முழுங்க உடனே நிற்கும். கை கண்டது.

<u>ஆறாத புண்ணுக்கு மருந்து</u>:-

தேங்காய் நெய் நாளி, வெத்திலைச் சாறு நாளி இது இரண்டுங் கூட்டிக் காய்ச்சிச் சாறு வத்தின பிறகு இறக்கி அதில் ஒரு நாற்கங்காயளவு வெள்ளை மிளகு, திப்பிலி போட்டு வைத்துக் கொண்டு புண்ணிலிட எந்த வகைப் புண்ணும் ஆறும். கை கண்டது.

<u>என்னை தொண்டை தூறுக்கு நெய்</u>:-

தொண்டை தூறுக்கு பசுவின் நெய் அரைப்படியில் ஒரு வர்க்கன் பால் கூட்டவும் ஏறக் கூட்டினால் நல்லது. இதில் திப்பிலி அரத்தை சீரகம் கருஞ்சீரகம் செங்களநீர் கோஷ்டம், அதிமதுரம், கொத்தமல்லி, சமுத்திராப் பழம் இது வகைக்கு ஒரு விருகன் பொடி செய்து நெய்யில் போட்டு சற்று சூரிய புடம் வைத்து பிறகு அடுப்பில் வைத்து இரண்டு தரம் பொங்கின பிறகு மூன்றுவது இறக்கி அந்தி சந்தி காசிடை கொண்டு நக்கவும். உடனே குணமாம்.

<u>தோஷத்துக்கு மருந்து</u>:-

எருமை சாணியே பிளிந்து ஒரு விருகன் பாலில் மிளகு பிரமாணம் களச்சி பருப்பு உரைத்து நாக்கில் தடவி உள்ளே கொள்ள தோஷம் சீக்கிரத்தில் முறியும். கை கண்டது.

<u>அக்கரத்துக்கு சந்தனாதி குளிகை</u>:-

கலமங் கொம்பு, சீரகம் இரண்டு, ஏலம் பவழம், அதிமதுரம் பத்திருச்சம், இவை சமன் கூட்டி நல்ல வெல்லங் கூட்டி பச்சரிசி கழுநீரிலரைத்து துவரைப் பிர மாணம் உருண்டை பண்ணி தண்ணீரிடவும். இதுகளு நாக்கக்கரம், குண்டிகை யக்கரம், விடாச் சுரம் இவை யெல்லாந் தீரும். கை கண்டது.

<u>பல வியாதிக்கு கற்பூராதி குளிகை</u>:-

அதிமதுரம், கோஷ்டம், சாதிக்காய், திப்பிலி மூலம், லவுங்கப் பட்டை, சுக்கு, கருஞ்சீரகம், கடுக்காய் இந்துப்பு கொடுக்காய் புளி, ஓமம், கொத்த

மல்லி, கஸ்தூரி மஞ்சள், பழம் புளி அரக்கு சர்க்கரை இவை யெல்லாஞ் சரி கூட்டி முலைப் பாலில் அரைத்து கவரைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு அக்கரத்துக்கு தாபசுரத்துக்கு உஷ்ண தோசமிஞ்சி உழலை யெடுத்த சுரத்துக்கு முலைப்பாலிலிடவும். மூக்கில் தடவவும். ஒரு நாளிகையில் இது வெல்லாந் தீரும். கை கண்டது.

<u>குண்டலாதி லேகியம்.</u>

சங்கவேர் பலம்.ருய, கண்டங் கத்திரி வேர், சித்திர மூலம், கீழ்காய், நெல்லி சமூலம் இவை ஒவ்வொன்றுக்கு பலம் .உரு, சிறுதேக்கு, திப்பிலி மூலம் ஒரென்றுக்கு பலம்.உய, இவை கூட்டி இடித்து இருபது படி தண்ணீர் விட்டு ஆறு படியாகக் காய்ச்சி பழைய வெல்லம் பலம்.ருய, கரைத்துக் காய்ச்சிக் குழம்பா— கிற பக்குவத்தில் திப்பிலி மூலம் பலம்.உய, கசுகை நீர் பலம்.உ, காயம் பலம்.ரு, மிளகு பலம்.நெ, சுக்கு உரி இவை யெல்லாம் பொடி பண்ணி முன் குழம்பில் போட்டு அரப்பொடி உழக்கு அந்த கசாயத்தில் அரைத்து அந்தக் குழம்பில் தூவி கிண்டி பதத்தில் காய்ச்சி இறக்கி அதின் பிறகு தேன் நாளி நெய் உரி கூட விட்டுக் கிண்டி யெடுத்து வைத்துக் கொண்டு உள்ளங்கை கொண்டது காலமே கொள்ள இதில் தீரும் வியாதி சிலேஷ்டம், சிறந்தி சுவாச காசம், கண்டக வாய்வு, அட்டிகை பீலிகை க்ஷயரோகம் பீனிசம், சிரோவாய்வு இது வெல்லாந் தீரும். காப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

<u>கீழுக் கண்ட கிறுணிக்கு</u>:-

கருதும்பே சாறு நாளி இதில் திரிகடுகு, சீரகம் இரண்டு பெருங்காயம் அதிவிடையம் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிரும்பு, அபினி வெள்ள வெங்காயம் கஞ்சா இது வெல்லாம் வகைக்கு ஒரு களஞ்சி அந்த சாறு வார்த்தரைத்து கலத்திலே வாங்கிச் சுண்டைக்காயளவு செவிக்கவும். கிறுணி எனப்பட்டதெல்லாந் தீரும். கை கண்டது.

மக்கிலம் பலம்.௫ கொண்டு வந்து ஒரு சீலைப் பய்யிலிட்டு வாயுந்தச்சி சுத்தி பண்ணும் படி ஆடாதோடை நாளி வேப்பம் பட்டை சாறு நாளி கண்டங் கத்திரி சா நாளி, பேய்ப்புடல் கசாயம் நாளி இதனத் தொளாந்திறம் கட்டி அவித்து உலத்திப் பொடி செய்து பிறகு பாலிலே எழாந் தரங் கூட்டி திரிகடுகு சீரகம் இரண்டு வகைக்கு அஞ்சு விருகளும் பத்துப் பலம் பறங்கிப் பட்டையுடனே கூட்டி யிடித்து வஸ்திர காயம் பண்ணி இது வெரு கடிப் பிரமாணம் மக்கிலம் பொடி கால் விராகன் கூட்டி ஒரு நேரத்துக்கு இந்தப் படி கொடுக்கவும். பத்தியம் பசுவின் பால், நெய், கோழி காடை, காட்டுக் குருவி துவரைப் பருப்பு இதுவும் இதுக்கு தீரும் வியாதி சூலை யோனி அந்திரங்கையும் மூல முன்மம், அண்ட வாய்வு திறச்சு யெல்லாந் திறச்சியுந் தீரும்.

<u>சலக் கழிச்சலுக்கு</u>:-

வேப்பம் புண்ணாக்கு அரைப்படி புளியந் துறவி அரைப்படி ஆவார விரை அரைப்படி, வாகவிரை அரைப்படி, விடத்தேறிலை அரைப்படி, வேலிப் பருத்தி வேர் அரைப்படி இது வெல்லாம் இள வறுப்பாய் வறுத்து தூள் பண்ணி வெரு கடிப் பிரமாணம் எருமை தயிரில் உருண்டை பண்ணி அந்த உருண்டையும் அத்திப் பட்டை ஒ நீரும் குடிக்கவும் தீரும். தண்ணீர் தாக மெடுத்தால் ஆவாரம் பட்டை அத்திப் பட்டை, ***நீ***** இவை சமன் கூட்டி உலத்தி இடித்து தூள் பன்னிரெண்டு வெருகடிப் பிரமாணம் ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி கொடுக்கவும்.

<u>நீரழிவுக்கு</u>:-

வெள்ளைக் குங்கிலியம் காசிடை, சாதிக்காய் காசிடை, அபினி மருந்து காசிடை இவை தயிரு தண்ணீரில் அரைத்து கழல் பிரமாணம் உருண்டை பண்ணி எருமைத் தயிரில் ஒரு உருண்டை இடவும்.

<u>வண்டு கடி விஷமென்னப் பட்டதுக்கெல்லாம் அலறி யெண்ணை</u>:-

அலறிச் சாறு நல்லெண்ணை இவை நாளி அலறி வேர் பட்டை அலறிக் கொழுந்து

அரிதாரம், மரேசிலே, கெந்தகம், முருங்கை வேர், வெப்பாலே அரிசி இவை அரைத்து கரைத்து கோமூத்திரங் கலந்து வடித்து பூச குஷ்டம் சிரங்கு காணக் கடி வண்டு கடி இவை யெல்லாந் தீரும்.

மோரெண்ணை பண்ணும்படி :-

நல்லெண்ணை படி, மோரு படி.உ, அறத்தை சுக்கு, கோஷ்டம், சந்தனம் மரமஞ்சள் விலாமிச்ச வேர், திப்பிலி இவை யெல்லாம இடித்து எண்ணையும் மோரும் ஒன்றாய் கலந்து நாள் போட்டுக் காச்சவும். மெழுகு பதத்தில் வடித்த கட்டி வைத்துக் கொள்ளவும். இதில் தீரும் வியாதி உள் காச்சல், நாலா மாறல், மூறு மாறல் இவை யெல்லாந் தீரும். கை கண்டது.

சிறு பிள்ளைக்கு வெள்ளொடுப்புக்கு :-

இசும்பிறண்டைக் கிழங்கு பட்டையும் நறு தாளியிலையும் ஆறு மாசத்துப் பிள்ளைக்கு ஆறு இலையும் பசுவின் நெய்யில் வேக வைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து முலைப் பாலில் கொடுக்கவும் தீரும். கை கண்டது.

முசலகனத்து :-

நால் சுதிரமாக மெழுகு பிடித்த அதிலே எலமும், வெல்லமும் நாளாக நறிக்கி எங்கும் போட்டால் ஈ வந்து ஒட்டும். ஈவை யெல்லாம் வேப்பிலே கொண்டு வந்து அடித்து எடுத்து வெல்லத்துடனே கூட்டி அரைத்து மூன்று குளிகை செய்து வைத்துக் கொண்டு வலிப்பு வந்த நேரம் ஒரு உருண்டை பசுவின் பாலில் கரைத்து கொடுக்கவும் வாந்தி பண்ணும். உடனே நிற்கும். மூன்று நாள் கொடுக்கவும். பயிறு போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கவும். கை கண்டது.

இருமி ரத்தம் விழுகிறதற்கு :-

பசுவின் நெய், சித்தாமணக்கெண்ணை, கண்டங்கத்திரி சாறு, பனைவெல்லம் நாலு பலம் நற்சீரகம்.ரு பலம் கருஞ்சீரகம்.ரு பலம் இவை பொன்னிறமாக வறுத்து வேக விட்டு இறக்கி தினம் ஒரு கரண்டி கொள்ளவும் நிற்கும். பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

கழல் வாதத்துக்கு :-

செங்கத்தாரி வேரை அரைத்து பாலில் கொடுக்கவும். கோவைத் தழையை வீக்கத்தில் தடவவும். (வேறு) குட்டித் தக்காளி இலையை அரைத்து நல்லெண்ணையில் மூன்று கொதி கொதிப்பித்து உள்ளுக்குங் கொண்டு மேலும் தடவத் தீரும்.

எரி சன்னிக்கு :-

காட்டு முருங்கைப் பட்டையும், பிசினுங் கொண்டு வந்து நெய்யில் கொதிப்பித்து உள்ளுக்குங் கொண்டு மேலுக்குந் திமிரிடவும் தீரும்.

மட வாதத்துக்கு :-

கொத்தான் கொழுந்து வேலிப் பருத்திக் கொழுந்து கரசிக் கொழுந்து நொச்சிக் கொழுந்து அளிஞ்சிக் கொழுந்து மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி இது வெல்லாம் முழுங்கவும் தீரும்.

கழல் வாதத்துக்கு :-

வெப்பாலைப் பட்டை மிளகாணை வேறு இள வெந்நீரிலரைத்து கொடுக்கவும். வெண் குன்றியை அரைத்து பசுவின் பாலிலரைத்துப் பாலில் இடிக்க கழல் வாதந் தீரும். குதிரை லத்தி வறுத்து சுக்குப் பொடி போட்டு கூட்டக் கழல் வீக்கந் தீரும். கை கால் லோச்சு தலை சுழன்று, கருத்திரிசிற பெருக்கு ஒரு படி தயிர் ஒரு வட்டுப் பனைவெல் லாம் நெய் விழுது வாழைப் பழம் ஏலம் இவை கூட்டி பிசைந்து கொடுக்கவும். கையாந் த கரைத்து வேப்பெண்ணையில் குழப்பி சர்வாங்கமும் மூன்று நாள் தவளையிட சர்வாங்க முந் தீரும்.

கல்லெறிப்புக்கு:-

உப்பிலியிலையும், சென்னாயுருவி யிலையும் அரைத்துக் காடியில் கொடுக்கக் கல்லு விழும். சிகப்பு நெரிஞ்சி வேரை அரைத்து பசுவின் பாலில் கொடுக்க கல்லு விழும். மிளகு, சுக்கு, கழல் முளை வாங்கின பருப்பு கொள்ளு கடுகு, வெங்காயம் காணம் வேளை வேர் சமனாக அரைத்து இள வெந்நீரில் குடிக்கவும் கல்லு விழும்.

இருபது பாக்கு பிளந்து எருக்கன் பாலிலூட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு நாளு பிளவையும் நாளு வெத்திலையும் தின்ன கல்லு தெறிக்கும். கை கண்டது.

ஊர் முருங்கையை மூக்கில் கால் சுத்தி வந்து தெண்டம் பண்ணி வடக்கே போற வேரு தெர்பெயும் கடுகு ஒரு சேரையும் வெள்ள வெங்காயம் ஒரு சேரையும் இவை அரைத்து முழுங்கவுந் தீரும்.

வயிற்றில் நீருஞ் சோறும் அடைத்தால்:-

கார்த்திகை நாளாகுதல் பின்னாளாகுதல் நச்சித்திரங் கேட்டு கோட்டான் கிளங்கே உணர்த்தி நாய் சிங்கப் பல்லே சட்டி வேண்டின போது முலைப் பாலிலுரைத்து தொப்புளில் தடவ உடைக்கும். புங்கந் தளிர் உப்பு அரைத்து சுண்டி மறவாசி மூன்று உருண்டை முழுங்க உடைக்கும். தேத்தான் விரையை அரைத்து சித்தா மணக்கெண்ணெயில் முழுங்க உடைக்கும்.

ஒடலேத்தத்துக்கு மருந்து:-

செவ்வாய்க் கிழமை நாள் பழம் பாசி வேரை வாய் பேசாமல் பிடுங்கி வந்து காதில் கட்ட ஒடலேத்தம் விழும்.

வயித்தில் விப்புருதிக்கு:-

புளியம் பிறண்டைக் கிழங்கு வற்றரிசியிலிடித்து தின்னவும்.

சகல விப்புருதிக்கு:-

உய்யல் புளிம் பிறண்டைக் கிழங்கு மாவிலிங்கப் பட்டை வெப்பாலைப் பட்டை இது மூன்று வெவ்வேறே அரைத்து மூன்று நெல்லிக்காயளவு எருமைப் பால் வார்த்தரைக்கவும். எருமைப் பாலில் உலை வைத்து கருங்குறுவை அரிசி ஆகிலும் சின்னந் தெனை அரிசியாகிலும் போட்டு சோறு வெந்து வர பக்குவத்தில் மூன்று மருந்துங் கலக்கி வார்த்து சோறு பதமாய் ஆக்கி இறக்கி வைத்துக் கொண்டு பனை வெல்லம் நெய்யும் கூட்டி தின்னவும். இதில் தீரும் வியாதி கல்லு விப்புருதி, கட்டு விப்புருதி, ஈடுவிப்புருதி, கெர்ப்ப விப்புருதி, குடல் விப்புருதி சகல விப்புருதியுந் தீரும். கை கண்டது.

காயம் சிறந்தி மன்னையே கட்டினால்:-

புங்கம் பட்டை, முக்குருந்தம் பட்டை, குறிஞ்சா வேர் முசுட்டை வேர் இது சமனரைத்து இள வெந்நீரில் உள்ளுக்கு கொண்டு குளிர்ந்த தண்ணீர் பழஞ் சோறு காடி தவிர்க்கவும். மத்தது கூட்டவும்.

சிறந்திக்கு எண்ணெய்:-

சாதிக்காய், சாதிப் பத்திரி, லவுங்கம் வகைக்கு விராகனெடை .க, திப்பிலி மூலம் கஸ்தூரி மஞ்சள் இவை வகைக்கு விராகனெடை .உய, திப்பிலி, வாய் விளங்கம், கொத்த மல்லி வகைக்கு விராகன் .ய, கடுகுரோகணி விராகன் .ரு கார்போக அரிசி விராகனெடை .ச, அதிமதுரம் விராகனெடை .ச, கருஞ்சீரகம் ஒரு சேரை .ப, சந்தனக் கட்டை பலம் .ரு, கடுக்காய் பதினஞ்சு, களிப்பாக்கு பலம் .ய, குப்பை மேனி, சங்கங் குப்பி, நொச்சி, மிளகு, தக்காளி, ஈருள்ளி இந்த வகை சாறு படி .க, வழுத்தாத்தின விளக்கெண்ணெய் படி .க, ஒரு தாளிச் சட்டியில் பச்சிலைச் சாறு விட்டு கொதிக்க வைத்து பிறகு எண்ணெய் விட்டு காய்ச்ச பதத்தில் கடைச் சரக்குத் தூள போட்டு கடுகு திறளக் காய்ச்சி இறக்கி ஆற வைத்துக் கொண்டு எண்ணெய் பழகின கலயத்தில் வைத்துக் கொண்டு வேடு கட்டி வைத்து முதனாள் தலை முழுகி மறுநாள் இரண்டு கரண்டி கொடுக்கவும். வயிறு விடும். இப்படி நாளு நாளைக்கொருக் கால் குடிக்கவும். இப்படி அரை மண்டலங் கொள்ள குலையென வாய்வு குன்மம் முட்டு அசறு வலிப்புகள் வட்டு வலி இது தீர்ந்து கெற்பமுண்டாம்.

கிறந்திப் புண் குடோரம், வெடி குலைகள் வறச்சி கறப்பான் மருந்தீடு மகோதரம், காமாலை, பெருவயிறு, மூலம் இவை தீரும்.

தேள் மருந்து:-

வெள்ளெருக்கன் பாலில் அரிசி ஊறப் போட்டு எடுத்து உலர்த்தி வைத்துக் கொண்டு தேள் கொட்டினால் பத்தரிசி தின்னக் கொடுக்கவும். கொட்டின வாயில் திப்பிலி யுரைத்துப் பூசத் தீரும்.

பாக்குடனே திப்பிலி தின்ன கடுப்பு மாறும்.

(வேறு) வெட்டி விரை மிளகு கருவேப்பிலை, குப்பை மேனிச் சாறு, எருக்கன் பால் முலைப் பால் இந்த மருந்தெல்லாம் சமன் கூட்டி அரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்திக் கொட்டின வாயில் முலைப் பாலிலுரைத்துத் தடவவும் தீரும்.

தோஷத்துக்கு:-

ருத்திருச் சத்தே யுரைத்துத் தடவவும் நாக்கில் தடவிப் பார்க்க கறுத்தால் கிருஷ்ண தோஷம். வெளுத்தால் ருத்திர தோஷம். மஞ்சள் நிறமானால் பிரம்ம தோஷமென்றறியவும்.

வீரிய விர்த்திக்கு:-

வேப்பம் பிசினும் வெல்லமுஞ் சரி கூட்டி இடித்து தினமொரு பாக்களவு இப்படி நாற்பது நாள் தின்னவும் வீரியமாம்.

மண்டை குலைக்கு:-

தலைவலி மெத்த எடுத்தால் தேங்காய் நெய் நாசிக்கு நிறுத்தவும். வேப்பம் புண்ணுக்கு அவுரி வேர்ப் பட்டை அரைத்து சீலையிலாட்டி திரி பண்ணி நாசியில் புகை ஏத்தவும்.

(வேறு) எண்ணை வேப்ப முத்து அவுரி வேர் தும்பை வேர், மஞ்சள் மிளகு குங்கிலியம் கஸ்தூரி மஞ்சள் இவை எண்ணையி லெறித்து தலையில் வார்த்துக் கட்டி நாலா நாள் முழுகவும் தீரும். பருத்தியிலை, குப்பை மேனியிலை அரைத்து நெத்தியில் பூசவும். காது வலிக்கு சுக்கு இந்துப்பு முத்தக் காசு ஒக்தெப் பூடு வசம்பு நல்லெண்ணை எருக்கம் பழுப்புச் சாறு வெள்ளுள்ளி மஞ்சள் வேளை வேர் சமன் கூட்டி எரித்துக் காதில் வார்க்கவும்.

காது மந்தர் மாயிரைச்சலுக்கு:-

எருக்கிலை.எ, ஒன்று மேலொன்று அடுக்கி அதின் மேலே அதின் அரும்பை வைத்து அதில் இந்துப்பு விருகன்.க, மிளகு விருகன்.க, இது இரண்டும் பொடி பண்ணிப் பூவின் மேலே போட்டு அந்த எருக்கிலை ஒன்றாய் மூடி வாழை நார் கொண்டு சுத்தி காந்தலில் நெருந்திக் குடைகிற காதில் அந்த ரசம் விடவும்.

மதுவங்க பங்காறி மருந்து:-

இலவம் பிசின் அத்திப்பாலிலொரு சேரை எருமைத் தயிரில் அசனத்தே நன்றாய் பிசைந்து கட்டிச் சீலையில் சுத்தி புத்து மண் கொண்டு வந்து மண்பூசி சிவக்கச் சுட்டு மண்ணை வாங்கி அசனத்தே யெடுத்து வடி கட்டின எருமைத் தயிரில் குழப்பி முழுங்கவும் பத்தியம் வாழைக் கச்சல் அத்திப் பிஞ்சு, எருமைத் தயிரும்.

மேகத்தின் பேரில் சலமலம் அடைத்தால்:-

வெடி மருந்து வென்னீரில் கொடுக்க உடனே விடும். கை கண்டது.

விரையேறின வாதத்துக்கு மருந்து:- வெள்ளுள்ளி உரிச்சது.உரி, அரைத்துக் கெட்டிச் சீலையிலிட்டு விளக்கில் காய்ச்சி தைலம் வாங்கி அதில் நல்ல பெருங்காயம் காசிடை பெருமணக்கெண்ணை அந்தத் தயிலத்தில் விட்டு கலந்து கொள்ளவும். நாலு நாளிகைக்குள்ளே நிற்கும். கண்டது.

காது கேளாததற்கு:-

காது கேளாததற்கு :-

தேவதாரம், நல்லெண்ணெயி லெரித்து தலை முழுக காது கேட்கும். வெள்ளரி முருங்கை வேர் எருக்கம் பருப்பு இலைக் கள்ளி இலை நொச்சி இலையிவை யெண்ணெயி லெரித்து செவியில் விட காது கேட்கும். வலம்புரிக்காய், சிறுகீரை வேர், வெள்ளாட்டுச் சிறு நீரிலரைத்த எண்ணெயிலெரித்து மூன்று துளி விட்டு காதிலடைக்கச் சீய் மாறும். காட்டுப் பன்றி விட்டைப் பொடி நல் லெண்ணெயிலெரித்து காதில் விடவும். காது கேள்க்கும்.

ரச முறிக்க :-

வேளைப் பிஞ்சு பறித்துப் பிஞ்சு யெண்ணெயிலெரித்த காதில் குத்தி அடைக்க நோவு தீரும். வலம்புரிக்காய், சாதிக்காய், சிறுகீரை வேர் வெள்ளாட்டு சிறு நீரிலரைத்து நல்லெண்ணெயி லெரித்து காதில் குத்தியடைக்க சீய் மாறும்.

ரச முறிக்க :-

முசுமுசுக்கை கொண்டு வந்து தவைத்துப் பிழிந்த் சாறு உடம்பெங்கும் தவளையிட சாமத்தில் பிறகு வென்னீரு மூடி காய்ச்சி கிறந்ததின் மேலே கலம் வைத்து அதில் தண்ணீர் வார்த்து அதில் காரங் கையும் வைத்துக் கொண்டு பாக்கு வெற்றிலை போட்டுக் கொண்டு சிகீரை வேர் மூன்று கருணை போட்டு மென்றுயிறக்கவும். இப்படி மூன்று நாளுள் வேர்வை மாறிலல் ரசமில்லை யென்றறியவும்.

(வேறு)

ரசமாத்திரை முறிக்க உப்பெப்போட்ட ரச முறிக்க வாங்கிப் போட பருத்தியிலை குப்பை மேனியிலை பிசறி வேலிப் பருத்தி மிளகு, தக்காளி, துளசி, கீழா நெல்லி வெத்திலை ஈருள்ளி கூட்டி தவைத்து சாறு உள்ளுக்குங் கொடுத்து பிறகு காடி வார்த்துப் பிசைந்து உச்சந் தலை துவக்கி உள்ளங் கால் பரியாந்தம் தவளையிட்டு மத்தியான பரியந்தம் வெய்யிலிலிருந்து சாணி கரைத்து தலையில் விட்டு நாறு குடங் குளிர்ந்த தண்ணீர் சாடி விடவும். மொத்த ரசமும் கக்கிப் போம்.

(வேறு)

மூன்று சிந்தனைச் சாறு, சற்று புளியாரைச் சாறு சர்க்கரையுங் கூட்டி உள்ளுக்கு உள்ளுக்கு கொண்டு மேலே பசுவின் வெண்ணெ பாதாதிகேசம் ஒரு சாமம் மறிச்சு பிறகு வென்னீரில் குளிக்கவும். வலத்துடன் ரசம் விழுந்து போம். பிறகு ஆமணக்கிலை நொச்சியிலை, ஊமத்தியிலையு முருக்கிலை இதுகள் தவைத்து ரண்டு பானையிலிட்டு தண்ணீர் விட்டுக் காய்ச்சி கை காலில் ஆமணக்கெண்ணெ ஒரு சாமம் தேய்ச்சு அந்த காஞ்ச தண்ணீரில் கை கால் வைத்துக் கொண்டிருக்க தண்ணீரில் ரசம் விழுந்து போம்.

புண்ணுக்கு காரச் சீலை :-

மணத்தக்காளி சர்மூலமுந் தவைத்து உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் மட்டும் காலமே தவளையிட்டு அந்திக்கு குளிர்ந்த தண்ணீர் விடவும். இப்படி எழு நாள் விடவும் ரசம் விழுந்து போம்.

புண்ணுக்கு காரச் சீலை :-

மயில் துத்தம் பீடங் செய்து பொடி பண்ணி ஒரு கறண்டியில் போட்டு விளக்கெண்ணெ விட்டு காய்ச்சி ஒரு சீலையில் பிடித்து போடவும். ஒரு நாள் போட ஆறி போம்.

கட்டு மருந்து :-

கறிப் பசளை கொண்டு வந்து அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கட்டத் தீரும். ஓமம் நல்லெண்ணெயில் சிவக்க வறுத்து அரைத்து புண்ணை கலத்துக்குத் தக்கது வில்லையாத் தட்டி புண்ணில் போட்டுக் கட்டவும். எப்படிப்பட்ட புண்ணும் ஆறும்.

காதில் தாசி விழுந்தால் :-

ஒண்டியிலை வெங்காயம், வசம்பு, நல்லெண்ணெயில் கொதிக்க விட்டு காதில் புரியவும்.

மாட்டுக்கு நாய் துணிசி விழுந்தால் முசல்ச் செவி வேர் முத்தெருக்கச் செவிவேர் வெண்காவளை வேர், வேலிப்பருத்தி வேர், பெரும்பி வேர் அவரை இலை இவை கூட்டிப் பிழியவும்.

காதைச் சுத்தி வீங்கினதற்கு:-

சீகை வேர் வறிக்கோவை யிலை வெங்காய வேர், வெங்காயம் வசம்பு, பெருங்காயம், தென்னையிளம் பூவை நெய்யில் வேகவைத்து நாசியில் புளியவும், தென்னம்பு வைத்து வைத்து யெண்ணையில் கொதிப்பிட்டு நாசியில் விடவும். உடனே யானல் காதில் விடவும். நாள்ப் பட்டதானல் நாசியில் விடவும். பேய்ச் சுரை வேரை இரைத்து செவியில் புளியவும் பருபாகல் கிழங்கு வசம்பு நசியம் விடவும்.

முள்ளடி கள்ளானுக்கு:-

நீர்ப்புலா இலை நல்ல கொத்தானிலை வெண் கல்லு அரைத்துப் பூசவும் தீரும். ஊசிப் பாலை கொண்டு வந்து உரலில் துவைத்து ஒரு படி எருமை மோர் விட்டுப் பிசைந்து வடித்து உலை வைத்து கருஞ் சாமை அரிசி போட்டுப் பொங்கி அந்த சோத்தில் வெல்லம் போட்டு நெய் வார்த்துக் கொண்டு தின்னவும். வேதியாம். இந்தப்படி தின்ன வயிறு நன்ருய் வேதியாம். அது காமாலை தீரும். கீழ நெல்லி சமூலமும் அறிந்து ஒருணம்பல் ஈர வெங்காயம் ஒருணம்பல் சீரகம் துட்டெடை.உ, மஞ்சள் துட்டெடை.உ, புழுங்கலரிசி துட்டெடை.உ, இது வெல்லாம் இரண்டாய்ப் பகுந்து பாதி வறுத்துப் பாதி பச்சையாய்ப் போட்டு நாழி நீர் விட்டு நாலிலொன்ருய்க் காய்ச்சிக் கொடுக்கவும். இந்தபடி மூன் நாள்க் கொடுக்கவும், மஞ்சக் காமாலை தீரும். பத்தியங் கடூரமாகக் காக்கவும்: கை கண்டது.

பிள்ளையிற மாந்தலுக்கு:-

நாருணங் கள்ளி இலையும், ஈர வெங்காயமுந் வதக்கிச் சாறு பூண்டு புளிந்து அதில் திப்பிலி மஞ்சள் தம்பருஉட்டகம் இது மூன்றும் விளக்கில் சுட்டு உரைத்துக் கொடுக்கவுட். இந்தப்படி மூன்று நாள் கொடுக்கவும். பத்தியங் கடூரமாகக் காக்கவும். பெற மாந்தல் தீரும்.
(வேறு) ஊசித் தகரை வேரும் ஈருள்ளியும் நறுக்கி சீலையில் பொட்டணங் கட்டி இள வென்னீரில் பிசைந்து பிழிந்து கொடுக்கவும் இறப்புத் தீரும். கை கண்டது.

ஈளை நோவுக்கு மருந்து:-

மாவிலிங்கந் தளை கொண்டு வந்து இடித்து புழுங்கலரிசி ஒரு மானமும் தளையும் கேர்னி மேல் போட்டு தேய்த்து அரிசி பச்சையான பிறகு இடித்து தேய்த்து மாவு பண்ணிக் களி கிண்டி உடம்புக்கு வென்னீர் விட்டுக் கொண்டு ஈரம் வாங்கிறதற்கு முன்ருக அந்தக் களியில் வெல்லம் போட்டு நெய் வார்த்துக் கொண்டு தின்னவும். பத்தியம் எருமைத் தயிரும் சோறும் தின்னவும். மற்றது பத்தியங் கடூரமாகக் கார்க்கவும். இதில் தீரும் வியாதி ஈளை இருமல், இளைப்பு, உப்பிசம் இது வெல்லாந் தீரும். கை கண்டது.

குன்டிகை சூலைக்கு:-

ஈறலைப் பத்தி நோகும். காச்சலும். குளிரும் வரும். இதுக்கு மருந்து: கையாந்தகரையிலை பிண்டி இலை வேர் கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் காசு கட்டி, கடுக்காய், திரிகடுகு, வசம்பு வெள்ளுள்ளி இவை ஒரொன்று இரண்டு களஞ்சி அரைத்து புளி கலந்து கொடுக்கவும் வயிறு கழியும். வியாதி தீரும். பத்தியம் காரப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

வெக்கடுப்பாக் கடுத்தால்:-

வெடாம் வேர் முள்ளிக் காயளவு அரைத்து இள வென்னீரில் மூன்று நாள் கொடுக்கவும் தீரும்.

ரத்த ரேக சூலைக்கு:-

கவி ரத்த மொருக்கூர்ல் க்கயாம் மறுவே வோடு போல் வீழ்ந்திருக்கும். முறத்கே யுடம்பு யுமதி கெடும் குடலில் ம்பற மிகுந்திருக்கும்: சிறத்தில் கனப்பு மிகவுன்

நீயைாச் சித்தி விருமிறத்தம். அத்தரந்த ரேக மெண்ணி சொல்ல வல்ல நல்லோரே. யிப்படிக்கு வஞ்சினைக்கு மருந்தீட்டுக்கு பேய் பிசாசு பிடித்தாலும் முடலில் ஒரு மிருந்தாலும் இப்படி எடுக்கும். இதக்கு சோதனை:- பிரூர் வேர் வடக்கே போனது, குதிரை வாலில் அரிசியும் இரண்டு எடுத்து இடித்து மாவாக்கி கொடுக்கவும். அத்திச்சு இருந்தால் சூனியம் வஞ்சினையென்றறியவும்.

<u>வஞ்சினை சூனியத்திற்கு மருந்து</u>:- 20.11.62.

முடக் கொத்தான் சாறு உழக்கு, நெய் உழக்கு இது இரண்டும் உள்ளுக்குங் கொடுத்து மேலும் பூசவும். இப்படி மூன்று நாள்க் கொடுக்கவும். வஞ்சினை சூனிய முறிந்து போம்.

<u>உடலோடே கூடின வியாதிக்கு மருந்து</u>:-

வெழிச்சம் பட்டை மரமஞ்சள் மிளகு, கடுகு, பெருங்காயம் சதை குப்பை லவுங்கப் பட்டை, குங்கிலியம், அபினி மருந்து சாதிக்காய், கிரும்பு, வசுவாசிப் பூ இவை சமன் கூட்டி இஞ்சிச் சாறு விட்டரைத்து இந்தப் பொடி தேனில் இருபது நாள் கொக்கவும். பத்தியம் சுருக்கருவாடும் சோறு முண்ணவும்.

<u>ஒடி கட்டாமல் வெடி மணி</u>:-

மாவிலிங்க மரத்துக்கு செவ்வாய்க் கிழமை நாள் கன்னிகளியாத பெண்கள் நூத்த நூல் பிச்சு அரைச்ச பஞ்சு மஞ்சள் பசுவின் பால் விட்டு சுத்தஞ் செய்து தானும் எட்டு நாளும் தானம் செய்து ஒரு சந்தியிருந்து மறு செவ்வாய் கிழமை நாள் போய் பொங்கலிட்டு மறுபடி கறுப்புள்ள ஆடு பலி கொடுத்து நிறுவாணத்துடன் வடக்கே போற வேரெடுத்து முப்பத்தாறு மணி செய்து கொண்டு தனக்கு இஷ்ட தேவதையை ஆசரித்து பஞ்சாட்சறம் மூன்று விடுத்த மாறி செபிச்சு கட்டிக் கொண்டு இருக்கவும். சத்துருவந் தெறித்தால் இந்த வெடி மணியில் ஒரு மணி வெடிக்கும். வெடிச்ச மணியை எடுத்துப் பொங்கலிட்டு அந்தப் பொங்கச் சோத்தில் இந்த மணியை போட விட்ட சத்துரு மேல் வெடிக்கும். அல்லது இந்த மணியை நெல்லு மிக காந்தலில் வெதுப்ப அவனுக்கு மேலிளைப்பு எடுக்கும் நீரில் போட்டால் மாறும்.

நற்பாலை வடக்கே போற வேர் பிடுங்கி பட்டை தட்டி பெண்ணுக்கு கிடாக் குட்டி போட்ட வெள்ளாட்டுப் பால் ஆணுக்கு பொட்டைக் குட்டி போட்ட வெள்ளாட்டுப் பால் இந்தப் படி வார்த்து அரைத்து மாங்காயளவு அரைத்து சிறுமுள்ளிக்காயளவு அரைக்கால் படி பாலில் கலக்கி உள்ளுக்குங் கொடுத்து மத்தது பாலில் கலக்கி சர்வாங்கமுந் தவளையிடவும். இந்தப்படி உள்ளுக்குங் கொடுத்து மேலுந் தவளையிடவும். இந்தப் படி கொடுக்கவும். கை கண்டது.

(வேறு)

சின்னக் குதிரை லத்திச் சாறு படி.லு, அந்தச் சாத்தில் சுக்கு, மிளகு திப்பிலி, ஓமம், வெள்ள வெங்காயம் அரைத்து கரைத்து பொங்க வைத்து இறுத்துக் கொடுக்கவும். இந்த படி மூன்று நாள் கொடுக்கவும் வீக்கந் தீரும். கை கண்டது. பத்தியம் கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

<u>கிறந்தி புண்ணுக்கு மருந்து</u>:-

வெள்ளைக் குங்கிலியம் விராகனெடை.உ, துருசு விராகனெடை.க, நாத்தம் விராகனெடை.ரு இம் மூன்றும் பொடி செய்து கால் படி நல்லெண்ணையில் கலந்து அடுப்பில் வைத்து காய்ச்சி இரண்டு விராகனெடை. கொசு மெழுகு போட்டு எட்டிக் கோலாலே தழாவி பதமா இறக்கி தண்ணீர் வார்த்து கழுவி இறுத்துப் போடவும். இந்தப்படி கழுவவும். அதைத் தேங்காய் தொட்டியில் வைத்துக் கொண்டு புளியந் தளையை வெவித்து அந்தத் தண்ணீரில் புண்ணை கழுவி இந்தக் களிம்பு போடவும். புண் ஆறும். இந்தப்படி பத்து நாள் போட ஆறாத புண்ணும் ஆறும். கை கண்டது. ஸ்ரீராமஜெயம்.

<u>நீரழிவுக்கு தார்ச்சந்நாதி தயிலம்</u>:-

ஆவாரம் பட்டை வேர் நாவல் பட்டை கொண்ணைப் பட்டை, மருதம் பட்டை மாம்பட்டை, துவரம் பட்டை , ஒதியம் பட்டை அத்திப் பட்டை, ஆலம் பட்டை, ஆத்திப் பட்டை, அரசம் பட்டை, விளாம் பட்டை பூவரசம் பட்டை, வறப்புளா வேர், நீர்ப் பூலா வேர், இலந்தைப் பட்டை, பாகிரிப் பட்டை, வேலம் பட்டை; கடலிருச்சிப்

பட்டை, இறளிப் பட்டை, வெள்வேலாம் பட்டை, கருவேலம் பட்டை, பொன்னாவரை வேர், தென்னம் பாளை பொன் முசுட்டை வேர், நெல்லிப் பட்டை, அரைநெல்லிப் பட்டை, இச்சிப் பட்டை, நருளிப் பட்டை, காட்டு நெல்லிப் பட்டை, வாகைப் பட்டை தென்னங் குரும்பை, கிரவைப் பட்டை, இலவம் பட்டை, முள்ளிலவம் பட்டை, வகைக்கு பலம் பத்து, அமுக்கிரா வேர் சித்தா முட்டி, பேரு முட்டி வேர், நன்னாரி வேர், முன்னை வேர், நிலக் குமிள் வேர், பெருங் குமிள் வேர், சங்கு வேர், அம்மையார் கூந்தல் சீந்திக் கொடி வேர் காரை வேர் நெருஞ்சி வேர் சிறு கீரை வேர், பொன்னாங்கண்ணி வேர், நெய்ச் சுட்டி வேர் வாகை வேர், பருத்தி வேர், சிறுவாகை வேர், நிலவிளா வேர்; பெரு விளா வேர், பாதிரி வேர், தேத்தான் வேர், கொம்மட்டி, காட்டு மல்லிகை வேர், நல்ல மல்லி வேர், முல்லை வயளை மானை வேர், சித்தும் பல்லி வேர், பேரு மல்லி வேர், முல்லை*அடங்கா*காளை*வேர்;*சித்*வில்வ வேர், வட்டத் திருப்பி வேர், சிறு களடி வேர், சிகப்பு நெருஞ்சி வேர், முசுமுசுக்கை வேர், குதிரை வாலி, கோரைக் கிழங்கு, வறச் சுண்டி வேர், மாதளை வேர், பேய்ப்புடல், நீர்ச் சுண்டை வேர், கீழா நெல்லி வேர், விஷ்ணு காந்தி, வேர் வகைக்கு பலம்.அ, நிலப் பனைக் கிழங்கு, தண்ணி விட்டான் கிழங்கு, அல்லிக் கிழங்கு, நெய்தல் கிழங்கு, அம்பலக் கிழங்கு, செங்கள நீர்க் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு வகைக்கு சேர்.க.

<u>சாறு வகை</u>:-

கையாந்த கரைச் சாறு, பொன்னாங் கண்ணி, சிறுகீரை நெய்ச் சுட்டி தாமரை விழுதுகத்தாளை வல்லாரை நெல்லிக்காய் வகைக்கு சேர்.க, சீந்திக் கொடிச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, கோவையிலைச் சாறு, கொத்தான் சாறு வகைக்கு சேர்.ச, நல்லெண்ணை சேர்.ய , சந்தனமிளாக்காய் கட்டை சேர்.க, வெங்கம் புறக் கட்டை சேர்.உ, தேவதாரக் கட்டை சேர்.வ, செம்புளிச் சான் கட்டை சேர்.அ, அகில் கட்டை சேர்.அ, செஞ்சந்தனக் கட்டை சேர்.ಉ, வெட்டி வேர் சேர்.உ, விலாமிச்சம் வேர் சேர்.க, இவ்வெல்லாந் தனித் தனியே கசாயம் நெல்லி முள்ளி யாக்கு.க, அதிமதுரம் பலம்.உ, கோஷ்டம் ஏலம், சீரகம், கருஞ்சீரகம், அமுக்கிரா வேர், தாளிச பத்திரி சடாமஞ்சி, சுக்கு, திப்பிலி, மிளகு, பெருஞ்சீரகம், லவுங்கம் லவுங்கப் பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, மஞ்சிஷ்டி, சகுப்பை, சமுத்திரப் பச்சை, புலாங் கிழங்கு, வட்டித் திருப்பி வேர், செண்பகப்பூ, ஓமம், தேவதாரம், சிறுநாகப்பூ கடுகுரோகணி, முந்திரிப் பழம், கஸ்தூரி மஞ்சள், செம்புளிச்ச வேர், அகில் கட்டை, வெங்கம புர கிளி ஆவாரம் பட்டை.பூ, சாந்து பட்டை, அகில் புஷ்பம், தேவதாரம் கசகசா லவுங்கப் பட்டை, சன்ன லவுங்கப் பட்டை, செஞ்சந்தனம், பீதரோகணி, விருகனை.உ, பச்சைக் கற்பூரம் விராகன்.கரு, குங்குமப் பூ விராகன்.உ, கோரோசனை விராகன்.உ, புனுகு சட்டம் விராகன்.உ, கஸ்தூரி விராகன்.ரு, விழாம் பிசின், வெளிச்சப் பிசின்; ஆவாரம் பிசின், தேத்தான் விரை பலம்.ರು, கடுக்காய், கடுகுரோகணி கொம்பறக்கு பலம்.யரு, கருவேலம் பட்டை பிசின் பலம்.வ, சந்தனம் வகைக்கு பலம்.ரு கடைச் சரக்கு மத்தவையெல்லாம் வகைக்கு பலம்.வ, இதுக்கெல்லாம் விளக்கெண்ணை பதக்கு பால் பதக்கு, முலைப்பால் குறுணியிள நீர் குறுணி வேர் வகை வகை தனிக் கஷாயம் நெல்லி முள்ளி, தனிக் கஷாயம் சந்தனக் கட்டை தனிக் கசாயம் வெட்டி வேர், தனியே கசாயம் கொம்பறக்கு தனியே கசாயம், நல்லெண்ணையில் கசாயம் வேர் வகைக்கு தண்ணீர் பதக்காகக் காய்ச்சி கொள்ளுகிறது. பட்டை வகைக்கு தண்ணீர் பதக்காக காய்ச்சிக் கொள்ளவும். கிழங்குக்கு தண்ணீர் குறுணியாக காய்ச்சிக் கொள்ளவும். வேர் பட்டை கஷாய முன்னே வைத்து இறக்கிக் கொண்டு எண்ணையை விடவும். அப்பால் கிழங்கு கசாயம் விடவும். பால்கள் முலைப் பால்கள் முளநீர்கள் எறிக்க சுண்டச் சுண்ட விடவும்.

கடையின் மருந்து கறுக்க அரைத்துப் போடவும். பச்சிலைச் சாறு வகையாய் விடவும். இப்படிச் சாறு வகையும் விட்டுக் கூடப் போட வேண்டிய மருந்தெல்லாங் கூடப் போட்டு ஒன்றுந் தப்பாமல் பதத்திலே ஏழா நாள் ஒன்பதா நாள் மெழுகு பதமா இறக்கி

பதம் தப்பாமல் வடிக்கவும். இந்தப் படிக்கு வடித்த தயில முழுகினால் சகல மேகம் தாகம், உழலை, மயக்கம், நீரழிவு, சுரம் இது வெல்லாம் போய்விடும். இந்தப்படி மேலுக்கும் விட்டு தலையு முழுகவும். உள்ளுக்குங் கொஞ்சங் கொடுக்கவும். பசுவின் நெய் இரண்டு சேர் கூடத் தயிலத்தில் விடவும். வைத்திருக்க விருந்தால் விடலாம். அந்தந்த சரீர மறிந்து வைத்தியம் பண்ணவும். இந்தப்படி சலமேக, நீரழிவு சகலமுந் தீரும். பத்தியம் தலை முழுகின் அன்றைக்கு காரப்பு, புளி வாசிக்கவும்.

<u>கீறிப் புழுவுக்கு</u> :-

பழுத்த தேக்கிலை ஒரு பிடி இரு நாளி நீர் விட்டு உழக்காக காய்ச்சிக் குடிக்க கூட்டே புழு விழும்.

<u>ராச வசியம்</u> :-

கொட்டி தேவ, மகி தேவ, கோரோசினையுங் குங்குமமும் மட்ட எருது செவியுடன் மாளுக்கத்தின் வித்தொன்று இடிட்டு கரைத்து திலத மிட எதிரே நடவிராமாகில் மட்டுப் பட்டாத வன்னியர்கள் வந்து வணங்குவார் கண்டரே. என கொர்ட்டைத் தேரகப் பட்டது கஸ்தூரி மஞ்சள் கீதே ஆகப்பட்டது. மரமஞ்சள், கோரோசினை குங்குமம் மட்ட எருது ஆகப்பட்டது. செவ்வியம் மாளுக்கத்தின் வித்தாகப்பட்டது. பூனைக் கொட்டை இது கூட்டித் திலத மிட்டால் ருசவசியமாகும்.

<u>கரப்பானுக்கு</u> :-

கூசு செங்கத்தாரிப் பட்டை சின்னி கூர் மிளகு வீசு சிறு குறிஞ்சான் வேர் கூட்டி காசினியில் லென்னிலிடவே குடிநீர் நேர்க்கும் பல கரப்பான் தின்னமுடன் போமத்தினம்.

<u>பாம்பு விஷத்துக்கு</u> :-

அண்ட தோறரஞ்ரூடி அடங்கிய முண்டின வேறு தாண்டவச்சிரத்தின் மீதே தறித்து வென முண்டின் வேறு பாண்டவ் மறத்தின் வேற் பறிந்திரி தின்னத் தின்ன தீண்டிய அறவஞ்சாகு அய் விறலி வேர் வெள்ளெருக்கம் வேர் நொச்சிக்கு அஞ்சிலை நொச்சிய யென்றும் பேர் ஆனைக்யால் பாண்ட மரம் மென்னும் பேர். இந்த மூன்று வேரும் குறணை பண்ணித் தின்ன இந்தப் படி தின்ன கடித்த பாம்பி சாகும். செத்தவர்கள் பிழைப்பார்கள்.

<u>வாய்வுக்கு</u> :-

சந்திர சூரியர் சாக நாகமும் இந்திரன் தேவியும் இறையவன் மாலொடு
மந்திர கிரியோடு மருத மங்கையும் தந்திர முடங் கொள் தனியும் வாயுவே.

<u>கண்ட மாலைக்கு</u> :-

சங்க வேர், வடக்கே போற வேர், பிருங்கி வந்து பட்டை தட்டி பசுவின் பால் வார்த்து அரைத்து அந்தப் பாலில் மூன்று நாள் வேறு சங்கங் கொழுந்து எலுமிச்சங் காயளவு கொண்டு வந்து பசுவின் பாலிலெறித்து புண்ணுக்கு தடவவும். புண் ஆறும். சகல கண்ட மாலையுந் தீரும். கை கண்டது.

<u>விடாத சோகைக்கு மருந்து</u> :-

நல்ல நெரிஞ்சி வேர் ஒரு பிடி, சீரகந் துட்டெடை, ஈர வெங்காயம் ஒரு பிடி போட்டு பர்டியா யறிந்து இரண்டு கருப்பு பழுந்து பச்சையாப் பாதி போட்டு வறுத்துப் பாதி போட்டு நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும். இந்தப்படி மூன்று நேரங் குடிக்கவும். விடாத சிகையும் விடும். இது கை கண்டது.

<u>சூலை வாய்வுக்கு</u> :-

முருங்கை யீர்க்கு ஒரு பிடி. சீரகம் ஈர வெங்காயம் புழுக் கலறிசி வறுத்துப் பாதி பச்சை பாதி நாளி நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி கொடுக்கவும்.

<u>கண்ணோவுக்கு தயிலம்</u> :-

கண்ணோவுந், தலை நோவுந், செவியில் நோவும் காந்திடை காய் யந்தக் கரையொடு

கத்தாளை பன்னீரும் நெல்லி முள்ளி பாவு நாளி பகற வரு நன்னாரி வெட்டி வேரு, விள்ளா
அதிமதுரம் நால் காகமே விய சந்தனமும் இரு பலமுங் கூட்டி நன்றாக எண்ணையில் இரு நா
விட்டு நலம் பெறவே வெந்த யெண்ணை முழுகிடாயே.

<u>பொன்னாங்கண்ணி தயிலம்</u>:-

என்ணையில் முலைப் பால் வார்த்து ஈறுறு களித்த பின்னை நண்ணிய பொன்னாங்கண்ணி நன்னாரி முத்தக் காசு, திண்ணிலாம் பிச்சல் சீந்தி திருந்திரு வேலி கூட்டி பண்ணி தலையில் வார்க்கப் புயித்தியந் தீரு மென்னே

<u>சவுபாக்கிய சூரணம்</u>:-

பறங்கிப் பட்டை பலம்.ச, கண்டு பறங்கி பலம்.உ, திப்பிலி பலம்.உ, அரசன் வேர் லவுங்கம், சாதிபத்திரி, சர்க்கரை பாலில் மடிக்கவும்.

(வேறு)

காச்சுரைப் பழம்.உய, கொட்டை வாங்கிப் போட்டு அச்சானி தேன் நல்லதாக கொண்டு வந்து பசுவின் பால் வார்த்து காய்ச்சி வடி கட்டி அதிலே காச்சுரைப் பழம் போட்டு தானிய புடமிட்டு தினம் நாலு பழம் தின்ன ஒரு கறண்டி தேன் கொடுக்கவும் ரத்த பித்தந் தீரும்.

<u>வசியம்</u>:-

நன்னைக் கண்ணுக் கினியாளும் நரையுந் திரைய மில்லாளும் யென்று நாவுக்கினியாளும் யெல்லாப் பேய்க்குந் தலைப்பேயும் கொண்ணைப் பிசிறுங் கோரோசினையுங் கூட்டிய வருக்கிடு வீரய். கன்னை யிளந்த பசுப் போலே கதறிப் பின்னே வருவாளே.

<u>கிருமிக்கு</u>:-

புத்தாமும் பழஞ் சோறு மிளகு பொடி பண்ணி தேனில் கொள்ள சகல கிருமியுந் தீரும்.

<u>பித்தத்துக்குத் தலை முழுக எண்ணெய்</u>:-

கத்தாளை வேர் சாறு நாளி, நெல்லிக்காய்ச் சார் நாளி, பசுவின் பால் நாளி கொழுப்பெச்சாறு நாளி, முசுமுசுக்கைச் சாறு; நாளி நல்லெண்ணை இரு நாளி அதிமதுரம் காஞ்சி அரைத்து கலக்கிக் காய்ச்சி தையில பக்குவத்தில் வடித்துக் கொண்டு தலைக்குத் தேய்த்து முழுகவும். இதில் தீரும் வியாதி பித்த மென்னப் பட்டதெல்லாந் தீரும். இது கை கண்டது. வெள்ளாட்டுப் புழுக்கையை ஒரு கூடை கொண்டு வந்து ஒரு பானையிலிட்டு மேலே சட்டி கொண்டு மூடி அந்தச் சட்டியின் நடுவே துவ்வாரம் பண்ணி குழி வெட்டி குழிக்குள்ளே சிறு குழியாய் அந்தக் குழிக்குள்ளே சட்டியிலே தண்ணீர் வார்த்து அதுக்குள்ளே சொப்பு மிதவாமல் பார்த்து வைத்து சொப்புக்கு சட்டி துவ்வாரத்துக்கு சரி வரப் பார்த்து அந்தப் பானையைத் தலை கீழாய் கவுத்தி பானை தெரியாமல் எருக் கொண்டு மூடி அக்கினி புடமிட்டால் ~~தலைமிறக்~~ தைலம் மிறங்கும். அந்தத் தைலத்தை எடுத்து வைத்துக் கொண்டு வெத்திலையில் தடவி உள்ளுக்கு மென்று தின்னவும். இப்படி அரை மண்டலங் கொள்ளவும். சுவாச காசம் போகும்.

(வேறு)

நாறு வருஷம் சென்ற ஊஞ்சல் மரத்தை வேர் வெட்டி பானையிலிட்டுச் சட்டி கொண்டு மூடி முன் சொன்ன பிரகாரத்துக்கு தைல மிறக்கி வெத்திலையில் தடவி உள்ளுக்கு மென்று தின்னவும் சுவாச காசம் போகும். கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

<u>மூக்கில் ரத்தம் விழுகிறதுக்கு</u>:-

நல்லெண்ணை படி.க, விளக்கெண்ணை படி.க, பசுவின் நெய் படி.க, கஸ்தூரி மிளகு பலம்.க, அந்த மிளகு பாலிலே வெவித்து நேய்ச்சுப் போடவும். மூணும் ஒன்று இரண்டாய் இடித்து மெல்லிய சீலையில் கட்டி அந்த எண்ணையில் போட்டு ஒன்பது நாள் சூரிய புடம் வைத்து ஒன்று விட்டொரு நாள் பத்து முறை முழுகவும். நாலு நாளைக் கொரு முறை முழுகவும். எட்டு நாளைக்கொரு முறை முழுகவும். மூக்கில் ரத்தம் விழுகிறது நிற்கும்.

26-12-62

<u>கண்ணோவுக்கு:-</u>

ஏலம் தட்மெடை இடித்து வஸ்திர காயம் பண்ணி கலத்தில் மேலே வைத்து காசி செம்பு கொண்டு நன்றாய் ஒரு சாமந் தேய்த்து நயமான பிறகு அந்த மருந்துக்குச் சரி பசுவின் வெண்ணெ போட்டு மறுபடி ஒரு சாமந் தேய்த்து அந்த மருந்தெல்லாம் வாங்கி செப்பு சிமிளி லடைத்து வைத்துக் கொண்டு கண்ணுக்கு மை போடவும். இதில் தீரும் வியாதி கண்ணோவு, வெண்ணோவு, புழு வெட்டு, சிகைக் கண்ணு மற்றும் சகலமுந் தீரும். கை கண்டது.

(வேறு)

திருநீர் படிக்காரம், வேலையணைத் சாணிலை சாற்றில் பசுவின் வெண்ணெயில் முன் சொன்ன பிரகாரம் உரைத்துச் செப்புச் சிமிளிலடைத்துக் கொண்டு கண்ணுக்கு மை போடவும். கண்ணோவு வெண்ணோவு தீரும். கை கண்டது.

(வேறு)

படிகாரம் குன்டு மணிப் பிரமாணம் கொண்டு வந்து அரைத்துச் சந்தன நீரிலே படிகாரத்தை மத்திச்சு துணியிலே பொட்டணமாகப் பிடித்து கண்ணிலே ஒரு துளி பிழியவும்.

<u>கண்ணேக்காடு எடுத்தால் மாத்த மருந்து:-</u>

கத்தாழந் சோறு விளக்கெண்ணெ முலைப் பால் மூன்று மத்திச்சு சீலையில் வடித்து பொட்டணமாகக் கண்ணிலே ஒத்திக் கொள்ளவும் கண்ணோவு தீரும்.

<u>கை கால் மடச்சலுக்கு:-</u>

ஆட்டுப் பார்சால பெரிய கொடிப் பட்டைஅரைத்தது முள்ளிக் காயளவு சீரகம் ஈருள்ளி கல்லுப்பு பனை வெல்லம் இது வகைக்கு கால் விருகனெடை இந்த அஞ்சு வகையும் வென்னீர் விட்டு அரைத்து வென்னீரில் குடிக்கத் தீரும்,

<u>சந்து வாதத்துக்கு:-</u>

வடக்கே போர புங்கம் வேர் தவைச்சு சாறு இரு கூறு நல்லெண்ணெ ஒரு கூறு கூட்டிக் கொடுக்கத் தீரும். கை கண்டது. பத்தியம் துவரைப் பருப்பு.

(வேறு)

வேலிப் பருத்தியிலை பேய் மிரட்டி யிலை, தழுதாளை முடக் கொத்தான் இலை இது ஐந்தங் கூட்டி இடித்து மண் வெட்டி காய்ச்சி அதில் பிளிந்து நல்லெண்ணெ விட்டு கொதியில் பிதியிடவுந் தீரும்.

<u>வாதம், கை கால் கழுக்கள் கடுப்புக்கு மருந்து:-</u>

ஆகண்ட இலை தவைச்சு சாறு படி.௶, நல்லெண்ணெ படி:வ, சாறித்து மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு; புளி தவிர்க்கவும்.

<u>வெட்டு காயத்துக்கு மருந்து:-</u>

பாகயிலை ஒரு பிடி வேளையிலை ஒரு பிடி வல்லாரை ஒரு பிடி முடக் கொத்தான் ஒரு பிடி கய்யாந்த கரை ஒரு பிடி, இந்த ஐந்துங் கூட்டி உறவு செய்து நறிக்கி நாளி நல்லெண்ணெயில் காய்ச்சி இறக்கி இந்த மருந்தை எண்ணெயில் போட்டு பொன்னிறமானதின் பிறகு இறக்கி வெள்ளைச் சீலையில் தோய்த்துப் புண்ணின் மேலே போட ஆருத புண்ணும் ஆறும்.

<u>காசி வியாதிக்கு:-</u>

குங்கிலை லைச் சாறு ஒரு படி விளக்கெறிக்கிற சாராயம் அரைப்படி பசுவின் நெய் அரைபடி கோழி முட்டை வெள்ளைக் கரு அரைப்படி இந்த நாலு வகையும் சாறித்து உள்ளுக்கு கொள்ளவும். மஞ்சள் கருவை வதக்கித் தின்னவும். அந்தி சந்தி இந்தப் பிரகாரங் கொள்ளவும்.. உருமத்தில் சாராயம், பசுவின் நெய் ஒரு முட்டை வெள்ளைக் கரு இந்த மூன்றும் சாறித்துக் கொள்ளவும். காரப்பு, புளி தவிர்க்கவும்.

தலையுத்த பேர்க்கு சயிந்தவ மிளகு, சுக்கு, விலையி செவ்வியந் தான் விளங்கு நமாச்சாரந் தான் அலையுரு கையியான் சாத்தில் அரைத்தாவின் நெய்யில் சேர்த்து நல மித் நாசி தன்னில் நசியமும் பண்ணத் தீரும்.

பாதகம் தீர்க்க பஞ்ச கவ்வியம் பார்வதி கேட்க பரமேஸ்பர னுரைத்தான் நேர்த்தியதாக நிரைத்துச் சொல்வோம். வாக்கியஞ் செய்யும் வகையது கேளீர்.

பேயின் மிரட்டி, பேய்ப் பீக்குடனே பேயினத்தி பெரும் பேய் முன்னே நீக்கும் பேய்ச் சும்பை நிரைப் பேய்ச் சுரையும் காயப் பேய்ப்புடலும் கரியப் பேயத்தி முட்டிப் பேய்ப் பாச்சோத்தியும் பெய்யொன்பது வேர் ஒக்கக் கூட்டு ஒரை வசம்புடனே கார்க்குந் திப்பிலி கூடிய திரிபலை யேலம், மஞ்சள் இடிமர மஞ்சள், மாத்திய மதுரம் மந்திஉட்டிரோகணி, முந் தக்காசு, முதிர் வாய் விளங்கம், வாய்த்த முந்திரி வட்டத் திருப்பியும், கோஷ்டம் அக்கினி கொண்டோரொன்று நாவு களஞ்சி நலமுட னிருத்து ஆவி னெய் முதலா அச்சமதாகி ஒன்று நன்னுனி (இந்த பாட்டு முடிவி இல் லை).

<u>புடை மேகம், படர் தாமரை ஆறுதறணம் இதுக்கு களிம்பு</u>:-

கடுக்காய், தானிக்காய், மாசிக்காய், வீறம், பூறம் லிங்கம், வெள் ளைக் குங்கிலியம், மிருதார்சிங்கி, காசுக்கட்டி, சமனிடை பசுவின் வெண் ணை கூட்டி அரைத்து தண்ணீரில் போட்டு வைத்து புண்ணுக்கு தடவினால் புண்ணு ஆறும். இது கை கண்டது.

<u>சகல கிறந்திக்கு எண்ணெய்</u>:-

விளக்கெண் ணை படி.க, சாதிக்காய், ஏலம், கோஷ்டம், அதிமதுரம், திப்பிலி, செண்பகப்பூ, மிளகு, சுக்கு, வலம்புரிக்காய் இவை வகைக்கு விராகனிடை.உ, சாதிப் பத்திரி கிறம்பு வகைக்கு விராகனிடை.க, கடுக்காய்த் தோல் கற்கடமுச் சருகு.வகைக்கு விராகனெடை.ரு, களிப்பாக்கு விராகனெடை.ங இது வெல்லாம் பொடி செய்து வைத்துக் கொண்டு சுருள்ளி பலம்.ங, எலுமிச்சம் பழம்.ய, முடக் கொத்தான் சாறு ஒரு படி, வதமடக்கிச் சாறு ஒரு பிடி. பொடி தழைச் சாறு ஒரு பிடி, வெருகங் கிழங்கு பலம் .க, முன் சொன்ன தெல்லாம் கூட விட்டு பசுவின் பால் ஒரு படி கூட விட்டு எலுமிச்சம் பழமுங் கூடப் பிளிந்து அடுப்பில் வைத்து இந்தச் சாறெல்லாம் வத்தி எண் ணை பதம் வரு கிறதுக்கு முன்னே வெருகங் கிழங்கு சுருள்ளியும் போட்டு அதின் பிறகு கடைச் சரக்குத் தூ ளெல்லாம் போட்டு மெழுகு பதத்திலிறக்கி வயிறு பேதிக்கு மூன்று நாளும் உள்ளுக்கு கொடுக்கவும். மூன்று நாள் நிறுத்தி பிறகு மூன்று நாள் கொள்ளவும். பிறகு மூன்று நாள் நிறுத்தி மூன்று நாள் கொள்ளவும். இப்படி ஒன்பது நாள் கொள்ளவும். இதில் தீரும் வியாதி சரீரத்திலுள்ள புண்ணு, புருச கிறந்தி அரையாப்பு கட்டுச் சூலை கள்ளிப் பு வியாதி கருவியாதி கெற்ப சூலை, கை கால் முடங்கல் பெரும் புண்ணு மற்றுமுள்ள வியாதிகளெல்லாந் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு, பசுவின் பால், நெய், அருக்கீரை முருக்கம் பிஞ்சி, நச்சுப்புக் கட்டவும் மாறும். சரீரம் வச்சிர காயமாகும். கை கண்டது

<u>குடலேத்தத்துக்கு</u>:-

செவ்வாய் கிழமை நாள் பழம் பாசி வேரை வாய் பேசாமல் பிடுங்கி வெளிசமாடி மஞ்சள் தடவி தூபங் கொடுத்து காதில் கட்டக் குடல் விரும்.

(வேறு)

முடக் கொத்தானிலையும் தழுதாளையிலையும் அவித்து விளக்கெண் ணையில் முழுங்கவும். களிக் கொழுந்து மிளகு வெள்ளுள்ளியும் அரைத்து வென்னீரில் கொள்ளவும். பாவட்டை வேர் பெருங்குறிஞ்சான் வேர் இவை சமன் கொண்டு அரைத்து காருட்டு பாலில் குடிக்கவும் குப்பை மேனிலை முருங்கைச் சிறும் இவை சமன் கொண்டு அரைத்து இள வென்னீரில் குடிக்கவும்.

வெள்ளறுகு சமூலமும் சிலந்திக் கொடி சமூலமும் ஆடு தின்னாப் பாளை சமூலமும் மலை தாங்கி சமூலமும் நஞ்சுண்டான் சமூலமும் சங்கங் குப்பித் தழை இது வெல்லாம் இடித்து சூரணம் பண்ணி எருமை மோரில் நினையப் போட்டு வடி கொண்டு அந்த மோரைக் குடிச்சு வரவும் பத்தியங் காக்கவும்.

<u>வண்டு கடிக்கு பூச மருந்து</u>:-

பேய்ப் பீர்க்க யிலை மொட்டு சட்டியில் போட்டு வெதுப்பி அந்தச் சாறு கள்ளியை

வெதுப்பி அந்தச் சாறு ஆமணக்க வித்து தோலித்து அதிலே இந்தச் சாறு விட்டு அரைத்து அதை புண்ணின் மேலே பூசவும்.

கழுதைப் பச்சை லத்தி கொண்டு வந்து சிறு நீர் விட்டு எலுமிச்சம் பழச் சாறு விட்டு வறுத்துப் பிளிஞ்சு அந்த சாத்தை புண்ணின் மேல் பூசவும்.

காது புண்ணாய் சீய் வடிகிறதற்கு:-

புளியம் பிறண்டைக் கிழங்கு, முத்தின் புங்கம் பட்டை வசம்பு, வெள்ள வெங்காயம் நல்லெண்ணெயிலெறித்து காதிலே குத்த சீய் மாறும்.

கூகை வியாதிக்கு மருந்து:-

அவுரி வேர் சிந்தனைக் காயளவு அரைத்து இள வென்னீரில் குடிக்கவும். கூகை மரப் பட்டையை அரைத்து வீக்கத்தில் பூசவும் தீரும்.

கூடே நோவுக்கு மருந்து:-

ஈச்சல் பட்டை ஆவாரை வேரு, அண்டை வேரு, துளசி வேரு பிறண்டை வேரு, இது வகைக்கு விறகனெடை.ச, சுக்கு விறகனெடை.உ, இதெல்லாம் நறுக்கி நாலு படி தண்ணீர் விட்டு அரைப் படியாக காய்ச்சி அந்தி சந்தி அசனம் பண்ணி பிற்காரம் பச்சரிசி படி.ரு, பச்சைப் பயறு வறுத்த பருப்பு படி.வு இதுவும் அது பதமாய் வெந்தபிறகு பருப்பு போட்டு பதமாய் வெந்த பிறகு நல்ல வெல்லம் எலுமிச்சங் காயளவு நறுக்கிப் போட்டு பசுவின் பால் படி.ரு கூட விட்டு துளாவி இந்த கஞ்சி இறக்கி குடிக்கவும். இந்தச் சோறு தின்கலாகாது. அந்த முவைக்கிச் சாறுஞ் சோறுஞ் சாப்பிடவும். இந்த படி மூன்று நாள் குடிக்கவும். இதில் தீரும் வியாதி உஷ்ண வாய்வு விரை வீக்கம் இழுப்பு இடுப்பு நோவு இவையெல்லாந் தீரும். கை கண்டது. இச்சா பத்தியம்.

உஷ்ண குட்டு, உஷ்ணத்தினாலே விரை யேறினது விரை இறங்கினது, சாற குட்டு பக்க குட்டு சூலை குட்டு வியாதி கரும சாந்தி:

முன் செய்த பாவந் தன்னால் மூண்டதோர் வியாதி வந்தால் பின் செய்த ஓம சாந்தி பித்ருகள் பூசையாதல் மன் செய்யும் சில மருந்து வகையுடன் நாளுஞ் செய்தால் பொன் செய்த வாறு போலே போய் விடும் வியாதி தானே. சந்தக சன்னி யந்தக சன்னி, ருத்திர சன்னி சித்த விப்பிரமை சன்னி சீதாங்க சன்னி காது தீறிக சன்னி கண்டகு சன்னி கறனி சன்னி புகு நேத்திர சன்னி ரத்தோஷ்ட்டி சன்னி பிறலாப சன்னி மேற்கண்ட பதிமூன்று சன்னிக்கும் பேர் லட்சணம்:-

சிம்மகை சன்னி அபின் னியாச சன்னி யிப்படிச் சொல்லப் பட்ட பதிமூன்று சன்னியில் ஆறு சன்னி சாத்திகம் ஏழு சன்னி அசாத்திய மென்றறியவும். சத்தியம் அசாயத்தியம் பிரிச்சு சொல்லுகிறது. தாந்திரிகம் பிறலாபம், சித்தி விப்பிறமை, சிம்மகம் சந்திகம் கறனிகம் இந்த ஆறு சன்னியும் பிரயாசை சாத்தியமாம். நத்தாகம் புகு நேத்திரம் கண்ட குச்ச மரந் தோஷ்டி சீதாங்கம் அபினி யாசம் அந்தகம் இந்த ஏழு சன்னியும் அசாயத்தியம் இதிலே கண்டகுச்சகம் சன்னி சாத்தியமாகுமாம் அசாத்தியமாம். இந்தப் பதிமூன்று சன்னியு மறிந்து வைத்தியமான பேர் பார்த்து நிச்சயம் பண்ணிக் கொள்ளவும். சந்திக சன்ன வாத லட்சணம். சூலை நோவு, சோபையும், வாதத்திலுண்ட வெகு வேதினையும் வோமைந்தாபமும் பல காளியும் நித்திரை பன்னியும் கண்ணீர் இந்த குணமுள்ளது. சந்திக சன்னி வாத குண மென்றறியவும். இதுவும் பிரயாச சாத்தியம். தாந்திரிக சன்னி வாத லட்சணம். சோம்பல் நோவும், சுரம் சேஷ்ட்டுமம், தண்ணீர் தாகம் இதினால் சரீரம் தவித்து நொந்து நாக்குப் பச்சென்று பெருத்து தடித்து முள்ளுப் போலே சரசரத்து வயிறு களிச்சல் சுவாசம் வாட்ட பரிதாபம் செவி திண்மையிட்டு செவி நாவு கழுத்தில் தினவும் இது தாந்திரிக சன்னி வாத குண மென்றறியவும். இதுவும் பிரயாசை சாத்தியம்.

சித்த விப்பிறமை சன்னி வாத லட்சணம்:- தேக பீடை பிறமமதம் அறி வளிவு பரிதாபம் மோகம் கண் விகமாயிருக்கை சிரிப்பு பாடுதல் கூத்தாடுதல் பிதற்றுதல் எழுந்திருந்து ஓடுதல் இ அறிவளிதல், நடுக்குதல் சித்த விப்பிறமை சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் பிரயாசை சாத்தியம்.

கண்ட குசன்னி வாத லச்சணம்:- சூலை நோவும் கழுத்தையிறுத்துக் கொண்டு கடுக பிடித்தால்

அறிவழிதல் நடுக்கல் சுரம் தாகம், ரத்த வாதத்தாலே நோவு, தாடை நோவு, தாபம் அழுகை மூர்ச்சை இப்படித் தோன்றுதலிது கண்டகு சன்னி வாத லட்சணம் என்று அறியவும். இதுவும் சாத்திய மானதுமாம். அசாத்தியமாம் நாளுமாம்.

புபி சன்னி வாத லட்சணம் :- தோசத் திரையும் மெட்டு அதனால் முக ஒளி இறந்து நித்திரையும் மன்னில் வாரத் தேயும் மன்னிப்பில் ஆளியு மாயி மேல் மூச்செறிந்து சுவாச முண்டாயி சற்றே மார் குத்து முண்டாயி யிப்படித் தோன்றும். அபினியாச சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

ருத்திர சன்னி வாத லட்சணம் :- கண்டதெல்லாம் பிதற்றுதல், பரிதாபம் மிகவு அறிவு அழிதல். மந்தமாயிருக்குதல் உழைப்பும் பிறமையும் வேதினையும் கிட்ட பொருந்தாமலும் தான் கொத்து நோவுதலும் அடிக்கடி தண்ணீர் தாகமும் மேல் மூச்சு சூலை நோவு மார் நோவும் கண்கள் விளித்துப் பார்க்கையும் இப்படி தோன்றும். இது ருத்திரக சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

கறண்ணிக சன்னி வாத லெட்சணம் :-

பிறதாபத்தை உடையதாய் செவி யடைப்பு செவி நோவு உடம் பெங்கும் நோவும் மேல் மூச்சு நடுக்கமுமாய் நீரும் சுரமும் வாதமும் செவியுண்டையிலே கிறந்தியும் வீக்கமு மாயிருக்கும். நாக்குத் தடித்து உலந்திருக்கும். இது கறண்ணிக சன்னி வாத குண மென்றறியவும். இதுவும் கஷ்ட அசாத்தியமாம்.

சிம்மக சன்ன வாதஉ லட்சணம் :-

நாக்கு முள்ளு போலே தடித்து சறசறத்து சுவாசமுண்டாய் அறிவழிந்து முகம் போலும் செவிடும் போலுமாய் தாபம் பல் காணியுமத் தோன்றும். இது சிம்மக சன்னி வாத குணமென்றறியவும். இதுவம் கஷ்ட்ட அசாத்தியமாம்.

அந்தக சன்னி வாத குண லெட்சணம் :-

தாகம் பரிதாபம் அறிவழிதல், அழுகை நடுக்குதல், விக்கல் அடிக்கடி இருமல் வாந்தியும் இப்படித் தோன்றில் இது அந்தக சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

சீதங்க சன்னி வாத லட்சணம் :-

பனிப் போலே சரீரங் குளிர்ந்து மேல் மூசுகவும் விக்கலும் சற்றே சுவாசமும் வாய் நீர் வடிவும் வாந்தியும் சந்துகளெல்லாங் கட்டு கையும் இடிய விழுந்த குரலும், உக்கிரமான தாபமும் வாட்டமும் இருமலும் வயிறு களிச்சலும் இப்படி யெல்லாந் தோன்றி இது சீதங்க சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

புறகு நேத்திர சன்னி வாத லட்சணம் :-

சுரம் மேல் மூச்சு விஞ்சி நடுக்குதல் குறலிடிய விழுதல் கண்மூட நீர் வடிய பிதற்றுதல் பிறமையும் நாக்குலர்ந்து பச்சையா யிருக்க நடுக்குதலு முண்டாக சரீர முலர்ந்து போக இந்தக் குணம் தோன்றில் இது புறகு நேத்திர சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

ரத்தோஉஷ்ட்டி சன்னி வாத லெட்சணம் :-

ரத்தமாக காணும். மிக சுரம் அறிவழிதல், சூலை நோவு, வயிற்று களிச்சல் விக்கல் பிறமை மேல் மூச்சு மூர்ச்சை நாக்கு பச்செனவு சரீரம் பொருமி சுழன்று சுழன்று எழுந்திருக்கை வாயிலுலே ரத்தம் விழுதல் இதுவும் ரத்தோஉஷ்ட்டி சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் அசாத்தியம்.

பிறலாப சன்னி வாத லெட்சணம் :-

நடுக்குதல், பரிதாபம், சரீரம் உலர்ந்து பீடை மிகுந்து வாத மேலீட்டு அன்னியசித்தமா அறிவழிந்து யிந்திரி யங்களும் வெக்கு வேறாய் ஒறக்க குப்பிருண்டாயிருக்கும். இதுவும் பிற லாப சன்னி வாத குணமென்றறியவும். இதுவும் கஷ்ட அசாத்தியம்.

பதின்மூன்று சன்னிக்கு நாள் சொல்லுகிறோம்.
சந்தி கர்தக்கு நாள்-எ, அந்தக சன்னிக்கு நாள்.ய, ருத்திரக சன்னிக்கு நாள்.உய, சித்த விப்பிரமை சன்னிக்கு நாள்.அ, அல்லது நாள்.உக, சீதாக சன்னிக்கு நாய் புர நேத்திர சன்னிக்கு நாள்.அ, ரத்தோஷ்ட்டி சன்னிக்கு நாய்.ய, பறலாப சன்னிக்கு நாள். , சிம்ம சன்னிக்கு நாள். அப்பினியாச சன்னிக்கு நாள்.யரு இதில் திரும்பாதே போனல் நாயு மாத மென்றறியவும். இப்படிச் சன்னி வாதத்துக்கு நாளென்றறியவும்.

ஸ்ரீசங்க தோச லெட்சணம்:-

உடம்பு நோவும். சரீர மாடுதல். மார்புக்குள்ளே யெரியுதல், புலம்புதல். அடிக்கடி எழுந்திருக்குதல். மார்பு நோகுதல். சித்தப் பிறமையாகுதல், மயக்கங் காணுதல் கை கால் குளிர்ந்திருக்குதல். இது ஸ்ரீசங்க தோசமென்றறியவும். ஸ்ரீசங்க தோசத்து நாள் அல்லது யகு, அல்லது யரு அல்லது நாள்.உக, அல்லது நாள்.உகா, அல்லது நாள் உள என்றறியவும். ஸ்ரீ சங்க தோசத்தில் மரண வாத லெட்சணம்:-

மூச்சடர்ந்திருக்கையாலும், முகங் குறு வேர்வையாலும் நிச்சதோர் தெளிவிலும் நிமை புரட்டுகையிலும் பேச்சடந்திருக்கையாலும் பெரிய சேந்தமத்திலும் வாச்ச கண்ணுறக்கத்தாலும் வந்திடு மரணந் தானே.

மூக்குச் சுளித்து முக் நெறிப் புத்தாழுண்டாம்:- பார்க்கும் பொல்லாத பார்வையுமாய், நாக்கு கறுத்து சரசரத்து நாயிளப்புக் கண்டாக்கால் பிழைப்பதரிதென்று பேசு. புளி, கடுக்காய் தயிலம் புல்கண்ட தேனும் னி முழுக்குப் பால் தயிர் நெய் கோமோர் ஊனியளவும் போற்றி நவசாரத்திலள்க் கொள்ளப் பொங்கி யெத்தறிய சன்னி வருமாங்கு.

விஷ சுரத்துக்கு கசாயம்:-

கைய்யாந்த கரை ஞாவலை கடிய நொச்சிப் பிறயியுடன் மெய்யா விளங்கும் நீர் முள்ளி வீழு மல்லிகைத் தன்டுடனே செய்யா கறந்தை பேருமுட்டி திகரும் சுக்கு நறுக்கி யிட்டு துய்யக் காய்ச்சி குடிப்பீருய் சுரமும் வீக்கந் தான் போமே.

புன்னிய விழா நெல்லி சேரையொடு பூசணி கருவேப்பந் தன்டுடனே வில்விலை சிறுகுறட்டே விஷ்ணு காந்தி ஈறலொட்டி நனம்பா யிரு குணி நீர் விட்டு நாளிறெண்டாக்கிக் கொன்டால் யென்னில் விழு சுர வீக்கம் இவை யனைத்துந் தான் போமே.

வருந்திய வயிறு மிகக் களிந்து வன்மத் செய்து வன்றெளிக்கில் திறந்து சந்து பற்படாகந் திகரும் விலாம்பிச்பெரூர்ந் முத்தக் காசுடனே போதக் காய்ச்சி இரண்டொன்று போவிது கண்டால் போந மறு விஷ சுரமே.

சுக்கு, கடுக்காய், நிலவேம்பு, சுக்மர் வேப்பந் தோல் சீந்தி கைக்கும் பொடலின் பொடியது கதிக்க வொவ் வொன்ருர் களிஞ்சி ஒத்த நறுக்கி இரு நாளி உழக்காக் காய்ச்சிக் குடிப்பீருய். தக்க விஷ சுரம் பலவும் தான் விட்டோடுந் தப்பாதே.

தோஷத்துக்கு நாக்கு சுத்தி:-

செவ்வகத்திப் பட்டை விஷ்ணு கிரந்தி காந்தி சிறு புள்ளடியிலை மூன்றும் சிறுக அறிந்து சட்டியில் போட்டு இரண்டு படி தன்னீர் விட்டு முக்கால் படியாகக் காய்ச்சி வெந்த மருந்து நாக்குக்கு தேய்த்து அந்தத் தன்னீர் கொப்பளித்து உமியவும். இந்தப் படி தினம் மூன்று தரம் தேய்த்து கொப்பளிக்கத் தோசந் தீரும். கை கண்டது.

கொம்பு பாகு இலையை இடித்துச் சாறு பிளிந்து நாளிச் சாறு உள்ளுக்கு கொடுக்கவும். இந்தப் படி மூன்று நாள் கொடுக்கவும். என்னை சிக்கு நஞ்சி வீக்கந் தீரும். கை கண்டது.

குஷ்டத்துக்கு பீண்டறிகத் தயிலம்:-

அளிஞ்சி விரையைச் சாறனை சாத்திரம் வேலிப் பருத்திச் சாத்திரம் ஊறப் போட்டு பத்து நாளூறப் போட்டு அளிஞ்சி வேரும் ஊறின விரையும் அரைத்து ஒரு மிச்சங் காய் மறிவாதி பிசைந்து கலத்தில் தப்பி வெய்யிலில் வைக்கத் தைலம் வரும். அந்தக் தையிலங் கொள்ளப் பதினெட்டுக் குஷ்டமுந் தீரும்.

விஷ பாகத்துக்கு கசாயம்:-

விழுதி வேர் பட்டை சங்கம் வேர் பட்டை, ஆதீனை சமூலம் நீர்முள்ளி சமூலம், ஆடாதோடை சமூலம் இவை சமன் கூட்டி குறுக நறுக்கி அயங்குறுணி தண்ணீர் வார்த்து இரு நாழி சுருள்ளிச் சாறுங் கூட்டி விட்டு சுக்கு பலம் 2, நறுக்கிப் போட்டு ஒன்றியாக காய்ச்சி அஷ்டகும் வெச்செண வைத்து ராத்திரி பகல் உரி நீரு விருக்காடு கூட்டிக் குடித்து பத்தியமாக இருக்க வீக்கந் தீரும். கை கண்டது.

விரேசனத்துக்கு:-

சிகைக்காய் விரை போக்கி அரைத்து வாழைப் பழத்தில் மருந்து வைத்து மூன்று உருண்டை பண்ணி முன்பு கறி கொடுத்து பின்பு உருண்டை கொடுக்கவும்.

(வேறு)

இலைக்கள்ளியை வலது கைக்குள்ளாக சுத்தி வந்து வடக்கே போற வேர்ப் பிடுங்கி வந்து பட்டையைத் தட்டி அரைத்துப் பசுவின் வெண்ணெயில் கூட்டிக் கொடுக்கவும். வெண்ணை கிடையாவிட்டால் கம்பரிசி இடித்து அடை சுட்டு தின்னவும். மாத்து வெந்நீர்

ஊது காமாலைக்கு:-

நிலக் கடம்பு வேர் கள்ளுச்சி அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். அஞ்சு வகை காமாலையுந் தீரும்.
காமாலை வகை:- ஊது காமாலை, வறக் காமாலை, உழல் காமாலை, அளி காமாலை, பச்சைக் காமாலை இந்த ஐந்து காமாலையுந் தீரும்.

கீரிப் பாம்புக்கு:-

அவுரி வேர் பட்டையும், ஆடு தின்னா வேரும் கூட்டி காடியிலரைத்துக் கொடுக்க புழு விழும். இலுப்பைப் பட்டையும், சுக்கும் வெங்காயமும் வசம்புங் கூட்டி அரைத்து வெந்நீரில் கொடுக்கவும் புழு விழும்.

முக வலிக்கு:-

நெரிஞ்சி வேர் சிறு நீரிலரைத்து நசியம் விடவும். முக வலி தீரும்.

கெற்ப விப்புருதிக்கு:- பழம் புளி கருப்புக் கட்டி சங்கம் வேர் கூட்டி அரைத்து பழந் தண்ணீரில் மூன்று நாள் கொடுக்கவும். அதின் பிறகு பழம்பாசி ஆவாரை அரிசி ஒரு களிப்பாக்கு நற்சீரகம் ஈர வெங்காயம் கூட்டி அரைத்து பழந் தண்ணீரில் கொடுக்கவும். அதின் பிறகு அகத்திக் கீரையை வேக வைத்து ஒரு படி தண்ணீரை அரைப்படியாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

உடல் வாதம் வலித்தால்:-

தயிரும் வேளையிலையும் கடுக்காயும் பாலிலரைத்துக் கொடுக்க நிற்கும்.

சன்னிக்கு முட்டைத் தயிலம்:-

கோழி முட்டையை தண்ணியிலவித்து ஓடு வெள்ளைக் கருவு வாங்கிப் போட்டு மஞ்சள் கருவை எடுத்து வேப்பெண்ணை குத்தி வறுத்து பிட்டி கட்டித் தயிலம் வாங்கி நாடி தோறுமிடவும். பல் கிட்டின சன்னியுந் தீரும்.

சகல சன்னிக்கும் கலிக்கம்:-

சமுத்திரப் பழத்தை நல்லெண்ணையில் நாற்பது நாள் ஊறப் போட்டு எடுத்து வைத்துக் கொண்டு முலைப் பாலிலாகுதல் முருங்கையிலைச் சாற்றிலாகுதல் சாட்டறணைச் சாற்குதல் கருப்பு வெத்திலைச் சாறுகுதல் விட்டு உரைத்துக் கண்ணுக்கு கலக்கம் போட சகல சன்னியு முறியும். சகல தலை நோக்காடு ஒருத்தலை நோவு தீரும். முலைப் பாலிலுரைத்து மூக்குக்கு நசியம் விடவும். இது கை கண்டது.

சன்னி வாதக் குளிகை:-

சமுத்திரப் பழத்தை அவரை போலே நறுக்கி வெள்ளாட்டு மூத்திரத்திலே மூன்று நாளூற வைத்து நாலா நாளெடுத்தலத்தி இந்த மூத்திரத்திலே வேகவைத்து நீர் சுவறின

பிறகு எடுத்து வைத்துக் கொள்ளவும். இதுக்கு அநுபானம் முலைப் பால் இஞ்சிச் சாறு தேன் இதிலே முடிக்க நாக்கில் தடவ சகல வாத சுரந் தீரும். சீரகக் கசாயத்திலிட பயித்திய சுரந் தீரும். சளசியிலை இடித்து திரிகடுகு சமன் முடிந்து வைத்து விட்டு பண்ணி பிழிந்து இதில் திரிகடுகை அரைத்துக் கரைத்து இதிரரைத்துக் கொடுக்க சேத்தும சுரந் தீரும். பசுவின் கோமியமும், விளக்கெண்ணையும் சமமாய் சாறிந்து முடிக்க இந்த வகை வியாதி யெல்லாந் தீரும். பத்தியம் உப்பு, புளி மோர் தவிர்க்கவும். பொன்னுங்கண்ணி பொடித ளை உள்ளங் காலில் தேய்க்க சகல சுரந் தீரும்.

மாலைக் கண்ணுக்கு:- 21.11.62.

செட்டி மிளகு சிவப்பாய் பார்த்து எடுத்து பேய்த்தும்பைச் சாறு விட்டு அரைத்துச் சிமிழில் வைத்துக் கொண்டு அந்தப் பச் சாற்றிரைத்துக் கண்ணில் போடவும். மாலை கண் தீரும்.

(வேறு)

பொன்னுங்கண்ணி வேரும், சங்கும் முலைப்பாலிலரைத்து கண்ணில் போட மாலைக் கண் தீரும். கை கண்டது.

இருமலுக்கு:

சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், நெல்லிப் பருப்பு, தம்புருஷ்டகம், ஏமம் தீகை நெல்லிப் பட்டை, கோரைக் கிழங்கு, கடுக்காய், தானிக்காய், கண்டு சிவகைக்காய், பூச்சி பழம், வெள் வெங்காயம் இது வெல்லாம் வகைக்கு பலம்.வ இவை இடித்து வஸ்திர காயம் பண்ணி பனைங் கருப்புட்டி இத்துத் தக்கது கூட்டி இது வெல்லாம் ஒன்றாய்க் கூட்டி இடித்து வைத்துக் கொண்டு வெரு கடிப் பிரமாணம் கொள்ளவும், சகல இருமலுந் தீரும். இச்சா பத்தியம்.

கால் விறிஞ்சலுக்கு:-.

நூலம்பாலறக்கு மஞ்சள் அலைகடல் முத்த வேலங்காய் பிற வெளச்சமுளகுடன் வெந்த வெண்ணை காலம் பந்திருக்க வேண்டா கால் நனைக் கழுவி பூசி பாலந்தன் பிறந்தவன்றே பாதமே பாதமாமே,

காமாலை வீக்கத்துக்கு:-

மணத்தக்காளி யிலை, நீலியிலை வளருங் காட்டா மணக்கிலையும் மிளிக்கி அரைத்து அம்மி தன்னில் எருமைத் தயிர் கொள்வீராய். பணத்தைக் காசை நேருதே பத்தியமில்லை நீ பு பிளி தவிற முனத்தைக் காணு யிதனுலே கொடிய வீக்கங் காமாலை.

தாம்பிரக் குளிகை:-

தாம்பிரத் தகடு கெந்தகம் ரசம் தாளகம் படிக்காரம் சொர்னத் தகடு சாதிலிங்கம் ஊசிக் காந்தம் இதுக்கு வயனம். தாம்பிரத் தகட்டுக்கு இரண்டு பங்கு கெந்தகம் ரசம் தாளகம் சாதிலிங்கம், ஊசிக் காந்தம்.உ, படிக்காரம்.உ, வகை வகைக்கு. சொர்ன ..ம, கறிசிலாங் கண்ணி சாறு படி.க, எலுமிச்சம் பழச் சாறு படி.க, சரக்குகள் பொடி பண்ணி கலசத்து தகட்டு மேலுங் கீழும் பொடி போட்டு சாறு விட்டு மேல்மூடி சீலை அஞ்சு சுத்தி நெல்லுப் பானைக்குள்ளே இருவத்தஞ்சு நாள் வைத்து பின்பு எடுத்து அதை அரைத்து குளிகை பண்ணிக் கொள்ளவும். இதில் தீரும் வியாதி அஷ்ட்ட குன்மம், அஷ்ட்ட காசம் இவை யெல்லாந் தீரும். கை கண்டது. மீராம்செய்யம்.

மேக வெட்டைக்கு:-

எருமை வெண்ணை சேர்.க, முசுமுசுக்கைச் சாறு சேர்.க, இது இரண்டுங் கலந்து எரித்து பதத்திலிறக்கிக் கொண்டு காலமே எலுமிச்சங் காயளவு தின்று வரவும். சிறு தூத்தி யிலையும் பெருங்கம்பரிசியும் அரைத்து அடை சுட்டு மூன்று நாள் தின்னவும். நத்தைச் சூரி சமூலமும் உப்புப் போட்டு இடித்து கட்டு விக்க மாறும்.

கழல் வாதத்துக்கு:-

<u>கழல் வாதத்துக்கு</u>:-

செங்கத்தாரி வேரை அரைத்துப் பசுவின் பாலில் மூன்று நாள் மடிக்கவும். கோவைத் தழையைக் கசக்கி வக்கத்தில் தடவவும் வீக்க மாறும்.

<u>தொப்புளிலே சுத்தி வலிக்கிறதுக்கு</u>:-

சுக்கு கசாயம் வைத்து அதிலே பசுவின் வெண்ணெ சிறு எலுமிச்சங்காயளவு போட்டுக் கொடுக்கவும் தீரும்.

குருவி தோஷம் பறவை தோசம் விராயிலை ஒரு பிடி விடத்தேரை யிலை ஒரு பிடி பருத்தியிலை ஒரு பிடி இது மூன்றுங் கசக்கித் தலையில் பிழியத் தீரும்.

விரையிலை நல்ல சீரகம் இரும்பு இது மூன்றும் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

<u>பறவை தோஷத்துக்கு</u>:-

தண்ணி யிட்டான் கிழங்கு வேர், நெட்டைப் பேய் மிரட்டி வேர், ஊளிசமாடிக் கட்டவும் தீரும். பல்லுக் கடிக்கிற பிள்ளைக்கு மருந்து:- தனித்து நிற்கிற நெட்டைப் பேய் மிரட்டி வடக்கே போர வேரை கூச்சிக் கறியாலே கிள்ளி ஊளிசமாடிக் கட்டப் போம். சித்தமாணிக் கொட்டை வேர் அரைத்து யிள வென்னீரில் கொடுக்கவும் தீரும்.

<u>பெரும் பாட்டுக்கு</u>:-

குண்டு மணியிலையைத் அவைத்து தினிச் சாருகுதல் வென்னீரில் பிசைந்தாகுதல் வடி கொண்டு ஒரு சேரைக் கொடுக்கவும். துத்தி விரை உரி, புளியங் கொட்டைப் பொடி உரி. அவுரி வேர் இதின் விரை உரி, பருத்தி விரைப் பருப்பு உரி கருவேலம் பிசின் பலம்.ய, விளாம்பிசின் பலம்.ய, நெல்லி முள்ளி அருகளிஞ்சி இது வெல்லாம் இடித்துத் தூளாக்கி மோரிலாவது இள்நீரிலாவது கொடுக்க மோர் போலே நீரிறங்கிறது தீரும்.

<u>காது நோவுக்கு உச்சித மருந்து</u>:-

பிருவினெச்சம் கடல் நுரை, மாந்தோலு வசம்பு, வெள்ளை வெங்காயம் வேளை வேரு இவை நறுக்கி நல்லெண்ணெயில் போட்டு கடுகு திறக் காய்ச்சி இறக்கி ஆற வைத்துக் காதில் மத்தி பஞ்சு வைக்கவும். இதில் தீரும் வியாதி காது வலி, சீ யொழுகிறது, எப்படி க் கொத்தபுண்ணுந் தீரும். இது கை கண்டது.

<u>மாறுவாருக்கு</u>:-

வசம்பு வெள்ளை வெங்காயம் கன்னிக் கொளிஞ்சி இவை மூன்றும் நன்றாய் நறுக்கி விளக்கெண்ணெயில் பதமா எரித்து ஆற வைத்து பசவும். மாறுவாரந் தீரும்.

<u>கெந்தக ரசாயனம்</u>:-

கெந்தகம் பலம்.ங, பறங்கிப் பட்டை பலம்.ங, வாய் விளங்கம் பலம்.க, சுக்கு பலம்.வ, திப்பிலி பலம்.வ, முந்திரி பலம்.வ, பேரீச்சம் பழம் பலம்.வ, இரும்பு பலம்.வ, தாளிச் பத்திரி பலம்.வ, லவுங்கப் பத்திரி பலம்.வ, சீரகம் பலம்.வ, கருஞ்சீரகம் பலம்.வ, இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு பாக்களவு தேனில் கொள்ளவும். இதில் தீரும் வியாதி கிறந்தி சூலை வாய்வு, சொறி கடி குணங்கள். இது முதலானது குணமாம்.

<u>மேக வெட்டைக்கு</u>:-

கீழா நெல்லி வேர் அரைத்து எலுமிச்சங் காயளவு ஆவரம் வேர் அரைத்து எலுமிச்சங்காயளவு தேத்தான் விரை எலுமிச்சங் காயளவு கலங் கொம்பு ஒரு கொட்டைப் பாக்களவு அதிமதுரம் கொட்டைப் பாக்ளவு இது வெல்லாம் அரைத்து நீச்சுத் தெளிவிலே மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம் புளி தவிர்க்கவும்.

<u>சுகல குன்மத்துக்கு</u>:-

சுக்கு, மிளகு, கடுகு, வசம்பு, கருஞ்சீரகம், கடுகுரோகணி இந்துப்பு, கல்லுப்பு, கல்நார், சாஸ்திர வேதி, தானிக்காய், ஈருள்ளி, நல்ல சீரகம், கடுக்காய், பெருங் காயம், வெண்காரம், திப்பிலி, திப்பிலி மூலம் வெள்ளுள்ளி சாதிக்காய், பீர்கான் அதி

மதுரம் ஆக வகைக்கு பலம்.க, அச்சு வெல்லம் பலம்.ரு பினி வெட்டு மருந்து நொச்சிப் பட்டை மாவிலிங்கம் பட்டை கொடி வேலிப் பட்டை சிறுகுறிஞ்சான் பட்டை சாட்டிறணை வேர் முள்ளிப் பட்டை. கையாந்தகரை வேர் கீழநெல்லி வேர் குப்பைக் கீரை வேர் அழிஞ்சி வேர்ப் பட்டை ஆக வகை பலம்.க, இந்த மருந்தெல்லாம் இடித்து வெள்ளாட்டுக் கோமியத்தில் பசுவின் கோமியத்தில் கடைச் சரக்கு வெட்டு மருந்து அரைத்து வேப்பெண்ணை படி.உ, சதிரக் கள்ளிப் பால் படி.வ, இதை யெல்லாந் கலந்து காய்ச்சி கடுகு மெழுகு பதத்தி லிறக்கி ஒரு கலசத்தில் வைத்துக் கொண்டு பத்து நாள் உகையம் ஒரு நேரத்துக்கு தட்டெடை கொடுக்கவும்.

வயிறு அனல் கண்டால்:-

எருமைத் தயிர் வார்த்து உண்ணவும். பத்தியம் கார்ப்பு, புளி தளிர்க்கவும். இதில் தீரும் வியாதி வலி குன்மம், எரி குன்மம், பிசிகுன்மம், சத்தி குன்மம், குலைமுட்டி, குலை தாங்கி, அஷ்ட வாதம் அளவே கெர்ப்ப விப்புருதி மேல்க் கவுசை கீழ்க் கவசை பித்தம் சேத்துமம் கிரணி, சங்கிரணி, மூலக் கிரணி, கை வாதம், வறக் காமாலை பைத்தியம் பாண்டு ரோகம் இந்த வியாதி யெல்லாந் தீரும். கை கண்டது.

கெற்ப உஷ்ணத்துக்கு எண்ணெய்:-

சித்தா மணக்கு ஒரு வள்ளம் வைத்து நெறிச்சு ஒரு வள்ளம் தண்ணீர் விட்டு வெள்ளாட்டு பால் பசுவின் பால் இறநீர் அதின் மட்டைச் சாறு வான்முக் கிழங்குச் சாறு, மணத்தக்காளிச் சாறு, சமூலமிடித்து பிசைந்து இதில் ஒரு சேர்ர கடுக்காய்ப் பொடி போட்டு வைக்கத் தன்னி யாம். இது இறந்த நீர் வகைக்கு ஒரு படி கூட்டி உளத்தி வடித்து இதில் சீரகம் இரண்டு பலம் பொடி தளறப் பொட்டனங் கட்டி சூரிய புடம் வைத்து தினம் ஒரு கறண்டி கொள்ளத் தீரும் வியாதி மேக வெட்டை. இற்ப உஷ்ணம், உள்க் காச்சல் முதலானதுந் தீரும்.

(வேறு)

பழம் பாசி சர்மூலமும் சூரணித்து பலம்.க, ஏலம் விருகனெடை.உ, லவுங்கம் விருகன்.க, சீரகம் விருகன்.ரு, சர்க்கரை பலம்.க, கூட்டி பசுவின் நெய்யில் கொள்ளத் தீரும்.

கிறுணிக் களிச்சலுக்கு:-

புளியங் கொட்டைத் தோல் காசுக்கட்டி இலவம் பிசின் அதிவிடையம் சாதிக்காய் மாங் கொட்டை, ஓமம், பொன் முசுட்டை வேர், சரி கூட்டி எருமை மோர் விட்டு அரைத்து குன்றியிடை குளிகை பண்ணி வெந்நீரிலிட கிறுணிக் களிச்சல் நிற்கும்.

விக்கல் சத்திக்கு:-

தக்க நெல் பொரி தன்னின நீரு மன் ஒக்க விட்ட பயறுடன் கூவிளை மிக்க காச்சி பின் சர்க்கரை போட்டுண விக்கல் சத்தி விரைந்துட லேடுமே.

பயத்திலுமியைப் போக்கி பறிவின நீரை விட்டு வியப்புமக் காச்சி பின்தை வியந்து நீ தன்னீரோடே நயம்பெற சீனி கூட்டி நலம் பெறக் குடித்த போதே தியக்கிடுஞ் சத்தி மாறி தீர்வது திண்ணந் தானே.

காசத்துக்கு:-

பாறலிஞ்சிப் பட்டை பலம் மொன்று தந்தடனே.க கூர் மிளகுந் தன் பாதி கூட்டியே சீர் பெறவே வீசு நீ ரெட்டொன்றும் மேவக் குடித்திடவே காச மெல்லாம் நாசமாங் காண்.

வயிறு கடுப்புக்கு:-

மாவிலிற் பட்டை சுக்கு, வறச் சுண்டி, பூலா வில்லம் மேவிய முத்தக் காசு விளம்பிய களஞ்சி இரண்டு தாவிய சலத்திற் காய்ச்சி தாழ்ன் குடித்திடுவீராகில் தூவிய வரும்பு ரத்தம் தூறெழுந்தோடிப் போமே.

அத்திப் பட்டை வாழைப் பூ வமறத்து வத்துப் பிட்டாக்கி போத்திப் பிடித்து பிழிந்து கொண்டு புதிய விடைய மேல் விசிறி மெத்தச் சீனித் தனைக் கூட்டி மிகவும் பருக வல்லீரும் பித்தக் களிச்சலதி சாரம் பிறப்பட்டோடுங் கண்டீரே.

நீர்தாரை எரிப்புக்கு:-

சந்தனம், கலங் கொம்பு இரண்டும் உரைச்சு வகைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு பசுவின் வெண்ணை ஒரு கொட்டைப் பாக்களவு இந்த மூன்றுங் கலந்து கொள்ள நீர் மிகுதி இறங்கிலை சந்தனங் கொட்டைப் பாக்களவு தும்பை வேர் பாக்களவு இது இரண்டும் சரி கூட்டி கொள்ளவும். பெருங்காயக் கருப்புட்டியுந் தின்ன தீரும்.

இருமலுக்கு சிங்கநாதச் சூரணம்:-

கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கற்கடாக சிங்கி சிறு தேக்கு சடாமஞ்சி இந்துப்பு, செங்களநீர், கோஷ்டம் கண்டங் கத்திரி வேர் சமன் கூட்டி சூரணம் பண்ணி தேனிலாவது நெய்யிலாவது சர்க்கரையிலாவது ஆடாதோடையிலை குடிநீரிலாவது, பிட்டலியல் தண்ணீரிலாவது கொடுக்கவும். இருமல் தீரும். தாப சுரமுந் தீரும்.

இருமலுக்கு:-

ஆடாதோடையிலை, தூதுவளைச் சாறும், கண்டங் கத்திரிச் சாறு, கையுந்த கரைச் சாறு வகைக்கு படி.வ, ஒன்றாய் விட்டு மிளகு படி.க, ஊறப் போட்டு வத்திச் சாறு வத்தின பிறகு நன்று உலர்த்திப் பொடி செய்து சுக்கு, திப்பிலி, சிறும்பு, இந்துப்பு, கடுக்காய், சமன் கூட்டிக் கொண்டு பொடி செய்து மிளகு பொடிக்கு அஞ்சிலொரு பங்கு நிறுத்துக் கூட்டிக் கலந்து ஒரு வெருகடிப் பிரமாணம் தேனில் குழைத்துக் கொள்ளவும். இதில் தீரும் வியாதி காசம், சுவாச காசம், க்ஷயரோகம், இருமல், விக்கல் இவை தீரும். நாள நெய்யில் கொள்ள வறட்சி இருமல் தீரும்.

ரசம் சரீரத்தில் சிக்கியிருந்தால் குறைமைக்கு:-

பெரும் பூசனிக்காய் நடுவே அறுத்து விரை வாங்கிப் போட்டு சர்க்கரையும் பாசிப் பயறும் போட்டு வைத்தால் தண்ணீர் ஊறியிருக்கும். அந்தத் தண்ணீர் கொடுக்கவும். உடம்பு குறைந்திருக்கும்.

ரசம் வாங்க மருந்து.-

கொடிவழுதிலை, பெரியதானால் ஒன்று, சிறியதானால் இரண்டு இந்தக் காயை எட்டுக் கீத்தாய்க் கீறி வாய்ப்பட அறுத்து அதிலே பெருங்காயம் அரைக் களஞ்சி கொண்டு இதை மூன்றாய்ப் பிரித்து அதிலே பெருங்காயம் ஒரு பங்கு, கத்திரிக்காயை அறுத்ததிலே அறுப்ப வாயிலே வைத்து நாலுக் கொண்டு கட்டி கரப்பு வெத்திலைச் சாறு சட்டியில் விட்டு வேடுகட்டி அதின் மேலே காயை வைச்சு ஒரு சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி உழக்குச் சாறு இருக்கச்சே எடுத்து கத்திரிக்காயைத் தின்று சசத்தை மேலே துவளையிடவும். இப்படி மூன்று நாள் செய்யவும். சிறுநீர் விடுகிறது சட்டியில் விட்டால் தெரிய வரும். மேகசூட்டுக்கு

மேக சூட்டுக்கு மருந்து:-

நாலு வருஷத்து வேப்பம் பட்டை இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு அறுபது நாளிகை ஊற விட்டு அதிலே சீனிச் சர்க்கரை ஒரு சேர் போட்டு கத்தாளஞ் சோறு ஏழு தரங் கழுவி அதிலே ஒரு பத்துப் போட்டு அதிலே சீரகம் காசிரண்டு ஏலம் காசிரண்டு, நுணிக்கி அதிலே போடவும். அறுபது நாளிகை ஊறப் போடவும். மூன்று நாள் காலமே குடிக்கவும். அதுக்கு பத்தியம் துவரைப்பருப்பு சாறு, மிளகு காரங் கூட்டிடவும். மோரு தயிர், நெய் ஆகாது, பிலால் ஆகாது. மருந்து குடிக்கிறதுக்கு முன்னாலே சீயக்காய் தளை சாறு பிழிஞ்சி அதுலே எண்ணை விட்டு வேதி வாங்கவும். வெள்ளை சிகை பசடு இது வெல்லாந் தீரும். இது கை கண்டது.

வெள்ளி பற்பம்:- விரமந் தண்டும் கெந்தகமும் அரைத்து அதுக்குள்ளே வெள்ளி வைத்து புடம் போட்டு எடுத்து பொடி பண்ணி வெள்ளி உருகு முகத்தில் கொடுக்கவும். மாறும்.

உப்புக் கட்டு:-

கொடியிலை இடித்து அதோடே பிசைந்து உப்புக் கட்டும் அந்த உப்பை வெண்ணிப் பட்டை தூள் மேலுங் கீழும் போட்டு வைத்து சீலை செய்துபுடம் போட பலக்கக் கட்டும்.

சாற பற்பம்:-

சாறம், வெள்ளெருக்கம் பாலில் நடலி மூன்று நாள் வெய்யிலிலே வைத்து எடுத்து புளியும் உப்பும் முகை பண்ணி அதிலே வைத்து சீலை செய்து புடம் போட நீறாம்.

நாகம் கட்டும், தாளக கட்டு:-

முளகு ணையிலையைச் சட்டியில் வைத்து நடுவே தாளகம் வைத்து அது மேலே வைத்து மேலே சட்டி மூடி சாம்பலாக மட்டும் எரித்து பார்க்கு மிடத்தில் உருகி நிற்கும். அது வெள்ளிக்குக் கொடுக்கவும்.

கெந்தக பற்பம்:-

கெந்தகம் கோவை சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து அதின் மேல் கோவைக் கிழங்களரைத்து கவசங் கட்டி நாலு சீலை செய்து முக்குட் பிடம் போட பற்பமாகும். மேற்கண்ட பற்பம் வெண்ணையில் கொள்ளத் தீரும் வியாதி தாது விர்த்தியாகும். மேகரோகந் தீரும்.

லிங்கக் கட்டு:-

லிங்கம் விருகனெடை.ச, கெந்தகம் விருகனெடை.க, இதுகளை பொடி செய்து குப்பிக்குள் வைத்து மேல் மூடிச் சீலை செய்து அல்லது அடுப்பின் பேரில் வைத்து சீலை செய்து அல்லது அதோசைக் கல் வைத்து மேல் படி கல்லின் மேல் வைத்து சன்னமா எரியவிட்டால் உருகும். அந்தச் சமயத்தில் நீண்ட கத்தியால் கிளறி உருட்டி குளிகை செய்து எடுத்துக் கொண்டு மாத்திரையாகும் அநுபான்ங்களில் ரோகங்களுக்கு கொடுக்கலாம்.

லிங்க மாத்திரை:-

துருசு பூனிறு செவூரம் பூனிறு படிக்காரம் விருகன்.உ, பூறம் விருகன்.க, குடன் விருகன் சவுக்காரம் விருகன்,ஙரு, இதை யெல்லாஞ் சேர்த்தரைத்து முன் துருசு.கரு பலத்துக்கு கவசங் கொடுத்து ஒரு புடம் போடக் குருவாகும்.

சாரக் கட்டு:-

பொட்டிலுப்பு, கரியுப்பு, சீனம் வெடியுப்பு நன்குயரைத்து இரும்பு கின்னியில் வைத்து ஊத இளகி இளகி வந்தது சாரம் பலம்.க, போட்டுக் கிண்ட கட்டும்.

துருசு சுன்னம்:-

துருசுக்கு வெள்ளைக் கத்திரிப் பூவை அரைத்துத் துருசுக்குப் பூசி நெருப்பில் வைக்க சுன்னமாகும்.

தலை இடிக்கு வர்த்தி பண்ணுகிற விபரம்:-

மிளகு, சுக்கு, வசம்பு, கஸ்தூரி மஞ்சள், திப்பிலி, திப்பிலி மூலம் தும்பறத்தினம் ஆக வகை ஒன்றுக்கு விருகனெடை.உ, இந்த மருந்தோடே காட்டு முருங்கைச் சாறு விட்டரைத்து சீலையில் தடவி வர்த்தி பண்ணி புகை பிடிக்கவும். மண்டையிடி, நேத்திர வாய்வு நிற்கும்.

வேறு. கண் ணு வெள்ளைக்கு:-

வெள்ளைக் காக்கிட்டான் வேரு, சிறுகீரை வேரு பொன்னுங்கண்ணி வேர், வெள்ளுமத்தை வேரு சரிலைத் தாமரை வேர், நத்தம் துருசு வெள்ளாட்டுப் பால் விட்டரைத்து ஒரு சாமம் அரைத்து மிளகு மரியாதி குளிகை செய்து நிழலாத்தி முலைப் பாலிலாவது பனைப் பட்டை சாத்திலாவது கண்ணிலிடவும் வெள்ளை படலம் பூவு கரைந்து போகும்.

நிலாவரை கற்பம்:-

நிலாவரை தேங்காயளவு அஞ்சாறு மாதளம் பழம் ஒரு சேரை கல்லுப்புக் கூட்டி இடித்துக் கொண்டு தினம் முள்ளிக்காய் அளவு கொள்ளவும். மாலைக் கண் அருவை முயல் வாய்வு உடல் வாய்வு அந்திர வட்டந் தீரும். இது கை கண்டது.

செய்யான் கடிக்கு மருந்து:-

நாவல் ணை வேருப் பட்டையும் விடத் தேறு பட்டையும் சமமாகக் கூட்டி அரைத்து வெள்

வெள்ளாட்டுப் பாலிலாவது சிறு நீரிலாவது அரைத்துப் பூசவும். இது கை கண்டது. செய்யான் கடி தீரும்.

<u>பொன்னரி தாரச் சுண்ணம்:-</u>

பொன்னரி தாரம் பலம்.உ துளசிச் சாறு ஒரு நாழி, கருவேலையல் பொடி இந்இரண்டு பொடியும் துளசிச் சாறு வார்த்தரைத்து வஸ்திர காயஞ் செய்து துளசி சாறு மூன்று நாள் விட்டரைத்து நாலா நாள் வட்ட ஒடு கொண்டு மூடி சீலை மண் செய்து எரு முட்டைப் புடமிட்டுப் பார்க்க வெள்ளையாம்.

<u>சீய்ப் பிரமியத்துக்கு:-</u>

ஒருக் கொட்டைப் புடு வெள்ளைப் பூண்டு பலம்.உ, மேல் தோலுரிச்சு உள் முள்ளைப் பூண்டு பலம்.உ மேல் தோலுரிச்சு உள் முளை யெடுத்து அரைப் பலம் சர்க்கரையும்கால் பலம் நல்ல சீரகமும் பசுவின் பால் ஒருயும் மட்டும் பாலில் காய்ச்சி மூன்று நாள் உண்ணவும். இதுக்குப் பத்தியம் பசுவின் பாலும் சோறும் உண்ணவும். உப்பு, புளி விடவும். இது கை கண்டது.

<u>குன்ம வாய்வுக்கு:-</u>

பொட்டிலுப்பு தூட்டு கல்லுப்பு தட்டு, புளி ஒரு தட்டு மூன்றுஞ் சதிரக் கள்ளிப் பால் வார்த்தரைத்து அடை தட்டி காயப் போட்டு புடம் வைத்து சாப்பிடவும்.

(வேறு)

இந்துப்பு தட்டு கல்லுப்பு தட்டு மூன்றும் வைத்து புடம் போட்டு அந்த பற்பம் அந்திசந்தி விடிந்து சாப்பிடவும் பத்தியமில்லை.

<u>எலி கடிக்கு:-</u>

முடக் கொத்தான் இலையை அரைத்து காட்டுக் கொட்டை மறிவாதி மூன்று நாள் கொடுக்கவும். ஆறு நாள் பத்தியமிருக்கவும். உப்பு, புளி ஆகாது.

<u>பிள்ளை பெத்த கிரணிக் கடுப்புக்கு:-</u>

ரசகற்பூரம் ஓட்டிலே வைத்து போன வருஉந்து ஆவாரந் தழையை இடித்து சாறு பிழிந்து ஒரு சேரே சுருக்கு கொடுத்தால் மாத்திரையாகும், பிள்ளை பெத்த கிரணிக்கு:- சாதிக்காய் விருகன்.க, சன்ன லவுங்கப் பட்டை விருகன்.க, சிறுநாகப்பூ விருகன்.க சுக்கு விருகன்,க மலைதாங்கி விருகன்.உ, ஆவாரங் கொழுந்து தட்டு.க, இந்த அந்தும் வறுத்து தண்ணி விட்டு அரைத்து முள்ளிக்காய் போலே உருட்டி தயிரிலே கொடுக்கவும்.

<u>கிரணி கடுப்புக்கு குளிகை:-</u>

சன்ன லவுங்கப் பட்டை விருகன்.க, சாதிக்காய் விருகன்.க, லவுங்கம் விருகன்.க சாதிப்பத்திரி விருகன்.க, சாதிக்காய் விருகன்.க, சாதிபத்திரி விருகன்.க, கசகசா விருகன்.க, முந்திரிப் பழம் விருகன்.க, அபினி மருந்து விருகன்.க, பேரீச்சம் பழம் விருகன்.க, சுக்கு விருகன்.க, மிளகு விருகன்.க, இது வெல்லாம் வாழைப் பூவால் கட்டி புடம் போட்டு அந்த தண்ணீர் விட்டு அரைத்துக் களச்சிக் காய் போலே குளிகை பண்ணி வாழைப் பூச்சாற்றில் கொடுக்கவும்.

<u>பிள்ளை பெத்த கிரணிக்கு:-</u>

சாதிக்காய் விருகன்.க, சன்ன லவுங்கப் பட்டை விருகன்.க, சிறுநாகப்பூ விருகன்.க, சுக்கு விருகன்.க, மலைதாங்கி விருகன்.உ, உப்புத் தடலி காய்ச்சவும். ஆவாரங் கொழுந்து தட்டு.க, இந்த அஞ்சு வறுத்து தண்ணி விட்டு அரைத்து முள்ளிக்காய் போலே உருட்டி தயிரில் கொடுக்கவும்.

பறங்கிப் பட்டை, பிரப்பங் கிழங்கு, மிளகு ஊறப் பட்டை, இது சமன் கொண்டு இடித்து நேரம் ஒன்றுக்கு அத்தச்நா பலம்.க, போட்டு கசாயம் வைத்து இரண்டு நேரமும் பத்து நாள் வாங்க. இதுக்குத் தீரும் வியாதி உடம்பு உடைச்சல், சந்து சீல் வாதக் கட்டு, வயிறு உப்பசல், மந்தாக்கினி, வாத வீக்கந் தீர்ந்து பசி தீபனமாம்.

சூலை நீச்சு, வாயுவும் நிற்கும். சுரத்தோஷமும் நிற்கும்.

<u>நீர்ச்_சுருக்குக்கு:-</u>

ஊநீரிலே கற்பூர சிலாசத்து இரண்டு விருகனைடை போட்டு கொடுக்கவும். இந்தபடி மூன்று நாள் கொடுக்கவும். இது கை கண்டது.

<u>வீரிய_புஷ்டிக்கு:-</u>

நிலப்பனைக் கிழங்கு ஒரு பலம் தண்ணி விட்டான் கிழங்கு ஒரு பலம், நெருஞ்சி வேர் ஒரு பலம் பசுவின் பாலிலரைத்து கொதிக்க வைத்து நித்தியம் குடிக்கவும். ~~இதில் உலகத்தை போலே நிற்கும். இது கை கண்டது.~~

(வேறு)

பன்னிச் சீவு கலயத்திலடைத்து ஓடு போட்டு சீலை மண் செய்து அடுப்பில் வைத்து இரண்டு நாளிகைக்குப் பிறகு கலயத்தில் கொட்டி நெய் விட்டு அரைத்து. கை. விடாமலரைத்து முப்பது நாளிகையும் அரைத்து இலந்தைக் கொட்டை போல். உருண்டை பண்ணி ருத்திரிக்குச் சாப்பிட்டு படுக்கவும். ஸ்திரீயைக் கூடவும். சரீரம் ஒரு. சாமமாகிலும் கட்டு விடாது விட வேணுமானால் உமிநீர் தொட்டு தன் தொப்புளில் தடவ உடனே சரீரம் விடும். கை கண்டது.

<u>வீரிய_விர்த்திக்கு_புருஷன்_புறத்திலே_போகாமல்_மருந்து:-</u>

தனக்கு விலக்கு வந்த உதிரச் சீலையைச் சுட்டு சாம்பலெடுத்து எந்த விதத்திலேயாகிலும் பழத்திலே யாகிலும் சர்க்கரையிலாவது எதிலே ஆகிலும் புருஷனுக்கு கொடுக்க வசமாவான். கை கண்டது.

(வேறு)

மஞ்சளிலை ஊமத்தையிலை அரைத்து பசுவின் நெய் கலந்து விாக்கேத்தி புணரவும்.

வேறு தம்பனம்:- பேயத்திப் பால் பேய்த் தும்மட்டிச் சார் மொசு மொசுக்கைச் சார் இல்வம் பிசின் இவை தலை யீத்து எருமை வெண்ணெயில் அரைத்துச் சிமிளில் வைத்துக் கொண்டு போகம் பண்ண போற நேரத்துக்கு புருஷன் தண்டில் பூசிப் புணரப் பிரியான தவனமுண்டாம். கை கண்டது.

<u>தாளக_செந்தூரம்:-</u>

தாளகம் கொண்டு வந்து சங்கம் பழச் சார் விட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்து ரவியில் வைத்து வில்லைக்குத் தக்கின பல்லாயில் வைத்து பல்லாய் மூடி சீலை மண் செய்து முழப் புடத்தில் பற்ப்மாம். கூகை நீறு பன்னைத்தச் சாறும் காட்டா மணக்கு பாலும் கையாந்த கரைச் சாறு இதிலே தாளகம் தோய்த்து மிச்சி ரசம் சீலையிலொட்டி மேல்க் கவசம் செய்து மறுபடியும் கையாந்த கரையை அரைத்து குகை பண்ணி கவசங் கட்டி தாளகத்தைக் குகைக்குள்ளே வைத்து மூடிச் சீலை மண் செய்து முழப்புடத்தில் போட செந்தூர சிகப்புகள் கனங் கொள்ளாதே.

<u>பித்தத்துக்கு_மருந்து:-</u>

வேப்பந் தளையை இடித்து சட்டியில் போட்டு நெருப்பு பறக்க வைத்து. கொட்டிப் போட்டு மூன்று படி சலம் விட்டு கால் படியாக காய்ச்சி அந்தி விடிஞ்சு சாப்பிடவும் பித்தமென்னப் பட்டதெல்லாந் தீரும். கை கண்டது. பத்தியம் புளி, புகை தள்ளவும்.

<u>பிள்ளை_பெத்து_மேல்_சுரம்_வீக்கத்து_ஊளிச்சலுககு_அவுஷதம்:-</u>

சுக்கு தட்டு.க, மிளகு தட்டு.க, இஞ்சி தட்டு.க, சாதிக்காய் தட்டு.௨, ஓமம் தட்டு.க, திப்பிலி தட்டு.க, பூண்டு தட்டு.௩ இந்துப்பு தட்டு.க, லவுங்கம் தட்டு.௭, சிறுகீரை வேர் ஒருசம்பு கீழா நெல்லி, சுறுமுலமும் நெறிஞ்சி வேர் ஒரு பிடி பூளை வேரு ஒரு பிடி இந்த எழு வகையும் வறுத்த இந்துப்பு பூண்டு இஞ்சி இது மூன்றும் வறுக்க வேண்டியதில்லை இது வெல்லாம் வெந்நீர் விட்டு அரைத்து சுண்டைக்காயக்கு பருமனாய் உருட்டிக் குளிகை செய்து நாலு வகை வேரும் இரண்டு படி தண்ணீர் விட்டு கசாயம் ஒரு படி இருக்க இறக்கி வைத்துக் கொண்டு அந்த கசாயத்தில் அந்தி விடிஞ்சு ஒரு குளிகை உரைத்துக் கொடுக்கவும். இதுக்குப் பத்தியம் புளி, புகை மோரு விடவும்.

ரச பற்பம் :-

கருசலாங் கண்ணிச் சாற்றில் ரசத்தை மத்திச்சு மெழுகில் வைத்து சீலை மண் செய்த் முழப்புடம் போட பற்பமாம்.

கோழி ரத்தங் மெத்தறுத, காரீயத்தைச் சுத்தி பண்ணுகிறது எலுமிச்சம் பழச் சாறு தேன் இது இரண்டும் கூட்டி அதிலே வங்கத்தை முப்பது நாளிகை ஊற வைச்சு சூரிய புடம் முப்பது. நாளிகை வைத்து எடுத்துக் கொண்டு ஆவாரை வேருப் பட்டை, சாம்பல் இரண்டு. படி. சாம்பலெடுத்துக் கொண்டு ஆகாசத் தாமரை இலை, வெள்ளைக் குன்றியிலை இது இரண்டு தலைச்சம் பிள்ளை அமுறி விட்டு அரைத்து மெகை பண்ணி அந்தக் மெகையில் வங்கத்தை வைத்து மேலே அந்தச் சரந்தாலே வாய் மூடி சீலை மண் செய்து முழக் குழி வெட்டி அந்தக் குழியிலே ஆவாரம் சாம்படி படி ஒன்று அடியிலே போட்டு ஒடு மேலே குகைகையை அது மேலே வைத்து மேலே சாம்பல் போட்டு ஒடு மேலே ஒரு வள்ளக் கறி போட்டுத் துருத்தி போட்டு ஊதப் பற்பமாம். நாலு நாளிகை ஊதவும்.

கல்நார் பற்பம் :-

சங்கந் தழையை அரைத்து நடலிகுகையில் வைத்து சீலை மண் செய்து கெசபுடம் போட பற்பமாகும்.

சன்னியிலுலே வாய் கோணி இழுத்துக் கொண்டால் மருந்து :-

வெள்வேலம் பட்டை பலம்.ருய், வறப்புலாம் பட்டை பலம்.உரு, முப்பை மேனி தழை சேர்.ரு இது மூன்றும் நறுக்கி பானையில் போட்டு அயச் செந்தாரம் துட்டெடை .உ, சுக்கு துட்டு.ரு, மிளகு துட்டு.ரு, திப்பிலி துட்டு.ய, லவுங்கம் துட்டு.ரு, அக்கிலாக் காரம் துட்டு.ரு, பட்டை பானையில் போட்டு அரைப் பானையாகிறதே இந்த சுரக்கெல்லாம் நடுவே அாள் பண்ணாமல் சும்மா போட்டு மேலே பட்டை போட்டு மூடி பானை வாய் மேலே சட்டி கவுழ்த்தி மூடி சீலை மண் செய்து சட்டி பொத்தல் பண்ணி அடியிலே குலையம் வைத்து அது மேலே பானை கவுத்தி பானை தெரியாமல் எரு வடுக்கி தைலம் வாங்கவும். இப்படி மூன்று தரம் எரு வடுக்கி மத்தா நாளெடுக்கவும் தைலமிருக்கும். அந்தத் தயிலம் அரைத் துட்டெடை வாயில் வார்த்து கொஞ்சம் தண்ணீர் குடித்தி கொப்பளிக்கவும். வாயிழுத்துக் கொண்ட சன்னி விட்டுப் போகும்.

உப்பு மாந்தலுக்கு :-

பிள்ளைகள் சிறு நீருடன் மூன்று நாளைக்கு வசம்படி கொடுக்க உப்ப மாந்தல் தீரும். கை கண்டது.

தலை வலிக்கு தைலம் :-

நாய் வேளை சாறு படி.வ, ஆதண்டத்து சாறு படி.வ, நல்லெண்ணை படி.ய, சுக்கு, மிளகு இது இரண்டு கூட்டி .உ, வசம்பு கு.க, தைலத்தில் போட்டு எரிக்கவும். மெழுகு பதத்திலிறக்கி முழுகவும்.

சிலாசத்து பற்பம் :-

அம்மான் பச்சரிசித் தழையை அரைத்து அதுக்குள்ளே வைத்து சட்டுக்குள்ளே வைத்து சீலை மண் செய்து முழப் புடம் போடவும்.

பவள பற்பம் :-

சீனி கல்கண்டு உமிநீர் விட்டு உரைத்து கீழு மேலும் ஒடு வைத்து சீலை மண் செய்து முழப்புடம் போடவும்.

பவுன வாய்ப் புண்ணுக்கு :-

மிளகு, திப்பிலி, சந்தனம், நாயுருவி வேர் இவை தண்ணீரிலிட்டு அரைத்து நல்லெண்ணையில் வேக வைத்து பவுன வாய்க்குத் தடவவும் புண்ணாறும். சந்தேகமில்லை.

பேதிக்கு :-

சுத்தி பண்ணின நேர்வாளம் பருப்பு துட்டு இரண்டு, லிங்கம் விருகன்.க, வெள்ளை

வெங்காயம் வீசம்.க, கொட்டை முத்து பருப்பு.யரு, வாளம் விளக்கெண்ணெயில் வறுத்துக் கொள்ளவும். இதவெல்லாம் அரைத்து பேதிக்கு ஆவாரைப் பருப்பு மாத்திரம் கொடுக்கவும். பச்சைத் தண்ணீரில் கொடுக்கிறது. மினம் பாறிச்சால் மோரும் சாதமுங் கொடுக்கவும். இரவுக்கு வசம்பு கறிக்கு வெண்ணெயில் கொடுக்கவும்.

இருமலுக்கு_மருந்து:-

தேத்தாங் கொட்டையை விளக்கெண்ணெ விட்டு வறுத்து பொடி பண்ணிக் கொண்டு அதிலே தாளிச பத்திரி திப்பிலி, மிளகு லவுங்கம் பொடி பண்ணி அந்தத் தேத்தான் சூரணத்துக்கு சமன் சரக்குத் தூளும் கலந்து சீனி சர்க்கரை கொஞ்சங் கலந்து தேனிலேயாவது விளக் கெண்ணெயிலாவது குழப்பி நக்கவும். இது கை கண்டது.

வங்க__பற்பம்:-

வங்கந் துட்டு நாலு சவ்வீரம் துட்டு.வ, நெல்லிக்காய்க் கெந்தகம் துட்டு.வ, பிறண்டே புருடுலே இந்த நாலையும் வைத்து அரைத்து கீழு மேலும் போட்டு சீறிக் கூளையை கீழு மேலும் போட்டு புடம் போடவும்..

வெள்ளீய்ய_பற்பம்:-

பழைய புளி பலம்.உ, சுண்ணாம்பு பலம்.உ, இவைகளை அரைத்து வெள் வங்கம் பலம்.க. மெலிசாய் தகடு தட்டி நாவில்லா அறலிப் பாலடித்து முன் மருந்துக்குள் வைத்து தகட்டே தனி சுத்தி சீலை செய்து கெசபுடம் வைக்கவும் ஆடும்.

வெள்ளி_பற்பம்:-

வெள்ளிப் பற்பம் ஆக வேண்டுமானால் அதின வெள்ளி எடைக்கு வங்க பற்பம் உமிளி நீர் விட்டு மத்திச்சு வெள்ளிக்குத் கடலி முசையில் கீழு மேலும் வைத்து நூணக்காஞ்சிறித் தளையை கசக்கி மத்தியில் வைத்து வெள்ளியை வைத்து சில்லுப் போட்டு சீலை செய்து இருவது எருவில் புடம் போடவும். உப்புக் கட்டு சாப்பிட.

மூலை_மந்தம்_இத்கமுக்கு:-

உப்பு நீரு மேல் நெருப்ப அரைச்சு வில்லை தட்டி காயப் போட்டு ஒரு புடம் கலக் கோவையிலை அரைத்து ஒரு புடம் போடக் கட்டும்.

தாம்பிர_பற்பம்:-

தாம்பிரம் தகடு தட்டி அதின் மேலே விஷமந் தண்டு பாலு அடித்து உரை விட்டு அதின் மேலே கோளி முட்டை தோலு வெங்காரம் இரண்டு எருக்கன் பால் விட்டு அரைத்து கவசங் கட்டி சீலை செய்து புடம் போட பற்பமாகும். தாம்பிர சுத்தி காட்டுக் காருவளையிலை யாட்டா யிரு பொறி விருந்திருக்கும். அந்தக் கிளங்கு கொண்டு வந்து இடித்து தாம்பிரம் உருக்கி ஏழு தரம் சாய்க்க சுத்தியாம்.

ரசக்_கட்டு:-

ரசம் கிழகுஞ் எடுத்துக் கொண்டு ஓட்டில் அந்த ரசம் வைத்து கள்ளிச் சாம்பல் ஒரு படி சாம்பலுக்கு இரண்டு படி தண்ணீர் விட்டு தண்ணீர் வாங்காமல் சாமம் சுக்கு கொடுக்க கட்டும் போக குறு குறு யெங்கும் நிறத்தி மேலே ஒரு மூடி எரு விட்டு சுறண்டிக் குளிச்சு எரு விட்டு எடுத்துக் கொண்டு மூகைக்குள் வைத்து வெங்காரம் போட்டு உருக்கி கட்டி போலே யெடுத்துக் கொள்ளவும்.

தாம்பர_பற்பம்:-

தாம்பிரச் சிமிக தூள் பண்ணி தாம்பிரம் குகைக்குள்ளே வைத்து சிலக்குந் தணையும் போட்டுக கொண்டு இருக்க செவந்தா லெடுக்கவும்.

தாம்பிர தகடு தட்டி அதின் மேலே விஷமந் தண்டு பாலு அடிச்சு உரை விட்டு அதின் மேலே கோளி முட்டைக் தோடு வெங்காரமும் எருக்கன் பால் விட்டு அரைத்து கவசங் கட்டி சீலை செய்து புடம் போட பற்பமாம்.

22.11.62.

ஈய_பற்பம்:-

அம்மான் பச்சரிசிக் குமாலை இலை இடித்து ஓட்டில் ஈயம் வைத்து உருகின முகத்தில் அந்த க/ இலை போட்டு அலறிக் கோலில் வரக்க பற்பம். அந்த பற்பம் செந்தூ றிக்க புளியிலைச் சாறு விட்டு அரைத்து நாலு படம் போடவும். கத்தாளை நாலு புட காட்டுக் காணுயிலை பாட்டடா யிற பொறி விழுந்த இருக்கும். அந்தக் கிழங்கு கொண்டு வந்து இடித்து சாம்பிரம் உருக்கி ஏழு தரம் சாய்க்கவும். சுத்தி.

ரசக்_கட்டு:-

ரசம் விருகன் நாறு எடுத்துக் கொண்டு ஓட்டில் அந்த ரசம் வைத்து கள்ளிச் சாம் பல் ஒரு படி சாம்பலுக்கு இரண்டு படி தண்ணீர் விட்டு தண்ணீர் வற்றாமல் சாமம் சுக்கு கொடுக்க கட்டும் போறு குழ குழ யெங்கும் நிறுத்தி மேலே ஒரு மூடி எரு விட்டுச் சுறண்டி குளிச்ச எரு விட்டு எடுத்துக் கொண்டு குகைக்குள் வைத்து வெங்காரம் போட்டு உருக்கவும்.

லோக_பற்பம்:-

தேங்காய் குரும்பையை இடிச்சு சாறு பிழிஞ்சு இரும்பு பொடியாகிலும் உருக்குப் பொடியாகிலும் அந்தச் சாத்தில் அந்தப் பொடியை போட்டு வெய்யிலில் வைக்கத் தூளாம். அந்த பற்பம் துளசி சாறு விட்டு அரைத்து வில்லை தட்டி காயப் போட்டு எருப்புடம் போடச் செந்தூரமாகும்.

குருசு_சுண்ணம்:-

சிறுகீரைச் சாறு ரசமுங் கூட்டி அரைத்து குருசுக்கு மேலே பூசிற் றவியிலுலத்தி அவிபுடமாய்க் காடைப் புடமிட சுண்ணும்பாய் நீறும் அதில் வெங்காரம், சீனக்காரம் மடல் துத்தம் வீ.க, வீரம் விளைவை.க கூட்டி எருக்கன் பால் வார்த்து அரைத்து வில்லை தட்டி உலர விட்டு ஓட்டில் வைத்து ஒரு மூடிச் சீலை மண் செய்து புடமிடச் சுண்ணும்பாய் நீறும் முளப்புடம்.

ஊப்புப_லையில்_கண்டற_வழு_பாசாணங்_கட்டும்:-

நாள் வேளை சமூலம் தேங்காயளவு இடித்து இரு நாளி நீர் விட்டு அயங்காரமு முடிந்து போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி இறுத்து இதில் முடிந்த அங்காரத்தே அரைத்து கரைத்துக் குடிக்கத் தீரும்.

நாருயுண சுள்ளியும் இதே முறைக்குப் பண்ணவும். மிளகறணைப் பட்டையும் இதே முறைக்குப் பண்ணவும். குசவன் சூளையில் வெந்த ஓட்டை பொடி பண்ணி இரு நாளி நீர் விட்டு எட்டி லொன்றாய்க் காய்ச்சி இதில் கொடிக் கள்ளிப் பட்டை அவரை அளவு அரைத்துப் போடப் பொங்கும். அதை இறக்கிக் குடிக்க உடனே நிற்கும்.

ஊசி துறத்திப் பட்டையை கும்பரிசியிலிடித்து புட்டுப் பண்ணி சர்க்கரையாவது பனை வெல்லமாவது போட்டு நல்லெண்ணை விட்டு தின்ன தீரும்.

கோதும்பை அரிசியை ஒரு பிடி இடித்து நெய்யில் வறுத்து தின்னத் தீரும்.

பேதிக்கு கொடுத்து நிற்காமலிருந்தால் பச்சை மூங்கிலையை இடித்து மோருடன் குடிக்க நிற்கும். ஆறிய மாவை தெள்ளி தண்ணி விட்டு பிசைந்து எலுமிச்சங் காயளவு தின்ன நிற்கும். கருக்கிட்டம் பட்டையைக் கொண்டு வந்து மேல் பட்டை பொடியை தயிரிலரைத்து கரைத்துக் கொடுக்க நிற்கும். கை கண்டது. தாகமானால் கல்கண்டு கொடுக்க தாகம் நிற்கும்.

உதற__சன்னிக்கு:-

முருங்கைப் பட்டையை நறுக்கி நாளி நீர் விட்டு உழக்காக காய்ச்சி குடிக்கவும். மேலுக்கு பனைங் கோரை கிழங்கு உள்ளியுஞ் சமன் கூட்டி அரைத்து எருக்கன் பால் விட்டு கொதிக்க வைத்து பூசத் தீரும். கை கண்டது.

<u>பறங்கி பட்டைச் சூரணம்</u>:-

பறங்கி பட்டை சூரணம் பலம்.ய, சிவனார் வேம்பு பலம்.ய, சுக்கு பலம்.க, சாதிக்காய் காசிடை ஐந்து, சாதிபத்திரி காசிடை.ரு, சிரும்பு காசிடை.ரு, திப்பிலி காசிடை,ரு, சித்தரத்தை காசிடை.உ, அசமதாகம் பலம்.க, மிளகு பலம்.ரு, சாரணை வேர் பலம்.ரு, சர்வ சூலையும் புண் இதுவெல்லாம் சூரணம் பண்ணி தேனில் கொள்ள சர்வ சூலையும் புண்ணும் கடுப்புந் தீரும். கை கண்டது.

<u>வாய்வுக்குச் சூரணம்</u>:-

கல்லுப்பு பலம்.க, இந்துப்பு வீ.ரு, சிவந்த உப்பு வீ.ரு, வெடியுப்புச்சாரம் வீ.உ, சத்திய சாரம் வீ.உ, மிளகு பலம்.க, அசமதாகம் பலம்.க, திப்பிலி வீ,ரு, திப்பிலி மூலம் வீ.ரு, ஆனைத் திப்பிலி வீ.ரு, கொடிவேலி வேர் பலம்.ரு சுக்கு பலம்.க, பெருங்காயம் வீ.ரு, வாய்விளங்கம் பலம்.வ, கடுக்காய் பலம்.ச, இது வெல்லாம் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணம் சுடுகிற அசனத்தில் போட்டு பசுவின் நெய் விட்டு சாப்பிடவும்.

உருந்தோடு பலம்,உ நிலப்பனைக் கிழங்கு பலம்.ரு, புனைக்காலி விரை பலம்.க, பருத்தி விரைப் பருப்பு பலம்.க, சாதிக்காய் வீ,ரு, குருங்குங்கிலியம் வீ,ரு, சுக்கு பலம்.ரு, திப்பிலி வீ.ரு, மிளகு பலம்.க, சீரகம் பலம்.க, வாலுளுவை அரிசி விருகனெடை.ரு, ஆவாரை விரைப் பருப்பு பலம்.க கல்நார் பலம்.க, நல்ல வெல்லம் பலம்.க, பசுவின் நெய் படி.க, இது வெல்லாம் ரசாயனம் பண்ணிக் கொடுக்கவும். இது உஷ்ணத்துக்கு, பிரமியத்துக்கு மருந்து.

<u>பறனி மருந்து விஷ கடிக்கு</u>:-

வறி நும்மட்டிச் சாறு படி.க், வடித்துக் கொண்டு புது ஓட்டிலே வார்த்து காய்ச்சிப் பாகு பதமான வாறே அறிந்து கொண்டு அதிலே சுத்தி செய்த நாபி ஒரு விருகனெடை போட்டு கிளறி அதின் பின்பு ஒரு விருகனெடை ரசம் விட்டு கிளறி சிமிழிலடைத்துக் கொண்டு விஷந் தீண்டின பேருக்கு ஒரு கொள்ளளவு அண்ணாக்கில் தடவவும்: சகல விஷமுந் தீரும். இது கை கண்டது.

<u>தெகடைச் சூரணம்</u>:-

நெல்லிப் பருப்பு, வாய் விளங்கம், லவுங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி, ஏலம் கோரைக் கிழங்கு, திப்பிலி, மிளகு இது வெல்லாஞ் சூரணம் பண்ணிக் கொண்டு இதுக்கு கடுக்காய் பொடி சுக்கு இது பாதி சேர்த்துக் கொள்ளவும். இந்த இரண்டு வகை சூரணத்துக்கு தெகடை சூரணம் மூன்று பங்கு சேர்த்துக் கொள்ளவும். இச்சா பத்தியம். இதுக்குத் தீரும் வியாதி உஷ்ண வாய்வு, சுலாக்கினி மந்தம் மூல வியாதி ரோகம், கூட்டப் பிறமேகம், மேக ரோகம்பித்தம் பாண்டுரோகம், நெஞ்சு நேக்காடு இது வெல்லாந் தீரும். இது கை கண்டது.

<u>சாறத்துக்கு மருந்து</u>:-

சுக்குடாக் கடுக்காயோடு திப்பிலி ஒக்கக் கூட்டி வறுவை அரிசியில் நக்கிடா வொரு தேனுடன் மண்டலம் அக்கிடா குரல் கரீ சரீரம் பாடுமே.

<u>தாளக பற்பம்</u>:-

தாளகம் பலகையாய்க் கொண்டு வந்து கொள்ளுத் தண்ணீரில் சுண்ணாம்புத் தண்ணீரில் சாளாந்திறங் கட்டி எறிக்க சுத்தியாகும். புரசம் பட்டை சாத்திலரைத்து நாலு சாமம் அடை போலே தட்டி சட்டியில் அந்த பட்டை வைத்து அதின் மேலே அடை வைத்து அதின் மேலே பட்டை மூடி சட்டி மேல் சட்டி மூடி நன்றாய் சீலை செய்து அடுப்பேத்தி முத்தீபத்தை தேன்று தினம் எரிக்கவும்: ஆறவிட்டு எடுத்தால் தும்பைப் பூ நிறமாகும். ஒரு பணவிடை கொள்ளவும்.

(வேறு)

தாளகத்தே ஒரு கலசத்தில் போட்டு கொழாந்தரங் கட்டி திருகு கள்ளிப் பாலுத்தி

எரிக்க மறுபடி மப்பிக் கேத்தி மூன்று சாமம் எரிக்க பற்பமாகும்.

சாப்பாட்டில் போட்டு சாப்பிடுகிற சூரணம்:-

சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு கருவேப்பிலை வகைக்கு பலம்.க, பெருங்காயம் பலம்,ல இந்த மருந்தெல்லாம் வறுத்து சூரணம் பண்ணி சாப்பாட்டில் மூன்று விரல் கொண்ட சூரணம் போட்டு நெய்யைத் திட்டமாய் விட்டுச் சாப்பிடவும். எந்த வாய்வுந் தீரும்.

அஸ்தி விடுக்க மருந்து:-

லவுங்கப் பட்டை இரும்பு இது இரண்டும் நெய்யில் இள வப்பாய் வறுத்து மாட்டிய மொக்கு ஒரு விராகன் நெய்யில் வேக விட்டு கரு ஊமத்தை விரை செம்மண்ணீரில் ஒரு பலம் விரை போட்டு ஊற வைக்க முளைக்கும். முளை பலவுந் தள்ளி நிலாவரை வேரைக் கொண்டு வந்து ஒரு பலம் எலுமிச்சம் பழச் சாற்றில் நறப் போட்டு உலையில் வேக வைத்து எடுத்துக் கொண்டு காட்டுச் சீரகம் கருஞ்சீரகம் வசம்பு கஞ்சா, சுக்கு, நறுக்கு மூலம் வெருகன் கிழங்கு மிளகு இஞ்சி யிம்மட்டு ஒரு பலம் கொண்டு வந்து விராகனெடை ராக்கம் போட்டு தாளிச பத்திரி, சாதிபத்திரி, புரச்சாதிக்காய் இது வெல்லாம் பொடி செய்து பசுவின் பால் ஒரு பல்லாயில் சுத்தி வண்டு கட்டி பிட்டு வைத்து எடுத்துக் கொண்டு குளிக் கள்ளில் மருந்தும் சர்க்கரையும் போட்டு அரைத்து பேரிச்சம் பழம் விராகனெடை கூட்டி அவரைப் பிரமாணம் உருண்டை பண்ணி தின்னப் போறு போது அஸ்தி கிட்டாப் பெருக்கு ஒரு மாத்திரை கொடுக்க வயிறு பேதியாம். வாந்தியானால் நிலவிளாயிலை சீரகம் கசாயம் ஊநீர் வால்மிளகு இது கசாயம் வைத்து கொடுக்கவும். ஈஎள்ரியும் மோருங் கூட்டவும்.

பறுவரைக்கு:-

பறங்கிப் பட்டை பலம்,க கற்பூரம் வீ.ரு, சாதிக்காய் விராகனெடை.ரு, சாதிப் பத்திரி விராகனெடை.ரு, குரோசாணி, ஓமம் விராகனெடை.ரு, சுக்கு பலம்.ரு, மிளகு பலம்.ரு அறத்தை பலம்.ப சித்தரத்தை பலம்.ரு இது வெல்லாம் இடித்து வஸ்திர காயம் பண்ணி கொடுக்கவும். வலம் சலம் கட்டினால் காட்டுக் கொட்டை அரைத்து இள வெந்நீரில் கொடுக்கவும். மெத்த பேதியானால் நெல் கஞ்சி கொடுக்கவும்.

அரத் தென்னெய்:-

அமுக்கிரா வேர் பலம்.ங, சீரு செங்கனி பலம்.ங, நன்னாரி வேர் பலம்.ங, ஓரிதழ் தாமரை பலம்.ங, பழம் பாசி பலம்.ங, முத்தக் காசு பலம்.ங, வில்வ வேர் பலம்.ங, பொன்னுங்கண்ணி வேர் பலம்.ங, விலாம் வேர் பலம்.ங, முசுமுசுக்கைச் சாறு படி.க, கையாந்த கரைச் சாறு படி.க, பேரு முட்டி வேர் பலம்.க இது வெல்லாம் நறுக்கி ஒரு பானையில் போட்டு மூன்று வள்ளந் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி இரண்டு படி நல்லெண்ணைக்கு பொன்னறக்கு பலம்.ரு, சீலையில் கிழி கட்டி அஞ்சு படி தண்ணீர் விட்டு முக்கால் படியாக இறக்கிக் கொண்டு நல்லெண்ணையில் கலந்து இதுக்கு கடைச் சரக்கு வகை மிளகு பலம்.க, அதிமதுரம் பலம்.க, கோஷ்டம் பலம்.க, நற் சீரகம் பலம்.க, வாய் விளங்கம் பலம்.க, கொத்தமல்லி பலம்.க, செண்பகப்பூ, தேவதாரம் லவுங்கப் பத்திரி, லவுங்கப் பட்டை, வால்மிளகு இவை வகைக்கு பலம்.க, பூலாங் கிழங்கு விராகனெடை.க, லவுங்கம் விராகனெடை.ப, தாளிச பத்திரி விராகனெடை.ரு, ஏலம் வீ.ரு, சாதிக்காய் வி.உ, குங்குமப் பூ பணவிடை.ங, குடன் விராகனெடை. இது வெல்லாம் இடித்து முன் கசாயம் சேர்ந்த எண்ணையில் போட்டு மெழுகு பதமாய் தைலம் இறக்கிக் கொண்டு தைலம் முழுகி வரவும். இது தீரும் வியாதி அஸ்தி சுரம், மேக சுரம், இருமல் வாய்வு உஷ்ணம், இது வெல்லாந் தீரும். சார்ப்பு, புளி தலை முழுகின அன்றைக்கு விட்டு விடவும். வயிற்

வயிற்று வலி, அழலை வலி, ஈரக் குலை நோவுக்கு:-

சித்திர மூலம் விராகனெடை.ங, ஆனைதிப்பிலி விராகனெடை.ங, பச்சிலை விராக னெடை.ங, மரமஞ்சள் விராகனெடை.ங, கசகசா விராகனெடை.க, தெவதாரம் விராக னெடை.உ, கல்நார் விராகனெடை.உ, இந்த மருந்தெல்லாம் சூரணம் பண்ணி தின்னவும். வயிற்று வலி அழலை வலி ஈரக் குலை நோவு இது வெல்லாந் தீரும். கை கண்டது.

பேதி வாந்திக்கு சுமுத்திரப் பழம் வெந்நீரில் அரைத்து கொடுக்க பேதி நிற்கும்.

உள் மூலத்துக்கு :-

ஈர வெங்காயச் சாறு வாங்கிக் கொண்டு கெந்தகம் விராகனெடை.௨, நல்லெண்ணை வார்த்து கறண்டியில் விளக்கெண்ணை பதமாகிற போது வடித்துக் கொண்டு வெற்றிலையில் கொள்ள மேகத்தில் பிறந்த வியாதி யெல்லாந் தீரும்.

காட்டுக் கருணை கறிக் கருணை கருளன் பிறண்டை கொடிவேலி நாட்டில் படரும் பிரியறணை நல்ல மெருகன் கிழங்கு சுக்கு, கூட்டி இதுவே தாளாக்கி கொணிய தேனில் கொள்வீருய் யீட்டிக் கிருமி உள்மூலம் இடிந்து பொடிந்து தகர்ந்திடுமே. இதுக்கு வனமூலிகை களிச்சிக் கொழுந்து புங்கங் கொழுந்து, சின்னியிலை கொளியாவரை யிலை வேலிப் பருத்தியிலை, குப்பை மேனியிலை வேளையிலை பிரமியிலை, நிலவாகை கருநொச்சி இலை, இந்தப் பதிமூன்று வகையும் ஒரு அளவாக எடுத்துக் கொள்ளவும். இதுக்கு எருக்கம் பூ அலருத பூவா யிருவத்தொரு பூவு எடுத்துக் கொள்ளவும். இதுக்கு கசாயம் திப்பிலி விராகனெடை.௩, தேசாவரம் விராகனெடை.௩, அசமதாகம் விராகனெடை.௬ சித்திர மூலம் விராகனெடை.௬, கருஞ்சீரகம் விராகனெடை.௫, பெருங்காயம் விராகனெடை.௩ இந்துப்பு விராகனெடை ௫, வெள்ளை வெங்காயம் பலம்.௪, வசம்பு விராகனெடை.௫ இந்த ஒன்பது வகையும் இலுப்பைப் புண்ணாக்கு வி.௫, களக் கொட்டி பருப்பு வி.௫ இந்த சாறு வகையும் முந்தின வன மூலிகை வகையும் வேலி பருத்திச் சாறு வார்த்து அரைத்து பெரிய கொட்டைப் பாக்களவு உருண்டை பண்ணி நிழலுணத்திதாக உலர்த்தி வைத்துக் கொண்டு நேரத்துக்கு ஒரு உருண்டையாக இரண்டு நேரமும் இருபது நாள் இள வெந்நீரில் இஞ்சிச் சாற்றில் இரண்டு நேரமும் பதினைந்து நாள் கொள்ள நிற்கும். இது கை கண்டது. இதுக்குப் பத்தியம் கார்ப்பு, புளி தவிர்க்கவும்.

சர்வ ரோகம் சண்ட மாருதம் :-

ரசம் வி.௫, வெள்ளைப் பாசாணம் விராகனெடை.௫, கெவுரி பாசாணம் விராகனெடை.௫, நெல்லிக்காய் கெந்தகம் விராகனெடை.௫ தாளகம் விராகனெடை.௫, சாதிக்காய் விராகனெடை.௪, சாதிபத்திரி வி.௩, கிராம்பு வி.௪, மிளகு வ.௫ இந்த மருந்தெல்லாம் குப்பை மேனிச் சாறு வார்த்து அரைத்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து காய வைத்து எடுத்து கொண்டு ஒரு பானையில் நாழு படி உப்பு போட்டு அதில் அரைத்த மருந்தை வைத்து சுருக் மேல் சட்டி மூடி மண் செய்து அடுப்பு மேல் வைத்து வாகை விறகு கொண்டு மூன்று நாள் எரிய விட்டு நாலா நாளெடுத்து சட்டியில் பற்றியிருக்கும் பற்பமெடுத்துக் கொண்டு சூலை கட்டுப் புண்ணுக்கு பணவிடை கொடுக்கவும். ஏழு நாள் கொடுக்கவும். உப்பு தயிர் மோரு கூட்டிக் கொள்ளவும். புளி விடவும்.

லிங்க சூலை, யோனி சூலைக்கு மருந்து :-

தாளைப் பேயைப் பிடித்து பீசம் சுருக்கிடில் குறைத்து விறிக்கி வழைத்துக் கிற வெயிற்றைத் தொளை வாங்கி நீர் பெயும் போது ஒளிப்பவர் போல் கூனி உதைத்து லிங்க சூலை கனிக்கு, மெட்டிகை யோனி முத்தி சூலை இதுக்கு மருந்து.

சுக்கு மிளகு, வசம்பு, உள்ளி, துய்ய மெழுகு குங்கிலியம், ஒக்கக் கொண்டு பொடி செய்து யோனியிலே யெண்ணை தனைப் பூசி தக்க ஊறில் தனலிட்டு சமைத்த பொடியே மேல் தூவி யொக்க வருத்து புகை காட்ட யோனி சூலை ஒளிந்திடுமே. ஒரு படி நல்லெண்ணையில் ஒரு பலம் வெள்ளை வெங்காயம் சிவந்த பதத்திலிறக்கி மூன்றிலொரு பங்கில் யெண்ணை குடித்து வெங்காயம் தின்னவும். இப்படி மூன்று நாள் ஏழு நாள் கொள்ளவும். கருதும்பே ஒரு தேங்காயம் மாத்திரம் கொண்டு வந்து அதை நசுக்கி நீச்சுத் தண்ணீரில் போட்டு பிசைந்து கருஞ்சீரகம் சர்க்கரை போட்டு அஞ்சு நாள் குடிக்கவும். தண்டேறின தண்டு நோவு நீர்க் கட்டு விடும். கை கண்டது.

வெள்ளி வகைக்கு மருந்து :-

இரண்டு பலம் துத்த நாகம் கின்னமாக வார்த்து அந்தக் கின்னத்தே ஒரு அடுப்பு பிடிச்சு சுத்தி வர மண் பூசி அதில் ஒரு சட்டியே வைத்து முக்காஞ்சி இரதம் விட்டு அந்தக் கின்னத்தைக் கொண்டு ரத்தத்தை கவுழ்த்து மூடி கத்தாளை மடலை இரண்டு மூன்று

நறுக்கி அந்தக் கிண்ணத்தை இடைத்துக் கொண்டு இருக்கவும். தீ எரிக்கும் போது விடத் தேறம் விறகு கொண்டெரிக்கவும். கட்டிறல் செந்தூரமாம். அந்தச் செந்தூரத்தை ஒரு சிமிலில் வைத்துக் கொண்டு இதக்குச் செம்பு பதினஞ்சு களிஞ்சி உருகப் பத்துக் களஞ்சியாம். உருக்கின பத்துக் களஞ்சி செம்புக்கு இரு களஞ்சி செந்தூரம் விட்டு உருக்க நல்ல வெள்ளியாம்.

விசவாதிக்கு சூரணம்:-

பழம்பாசி விருகனெடை.உ, பற்படாகம் விருகனெடை.௭, புழுங்கலரிசி விருகனெடை.உ, விராம் பிசிறு விருகனெடை.உ, இது வெல்லாம் வறுத்து சூரணம் பண்ணி கொடுக்க வே[illegible] நிற்கும்.

மந்தார காசத்துக்கு:-

வந்தன்டு முத்தின தண்டு கொண்டு வந்து சாதின தண்ணி வரும் அரைக்கால் படி தண்ணீரில் அரைக்கால் படி நல்லெண்ணை விட்டு கலந்து கொடுக்கவும். இந்த படி மூன்று நாள் ஆறு பொழுது கொடுக்கவும். உப்பு, புளி ஆகாது. கெட்டியாயிருக்கும்கவும்.

கலிங்காதி லேகியம்:-

பேய்க் குமட்டிக் காய்ச் சாறு படி.ச, ஈர வெங்காயச் சாறு படி.ச, இது இரண்டும் எட்டிலொன்றாய்க் காய்ச்சி சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகுரோகணி, சாதிக்காய், சிறும்பு, கசகசா, கொத்தமல்லி, நெல்லிப் பருப்பு வகை ஒன்றுக்கு பலம்.க, இது வெல்லாம் போட்டு இரண்டு பலம் விளக் கெண்ணை விட்டு லேகிய பக்குவமாய்க் கிண்டி வைத்துக் கொண்டு குன்டு மணி அளவு தின்று வரவும். மறுபடி பெரிய குன்டு மணியளவு தின்று வரவும். சார்ப்பு, புளி தளிர்க்கவும். இதில் தீரும் வியாதி மூலரோகம், குன்மவாய்வு, வயித்துக் கட்டி, சோகை இது வெல்லாந் தீரும்.

குசிகா பறணம்:-

உருக்கு அரப்பொடி, சாதிலிங்கம், நர்பி மிளகு கொடிவேலி வேர்ப் பட்டை, சாதிக்காய், வெங்காரம், அபினி கஞ்சாயிலை இது வெல்லாம் சமனாக கட்டி பொன்னா மத் சாறு விட்டு நாலு சாமம் அரைத்து மிளகுப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி தேனிலாவது நீரிலாவது இரண்டு குன்றிப் பிரமாணம் கொடுக்கவும். இது ஏக கண்டது.

வயித்து வலி தீர:-

காயம், அறத்தை, திப்பிலி, சுக்கு, சித்திரமூலம் இவை யெல்லாம் வஸ்திர காயம் பண்ணி நெய்யில் வறுத்துக் கொள்ளவும். இதக்குத் தீரும் வியாதி வயித்து வலி பட்டு அசீரணம், வயித்து வாய்வு இது வெல்லாந் தீரும். இது ஏக கண்டது.

சிவா மேக வெட்டை கெற்ப உஷ்ணம் இதுக்கு மருந்து:-

சித்தா மணக்கு கொட்டை மூன்று வள்ள காடியில் வேக வைத்து உலர்த்தி இடித்து இதில் இளநீர் மூன்று வள்ளம் பசுவின் பால் வள்ளம்.கூ, தண்ணீர் வள்ளம்.கூ, கூட்டி பதமாய் யெண்ணை வத்தி வடித்து இதில் கடுகுரோகணி பலம்.வ, கொத்தமல்லி பலம்.வ, சீரகம் பலம்.ரு, சாதிக்காய் பலம்.க, சாதிப்பத்திரி பலம்.க, லவுங்கம் பலம்.க, கூட்டி இடித்துப் பொடி செய்து சீலையில் பொட்டணங் கட்டிப் போட்டு சூரிய புடம் இருவது நாள் வைத்து ராத்திரிக்குச் சாப்பிட்ட பிறகு இரண்டு விருகனெடை நக்கத் தீரும். கெற்ப உஷ்ணம்:- மேகம் இருபத்தொன்று, மேக உஷ்ணம் இது வெல்லாந் தீரும்.

ரச செந்தூரம்:-

ரசம், கருஞ்சீரகம், மிளகு சீரகம், சுக்கு லிங்கம், மரோடிலை, நாவி, அரிதாரம் இந்த வகை சமனாய் நிறுத்துப் போட்டு சீரக கஷாயம் வைத்து விட்டு அரைத்து வகை பண்ணி அகைக்குள்ளே வைத்து சீலை மண் செய்து சாண் குழி வெட்டி அதற்குள்ளே வைத்து புடம் போடவும். மறுபடி அரைத்துப் புடம் போடவும். மறுபடி கஷாயம் விட்டுப் புடம் போடவும். செந்தூரமாம்.

உள் மூலத்துக்கு:-

ஈர வெங்காயச் சாறு வாங்கிக் கொண்டு நெல்லிக்காய் கெந்தகம் விருகனெடை.உ, நல்லெண்ணை வார்த்து கறண்டியிலே விளக்கெண்ணைப் பதமாகிற போது வடித்துக் கொண்டு வெத்திலையில் கொள்ள மேகத்தில் பிறந்த வியாதியெல்லாந் தீரும்.

வங்கார சஞ்சீவி மாத்திரை:-

கெந்தகம் பலம்.சு, ரசம் பலம்.க, அரிதாரம் பலம்.க, மனோசிலை பலம்.க, தாளகம் பலம்.க, ரசி பலம்.க, வெங்காரம் பலம்.க, சாரம் பலம்.க, காந்தம் பலம்.க, சல்லீறம் பலம்.க, செம்பு பொடி பலம்.க, துறப் பொடி பலம்.க, உருக்குப் பொடி பலம்.க, அப்பிரகம் பலம்.க, காரீய்ய பற்பம் பலம்.க, திப்பிலி பலம்.க, திப்பிலி மூலம் பலம்.க நறுக்கு மூலம் பலம்.க, சாதிலிங்கம் பலம்.க, இதுக்குச் சாறு வகை அரைக் கப் பழச் சாறு ஒரு நாள் குப்பைமேனிச் சாறு, ஒரு நாள் மணத்தக்காளி சாறு ஒரு நாள், கைக்காய்த கரைச் சாறு ஒரு நாள், வெள்ளை நொச்சிச் சாறு ஒரு நாள் இந்த ஆறு வகைச் சாறு ஆறு நாளரைத்து வில்லை செய்து காய வைத்து நல்ல செட்டியாய்ப் பண்ணி மேல்ச் சட்டி கொண்டு மூடி எழு சீலை மண் செய்து அடுப்புப் போட்டு அடுப்பிலே வைத்துக் கொண்டு எரிக்கச் செந்தூரமாம்.

காமாலைக்கு:-

வெள்ளெருக்கு சீந்தியோடு வேம்பு கறிசாலை முள்ளிக்காய், சுண்டை முசுட்டை வேர், வெள்ளறுகு தன்னேடிடித்துத் தான் சேரை தந்தாக்கால் பின்னே நுங் காமாலை போம். துத்தமொடு அரிசு அரிதாரம், லிங்கமும் சுகமான நீறெட்டியும் சுக்த முள்ள குழு நேர் வாளந் தன்னோடு சுட்ட தேங்காய் மொக்கே பத்தியுடனே கோழி முட்டைச் சிவந்த கருபாகமுடன் கூட்டி சமனதாய் பதறுமல் வேப்பெண்ணை விட்டு அரைத்து ஒச்சமம் பண்ணியே சிமிளில் விட்டு சித்திச மெந்த விடமாலும் யாவும் தின்ன விட்டோடி மீறும்.

செப்பரிய விரியனுக்கு ஏழு நாள் கொள்ளவும் செயுமாகும். பேயமோடு அத்தனை தப்பாத அகஸ்தியனுரை செய்து அமந்தந்தில் வுலகிலே ஆதிமாமனு சருக்கு. செய்யாத திச்ர் மென அறிவுள்ளோறறிவதே.தா

தாம்பிர பற்பம்:-

தாம்பிரம் தகடு தட்டிக் கொண்டு அந்தத் தகட்டை சட்டியிலே வைத்து கஞ்சா அ மேலுங் கீழும் போட்டு தீ எரிக்க பற்பமாகும்.

கண்ணுக்கு அஞ்சனம்:-

இந்துப்பு, திப்பிலி, பீதரோகனி, ஆமையோடு, பன்னிக் கொம்பு, கலங் கொம்பு சாவல் நெஞ்செலும்பு வெள்ளி, நந்தியா வட்டப் பூச் சாறு விட்டுக்கவும். தேன் வார்த்து அரைக்கவும். கண்ணுக்கு கலிக்கம் போடவும்.

ஊது காமாலைக்கு:-

காளை குருத்துச் சாறும், நல்லெண்ணையும் சமன் கூட்டி கொடுக்கவும். குப்பை மேனி யிலையை நறுக்கி தலையில் பிளிந்து சக்கையை வெய்யிலில் போடவும். ஒட்டறையைத் தெள்ளி வெரு கடிப் பிரமாணம் எருமைத் தயிரில் கூட்டிக் கொடுக்க ஊது காமாலை தீரும்.

பல் வலிக்கு:-

கருயின்டு பட்டை துட்டெடை கோஷ்டம், கொத்தமல்லி இஞ்சி சித்தா முட்டி வேர் வில்வப் பத்திரி வேர், கருவேலம் பட்டை, அருக்கிலாக் கிழங்கு நால் படி தண்ணீர் விட்டு ஒரு படியாக காய்ச்சி கொப்பளித்து முழுங்கவும். வகை ஒன்றுக்கு துட்டெடை நிறுத்துக் கொள்ளவும் பல் சவ்வு நிற்கும்.

தாம்பிர பற்பம்:-

தாம்பிரம் எருக்கிலம் பூவு சுரைக்காய், கெந்தகம் சரி சமஞக கூட்டி அரைத்து திரட்டி எடுத்து குளிச்சு துட்டெடை வைத்து மூடி சுட்ட ஒடு இட்டு சீலை மண் செய்து குளி

வெட்டி அடியில் எருவு போட்டு மத்தியானத்தில் வைத்து புடம் போட பற்பமாகும். வெள்ளியும் முன் சொன்ன பிரகாரம் போட்டால் பற்பமாகும்.

வங்க_பற்பம்:-

வங்கம் பலம்.க, தகடு தட்டி சல்லியாக நறுக்கி மஞ்சள் சாறு, ஓமம் இரண்டுங் கலந்து வங்கத்துள்ளே கலந்து கோவி இறட்டுலே போட்டு சுத்தி சீலை செய்து முழப் புடம் போட்டால் பற்பமாகும்.

வங்கம் வெடியுப்பு ஒரு சட்டியிலிட்டு அதின் பிறகு ஆவாரை வேர் பட்டை வட்டத் துத்தி வேர் பட்டை கண்டங் கத்திரி வேர் அதின் போல் வறுக்க ஊசி வந்து போகும் அதை எடுத்துப் பொடி செய்து வைத்துக் கொண்டு செந்தூரம் பணவிடைக்கு இந்தப் பொடி காசிடை கூட்டி நல்ல சீரகம் கூட்டி பசுவின் வெண்ணெயில் கொள்ள இரண்டு நாள் மூன்று நாள் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி ருது சன்னி பதினெட்டுக் கல்லடைப்பு, சலக் கழிச்சல், நீரடைப்பு, கையெரிப்பு, காந்திப்பு, சுக்கில ப் பிரமியம், மேகம் இருமலும் தீரும். பத்தியம் உப்பு, புளி ஆகாது,

கெந்தக_பற்பம்:-

கெந்தகம் பணவிடை, ச அவி*ஐராவ்*ஈண்ம் யெவியர்மன்க்கு பாலில் கால் படி பால் கொண்டு வந்து ஒரு சட்டியிலிட்டு அதில் கெந்தக கட்டியை வைத்து ரவி புடம் ஒரு நாள் வைத்து பிற்பாடு படிக்காரம் தட்டெடை.உ, அண்ட ஓடு புரசன் சாம்பல் இந்த மூன்றையும் நன்றாய் பொடி பண்ணி அப்பிரகத் தகடு சட்டியிலே வைத்து அதின் பேரில் பொடியை போட்டு கெந்தக கட்டியை வைத்து அதின் பேரில் பொடியை போட்டு மூடி மேலே தேங்காய் தொட்டி மூடி நல்ல தும்பையை அரைத்து தகடுக்கு தொட்டிக்குங் கவசங் கட்டி நாலு நாளிகை தீபாக்கினியாக எரிக்க பற்பமாகும். இஞ்சி தேன், குமிளம் பால் அநுபானம். இச்சா பத்தியம்.

மேகத்துக்கு_கெந்தகத்_தயிலம்:-_நொண்டி:-

அந்தமுள்ள கெந்தகத் தயிலம் நன்று அறைகிறேன். கொக்குவர் திரு மூலம் மெச்சகெந்தியும். மதோசிலையும் நன்றாய் கெடியாக பலம் அஞ்சு கல்வத்திட்டு சாரமுடன் வீரம், மரிதாரம் நன்றாய் சமத்தான வெடியுப்பு தான் பலமும் இரண்டு, அரிதாரம் காசி ஒன்று கூட்டி நன்றாய் அரைப்பது ஆவி நெய்யில் நாளிகையும் மஞ்சி வெள்ளைச் சீலை குளத்துக்குள் பூசி நல்ல வெப்பியே கன்/ட்டறே கொளித்தி பாகமுடன் ஆவினெய்யே மேலே விட்டு பதமாக தயிலத்தை வாங்கியே நன்றாய் பணவிடை சர்க்கரை கல்கண்டில் கொள்ளத் தீரும். வியாதி வகை கேளாய்: தீராத குட்டமொடு, கூடியமெகந்தாமும், மேன்மம் வலி வன்மம், ரண வெள்ளை, ரெத்தம், கொடிதான மேகங்கள் வாய்வு, வாத சூலை நாலாயிரத்தி சிவகானம் இது நாடாது நாடாது நாட்டை விட்டு ஓட்டும். கற்ப சித்தி கவுன முண்டாக்கும். நல்ல கன்னிமைக்குள் சாதகமாய் முன்னாலேயோடு ஆகாச கெவுனமுண்டாக்கு, ஆருளானந்த சித்தரிந்த தயிலதனை மறைத்து கர்ப்பங்களும் பாதகங்களும் பாடி மறைக் நல்ல கனமான செந்தூரங்களும் பாடி. பார்த்து நீ பலியாமலிருந்தோர்கள் இந்த பாருலகில் பாடவென்றால் பாட முடியாது.

கெந்தகம்.ரு, பலம், சாரம், வீரம் ஒரு காசி, வெடியுப்பு ஒரு பலம் மதோசிலை, இரண்டரைப் பலம், அரிதாரம் மூன்று காசிடை, வெள்ளையில் ஒரு முழச் சீலையில் இந்தச் சரக்கை நெய் விட்டு அஞ்சு நாளிகை அரைத்து சீலையில் தடவி சுருட்டி திரி பண்ணி பந்தம் பொருத்தி மேலே நெய்யை விட்டால் கீழே தயிலம் விழும். மூன்று ரவிசையெடுத்து விட வேண்டும். அந்தத் தயிலத்தில் வாலை ரசம் புகுஞ் சேர்த்து அரைக்கையில் சேர்த்து அரைக்க வேண்டும்.

வெடியுப்புச்_செய_நீறு:-

பூநீறு பலம்.கூ, அட்டுப் புலம்,க, செடியுப்பு பலம்.க, புளி பலம்.கூ, பழச்சார் விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை பண்ணி ஒரு ஓட்டில் வைத்து இரண்டு சா சாமம் காய வைத்து மேலோடு கொண்டு மூடி சீலை மண் செய்து கெசக் புளி வெட்டி

பாதி யெருவு போட்டு அதின் மேல் வைத்து அதின் மேல் எருப் போட்டு புடம் செய்யவும். ஆறவிட்டு எடுத்தால் சுண்ணமாகும். இந்த எடைக்கு வெடியுப்பு பாதி இதுக்கு பீலிரப்பு இதற்குப் பண்டம் இதுக்கு பழச் சாறு, வெள் கருவு சரியிடை விட்டரைத்த முன் போலப் புடம் போடவும். கொட்டி சுண்ணமாம். இந்த சுண்ணமொன்று சாரமொன்று இதுக்கு பாதி சாரம், இதுக்குப் பாதி பிண்டப் பழஞ் சாறு விட்டரைத்து முன் போலப் புடம் போடவும். சாரம் கட்டு இந்த எடை சாரம் இதுக்குப் பாதி காரம். இதுக்குப் பாதி பிண்டப் பழச் சாறு விட்டரைத்து முன் போல் புடம் போடவும். இந்த எடை சாரம் இதுக்குப் பாதி காரம். இதுக்கு பாதி பிண்டங் கூட்டி வெள்ளைக் கருவு ஒரு பங்கும் எருக்கிலம் பால் ஒரு பங்கு முலைப்பால் ஒரு பங்கு அமுரி ஒரு பங்கு, வாய்நீர் ஒரு பங்கும் பழச் சார் ஒரு ப பங்கு அண்டச் சுண்ணம் ஒரு விருகன் சிப்பி சுண்ணம் விருகன்.க, வங்க சுண்ணம் விருகன்.க, இந்த மூன்றும் ஆறு வள்ளத் தண்ணீரில் போட்டு கலக்கி வைத்து தெளிவை மூன்றுநாழி சாறத்து விட்டரைத்து இரண்டு சாம் அரைத்து ஒரு சட்டியில் பீடிகை இரண்டு படி விட்டு முன் அரைத்த சாரத்தை வில்லை பண்ணி நிழலில் காய வைத்து தண்ணீர் சுவறின பின்பு மேல்ச் சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்து கெசபுடம் போடவும். எடுத்துப் பார்த்தால் பீலிறு போல் வில்லை வில்லையாய் கொடிய காரச் சுண்ணமாம். இந்த எடைக்கு காரங் கூட்டி சாரத்தைப் பொடியாக்கி அந்தச் சுண்ணங் கூட்டி சீலையில் கட்டி ஒரு பானைக்குள் வைத்து பீங்கான் வைத்து பானைக்கு டொழாந்திரங் கட்டி பீங்கானுக்கு மேலே கட்டி தூக்கவும். பானை வாய்க்கு சட்டி மேல் சீலை மண் செய்து அரையளவு குழி தோண்டி அதற்குள் வைத்து மேல் மண் போட்டு மூடிப் போடவும். ஒரு மண்டலங் கழிந்தால் செய்நீரும். இந்த செய்நீரில் வீரம் போட்டு வைக்கவும். பின்பு சகல பாசாணமுங் கட்டும்.

(வேறு)

அண்ட ஓடு வெடியுப்பு வாய் நீர் விட்டரைத்து உக்கிட புடம் போடச் சுண்ணமாம். சிப்பியு மிப்படியே சுண்ணமாம். வங்கத்தே தகடு தட்டி விஷ்ணுக்கிரந்தி இலையும், குளித் தாமரை யிலையும் அரைத்து வில்லை பண்ணி அதின் பேரில் வங்கத் தகட்டை வைத்து மேலு மந்த வில்லை கொண்டு மூடி சீலை மண் செய்து கெசபுடம் போடவும் பற்பமாம். இதுக்குச் சரி யிடை வெடியுப்பு கூட்டி வாய்நீர் விட்டரைத்து வில்லை பண்ணி பூநீறு ஒரு ஓட்டில் பரப்பி வில்லை வைத்து அதின் மேல் பூநீறு பரப்பி ஓடு கொண்டு மூடி சீலை மண் செய்து முழப்புடம் போடச் சுண்ணமாம்.

நீர் கட்டுக்கு:-

பலகறை பத்து எலுமிச்சம் பழச் சாத்திரா றப் போட்டு கலக்கிக் கொடுக்கத் தீரும். வெள்ளரிக்கா இடித்துப் பிழிந்து கொண்டு எலுமிச்சஞ் சாறு விட்டுக் கொடுக்கத் தீரும். அச்சுப் பட்டை முருக்கன் தளை பசுவின் பாலு விட்டரைத்து கொடுக்க வலம் சலம் விடும். வெள்ளரி விரையும் நாயுருவி விரையும் அரைத்துக் கொடுக்க வலம், சலம் இறங்கும். இது கை கண்டது.

இஞ்சிக்குழம்பு:-

இஞ்சி பலம்.க, நன்றய் கழுவி உரை விட்டு சிறுக இடித்துச் சூரணம் செய்து பசுவின் நெய்யில் கொஞ்சம் கொஞ்சமாக வறுக்கிற பதம் பொன்னிறமாக விட்டு எடுத்துக் கொண்டு அதில் சூரணம் ஒரு பங்கு கரந்தேன் இரண்டு பங்கு விட்டு வைத்துக் கொண்டு அவனவன் சரீரமறிந்து சுண்டைக்காய் மறிவாதி வாங்கவும். நிதானமறிந்து கொடுக்கவும் சகல சீதமுந் தீரும். தீபனமுண்டாம். சரீரம் வாசினையுண்டாம். சகலத்துக்கு நல்லது. பனை வெல்லம் மூன்று இடித்து மூன்று நாள் தின்னத் தீரும். கை கண்டது.

இது மருந்தல்லாத வேறு கவை தேவையில்லை:-

தத்துருகந் தரிசிடை மாய்ந்த பின் அத்துருகக்தல் விடை இறகும் பச்சை கூட்டிப் பதினென் புடமிட ஒத்தை ஆளிக் குரையிடலாகுமே.

வாதமுறை:-

நல்ல வெள்ளி எட்டு மா, நலங் கொள் செம்புரண்டு மா: கொல்லும் நாகம் [illegible]

முன்மமா முலாவு செம்பொன்றன்டுமா விஸ்லிசேசை ஒன்று கூட்டி விளங்க ஊத வல்லீறும் வெல்லையொத்த சோதியானை யிட்ட ருனிக் கொக்குமே வட்டமா யிருக்கும் மதி புண்டு ருக்கும். வளைய மக்கள் வேறு பெக்கிருக்கும். கொட்டால் துருசு வெருக்கும். ஐயற ரசத்தைக் கட்டும். பட்டண சந்தியு சன்னுசி பன்னிய பச்சிலை ஆயிரதாள் பனை மேலே றிப் பார்த்திருந்தேன். (not clear)

<u>வெடியுப்புச் சுன்னம்:-</u>

பொட்டிலுப்பு எட்டுப் பங்கு புளியார் சீனம் ஒன்று, சாரம் ஒன்று புடம் போடச் சுன்னமாகும். கெந்தகம் அரிதாரம் இது இரண்டும் வாய்நீர் விட்டு அரைத்து லிங்கத்துக்கு கவசங் கட்டி செங்கல் குழி பண்ணி அதுக்குள்ளே வைத்து மேல்க் கல் மூடி சீலைமண் செய்து புடம் போடக் கட்டும்.

<u>அயச் செம்பு:-</u>

அயம் துருசு, காரம், கெந்தகம், குதம் அயத்துக்கு நாலிலொன்று கூட்டி எலுமிச்சம் பழச் சார் விட்டு அரைத்து கைக்குள்ளே வைத்து ஊதில் செம்பாகும். சகல வேலையாகும். இது சகல காரியமாகும்.

<u>கண் வியாதிக்கு மருந்து:-</u>

சுருக்கு, சுக்கு, மிளகு, அரிதாரம், அதிமதுரம், புங்க விரை, பீதரோகணி, பால் துத்தம், மயேசிலை, நந்தியா வட்டம் ஒரு சாமம் அரைத்து குருகை பண்ணி நிழலுலர்த்தி தேனிலுரைத்துக் கண்ணிலிட காசம் குணமாம். காசாம் பூ, முருங்கை விரை, புளியங் கொட்டை, வேலிப் பருத்தி வேர் இவை பருத்தியிலைச் சாத்திலரைத்து கலத்தில் தப்பி சாத்திலல் நைகட்டி இறங்கும். அதில் பச்சைக் கற்பூரம், துத்தம், துருசு வெள்ளைக் கல்லாடி புங்க விரை இவை சமஞ்சு கையாந்த கரை சாத்திலரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி நந்தியா வட்டப் பூச்சாத்திலிட கண்ணில் பூமாறு பனை பட்டை சாத்தில் பூ மாறும்.

சுங்கு, திப்பிலி, மிளகு, துத்தம், மயேசிலை, சீருக்காரம், அதிமதுரம், புங்க விரை, கடுகுரோகணி, நந்தியா வட்டத்து இலைச் சாத்திலரைத்து தேறுங் கூட்டி கலத்தில் பிறத்திலிட்டு சிறு வட்டி கொண்டு சுறித்து தியிலில் வைத்துக் கொண்டு கண்ணிலிடவும். காசிப் படர்ந்தது தீரும். கை கண்டது..

<u>நேத்திர வாய்வுக்கு:-</u>

நெய் படி..வ,. பால் படி,வ, நந்தியா வட்டப் பூ, முருங்கைப் பூ, மரமஞ்சள், பொன்னுங்கண்ணி வேர், சிறுகீரை வேர், அதிமதுரம், சந்தனம் இவை அரைத்து வடித்துக் கண்ணில் நிறுத்தவும். இறண சுக்கிலம் முளைப்புத் தீரும். உப்பு, புளி தவிர்க் கவும்.

நேத்திர வாய்வுக்கு பழம் புளி கல்லுப்பு, ஒரு பருத்திக் கொட்டை சோறு கூட்டி புளியிலைச் சாறு விட்டு கலத்தில் பின் சங்கிலுரைத்து மை போலே கல்க்கா லெடுத்து ஒன்றை விட்டொரு நாள் கண்ணிலிடவும். வெந்நீரில் கழுவவும்.

~~[illegible]~~:- [illegible]

லவங்கப் பட்டை ரு, பச்சைக் கற்பூரம்.உ, சிறுதேக்கு,க, சந்தனம், நெல்லி பருப்பு, செண்பகப்பூ, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பொன்னுங்கண்ணி, சிறு கீரை வட்டத் தத்தி, குறுந் தொட்டி இவ் வேருகளும் காட்டு பாசானக் கிழங்கு இவை எலுமிச்சம் பழச் சாறு முலைப் பா விட்டரைத்து நெய்யாவது நல்லெண்ணெயாவது விட் டெறித்து நாசியில் நிறுத்தி தலையில் தப்பவும் மண்டை வியாதி நீல காசம் பித்த காச கண்ணிமை எடுப்பு அழல் எல்லாந் தீரும். வல சலம் விடாமலிருந்தால் கோவை தண்டு கைப் பெருமங் கொண்டு வந்து கல்லுரலில் இடித்து சாறு வாங்கி வெங்காரம் பொரிச் சுப் போட்டு குளப்பிக் கொடுக்க வலம் சலம் விடும். உப்பு, புளி மூன்று நாளா காது.

மிளகு, சங்கிலை இது இரண்டும் சத்தே வறுத்து தண்ணீர் முத்தி அந்தத் தண்ணீர்ர கொடுக்கவும் முறியும்.

அஜீரணத்துக்கு மருந்து :-

சுக்கு, திப்பிலி, மிளகு, மலைதாங்கி வேர் சாத்தப்பு உரலிலே போட்டு இடித்து வேலிப் பருத்திச் சாத்திலே சரகுகளை ஏழு நாளுற வைத்து எடுத்து உலர்த்தி இள வறையாய் வறுத்து மலைதாங்கி வேரை சத்தே கருக வறுத்து சூரணம் பண்ணி வைத்துக் கொண்டு காலமாறு மூன்று விரல் கொண்ட தூள் தின்னவும். அஜீரணம் குணமாகும். பளி ஆகாது. மாங்கிஷ மாகாது, மருந்து தின்ற அன்றைக்கு உப்பு விடவும்.

கண்ணுக்கு மருந்து :-

வெள்ளைச் சாறணை வேர் கொண்டு வந்து பசுவின் பாலில் வேக வைத்து மணத்தக்காளிப் பழம் ரசம் விட்டு கண்ணிலிட புரைமூடினது சிகப்பு கண் நீர் வடிகிறது இது வெல்லாந் தீரும். அம்மான் பச்சரிசி சாத்திரைத்து போட்டால் புரை அந்த போகும். நல்லாக் கண் தெரியும்.

கிருமி வகைக்கு இது கண்டது :-.

பெரு மரத்துப் பட்டை நாலு பலம் கொண்டு வந்து துவைத்து இரண்டு வள்ள தண்ணீர் விட்டு ஒரு படியாக சுண்டக் காய்ச்சி வடித்துக் கொண்டு அதில் (கர்க்கம்) சுக்கு, திப்பிலி மிளகு, அதிவிடையம், சாதிக்காய், வசுவாசி, இரும்பு இலவம் பிசின் விளாம் பிசின் வேம்பம் பிசின் கருவேலம் பிசின் இது வகைக்கு மூன்று களஞ்சு கூட்டி அந்த ஒரு படி கஷாயமும் அரைப்படியாக காய்ச்சி இந்த மருந்தெல்லாம் பொடி செய்து தாளி களிப் பதமாக வெந்த பிறகு களிப் போலே கிண்டி இறக்கிச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு தயிரில் தேனிலிடவும். சகல கிருமியுந் தீரும். புளி விடவும்.

மகோதரத்திற்கு மருந்து :-

நல்லெண்ணெ உரி, ஆமணக்கு எண்ணை உரி, களச்சியிலைச் சாறு உரி, நொச்சியிலைச் சாறு உரி, பிறமிச் சாறு உரி, ஆடாதோடைச் சாறு உரி, மப்பை மேனிச் சாறு உரி, எருமைக் கத்தாழங் கொடிச் சாறு உரி, வேளைச் சாறு உரி, கள்ளிப் பாலு உரி, தை வேளை வேர் அரைத்து விளாங்காயளவு வேலிப் பருத்தி சேர் அரைத்து விளாங்காயளவு கொடி வேலி வேர் அரைத்து விளாங்காயளவு வெங்காரம் சுக்கு, திப்பிலி, பெருங்காயம் இந்துப்பு இவை ஒவ்வொன்று பலம்.உ, வெள்ளுள்ளி ஆழாக்கு இவை நன்றாய் அரைத்து இது ஒன்றித்து மெழுகு பதத்தில் வடித்து ஆற வைத்து ஒரு கொட்டைப் பாக்களவு கறண்டி போட்டுக் கொண்டு அதில் மோந்து வாத்துக் கொள்ளவும். நன்றாய் விரோசித்தால் கஞ்சியாவது மோருஞ் சோறும் உண்ணவும்.

வேப்பெண்ணை உழக்கு, காஞ்சிறங் கொட்டை பகினஞ்சு விரை அரைத்துக் கரைத்து வெந்து மெழுகு பதத்தில் வடித்தால் வேப்பெண்ணை நாத்தமில்லை அந்த எண்ணை உடம்புக்கு தேய்த்து படிச்சு சாயங்காலத்துக்கு தண்ணீர் காய்ச்சி உடம்புக்கு வார்க்கவும்.

கிறந்தி சூலைக்கு சகல வாய்வி உஷ்ணத்தில் பிறந்த மேக சூலைக்கு எண்ணெய் :-

சங்கங் குப்பி வேர் பலம்.க, வெள்ளறுகு வேர் பலம்.க, செங்கத்தாரிப் பட்டை பலம்.க, சங்க வேர் பலம்.க, சித்திர மூலம் பலம்.ப, சிறுமுன்னை வேர் பலம்.க; கொடியு காயு வேர் பலம்.க, நிலப்பூசு சேர் பலம்.க, கண்டங் கத்திரி சமூலம் பலம்.க இனிக் கடைச் சரக்கு சுக்கு பலம்.க, மிளகு பலம்.க; திப்பிலி மூலம் பலம்.க, உள்ளி பலம்.க, திப்பிலி விருகன்.க, கோஷ்டம் விருகன்.க, நல்லெண்ணை படிஉ, லவுங்கம்விருகன்.க; கருஞ்சீரகம் விருகன்.ங, விலாமிச்சம் வேர் விருகன்., அதிமதுரம் விருகன். மலை மஞ்சி சாறு படி.க., யெண்ணையும் மஞ்சிச் சாறும் காந்த குழம்பாக வறச்சே கடைச் சரக்கு வனமூலி க. சூரணங் கூடப் போட்டு வெந்து மெழுகு பதத்தில் நல்ல வெல்லம் நாலு வெல்லம் போட்டு காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு உள்ளங் கை கொண்டது கொள்ள இதுக்கு தீரும் வியாதி கிறந்தி, மேகம், சூலை வாய்வு,

கிறந்தி குலைக்கு, கடுப்புக்கு :-

ரசம் பலம்.உ இதை ஒரு புதுக் கலசத்திலிட்டு அதில் பத்து எலுமிச்சம் பழம் பிழிந்து அந்த கோதுநிறைய உள்ளே போட்டு அரைக் கழிஞ்சி காரியந் தட்டிப் போட்டு குப்பை மேனியிலை, நை வேளையிலை பொடுதலை வெலிப் பருத்தி யிலை, முட்டித் தக்காளியிலை சித்தகத்தி யிலை ஆற வகையிலையும் ஒவ்வொன்று கொட்டைப் பாக்களவு அரைத்துப் போட்டு நன்றாய்க் காய்ச்சி ரச மெல்லாம் வற்றி நன்றாய்க் களிப் போலே கிண்டி வெந்து இறக்கி ஒன்றாய்த் திரட்டி வைத்துக் கொண்டு புளிய சிராய் தணலிலே புகை போடவும். புகைத்து மூன்று நாளு மருப்பிலே யிருந்து கொண்டு யேளா நாள் நாலைந்து குடந் தண்ணீர் விட்டு ஒன்பதா நாள் பசுவின் தயிர் விட்டு முழுகவும். பதினொரும் நாள் பசுவின் தயிர் விட்டு முழுகவும். பதிமூன்றும் நாள் பசுவின் தயிர்விட்டு முழுகவும். பதி மூன்றும் நாள் நல்லெண்ணெயிட்டு முழுகி அன்று முதல் அந்தி விடிந்து தண்ணீரிலிருக்கவும். இது நல்ல புகை.

அரையாப்புக்கு பத்து :-

குப்பைக் கீரை வேரு நறுக்கி சட்டியிலிட்டு கறிக்கி இடித்துக் கொண்டு சுண்ணாம்பு கல்லுக் கொண்டு உவரு தண்ணீரில் கலக்கி தெளிய வைத்து அந்தத் தண்ணீர் விட்டு நன்றாய் அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து அந்தக் கறியும் சுண்ணாம்புடன கூட்டி உவரு தண்ணீர் விட்டு அரைத்து அரையாப்பு வீக்கத்தில் பூசி உலர விட்டு கீற்றாக் கீற்றுக வெடிச்சால் அதின் பேரில் உவரு தண்ணீர் விட்டு இளக்கி பூசி விடவும். வியாதி முறிந்தால் முத்து தண்ணீர் போலே தண்ணீர் வடியும். வியாதி கரைந்து மருந்து பூசின விடம் புண்ணானால் எண்ணைச் சீலை போட்டு சுத்திப் போடவும்.

எட்டு வகை கிறுனி ஆறு வகை மூலத்துக்கு மருந்து :-

அபினி பலம்.வ, சாதிக்காய்.உ, திப்பிலி காசிடை.க, கடுக்ரோகனி காசிடை.க, இந்துப்புக் காசிடை.க, பெருங்காயம் காசிடை.உ, சீருக் காரம் காசிடை.உ, ஓமம் காசிடை.ரு, வாய் விளங்கம் காசிடை.ரு உள்ளி காசிடை.க, மிளகு காசிடை.ரு, சுக்குத் தேறு.., சித்திரமூலம் காசிடை.க, பாவட்டை வேர் காசிடை.க, செம்பிறண்டே வேர் காசிடை.எ, முருங்கைத் தழை காசிடை.ஙு, பனை வெல்லம் காசிடை.க, குப்பைக் கிழங்கு காசிடை.க; பெரும் பிறண்டை வேர் காசிடை.க, புங்கம் வேர் காசிடை.க, இந்த மருந்தெல்லாம் பொடி பண்ணி அரைப் படி பசுவின் நெய்யில் போட்டு வேகிற மருந்தில் கருங்கோழியைக் கொன்று வந்து அதின் நெஞ்சு அந்த வேகிற நெய்யில் போட்டு வெந்து இறக்கி வைத்துக் கொண்டு அந்தியின் பொழுது வேடு வேரும் இரண்டு நேரமும் வெரு கடிப் பிரமாணம் கொள்ளவும். மூலக் கிறுனி உடனே கழிந்து விழுந்து போம். இதுக்குப் பத்தியம் மூன்று நாளைக்கு ஒரு பொழுது. உப்பு, புளி விடவும். நாலா நாள் கூட்டிக் கொள்ளவும். புளி மாத்திரம் மருந்து தின்னளவு விட்டு விடவும்.

மாறு சுரத்துக்கு குசுறுத கிறுதம் :-

சிறு தேக்கு, முத்தக் காசு பற்படாகம் சிறுகாஞ் சொறி வேர், முக்கூலம் நில வேம்பு கோஷ்டம், திப்பிலி, சிறுவழுதலை வேர், சீந்தித் தண்டு இவை கூட்டி கசாய மிட்டுக் கொடுக்க வாத சுரம், சன்னி சுரம், ஒன்றை விட்டு ஒரு நாள் வர சுரம் இரண்டு நாளைக்கொருக்கால் வர சுரம், மூன்று நாள் மாறல் நாலா மாறல் இவை வெல்லாந் தீரும்.

இதுவும் :- கிசாமூலம், சிறுதேக்கு, முத்தக் காசு, பற்படாகம், கோஷ்டம், கற்க டாக சிங்கி, கடுக்காய், திப்பிலி, குமிழம், முன்னை பாதிரி ஆதலை, சித்தா முட்டி வேர், பெரு முட்டி வேர், சிறுவழுதிலை, நெருஞ்சி, கண்டங்கத்திரி இலை கூட்டி கசாயமிட்டுக் கொடுக்க. விஷ சுரம், சன்னி வாத சுரம், பழைய சுரம் குளிர் அக்கினி மந்தம் இவை யெல்லாம் போகுமென்ற வாறு.

பல்லுக்கு பணியார வகை :-

பல்வலுக்கு பணியார வகை:-

குறுவை அரிசி இடித்த இருவாட்சியிலை பறித்து வந்து துவைத்து சாறு பிழிந்து அந்த மாவில் விட்டுப் பிசைந்து நாலு தேங்காய் கொண்டு வந்து திருவிப் பால் பிழிஞ்சி அதைக் காய்ச்சி நெய் பண்ணி அந்த நெய்யில் பணியாரம் சுட்டு சுடச்சுடத் தின்னவும். பல்லுறக்கு கடுப்பு நிற்கும். மருக்காரம் பட்டை சுக்கு, மருதம் பட்டைவெள்வேலம் பட்டை எருக்கிலம் பட்டை அவை யெல்லாம் நருக்கி வெள்ளைத் தண்ணீரில் போட்டு எட்டிலொரு பங்காய்க் காய்ச்சி நாலு நாள் கொப்பளிக்க பல் அசைவு நிற்கும்.

கர்சுக் கட்டி சுத்தம் தருசு களிப்பாக்கு, வெள்வேலம் பட்டை தண்ணீர் வார்த்து அரைத்து உருண்டை செய்து பாக்குடன் தின்னவும் அசைவு நிற்கும்.

சருவாங்கி வாதத்துக்கு:-

கரு எள்ளு ஒரு பிடி அதுக்குத் தக்கின பனைவெல்லம் கூடப் போட்டு இடித்து ஒரு பிடி மஞ்சல் தூளை கூடப் போட்டு இடித்து காலமே விளாங்காயளவு தின்னவும். இப்படி மூன்று நாள் தின்னவும். உப்பு, புளி தவிர்க்கவும். இது கை கண்டது.

சுகவிரேசனம்:-

சிவதை வேர் பட்டை பலம்.க, கடுகுரோகணி பலம்.க, இந்துப்பு பலம்.க, சுக்கு கடுக்காய் விரை போக்கி அது பலம்.க, சுக்கு பலம்.க, வெங்காரம் பலம்.க, தானிக் காய் பலம்.க, நெல்லி வத்தல் பலம்.க, மிளகு பலம்.க இவை யெல்லாங் கூட்டி இள வறையாக வறுத்துக் கொண்டு நேர்வாளம் பலம்.க, முந்தின சிவதை வேர் சுத்தி பண்ணிக் கொண்டு இது வெல்லாங் கூட்டி ஒரு சாமம் அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு கொடுக்கிற போது நல்ல வெல்லம் ஒரு காசிடை குளிகையுங் கூட்டி கொடுக்கவும். வயிறு கழியும். பொறுக்கப்படாதென்றால் மோருஞ் சோறும் உண்ணவும்.

காய்ச்சலுக்கு சஞ்சீவி குளிகை:-

சாதிலிங்கம் களிஞ்சி கெவுரி பாசானம் களிஞ்சி நெல்லிக்காய்க் கந்தி கெந்தகம் களிஞ்சி வெங்காரங் களிஞ்சி திப்பிலி களிஞ்சி, மிளகு களிஞ்சி, கடுகு களிஞ்சி தக்கோலங் களிஞ்சி, பச்சை நாவி களிஞ்சி, பச்சை நாவி சுத்தி பண்ணும் வகை:- பசுவின் சாணத்திலொரு சுத்தி நாவல் பட்டையிலொரு சுத்தி. பசுவின் பாலிலொரு சுத்தி. நேர்வாளம் எருமை சாணத்திலொரு சுத்தி. சுண்ணாம்பு தண்ணீரிலொரு சுத்தி. நரபி ஆட்டுக் கோமியத்திலொரு சுத்தி. இவை யெல்லாம் நாலாக நிறுத்த நேர்வாளம் மூன்று நிறை போட்டு இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து அஞ்சு சாமமரைத்து குன்றுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி வைத்துக் கொண்டு இதுக்கு அநுபானம் இந்தக் குளிகை வெந்நீரில் கொள்ள உதிர காமாலை போம். எருக்கம் பழுப்புச் சாத்தில் கொள்ள.

சுக்கு, மிளகு, திப்பிலியும் வறுத்து குளிகையுடன் கூட்டி உள்ளியுங் கூட்டி வெந்நீர் தண்ணீரில் கொள்ள பதிமூன்று வகைக் காமாலை சன்னியும் போம்.

உள்ளி, மிளகு, கழல் பருப்பு நொச்சி வேர் சாறணை வேர் கொடி வேலி வேர் இவை சூரணம் பண்ணி குளிகையிற் கூட்டி விளக்கெண்ணையில் கொள்ள குன்மம், அஷ்ட கலசை வாய்வு, குன்மம், வாந்தி பிருந்தி அஜீரணம் இவை யெல்லாந் தீரும்.

சாம்பல் பூசனிச் சாத்தில் கண்டு பறங்கி அதிமதுரம் இவை கூட்டிக் குளிகையுங் கூட்டி நாக்கில் தடவ தோஷ ரோகம் வாய்வசனை தீரும். இந்தக்குளிகை நெருஞ்சி வேர், வெள்ளைப் புன்னைக்கின் வேர், தேத்தாங் கொட்டை சிறுகீரை வேர், தேனி லரைத்து கொள்ள பிறமிய மூத்திரக் குச்சி, நாவிச் சூலை, அதிமூத்திரம் இவை யெல்லாம் போம். இந்தக்குளிகை ஆவாரை சமூலமுங் கொண்டு வந்து சர்க்கரை கூட்டிக் கொள்ள வெகு மூத்திரம் போம். இந்தக்குளிகை குடைச் சீகைப் பட்டை அலவம் பிசின், ஓமம், சுக்கு, விளாம் பிசின் இவைஅரைத்து தேனில் கொள்ள கிருமி போம். இந்தக்குளிகை அளிஞ்சி வேர் காடியிலரைத்து தலைக்குத் தேய்த்து உடம்பெல்லாந் தடவ ஊறிட சருவாங்க சூலை போம். இந்தக் குளிகை மிளகு, திப்பிலி, சுக்கு வறுத்துப் பொடித்த வெந்நீரில் கொள்ள சேற்றும சுரம் போம். இப்படி மூன்று நாள்க் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் பச்சைப் பயறு அவரை கொள்ளு இவை ஒரு பிடி வேகப் போட்டு இந்த தண்ணீர் இறுத்துக் கொண்டு மிளகு உள்ளி யிட்டுக் காய்ச்சி உண்ணவும். இந்தக் குளிகை வெந்

தண்ணியில் கொள்ள அஜீரணம் போம். இந்தக் குளிகை நல்லெண்ணெயி லெரித்து இட சுர்ண ரோகம் போம். இந்தக்குளிகை கொடியத்தில் நசியம் பண்ண சுரம் போம். இந்தக்குளிகை செவ்வந்திப் புஷ்பம் தேனில் கொள்ள முசுவு நோக்காடு பெரும்பாடு கெர்ப்ப சூலை போம். இந்தக் குளிகை வசம்புக் கிறமணி பழுபாகல் ஜனங் கிழங்கு எலுமிச்சம் பழச் சாற்றில் பூச விஷகம், கோஷ்டட்டம், கொதி கண்டமாலை தீரும். இந்தக் குளிகை கமுகுரோகணி வாய் விளங்கம் சிறகாஞ்சொறி வேர் இவை யெல்லாம் அரைத்து நல்லெண்ணெ யிலெரித்து தலைக்குத் தேய்த்து முழுக் மண்டை சன்னி தீரும். சூலை தீரும். இக்குளிகை இலட் பைக் கொட்டை சமுத்திரப் பழம், எலுமிச்சம் பழச் சாற்றில் கடவ கண்டமாலை எரிகாந்தி தீரும். கொடைவாழை தீரும். இக்குளிகை பெரும் எலுமிச்சம் பழச் சாற்றில் நசியம் பண்ண ஒருத்தலை நோவு தீரும். இக்குளிகை*இவரு இந்த படிக்கு வியாதி அறிந்து கொடுக்கலாம். எந்த வியாதியுந் தீரும்.

<u>இருமலுக்கு மருந்து</u> :-

மெருகன் கிழங்கு கொண்டு வந்து சிறுகச் சிறுகச் சீவி நிழலுக்காக உலர்த்தி எலுமிச்சங்காய் மருகாசி எடுத்து கருங்குறுவை அரிசியும் எலுமிச்சம் பழச் சாரம் விட்டரைத்துப் பொடி பண்ணி அந்த ரொட்டியே தேனில் கலந்து இஞ்சி கடித்துக் கொண்டு தின்னத் தீரும். இருமல் நிற்கும்.

<u>கிறந்திக்கு</u> :-

முருங்கைப் பிஞ்சு அரைத்து வெல்லங் கூட்டிப் பசுவின் பாலில் குடிக்கவும். கிறந்தி பிட்டு கட்டிக் கொண்டு உடம்பெல்லாம் ஊறும். அதுக்குச் சங்கங் குப்பி பாக்களவு அரைத்து இள வென்னீரில் குடிக்கத் தீரும். குடல் வாதத்தின் குணம் :-

<u>குடல் வாதத்தின் குணம்</u> :-

வயிறு ஊளியும். வயிறு நெர்வெடுக்கும். வயிறு எரியும். வயிறு இரையும். வாய்வு பறியும். வயிறு உப்புக் கொள்ளும். பசி எடாது. கால் கை அசந்து போகும். இதுக்கு மருந்து :- குடல் வாதப் பட்டை, முள்ளம் பன்றி கரிசல் உள்ளி மிளகு, கடுகு, சுக்கு, இது வெல்லாம் அரைத்து வென்னீரில் மூன்று நாள் குடிக்கவும். விப்புருதிக்கு கட்டு விப்புருதி, ஓடு விப்புருதி, வயிற்று விப்புருதி, சகல வியாதிக்கும் :-

அத்திப் பாலொரு சேரையம் சுத்தக் கருப்பாடு வெள்ளாட்டுப் பால் ஒரு படி கலந்து கொடுக்கவும் ஒன்பது நாள் கொடுக்கவும். அத்திப் பால் குடிக்கச்சே பாலேடே ஒக்க விட்டுக் கலந்து கொடுக்கவும் பத்தியம் புளி விடவும்.

<u>சுத்தி வகை</u> :-

நேர்வாளம் சுத்தி எருமைச் சாணியில் வேக வைத்துச் சாய்க்கவும். மூன்று தரம் சாய்க்கவும். பிறகு பாலில் இந்தப்படி மூன்று தரம் வேக வைக்கவும். பிறகு முளை வாங்கின பிறகு பச்சைப் பாலில் கழுவி பிறகு மாத்திரைகளுக்குப் போட்டரைக்கவும்.

நேர்வாளம் உடைத்து மேலோடு வாங்கி உள் முளையும் வாங்கிப் போட்டு பசுவின் ச சாணியில் பதிந்து மூன்று திறமாக வெளித்து பிறகு கழுவி ஒரு சேரைக்கு அழாக்கு எலுமிச்சம் பழச் சாறு விட்டு வற்ற வற்ற சுவற வறுத்தால் சுத்தியாம்.

<u>இருபது வகை தோஷத்துக்கு</u> :-

ரசம், பொன்னரி தாரம், மனோசிலை நாபி, கெந்தகம், நேர்வாளம் இது வெல்லாம் சுத்தி பண்ணி வகை ஒன்றுக்கு ஒரு விராகனெடையும், வீமதுரம் சாதிக்காய், இந்துப்பு நொச்சி வேர்ப் பட்டை, அமுக்கிரா வேர்ப் பட்டை, சங்கம் வேர்ப் பட்டை கொடிவேலி வேர் புத்திர மணி கோரைக்கிழங்கு, வேப்பம் பிசின், மஞ்சள், சகாதேவி வேர், வசம்பு இது வகை ஒன்றுக்கு ஒரு விராகனெடை நிறுத்துக் கொண்டு ஒளிக் கல்லிட்டு வெள்ளாட்டுக் கோமியம் விட்டரைத்து எட்டுச் சாமம் அரைத்து மிளகு பிரமாணம் குளிகை பண்ணி நிழலுணத்தியாக உலர்த்தி வைத்துக் கொண்டு இதுக்கு அனுபானம் அக்கினி சுரத்துக்கு பசுவின் மோர் சர்க்கரை கிரம்பு, நல்ல சீரகம் கூட்டிக் கொடுக்

கொடுக்கவும் அக்கினி சுரம் நிற்கும்.

அதிசாரத்துக்கு எலுமிச்சம் பழச் சாறு, சுக்கு, தயிரில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

ஸ்ரீ கோஷ்டத்துக்கு வில்வக் காய் வன் அதிமதுரம் ருத்திருச்சம் சந்தனம் முலைப் பாலில் ஒரு உருண்டை இடவும். நாக்கில் கடலி வெள்வீரில் கொப்பளிக்கப் போடவும். இந்தப் படி மூன்று நாள் செய்யவும். சகல தோஷமும் போம்.

தும்பல் இல்லாது இருக்கிறதற்கு:- சாம்பல் பசளிக்காய்ச் சாற்றில் ருத்திருச்சமும் குளிகையும் உரைத்துக் கொடுக்கவும். புளி தவிர்க்கவும். வெந்நீருஞ் சோறு உண்ணவுடம. சுக்கு, திப்பிலி, மிளகு வறுத்துப் பொடி பண்ணி குளிகையுடன் கொள்ள காமாலை விஷ பாதகம் தீரும். எருக்கம் பூச் சாற்றில் சுக்கு, மிளகு, ஓமம், உள்ளிக் கசாயத்தில் இக் குளிகை கொள்ள பதிமூன்று வகைக் காமாலையும் பதிமூன்று வகைச் சன்னியும் போம். உள்ளி, மிளகு, காமப் பருப்பு, நொச்சி வேர், சாறணை வேர், கொடிவேலி வேர், கானிக் காய், சமனிறை சூரணம் பண்ணி அவுரிச் சாற்றில் புளிச்ச மோருடன் இக்குளிகையும் கூட்டிக் கொள்ள மகோதரம் காமாலை தீரும். இந்தக் குளிகை விளக்கெண்ணெயில் கொள்ள குன்மம் அஷ்ட கஷை அஜீரணம் இவை எல்லாந் தீரும்.

எலும்புருக்கிக்கு மருந்து:-

எருமை சாணி போடுகிற போது தரையில் விழாமல் பிடித்து பிழிந்து நல்ல வெல்லமும் வெண்ணெயுங் கலந்து கொடுக்கவும். எலும்புருக்கி முதலானது பத்து நாள் குடிக்கத் தீரும். உஷ்ணமுந் தீரும்.

வாதமென்னப் பட்டதுக்கு எல்லா மருந்து:-

பெரும் பச்சையான சதிரக் கள்ளி மேலாகுத்தல் ஈஞ்சு மரத்து மேலாகுதல் படர்ந்ததைக் கொண்டு வந்து இடித்து செங்கல் பொளித்து அதின் மேல் அந்தக் கல்லை வெப்பத் சிறுய் போட்டு சுட்டு கல் நெருப்பாய் வெந்த தனைக் கள்ளி அந்தச் சாம்பலிருக்க அந்த இடித்த மருந்தைப் பிழிந்து அதின் கால் மிதிக்க உச்சந் தலை தாக்க மிதிக்க வாத மென்னப் பட்டதெல்லாந் தீரும். மூன்று நாள் மிதிக்கவும். அந்த வெந்த சாரமுள்ளாங் கர்லோடே இறங்கத் தடவவும்.

உள்சுக்கு மருந்து:-

விழுதித் தழை ஒரு பிடி கொளிஞ்சித் தழை ஒரு பிடி தழுதழை ஒரு பிடி இந்த மூன்று தழையும் இடித்துச் சாறு பிழிந்து கொண்டு அரைப்படி நல்லெண்ணெயுங் கலந்து உடம்புக்கு சுடு தண்ணீர் வார்த்துக் கொண்டு பிறகு இந்த ரசங் குடிக்கவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும். இதுக்குப் பத்தியம் வெந்நீருஞ் சோறும். நச்சுப்புக் கூட்டிக் கொள்ளவும்.

பித்த சுரத்துக்கு அறிகுறம்:-

உடம் பெரிக்கும். நாவறண்டாமல் காக்கும். பித்தப் பிடிக்கும். விடாமல் காயும். இதுக்கு மருந்து பிறமியிலையும் கடுக்காயும் ருவடுப்பில் வேக வைத்து சாறு பிழிந்துக் கொண்டு விளக்கெண்ணை விட்டுச் சாறித்துக் கொடுக்கவும். வயிறு விடும். மோருஞ் சோறு குடிக்கவும். மறுநாள் காச்சல் நின்றுல் சரியில்லா விட்டால் அவபான கசாயம் போட்டுக் குடிக்கவும்.

குன்மம் ஐய, அங்கிமை எய, சுவாசம் ய, ஈளை இருமல் சுரத்து குளிகை:-

ரசம், கெந்தகம், வெண்காரம், பொன்னரிதாரம், மனோசிலை, தாம்பிர பற்பம், திப்பிலி, மிளகு, லிங்கம், நொச்சி, கண்டங் கத்திரி, ஆடாதோடையிலை, பெருங் குறிஞ்சா சாற்றிலரைத்து பயறளவு உருண்டை செய்து இதுக்கு அநுபானம் தேன் நெய் சர்க்கரை இது களிலே கொள்ளவும். தீரும் வியாதி ஐய அங்கினம், சுவாசம் ய, யீளையிருமல் சுரம், குன்மம் இருபத் மிருக்க சுரவ வகை முய்யமோறிட மில்லை யென்று ஓடிப் போகும் கண்டிரே.

சுரத்துக்கு:-

முந்திரிப் பழம் ஏலம், அதிமதுரம், கடுகுரோகணி சந்தனம், சித்திரமூல வேர்,

நன்னாரி வேர்., சாந்திர பேதி, திப்பிலி, தேவதாரம் இவை ஒவ்வொன்றுக்கு விரகனெடை முலைப்பால் கருப்பஞ் சாமம் புசினிப் பூச் சாறு இந்தச் சாத்திலரைத்து பாவட்டங் காய் மருவாகி உருண்டை பண்ணிக் கொண்டு அநுபானம் பித்த சுரத்துக்கு முலைப் பாலிலிடவு ம். தாப சுரத்துக்கு இளநீர் கொண்டு வந்த காய்ச்சி ஒரு உருண்டை உரைத்துக் கொடு க்கவும். சன்னி வாத சுரத்துக்கு முலைப் பாலிலிடவும். குன்மம் எட்டு

குன்மம் எட்டு வகைக்கு இருமலுக்கு கண்டங்கத்திரிச் சூரணம் :-

கண்டங் கத்திரி சமூலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கற்கடா சிங்கி, திரிபாலை சிறு தேக்கு, செங்களநீர், கோஷ்டம், சடாமாஞ்சி இந்தப்பு இதுவெல்லாம் ஒரு சமமாய்க் கூட்டி சூரணம் பண்ணி வெரு கடிப் பிரமாணம் தேனில் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி வாய் நீர்க் கொதுக்குதல், விக்கம், சுவாசம், பித்த இருமல் அருவருப்பு, மூக்கு நீர் விழுதல்சசியந் தீரும்.

பிறதாக அக்கினி மராரன் :-

வாலரசம் /1 வசருபி, லிங்கம், கெந்தகம் சமஞ்க நிறுத்துக் கொண்டு பற்படாக ரசத்தில் மத்தித்து மூன்று சாமம் சில்லிட்டு கவசஞ் செய்து பூமியிலே வைத்துப் புடம் போடவும். ஒன்று மணிப் பிரமாணங் குளிகை பண்ணி வைத்துக் கொண்டு சன்னிக்கு எலுமிச்சம் பழச் சாத்திலாவது இஞ்சி சாத்திலாவது ஒரு குளிகை கொடுக்கவும். எந்த வியாதியோ அந்த வியாதி எந்த வியாதியாகுதுஞ் சரி கொடுக்கலாம்.

கிறந்தி சூலை உஷ்ணத்தில் பிறந்த மேக வெட்டை சூலை கட்டுக்கு :-

பறங்கிப் பட்டைச் சூரணம் பறங்கிப் பட்டை சேர்.உ, சுக்கு விரகன்.ய திப்பிலி விரகன்.ய இந்த அஞ்சு மருந்து உலர்த்தி இடித்து சீலை வடிக் கொண்டு குப்பை மேனிச் சாத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல் கொண்ட அளவு ஒரு மண்டலந் தின்னவும். இதுக்குத் தீரும் வியாதி கிறந்தி சூலை, உஷ்ணத்தில் பிறந்த மேக வெட்டை, சூலை வாய்வு, சூலைக் கட்டு ரணமான குறு; கை கால் முடங்கல் இவை யெல்லாந் தீரும். இது கை கண்டது. நல்ல பிரயோகம். இதுக்கு இச்சா பத்தியம்.

சகல சுரப்பாலுக்கு :-

அமுக்கிராஞ் சாறு படி.௧, தவசி முருங்கைச் சாறு படி.௧; பீசக் கொட்டைச் சாறு.படி.௧., புறவு தந்தூலச் சாறு படி.௧, இந்த நாலு சாறு ஒக்க விட்டு குழம்பு பதமாய் வருகிற தருவாயில் பறங்கிப் பட்டை பலம்.௧ பிரப்பங் கிழங்கு பலம்.௧ இந்த இரண்டு மருந்து இடித்து வஸ்திர காயம் பண்ணி அந்தக் குழம்பில் போட்டுக் கிண்டிக் கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஒரு களச்சிக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை சாப்பிடவும். இப்படி பதினைந்து நாள் அந்த உருண்டை முடிவளவும் சாப்பிடவும். ஏழாம் நாள் மாத்திரம் உப்பு, புளி விடவும். எட்டாம் நாள் உப்பு வறுத்து போட்டுக் கொள்ளவும். புளியாகாது.

ரத்த மூலத்துக்கு :-

அபினி, அதிமதுரம், அடுக்கு ஊமத்தை விரை இது சமன் கூட்டி சடைக் கஞ்சா சாறு விட்டரைத்து ஒன்று மணி பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி அந்தி விடிந்தா எருமைத் தயிரில் கொடுக்கவும். குங்கிலியப் பொடியும் அதில் கிடவந் தூளை கேசிக்காய் அளவு அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும் ரத்தம் விழுகிறது நிற்கும். இது கை கண்டது.

மண்டை வாதவாயுக்கு :-

மண்டை மாதவான்முகம் தலை யெங்கும் ஒடுப் போலே புள்ளி சீய்ப் பிடிக்கும். உடம்பிலே கழுத்து முகம் மெங்கும் வீங்கும். சங்கம் பழம் போலே கொப்பளித்து நீர்த் ததும்பும். இதுக்கு மருந்து பனைங் கோவைக் கிழங்கு பிடுங்கி வந்து அரைத்து அதில் விளக்கெண்ணெ இரண்டு படி விட்டு மிளகு பலம்.வ, வசம்பு பலம்.வ, வெள்ளுள்ளி பலம்.வ

இந்த மூன்று வகையும் நன்று அரைத்து கூடப் போட்டுக் குளப்பி வேக விட்டு வெள்ளை நுரை அடங்க விட்டு இறக்கி வைத்துக் கொண்டு கோழி இறகு போட்டுத் தடவவும். புளி விடவும். கிரந்திப் பண்டமாகாது.

<u>அசுவ கெந்தி சூரணம்</u>:-

அமுக்கிறாங் கிழங்கு வெட்டி வந்து சயிமாக் கண்டங் கண்டமாக நறுக்கி நிழலுலர்த்திப் பின்பு வெள்ளாட்டுப் பாலில் அவித்து நிழலுலர்த்தி இடித்து மாவாக்கி வஸ்திர காயம் பண்ணி உரிய பொடிக்கு உழக்கு வங்காளச் சீனி கூட்டி சீனி கிடையாதிருந்தால் வட்டுச் சர்க்கரை பொடி பண்ணி இந்த வீதங் கூட்டி இந்தப் பொடி ஒன்றிக்க விரவிப் பின்பு பசுவின் நெய் தேனும் சரி கூட்டி பொடிக்குத் தக்கது விட்டு சுவறிப் பிசைந்து கலசத்தில் வைத்துக் கொண்டு விடிஞ்சியும் அந்தியும் இந்த இரண்டு நேரமுஞ் சாப்பாட்டுக்கு முன்னே ஒரு கொட்டைப் பாக்களவி தின்னவும். புளி விடவும்.

<u>பதின்மூன்று வகை சன்னிக்கு மருந்து</u>:-

சீதமுங்க மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

வெதுப்பும். வேர்வையு முண்டாம். பலம் மறைந்திருக்கும். எப்போதும் நித்திரை யுண்டாம். கண் குளிர்ந்திருக்கும். உச்சி தளர்ந்திருக்கும். தாகமில்லை.

<u>இந்த குணத்துக்கு எண்ணெய்</u>:-

புன்னை எண்ணெய், குருந்தெண்ணை, வேப்பெண்ணை, அவுரி வேர், அரத்தை வாய் விளங்கம், விடத் தேறம் வேர் குத்துக் காச்சம் பட்டை அளிஞ்சி வேர், மர மஞ்சள் நாட்டு மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், கிரும்பு இது வெல்லாந் தண்ணீரில் ஒக்க அரைத்து எண்ணெயில் கலந்து வெந்து மெழுகு பதத்தில் வடித்து மேலுக்கு லேபனம் பண்ணவும். பல்விடவும் ஐம்பது நாளிகையில் நிற்கும். தாமரைப்புக் கடுகு மேலே புகைக்கவும். போகும்.

<u>அபினியாக மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்</u>:-

உடம்பு காயும். ஒரு நாசியை அடைக்கும். ஒரு நாசியைத் திறக்கும். உயிர் தலை யசைந்து போம். ஒன்பது நாள்க் கொண்டு இருபத்துநாலு நாள்ச் செல்லும்.

இதுக்கு மருந்து:-

ஆய்வேர், எருக்கம் வேர், பாதாள மூலி வேர், நாறத்த வேர், முருங்கையிலை தேவாங்கு சதை வசம்பு உள்ளி கம்பிப் பிசின், பொன் மெழுகு இவை யெல்லாந் தண்ணீர் வார்த்தரைத்து நல்லெண்ணையில் கலந்து வெந்து மெழுகு பதத்தில் வடித்து லேபனம் பண்ணவும்.

<u>புத்திர நேத்திர மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்</u>:-

வாய்நீர் வழு வழுவென்று வாய் நாறும். நாக்கு வெளுத்திருக்கும். சலம் மலம் விடாது. உடம்பு பதைக்கும்.

இதுக்கு மருந்து:.

வேலாம் பட்டை உள்ளி வசம்பு தேவதாரம் இந்துப்பு வெள்ளீய்யம் படிக்காரம், மரமஞ்சள் இது வெல்லாம் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து வெந்து வடித்து லேபனம் பண்ணவும். பன்னிரெண்டு நாளையில் குணமாம். முருங்கையிலை காய், மிளகு கூட்டவும்.

<u>நேத்திர மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்</u>:-

மெத்த கஞ்சி யெடுக்கும். உடம்பு இளைத்து இருக்கும். வக்கிரமாய் நடக்கும். நரம்பெல்லாம் நோகும். சத்தே சீதமாயிருக்கும்.

<u>இதுக்கு மருந்து</u>:-

தேத்தான் இலையை தவித்து பிழிந்து நல்லெண்ணை நாளி அறத்தை நாளி சதகுப்பை மஞ்சள் இது வெல்லாம் அரைத்து எண்ணெயில் போட்டு வெந்து வடித்து லேபனம் பண்ணவும். பத்தியம் வாழைக்காய், கத்திரிக்காய், புளி விடாமல் கறி பண்ணிக் கொள்ளவும்.

<u>கண்ட காளி என்னுஞ் சன்னி செய்யுங் குணம்</u>:-

கண்ட காளி என்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

பின்குந்திகள் வீங்கும். குரும் வயிறு விடும். புறங்கால் வீங்கும். திடுக்கென வரும் தாகமுண்டாம். உள்ளரை முளை கொள்ளும்.

இதற்கு மருந்து:-

கோழி முட்டைக் கருவாங்கி தைல மிறக்கி ஒரு காசிடை பெருங்காயம் அரிதாரம் ஒரு காசிடை அரைத்து தன்னிலொக்க நல்லெண்ணெயில் கலந்து யெரித்து வடித்து லேபனம் பண்ணவும். பத்தியம் கஞ்சு காய்ச்சிக் குடிக்கவும்.

அற்புத மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

இடது காது நொந்தால் வலது புறத்தில் வாய் கோணும். அரைமுளி கொள்ளும். மறுபாகம் அசையும். இது

இதற்கு மருந்து:-

சங்கங் குப்பி வேர், சதகுப்பை, மரமஞ்சள் வேர், இலுப்பை வேர், செவ்வள்ளிக் கொடி, காத்தொட்டி வேர், சித்திர மூலவேர், புங்கம் வேர், கழுக் கொட்டு ஆடாதோடை வேர் மகிழம் வேர் இது யெல்லாந் தன்னி லொக்கக் குட்டிக் கலந்து நல்லெண்ணெயாவது விளக்கெண்ணெயாவது எரித்து வடித்து லேபனம் பண்ணவும். பத்தியம் தேங்காய்ப் பாலும், சோறும் உண்ணவும்.

கெந்தகரோக மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

வார்த்தை இடுக்கும். காது கிண்ணென்று பெரு மூச்சிடும். கழுத்து நரம்புகள் விம்மும்.

இதற்கு மருந்து:-

காட்டுக் கருணைக் கிழங்கு, ஆலவிழுது, சாட்டறணை வேர், நல்ல சட்டம். நாக்கைப் பாம்பு, சதைப்பை, மரமஞ்சள் இது வெல்லாம் நல்லெண்ணெயில் கலந்து எரித்து உடம்புக்கு லேபனம் பண்ணவும். இது இருபது நாளிக்கையில் மரணம். உப்பு, புளி தவிர்க்கவும். பத்தியம் கீரைத் தண்டு கூட்டவும்.

உவத்திரியவான மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

மூச்சு மெத்தென நடக்கும். அடிக்கடி களைப்பு உண்டாகும். கஞ்சி இறங்காது. நீர் சிவந்து விடும். அடியில் வெள்ளை தோன்றும்.

இதற்கு மருந்து:-

வனாயிச்ச வேர், வெட்டி வேர், அரிஞ்சி வேர், ஆதண்ட வேர், சந்தனம் பலம். க, ஏலம் உள்ளி சுக்கு, வசம்பு இது வெல்லாம் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து வெந்து வடித்து பிறகு பிராகு பிரிபிட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். பொருக்கும்.

அக்கினிரோகனி என்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

மூச்சு அக்கினியாய் பிறக்கும். வயிறு எரியும். தாகமுண்டாம். இதற்கு மருந்து. செவ்விள நீர், செருக்கி பானையில் போட்டு நாளி தண்ணீர் விட்டு காய்ச்சி அந்த இளநீர் வெந்த பிறபு சட்டி காய வைத்து அந்தக் காயை வெட்டி சட்டியிரா த்தி சந்தனம் வளக்காய் மூன்றும் அரைத்து உள்ளுக்குங் கொடுத்து விடவும். அன்றைத்தானே பொருக்கும். அக்கு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். உப்பு, புளி விடவும்.

அப்பு வல நேத்திற மென்னுஞ் சன்னி செய்யுங் குணம்:-

வயித்தீட்டி சொருக்கிப் போலெங்கும் வீங்கும்.

இதற்கு மருந்து:- வெந்தியம் அரைத்துக் கொடுக்கவும் மூன்று நாள் கொழுக்கவும். இது வெந்நீரில் கொடுக்கவும். பிறகு மருந்து சிக்கரத்தை சிறு தேக்கு பெருங் கும்பை, நிலவேம்பு கற்கடா சிங்கி அரைத்து நல்லெண்ணெயில் கலந்து வடித்து உடம்புக்கு லேபனம் பண்ணவும். பத்தியம் தேங்காய்ப் பால் வெள்ளீர் கூட்டவும்.

சுழலக்கிரு சன்னியின் குணம்:-

தலை நோகும். மண்டை இடிக்கும். நெத்தியு நோகும். காதடியில் நெறியிடும். வயிறு கடுத்து ரத்தமாய்க் கழியும். மயங்கி வரும். கையுங் காலும் பித்தரை புரண்டு

இதற்கு மருந்து:-

கோழி அவரை வேர், சிறுகீரை வேர் சட்டி சாறணை வேர் முடி மேல் முடி விடத் தேற வேர் உள்ளி, சுக்கு, வசம்பு, இது வெல்லாம் அரைத்து நல்லெண்ணையில் 1
எரித்து வடித்து மேலுக்கு லேபனம் பண்ணவும். பத்தியம் சிறு வழுதிலை, கண்டங்கத்திரிக்காய், கூட்டவும். பத்து நாளையில் பொறுக்கும். புளி விடவும்.

கோடா[illegible] மாத்திரை.

ரசம் பலம்.க கெந்தகம் பலம்.க, பச்சை நாபி பலம்.க, நீர்விஷம் பலம்.க, இருளி பலம்.க, அரிதாரம் பலம்.க வெங்காரம் பலம்.க மனோசிலை பலம்.க, பஞ்ச பாஷாண சாரம் பலம்.க, திரிகடுகு பலம்.க, திரிபாலை பலம்.க, நேர்வாளங் கொட்டை செம்புப் பொடி விருகன்.யஉ, கய்யாந்த கரைச் சாத்திலரைத்து எழு நாளரைத்து மிளகுப் பிறமாணம் உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும். சுக்கு நீரிலாகுதல், சாதிக்காயிலாகுதல் பசுவின் மோரிலாகுதல் ஒரு உருண்டை இடக் கிறாணி தீரும். பசுவின் வெண்ணெயில் சாதிக்காயிலிடச் சுரந் தீரும். கையாந்தகரைச் சாத்திலிடப் பித்தந் தீரும். உச்சிதங்கள் தீரும். வசம்பிலிட வாய்வு தீரும். தாது வர்த்திக்கும் பசுவின் நெய்யிலாகுதல் பாக்கு வெத்திலையாகுதல் சீனியிலாகுதல் பைத்திய மோகந் தீரும். நொச்சியிலைச் சாத்தியிலிடவும். பிறமியத்துக்கு குமட்டிக் காய்ச் சாத்திலிடவும். நீர்க் கடுப்புக்கு கொமட்டி நீர், நீர் வள்ளிக் கிழங்கிலிடவும். பிறமியத்துக்கு பாலில் கொடுக்கவும். உஷ்ணத்துக்கு நீரில் கொடுக்கவும். லேலேபனத்துக்கு தேனில் கொடுக்கவும். அதிமத்தத்துக்கு பிறமி சாத்திலிடவும். ஆனைக்கட்டுக்கு வெத்திலைச் சாத்திலிடவும். கழப்பு கட்டிக்கு பூலாவிரையிலையில் கொடுக்கவும். கல்லெறிப்புக்கு வெள்ளாட்டுப் பால் உழக்கு, சீரகப் பொடி போட்டு கொடுக்கவும். கெற்பவிப்புருத்திக்குப் பொன்னுங்கண்ணிச் சாத்திலிடவும். செறியாக் குணத்துக்கு மாதளம் பழச் சாத்திலிடவும். வயிறு கழிய கருப்புக் கட்டியில் கொடுக்கவும். எல்லா சுரத்துக்கும் சீரகப் பொடியிலிடவும். இது நல்ல பிரையோகம்.

க்ஷய ரோகத்துக்கு:-

கற்பூரம் விருகன்.க, ஏலம் விருகன்.உ, பச்சிலை பலம்.உ, நாகப்பூ பலம்.உ, சாதிக்காய் பலம்.உ, சுக்கு பலம்.ச, திப்பிலி பலம்.ங, மிளகு பலம்.கங, கடுக்காய் பலம்.ங, இவை வறுத்துப் பொடி செய்து கற்பூரம் பொடி செய்து அதின் கூடக் கலந்து இதற்கு சரி வங்காளச் சீனி கூட்டி தேனிட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு ஒரு வெருகடிப் பிரமாணம் நாலு தரம் அஞ்சு தரம் கொடுக்கவும். புளி தவிர்க்கவும்.

அரையாப்புக்கு:-

செங்கொட்டையை வெதுப்பி அரையாப்பில் தடவி பிறகு சுறிய சுண்ணாம்பைத் தடவ கொப்பளங் கொள்ளாது குணமாம். மூன்று நாள் தடவவும்.

நஞ்சுக் குளிகை:-

காட்டுச் சீரகம், நீர்முள்ளி விரை, நிலையாவரை விரை இந்த மூன்றும் ஒரு சமன் கொண்டு சங்கு சுட்டு பற்பம் பண்ணி அந்த விரையும் சங்கு பற்பமுங் கூட்டி இரண்டு சாமம் 2
அரைத்து நாகு விளங்காய்ப் பிறமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு சுரைத் தண்டு சீரகம்; காசயம் வைத்து அந்தக் கசாயத்தில் கொடுக்கவும். மூன்று நாள் ஆறு நாள் ஒன்பது நாள் கொடுக்கவும். இதற்குத் தீரும் வியாதி பாண்டுரோகம்; விசபாதகம், காலை முகம் வீக்கம் நீர்க் கோவை சேலே இது வெல்லாந் தீரும். வீக்கமுந் தீரும்.

விப்புருதிக்கு மருந்து:- அத்திப் பால் ஒரு சேரையும் சுத்தக் கருப்பாட்டுப் பால் ஒரு படி இரண்டும் கலந்து குடிக்கவும். ஒன்பது நாள்க் குடிக்கவும். இதற்குப் பத்தியம் புளி விடவும்.

கட்டு விப்புருதி, ஓடு விப்புருதி, வயிற்று விப்புருதி, சகல விப்புருதிக்கும் விரேசனம் :-

வெள்ளைக் காக்கிட்டம் வேர் வெட்டி வந்து பசுவின் பாலில் வேக வைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு கழற்சிக்காய் பிரமாணம் அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். கறுக்காய் எடுக்க வேண்டுமென்றால் சித்தவரைக் கிழங்கு பழபாகல் கிழங்கு இவை மூன்றும் அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். மீறி எடுத்தால் பொறுக்கப் படாதென்றால் மோருஞ் சோறும் உண்ணவும். நிற்கும்.

சத்தி குன்மம் பித்த குன்மத்துக்கு குணம் :-

பித்தத்தில் வெப்பு பத்தில் பெருக்கிடும் சத்தி குன்மம், சித்தத்தில் வாந்தி கொறிக்க தெளிவுறக் களிச்சலாகும். மெத்தத்த மீறலோடே மிகுந்து தான் நெறித்துளக்கி கைத்து நாக்கு தானும் கறித்திடில் பித்தமாமே.

2. நெஞ்சு யெறிந்துப் புளித் தேக்காய் நின்றே யுதிரம் பொருமலுமாய்
தஞ்ச மறவே சத்தியுமாய் தர தரகாமல் மலைந்தீயும்
மஞ்ச பித்த வாயுவை அதிகப் படவே பகைப்ப தென்னில்
தஞ்சப் படவே சத்தி குன்மம் தானே செய்யுங் குணமாமே.

சத்தி குன்மம் பித்த குன்மத்துக்கு குடிநீர் :-

நெல்லுப் பொரி ஆழாக்கு, பாசிப் பயத்தம் பருப்பு ஆழாக்கு, நல்ல சீரகம் பலம்.௪, ஏலம் பலம்.௪, வில்வப் பத்திரி வேர் களஞ்சி, முன்னை வேர் களஞ்சி, சுக்கு களஞ்சி, நெல்லிப் பருப்பு களஞ்சி இந்த மருந்தெல்லாங் சட்டியில் போட்டு நாழி இளநீர் கூட அதில் விட்டு உரியாகக் காய்ச்சி அந்த மருந்த அந்த மருந்துகளெல்லாம் அரைத்து இளநீரில் கலக்கிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள்க் கொடுக்கவும். சத்தி குன்மம், பித்த குன்மம் நிற்கும்.

வலி குன்மத்தின் குணம் :-

மறந்திடு மன்னந் தன்னை வயிற்றினில் வலியுந் தோன்றும்
சிறந்திடுங் கஞ்சி தண்ணீர் தேடிடுங் கொள்ள வொட்டா
இறந்திடாத் துயரந் தோன்றும் மீறுகல் கழறுமாறுல்
வறண்டுடன் மிஞ்சித் தோன்றும் வலி குன்ம வாய்வுமாமே.

குளிகை :-

வெள்ளுள்ளி இந்துப்பு இரசம் வெங்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, நற் காந்தம் கள்ளிப் பால் இரண்டு பணவிடை இவையெல்லாம் ஒவ்வொரு களஞ்சு கூட்டி நொச்சியிலை விரட்டிப் பிழிந்து சாறு விட்டரைத்து மிளகளவு உருண்டை உருட்டவும். ஒரு உருண்டை இள வெந்நீரில் கொள்ளவும். வயிறு மீறியெடுத்தால் மோருஞ் சோறுங் கொள்ளவும்.

வலி குன்மத்துக்கு எண்ணெய் :-

இந்துப்பு பலம்.௧, வெள்ளை வெங்காயம் பலம்.௨, நமாச்சாரம் இரு களஞ்சி கள்ளிப் பால் இரு களஞ்சி இவை யெல்லாங் கூட்டி அரைத்து தேங்காய்ப் பால் மூன்று படி விட்டு எரித்து எண்ணெய் வெந்த பதத்தில் இறக்கிக் கொண்டு வெள்ளை மூன்று நாளைக் கொருக் கால் கொள்ளவும். பத்தியம் சுறைக்கருவாடு, மிளகு, நீருஞ் சோறுங் கொள்ளவும்.

சுவாச காசத்தின் குணம் :-

பிள்ளைப் பெற்ற தாயாருக்குப் பெருத்த சுரமாய்த் தலை வலியும், உடம்பு உளைவு தலை வலியும் மிரையுத்த களிச்சல் உடல் பொருமல் மெள்ளத் தொடுத்து உள் மூச்சு விரியில் தெளிவு கொண்டருக்கில் துள்ளித் துடைத்த சுவாச காசம் தளக்கிவு மிரைப்படுத்திடுமே.
இதுக்கு சந்தருதி உருண்டை கட்டவும். சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், சாஸ்திர பேதி, நற்கோலம், கோரோசினை, முன்னை வேர், விலாம் பிச்சம் வேர், இரு வேலி வேர் இவை யெல்லாம் ஒரு நிறை கொண்டு அரைத்து இலந்தைக் காயளவு உருண்டை செய்து இள நீரிலிடவும்.

24.11.62.

சுவாச காசத்து பிரத்து வாதி உருண்டை:-

கோரைக் கிழங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு, கடுகுரோகிணி, நல்ல சீரகம், ஏலம் இருவேலி வேர், விலாமிச்சம் வேர், தர்க்கோலம், லவுங்கம், கொத்தமல்லி விரட்டி மதுரம் கோரோசினை கோஷ்டம் இது வெல்லாம் ஒரு நிறையாகக் கொண்டு இளநீர் விட்டரைத்து கடலைக் காய் அளவு உருண்டை செய்து இந்த உருண்டை அந்திக்கு ஒன்றும் விடிந்து ஒன்றும் தேனில் கொள்ளவும். இப்படிப் பத்து நாள் கொள்ளவும்.

சந்தனாதி என்னைக்கும்படி:-

சந்தனம். முத்தக் காசு, கோஷ்டம், நெல்லிப் பருப்பு, அதிமதுரம், விலாமிச்சம் வேர், இருவேலி வேர், தர்க்கோலம் இது வெல்லாம் ஒரு நிறையாய்க் கொண்டு அரைக்கப் பத்து நாளிகை அரைத்து சித்தாமணக் கெண்ணை விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தி லிறக்கி வடித்து இந்த என்னை உள்ளுக்கு இரண்டு மேலும் நாளு நாளைக்கொருக் கால் தேய்த்து வென்னீர் விட்டுக் குளிக்கவும். இப்படி இருபது நாள் கொள்ளவும். சுவாச காசந் தீரும். பத்தியம் பசுவின் பால். அதின் நெய் பொன்னாங்கண்ணி இலை கூட்டவும். இப்படி மண்டலஞ் செய்யவும்.

நிலைப்பனைக் கற்பம் வியாதிகளுக்கு அனுபானம்:-

நிலப்பனை கொண்டு வந்து சிறுக நறுக்கி நிழலுணர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணி புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு மூன்று விரல்க் கொண்ட அள் தேனில் கொள்ள சரீரத் திலிருக்கிற விஷந் தீரும். வெள்ளாட்டுக் கோமியத்தில் கொள்ள பழைய வெதுப்புத் தீரும். வாழைத் தண்டு நீரில் கொள்ள மூன்றும் மாறல் தீரும். வென்னீரில் கொள்ள சூலை நோவு தீரும். எலுமிச்சம் பழச் சாத்தில் கொள்ளக் காமாலை தீரும். பசுவின் நெய்யில் கொள்ள வீரிய முண்டாம். இளநீரில் கொள்ள மகோதரம் தீரும். காவளைக் கிழங்கு பொடி கூட்டி ஒரு படி நீர் வார்த்து அரைப்படியாகக் காய்ச்சிக் கொள்ள மூல ரோகந் தீரும். வசம்பு பொடியுடன் கொள்ள புத்தி உண்டாம். கரிசலாங் கண்ணி சாத்தில் கொள்ள உடல் வாதந் தீரும். நிலாவரைப் பொடியுடன் கொள்ள நரைதிரை மாறும். நீருடன் குடிக்க விஷத்தை எடுக்கும். பேய்ப்புடல் பொடியுடன் கொள்ள காலன் கடித்த விஷந் தீரும்.

மிளகு, திப்பிலி, வெள்ள வெங்காயம், வசம்பு, பெருங்காயம், ஓமம், திப்பிலி மூலம் செவ்வியம் நேர்வாளம் பருப்பு சுத்தி பண்ணிக் கொள்ளவும். சீரகம், கருஞ்சீரகம் சதைகுப்பை கொத்தமல்லி சத்தியச் சாரம், நவச்சாரம், பஞ்ச லவணம் சித்திர மூல வேர், பேய் முசுட்டை பேய்த் தும்மட்டி வேர், தலை சுருட்டி வேர், காட்டு முருங்கைப் பட்டை முளக் கொள்ஞ்சி வேர், சாறணை வேர், காட்டு மல்லிகை வேர், மலை மஞ்சி வேர், கையாந்த கரை, நிலவேம்பு, புங்கம் வேர், நெருஞ்சி சமூலம், முளகுறணைக் கிழங்கு, மெருகன் கிழங்கு, முசிலை இது வெல்லாம் சமனாய்க் சாள பண்ணி இவை மூன்று பங்கு சிவதை வேர் சுத்தி பண்ணி அந்தப் பொடி ஒரு பங்கு இது வெல்லா முந்தின கற்பத்தோடே கலந்து ஒரு புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு தேனிலாகுதல் நெய்யிலாகுதல் வென்னீரிலாகுதல் கொள்ள இதுக்குத் தீரும் வியாதி வாய்வு, திரட்சி, வாதரோகம், பஞ்ச குன்மம் சிக்கல், உடம்பு, நோவு பெருவயிறு, நீருமை, அருவே வெப்ப பார்வை பாண்டு ரோகம், கால் கை உடம்பு வீக்கம், முக வீக்கம் விஷ பாகம், எரு வீக்கம் இறங்கு வீக்கம், விறுமை அஞ்சு வகை உள் மாந்தை, இருமல், குளிர் காய்ச்சல், பழைய வெதுப்பு செரியாக் குணம் உடம்பு உலர்ந்து போகிறது, வாயில் ரத்தம் விழுகிறது., நெஞ்சி முறண்டு, பிறனி அசனஞ் செல்லாதது, கலை கட்டு, வயறெரிப்பு, கீறிப் பாம்பு அஸ்தி மாந்தம், மூலக்காமாலை, ஈறல், வழுத்தி வுதைவை கொண்டு பிறட்டல் இவை யெல்லாந் தீரும்.

திப்பிலாதி சூரணம் சகல வியாதிக்கும்:-

திப்பிலி பலம். ,சுக்கு பலம்.ய, ஆனைத் திப்பிலி பலம்.வ, செங்கள நீர் கோஷ்டம் பலம்.வ, அதிமதுரம் பலம்.வ, மஞ்சிஷ்டி பலம்.வ, பேரரத்தை பலம்.வ, சித்தரத்தை பலம்.வ, தாளிசை பத்திரி பலம்.வ, சடாமஞ்சி பலம்.வ, சதகுப்பை பலம்.ரு,

கார்போக அரிசி பலம்.௰, இலைம் பிசின் பலம்.௰, சிறு தேக்கு பலம்.௰; லவங்கப் பட்டை பலம்.௰, லவங்கப் பத்திரி பலம்.௰, முந்திரிப் பழம் பலம்.௰, பேரீச்சம் பழம் பலம்.௰, சாதிக்காய் பலம்.௰; சாதிப்பத்திரி பலம்.௰ வளையலுப்பு பலம்.௰, பொட்டிலுப்பு பலம்.௰ இந்துப்பு பலம்.௰, நல்ல சீரகம் பலம்.௰, கருஞ்சீரகம் பலம்.௰, கட்டெருமைப் பால் பலம்.௰, ஆயம் பட்டை பலம்.௰, செவ்வியம் பலம்.௰, மரமஞ்சள் பலம்.௰, பெருமரப்பட்டை பலம்.௰, சிறும்பு விராகன்.க, சிறுநாகப்பூ விராகன்.உ, பெருங்காயம் விராகன்.உ, ஆலாத்தி கற்பூரம் விராகன்.க, குரோசாணி ஓமம் விராகன்.உ, இந்த வகை மருந்தெல்லாம் சூரிய புடம் வைத்து இடித்துச் சீலை வடிகொண்டு புதுக் கலசத்தில் வைத்துக் கொண்டு காலமாலை வெருகடிப் பிரமாணம் கொண்டு ஒரு மிடா வெந்நீரில் கொள்ளவும். தீரும் வியாதி பத்து வாதை வாய்வு, இருபத்தொரு மேகம், வெள்ளை படுகிறது, பதினெட்டு வகைச் சூலை, அஷ்ட குன்மம், மூல வாய்வு, சிறுநீர் வாய்வு, சகலமுந் தீரும். சஅ நாள் கொள்ளவும்.

காது கேட்காததிற்கு:-

நலப்பனைக் கிழங்கு, நல்லெண்ணையில் காய்ச்சி செவியில் விட செவிக் குறை தீரும்.

தலை மயிர் வளர:-

கரிசாலை எண்ணை இரண்டு படி கருக்கு வாயிலைச் சாறு ஒரு படி. எலுமிச்சம் பழச் சாறு ஒரு படி. கருஞ்சீரகம் உழக்கு, கஸ்தூரி மஞ்சள் கூடப் போட்டு காப்புக் கட்டி வெய்யிலிலே மூன்று நாள் வைத்து நாலாம் நாள் வேகவைத்து பதத்தில் வடித்து எட்டு நாளைக்கொருக் காள் முழுகவும் தலை மயிர் நன்றாய் வளரும்.

நஞ்சு தின்ன பெருக்கு:-

குண்டு மணி தின்றால் வெங்காரம் பொரிச்சு வெண்ணையில் குழப்பிக் கொடுக்கவும். சிறு வேளா இலை தண்ணீரில் கொடுக்கவும். பருத்திக் காயை அரைத்து பாலில் கொடுக்கவும். பச்சை நாபி தின்றால் கத்திரிக்காய் உப்பு போட்டு அவித்துக் கொடுக்கவும். சிறுகீரை வேர், மிளகு, எலுமிச்சம் பழச் சாற்றிலெடுத்துக் கொடுக்கவும். கஞ்சா தின்றால் நெய் விழுது சீரகம் பொடி செய்து நெய்யில் மத்தித்துக் கொடுக்கவும். அலறி தின்றால் கடுக்காயை அரைத்துக் கொடுக்கவும். எருக்கம் பாலு வெண்ணை கொடுக்கவும். ஊமத்தையிலை ஊமத்தங் காய் தின்றால் தாமரையிலைச் சாறு கொடுக்கவும். கள்ளிப் பால் குடித்த பெருக்கு ஆவாரங் கொழுந்து அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். தேளும் நெய்யும் கொண்ட பெருக்கு கறியை அரைத்துக் கரிசலாங் கண்ணியே அரைத்துக் குடிக்கவும். ஒடுவெ தின்ற பெருக்கு நெல்லரிசி பச்சரிசியே அரைத்துக் கொடுக்கவும். கடுதை வண்டு தின்ற பெருக்கு சங்கு சமூலம் அரைத்து தண்ணீரில் கொடுக்கவும். சுண்ணாம்பு எண்ணையுங் குடித்தால் மஞ்சு அரைத்து தண்ணீரில் கொடுக்கவும். வசம்பு தின்றால் கருஞ் சீரகம் நல்ல வெல்லமும் மாங்காய் விரையும் சிறுகீரைபோடு. வேரு அரைத்துக் கொடுக்கவும். நெல்லி வேர் அரைத்து காடியில் குடித்த பெருக்கு பொன்னாங்கண்ணி சமூலம் அரைத்து தண்ணீரில் கொடுக்கவும்.

பதினெட்டு வகை நஞ்சுக்கு. ஒரு சேரை மிளகு அரைத்து மோரில் கொடுக்கவும். சகல நஞ்சுக்கு வாகைப் பட்டை அவுரிச் சாற்றிலரைத்து தண்ணீரில் கொடுக்கவும். சகல நஞ்சு போம். ஆவாரந் தளையை காடியில் பிசைந்து கொடுக்க உடம்பில் பழைய விஷக்கடி தீரும். உருக்கு செந்தூரம் புண்ணுக்கு காரம் வைக்க மாங்கிஷங் கரைந்த புண்ணும். உப்பை மேனிச் சாறு, ஊமத்தஞ் சாறு, தஞ்சு சுட்டு அந்தப் பொடியும் மஞ்சள் பொடி, நல்லெண்ணையில் கொதிக்க வைத்து எண்ணையைப் புண்ணுக்கு சீலையில் பிடித்து பாலும் போடவும். மாங்கிஷங் கரைந்த புண்ணும்.

வயிற்றில் புழுவுக்கு:-

ஒரு [illegible] பாளையை இடித்து வயிற்றில் கட்ட புழு விழும். இது கை கண்டது.

பிர்ளையண்டாகும் உருக்கு செந்தூரம்:-

உருக்கு பலம் ஒன்று, உலையிலே காய்ச்சி பசுவின் கோமியம் ஆட்டுக் கோமியம் சமன் கலந்து உருக்கைக் காய்ச்சி அலைக்கவும். உள் யெல்லாம் கரைந்து போகும். எடுத்து கறிப்பாலை சாறு விட்டு அரைத்து வில்லை வைத்து மேலும் அந்தத் தனை பரப்பி சில்லுப் போட்டு சீலை மண் செய்து கெசப்புடம் போடவும். அந்திறத் தாமரையிலைச் சாறு விட்டு அரைத்து கெசபுடம் போடவும். குமரிச் சாற்றில் கெசபுடம் போடவும்.

இடையில் (ஏயள) எடு இல்லை)

எட்டு வகை குன்மத்துக்கு விபரம்:-

வாய்வு குன்மம், வலி குன்மம், சத்தி குன்மம், வெறி குன்மம், ரத்த குன்மம், பித்த குன்மம், சேத்தும குன்மம், வாத குன்மம் ஆக வகை எட்டு.

வாய்வு குன்மத்துக்கு வயிறு பொருமிக் கொண்டு அசனஞ் செரியாது. வயிற்றுக்குள்ளே குத்திப் போலே நொந்து கீழ் நோக்காமல் நொந்த வாய்வு மேல் நோக்கி ஏப்ப மிடும். பசியில்லை.

வலிகுன்மத்தின் குணம் தொப்புளுக்கு மேலாக மேல் வயிறு இரவு பகலாக சுருங்க வலிக்கும்.

எரி குன்மத்தின் குணம்:- மேல் வயிற்றில் ஈறல் குலையைப் பற்றி இரவு பகலாக எரியும். அசனஞ் சென்றால் சந்தே மயக்கமாம். பின்பு வெறிக்கும்.

சத்தி குன்மத்தின் குணம்:- வெடிய வேரையுண்ட அசனம் சொரியாமல் அந்தியும் போது பொருமிக் கொண்டு வயிறு வலித்து சோ யெதிரெடுக்கும்.

இரத்த குன்மத்தின் குணம்:- வயிற்றை வலித்து ஆட்டு ரத்தம் போலே தய்ய ரத்தமாய் அந்தி விடிஞ்சு இரண்டு நேரமும வாயில் ரத்தம் விழும்.

வாத குன்மத்தின் குணம்:- உடம்பெங்கு கடுத்து வயிறு வலித்து தலை சிறகிறென்று மஞ்சள் போலே எடுக்கும்.

சேத்தும குன்மத்தின் குணம்:- வயிற்றை வலித்து இரவு பகலாக வெள்ளோக்காள மெடுக்கும்.

இதுக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், நாய்க் கடுகு, நல்ல சீரகம், கிப்பிலி, கருஞ்சீரகம் இந்த மருந்தை வறுத்து இந்துப்பு பெருங்காயம் வெள்ள வெங்காயம் கடுகுரோகணி இது, நாலு பச்சை இது வெல்லாம் சமன் கொண்டு அரைத்து களச்சிக் காய்ப் பிரமாணம் உருண்டை பண்ணி இள வெந்நீரில் ஒரு உருண்டை கொடுக்கவும். வாய்வு குன்மம், வலி குன்மம் இந்த இரண்டு குன்மமுந் தீரும். அஞ்சு நாள், ஆறு நாள், ஏழு நாள் வியாதி தீரு மட்டும் குடிக்கவும்.

எரி குன்மத்துக்கு:-

எலுமிச்சம் பழச் சாற்றில் கொடுக்கவும். சத்தி குன்மத்துக்கு சாறணை வேர், வில்லை வேர், முளக் கொளிஞ்சி வேர், குருந்தொட்டி வேர், இந வகைக்கு ஒரு பிடி கொண்டு வந்து நறுக்கி ஒரு படி தண்ணீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

வாத குன்மத்துக்கு:-

நொச்சி வேர் சட்டி சாறணை வேர், தழுதாழை வேரு ஒவ்வொன்றுக்கு ஒரு பிடி கொண்டு வந்து நறுக்கி இரண்டு படி தண்ணீரில் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி இந்த முந்தி உருண்டயில் ஒரு உருண்டை அரைத்துக் கொடுக்கவும்.

ரத்த குன்மத்துக்கு:-

அஞ்சு மாங்களங்காய் நறுக்கி ஒரு படி தண்ணீரில் போட்டு அரைப்படியாக காய்ச்சி ஆற வைத்து மூன்று காசிடை தேன் விட்டு ஒரு உருண்டை கூட்டிக் கொடுக்கவும். இளிப் பத்தியம்

இனிப் பத்தியம் :-

வாய்வு உன்மத்துக்கு முருங்கைக்காய் மிளகு, நீர் முருங்கைக் கீரை உப்புக் கண்டம் கருவாடு ஆகும்.

வலி உன்மத்துக்கு சுண்டை வத்தல், [illegible]ணை வத்தல், முருங்கையிலை, காய், உப்புக் கண்டம் கெளிச்சி மீன் ஆகும்.

எரி உன்மத்துக்கு சிறுகீரை பொன்னாங்கண்ணி ஆகும்.

சந்நி உன்மத்துக்கு கோழி முட்டை பாலறுக்கீரை, பருப்பு நெய் பாலாகும்.

எரிஉன்மத்துக்கு [illegible]க்காய், முருங்கையிலை, ரசம் முசல் கறி, வெள்ளாட்டு உப்புக் கண்டம் தயிரு மோரு காய்ச்சி வார்க்கவும்.

ரத்த உன்மத்துக்கு :- அத்திக்காய் பசுவின் தயிர் ஆகும்.

பித்த உன்மத்துக்கு பயறு நீர், பாலக்கீரை பொன்னாங்கண்ணி சிறுகீரை ஆகும்.

சேத்தும உன்மத்துக்கு தூதுவிளங்காய்.

வாதத்துக்கு எண்ணெய் :-

நல்லெண்ணெய் நாளிகை வேளைச் சாறு நாளி ஒன்றிக்க வத்தக் காய்ச்சி ஒரு கரண்டியில் எண்ணெய் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி நடுக்கு வாதம், திமிர் வாதம், உடல் வாதம், மறலவாதம், குடைவாதம், வலிப்பு வாதம் இவை யெல்லாந் தீரும். புளி தவிர்க்கவும்.

முலைக்கட்டுக்கு வாத கரப்பானுக்கு கை கண்ட பிரயோகம் :-

மலைமஞ்சி சாறு படி.க, நல்லெண்ணெய் படி.க, இந்த இரண்டும் ஒக்க விட்டு எரிய விட்டு வெந்து மஞ்சி சாறு சுண்டி எண்ணெய் பதமறிந்த பிறகு ஈர வெங்காயம் மேல் தோல் போக்கி ஒரு படி வெங்காயம் அரிந்து போட்டு மூசை சாதிக்காய் தூள் பண்ணி கிண்டி வெந்து இறக்கி வைத்துக் கொண்டு ஒரு நேரத்துக்கு மாங்காயளவு, சாப்பிடவும். ஏழு நாளைக்கு சாப்பிடவும். அந்த ஒரு படி எண்ணெயும் ஏழு நாளையில் சரியாய் சாப்பிட்டுப் போடவும். உப்பு, புளி ஏழு நாளைக்கு ஆகாது. இது கை கண்டது.

சகல கரப்பானுக்கு :-

அமுக்கிராச் சாறு படி.க, கவசி முருங்கைச் சாறு படி.க, பீதக் கொட்டைச் சாறு படி.க, புளற சந்தனச் சாறு படி.க, இந்த நாலு சாறும் ஒக்க விட்டு குழம்பு பதமாய் வருகிற தருவாயில் பறங்கிப் பட்டை பலம்.க, பிறப்பங்கிழங்கு பலம்.க, இந்த இரண்டு மருந்தும் இடித்து வஸ்திர காயம் பண்ணி அந்தக் குழம்பில் போட்டுக் கிண்டிக் கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஒரு கழற்சிக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு ஒரு உருண்டை சாப்பிடவும். இப்படிப் பதினைந்து நாள் சாப்பிடவும். அந்த உருண்டை முடிவளவும் சாப்பிடவும் ஏழு நாள் மாத்திரம் உப்பு, புளி விடவும். எட்டாம் நாள் உப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும். புளி ஆகாது.

நரம்பு பிடித்த சுளுக்கு கால் கை பிடரி பிடிக்குமானால் நெய் பண்ண :-

நன்று பிடித்த வந்த உரலிலே இடித்த இரண்டு மூன்று படி பசுவின் பாலில் கலக்கி நெய் வைக்கலிலே வடித்து காய்ச்சி பிரைவிட்டு தோய்த்துக் கடைந்து வெண்ணெய் எடுத்து வைத்துக் கொண்டு நரம்பு பிடித்த இடம் கால் கை பிடரி வந்தின இடம் தேகமெங்கும் தடவிட்டும்.

வயிற்று விப்புருதிக்கு :-

புங்கந் தளிரை காரெள்ளு எண்ணெயிலரைத்து [illegible] எல்லா விப்புருதியுந் தீரும். இந்தத் தளிரை வெள்ளாட்டு தயிரில் காரெள்ளு எண்ணெயில் கடக் கலந்து உண்கக் குழ் வயிற்று விப்புருதி தீரும்.

கடுப்பு உள் வெக்கைக்கு :-

பொன்னாங்கண்ணி வேரை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி முழுங்கவும். கடுப்பு உள் வெக்கையுந் தீரும். பூசனிக்காய் குமிர் திறந்து வெல்லம் போட்டு நீர் வார்த்து

இறந்து காலமே மடிக்கவும். படங்க நாறி நாரை இள வென்னீரில் பிசைந்து வடிக்க
சிற பயிற அரைத்து வெல்லமும் கலந்து மடிக்கவும். இது அஞ்சு நாள் மடிக்கவும்.

சன்னிக்கு அண்டத் தயிலம் :-

வேப்பெண்ணை படி.ரு, வெள்ளைப் பண்டு சேர்.உரு, வெள்ளைப் பெருங்காயம்
ரூபாயிடை.ய, லிங்கம் ரூபாயிடை.ரு, தர்க்கோலம் ரூபாயிடை.ய லிங்கம் ரூபாயிடை.ரு,
சிறுகுப்பு ரூபாயிடை.க, புங்கம் வேரும், மாவிலிங்கம் வேரும், முருங்கை வேரும்,
சங்கம் வேரும் இது மூன்றும் ரசம் பிழிந்து கொள்ளவும். அசித் தொட்டாலே வேரு கோளி
முட்டை.யஉ, கோளி முட்டையை வெகிச்சு உடைச்சு செங் கருவை எடுத்து இரும்புக் கிண்ணத்தில்
போட்டு சிக எரிக்க தைலம் வரும். இதுந்துக் கொண்டு இந்த சரக்குகளெல்லாம் தாள்
பண்ணி ப் போட்டு வேப்பெண்ணெயில் கலந்து எரித்து வடித்துக் கொண்டு ஒரு ரூபாயிடை
உள்ருக்கு கொள்ளவும். மேலுந் தலை பேர்டவும். எந்த சன்னியுந் தீரும். இதை நம்பிச்
செய்யவும்.

சகல சன்னிக்கு: இதை சூரணம் பண்ணி குழல் வைத்து நாசிக்கு ஊதுகிறது. கோழி முட்டை
யோடு மூன்று முட்டையோடு சவ்வு போக்கி எருக்கிலம் பாலில் பிசறிக் காய வைத்து எடுத்து
மிளகு சரியிடை வைத்து சூரணம் பண்ணிக் குழல் வைத்து நாசிக்கு ஊத நிமிறி முதலான சன்னியுந்
தீரும்.

சகல சன்னிக்கு மருந்து :-

நேர்வாளம் .ள, கடுகுரோகணி பலம்.ரு, பொன்னரிதாரம் விராகன்.க, இறகும் விராகன்.
., நெல்லிக்காய் கெந்தி விராகன்.க, சுக்கு விராகன்.க, மிளகு விராகன்.க, நேர்வாளம்
உள் முளை எடுத்துப் போட்டு பசுவின் பாலில் வேக வைத்து பாச்சை பாலில் கழுவிப்
போட்டு தயிர் பால் கோமியம் ஒரு சமருக்கு கலந்து வார்த்து அரைத்து ஆக விளாங்
காய் பிரமாணம் உருண்டை செய்து மூன்று நாள் மூன்று சாமம் அரைத்து இள வென்னீரில்
ஒரு உருண்டை இடவும் இதுக்குத்தீரும் வியாதி வாத சன்னி, பித்த சன்னி, சேத்தும சன்னி,
விரத்தி சன்னி, சிங்ம சன்னி, பித்த சன்னி, ஆவேசச் சன்னி, மோகினி சன்னி பிறா சன்னி
கவா வாத சன்னி கன்மூடு சன்னி, ஒதுறு சன்னி இந்த சன்னியெல்லாத்துக்குங் கொடுக்கத்
தீரும். இது கை கண்டது.

மெழுகு வாதத்துக்கு மருந்து :-

பழு பாகல் கிழங்கு இள வென்னீரில் அரைத்து கொடுக்க மாறும். நறு முன்னை வேர்
கல்லுப்பு, மிளகும் அரைத்துக் கார்முட்டுப் பாலில் வெல்லங் கூட்டிக் கொடுக்க வாதந்
தீரும்.

வெள்ளை விழுகிறதற்கு மருந்து :-

அம்மாம் பச்சரிசி எலுமிச்சங் காயளவு அரைத்து பசுவின் பாலிலாவது வெள்ளாட்டுப்
பாலாவது அதில் கொடுக்கவும். விருமிச் சாறு அரைச் சிறங்கை நல்லெண்ணை அரை மந்
திச்சு குடிக்கவும். வெள்ளை நிற்கும்.

தாம்பிர குழம்பு :-

செம்புத் தகடு பலம்.க, காந்தம் பலம்.க, சீனக்காரம் பலம்,க, வெங்காரம்
பலம்.க, சாதிலிங்கம் பலம்,க, நெல்லிக்காய்க் கெந்தகம் பலம்.க, இதை யெல்லாம்
பொடி செய்து ஒரு புது சட்டகையில் பொடி மருந்து பரப்பி அதின் மேலே தகடு ரசம்
மருந்து அதில் கய்யாந்த கரைச் சாறு நாளி எலுமிச்சம் பழச் சாறு இரு நாளி சட்டியில்
மருந்தட்டனே வத்தி வேடு கட்டி நெல்லுக் குழியில் எட்டு நாள் புதைத்து வைத்து பிறகு எடுத்து
வெய்யிலிலே வைத்து செம்பு கரைத்து பொன் போலே யாகும். ஒரு பரணியிலடைத்து
வைத்துக் கொள்ளவும்.

~~சல் விசாரி~~க்கு :-

<u>பச்_வியாதிக்கு</u>:-

கருகு கள்ளி வடக்கு வேர், வசம்பு வெள்ளைப் படு, கடுகு மிளகு கட்டி நறுக்கி நல்லெண்ணை விளக்கெண்ணை கலந்து எரித்து வாயிலும் கொப்பளிக்க மேலும் பசிப்புகை பிடிக்கத் தீரும்

<u>ஒரு_கை_கால்_முடைச்சலுக்கு</u>:-

முடக் கொத்தான் தழை தருகுளாந்தி தழை, பாவட்டந்_தழை விழுமிக் தழை, கட்டெள்ளு யெண்ணையில் குழப்பி மூன்று நேரம் குடிக்கத் தீரும். புளி விடவும்.

<u>உஷ்ணம்,_சீய்ப்_பிரமியம்_ரத்த_பிறமியத்துக்கு_மருந்து</u>:-

ஏலம் நாரு விருகனெடை, நல்ல வெல்லம் அச்சி.க, சுக்கு விருகன்.உ, பசுவின் நெய் கறண்டி.உ, ஒரு இளநீர் அந்தப் பொடியும்நெய்யும் இளநீரில் விட்டு ராத்திரி முப்பது நாழிகையிருந்து மத்தருள் காலம்பற அந்த இளநீரை அலசிக் குடிக்கவும். எட்டு நாளைக்கு புளி, புகை விடவும். நச்சுப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும். இந்தப் படி செய்யவும். இனிப்பு விடவும்.

<u>உஷ்ணம்_சீய்_பிமியம்.ரத்த.பிரமியத்துக்கு_மருந்து</u>:-

ஏலம் நாறு விருகனெடை., நல்ல வெல்லம் அச்சி.க, சுக்கு விருகன்.உ, பசுவின் நெய் கறண்டி.உ, ஒரு இளநீர் அந்தப் பொடியும் நெய்யும் யிளநீரில் விட்டு ராத்திரி முப்பது நாழிகை இருந்து மத்தருள் காலம்பற அந்த இளநீரை அலசிக் குடிக்கவும். எட்டு நாளைக்கு புளி, புகை விடவும். நச்சுப்பு வ-த்துப் போட்டுக் கொள்ளவு இந்தப்படி செய்யவும் இனிப்பு விடவும்.

வெட்டான் அருகன் வேர், மிளகும் கூட்டி வேக வே யெட்டி லொன்டுய் இழுத்துக் கொண்டு மாட்டான் ஆவின் வெண்ணை குகை நீரும் மாநிலம் பூ அதிமதுரம் அரைத்துப் பேரடே. போட்டப்பா இந்த வகை ஐந்து தன்னை புகள்ந்து நீ கொண்டிடவே முன் சொன்ன தெல்லாந் தீரும். எப்பேர்பட்ட வியாதியுந் தீரும்.

<u>வெள்ளி_ஈயய்ய_.பற்பம்</u>:-

சுருக்காக வெள்ளீய்ய பற்பஞ் சொல்வேன் வல்லாரை வீரமுடன் குமரிச் சார் விட்டு அரைத்து வில்லை செய்து காய வைத்து எல்லாரு காணுகின்ற சாய வேரை இடித்து நீர் விட்டரைத்து வில்லை தட்டி கல்லான நொச்சியிலை குமரித் தா ரும் கனக்கா விட பற்பமாமே.

மிளகுவிருகன்.ழ, திப்பிலி விருகன்.வ, நல்ல வெல்லம் விருகன். வ, நெய் ஒரு கறண்டி கூட்டி கறண்டியில் போட்டுக் கிளறி அடுப்பில் வைத்துக் கிளறி கலக் கொட்டிக் காய் பிறமாணம் உருண்டை செய்து மூன்று உருண்டை செய்து மூன்று நாள் சாப்பிடவும். இப்படி எட்டு நாள் ஒரு தரம் தின்னவும். எந்த வியாதியும் வராது. முருங்கையிலையும் கல்லுப்பும் பிசைந்து பிழிந்து நக்க நெஞ்சுக் கரிப்பு, உப்பல் தீரும். ஓமம் வசம்பு, கல்லுப்பு, சமுகு கூட்டி நாலிலொன்றாய் காய்ச்சி குடிக்க களிச்சல் பொருமல் தீரும். அத்திக் கொழுந்து கோவைப் பிஞ்சு மாம்பட்டை வெறு நீர் காசுக்கட்டி கருவாளைக் கிளங்கு நீர் கூட்டவும். வயிறு கடுப்பு நிற்கும். ஓம் நமசிவா.

<u>சந்தனாதி_தயிலம்</u>:-

மரமஞ்சள், சிற்றரத்தை, தேவதாரம் யேலம், லவுங்கம், சமுத்திரப் பழம். தேவதாரம், சிறுநாகப்பூ, பூலாங்கிழங்கு, பச்சிலை, மலை மஞ்சல் மஞ்சிஷ்ட்டி, அதிமதுரம், கோஷ்டம், அகில் கட்டை, சந்தனக் கட்டை, வெந்தியம், செண்பகப் பூ, சாதிக்காய் வெட்டி வேரு விலாமிச்சம் வேர், வகைக்கு விருகனெடை.ச, கோரைக் கிழங்கு முட்டி வேரு, சீகா செங்கழனி வேரு, கூசலாங் கண்ணி சாறு படி.க, நன்னாரி வேர் பசுவின் பால் படி.க, இளநீர் படிக, எள்ளு எண்ணை படி.க, (முடிவு இல்லை)

நீர்ப் பீனிசத்துக்கு என்னெய்:- ஆவில் பட்டை பலம்.ச, சங்கம், அரத்தை, மிளகு வகைக்கு பலம் .ய, மஞ்சள் பலம்.ரு இவைகளை இடித்து பக்கு நீர்ப் போட்டு

நாவிலொன்பம் வக்கி வந்த பிற்பாடு அதில் நல்லெண்ணெயும் படி.க, நொச்சி, முசுமுசுக்கை ஆயில் கரிசாலை இலைகளின் சாறு வகைக்கு படி.அரை, ஆவின் பால் படி.க, கூட விட்டு அதிமதுரம், சதகுப்பை, இவை போட்டு காய்ச்சி இறுகி வரவும் தீரும்.

<u>மேக நாதன் குளிகை</u>:-

விங்கம் காசிடை.ங, மிளகு காசிடை.ங, சுக்கு காசிடை.ங, திப்பிலி காசிடை.ங, இந்துப்பு காசிடை.ங, சிவதை காசி.ங, காட்டாமணக்கு காசிடை.ங, வசம்பு காசிடை ங, பெருங்காயம் காசிடை.ங, வாய் விளங்கம் காசிடை.ங, ஓமம் காசிடை.ங, அத்தி பல்லின நேர் வாளம் காசிடை.ய, இது வெல்லாம் எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணிக் கொள்ளவும். பேதி மீறயானால் ஆவாரம் பட்டை மோரிலரைத்துக் கொடுக்கவும்.

<u>சிக்கில் லிம்பளம்</u>:-

...த்த கட்டுலே நாள் வேரல் கொண்ட கலேயை கோழி முட்டை வெள்ளைக் கரு ஊத்தி அரைத்து அமக்கைச் சாறு மூன்று தளி விட்டரைத்து குளிகை செய்து வைத்துக் கொண்டு போகம் செய்யவும். போகம் விடாது. புளி சாப்பிட்டால் விடும். கை கண்டது.

<u>பல்லு வலிக்கு</u>:-

அரக்கு, சீருக்காரம் அருகு, கடுக்காய், மாசிக்காய், தான்றிக்காய் ஒரு விராகனெடை நிறுத்துக் கொண்டு அரைப்பொடி வகை வகைக்கு எலுமிச்சம் பழச் சாறு விட்டு பொடி செய்து பல்லுக்கு தேய்க்கவும்.

வேறு

<u>ரணத்துக்கு களிம்பு</u>:-

லிங்கம் மிருதார் சிங்கி, ரசக்கல்பூரம், வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காசுக்கட்டி, தான்றிக்காய் இது வெல்லாம் சரி எடையாகப் போட்டு பசுவின் வெண்ணெய் போட்டு ஒரு சாமம் அரைத்து ஒரு நாள் தண்ணீரில் போட்டு ஊறவிட்டு மத்தா நாளெடுத்து ரணத்தில் பூசவும். புண் ஆறும். இது சுருக்கு.

<u>வில்வாதி தயிலம்</u>:-

கஸ்தூரி மஞ்சள், பூலாங் கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், பச்சை வேர், செண்பக மொக்கு, கார்போகரிசி, கிரியோகிரன் பட்டை இது வெல்லாம் ரூபாயிடை, மஞ்சப்பூ, பச்சைக் கற்பூரம் இது இரண்டும் ஒரு விராகனெடை இளநீர் படி.உ, பால் படி.உ, தாமரைச் சாறு படி.வ, சந்தனம் பலம்.க, வில்வ சந்தனம் பலம்.க, நல்லெண்ணெய் படி.க, ~~([illegible])~~ Incomplete

<u>இருமலுக்கு மருந்து</u>:-

தேத்தான் கொட்டையை கிளிஞ்செண்ணையை விட்டு வறுத்துப் பொடி பண்ணிக் கொண்டு அதிலே தாளிச பத்திரி, திப்பிலி, மிளகு, சுக்கு பொடி பண்ணி அந்தத் தேத்தான் சூரணத்துக்கு சமன் சரக்குத் தான் கலந்து சீனி சர்க்கரை கலந்து தேனிலாவது கிளிஞ்செண்ணெயிலாவது குழப்பி நக்கவும். கை கண்டது.

<u>நஞ்சு சுரத்துக்கு</u>:-

வெலந்தையும், வெங்காயம் சரி சமனாய் சங்கு பற்பம் கூட்டி கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி ஆகாது. உதிரம் சாய்தால் மருந்து:- சீந்திக் கொடிச் சாறு நல்லெண்ணெ இது இரண்டும் சரி சமனாய் கொடுக்கவும்.

பவித்தியத்துக்கு:- நீர்க்கடம்ப பட்டையை உரலிடித்து பொடி செய்து கொண்டு சட்டில் நெருப்புப் போட்டு புகை பிடிக்கவும். நீர் விடும்.

ஆறாத புண்ணுக்கு புரை யெண்ணெய்:- லிங்கம் அருகு மிருதார் சிங்கி பச்சை வெட்டு பூரம் செம்புராள் பட்டை, நல்லெண்ணெயில் காய்ச்சி போடவும் புண் ஆறும்.

க.ச.24.11.62.

Verified with the original 28/12/62 ... 141 sheets

308